# மாதவ நிதானம்

என்கிற

## ரோக விநிச்சயம்

வியாதி நிர்த்தாரண விஷயமாய்

"ஸ்ரீமாதவ கரன்"

இயற்றிய பண்டைக்காலத்திய ஸம்ஸ்க்ருத வைத்திய நூலின்

**தமிழ் மொழி பெயர்ப்பு**


டிப்ளோமாவென்கிற அதிகாரப்பத்திரம் பெற்ற ஆயுர்வேத சிகித்ஸகரும், எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலத்தின் பிரதான காரியதர்சியும், எல்லா இந்திய ஆயுர்வேத வித்யாபீடத்தின் பரீக்ஷகரும், ஷை வித்யாபீடத்தின் உபாக்ராஸனாதிபதியும், "சார்ங்கதர ஸம்ஹிதை", "அஷ்டாங்கஹ்ருதயம்" முதலிய ஸம்ஸக்ருத ஆயுர்வேத நூல்களை மொழி பெயர்த்தவரும், "வைத்தியகலாநிதி" பத்ராதிபருமான

ஆயுர்வேத பூஷணம்

**பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸீ,**


அவர்களால் மொழி பெயர்க்கப்பெற்றது.

———:o:———

மேற்படியார் இயற்றிய விரிவான டிப்பணியுடன் கூடியது.

———:o:———


**வைத்தியகலாநிதி ஆபீஸ்,**

வேப்பேரி, சென்னை.



*Copy Right Reserved*



**1923.**

# முகவுரை

---

ஆயுர் வேதம் மூன்று ஸ்கந்தங்கள் என்கிற மூன்று முக்கிய பாகங்களமையப் பெற்றது. அவை ஹேது ஸ்கந்தம், இலக்ஷண ஸ்கந்தம், ஔஷத ஸ்கந்தம் என்பனவாம். மூன்றாவதான ஔஷத ஸ்கந்தமென்னும் சிகித்ஸா முறையைப்பற்றிய அம்சம் சரக-ஸுச்ருத-வாக்படாதி ஸம்ஹிதைகளில் வெகு விமர்சையாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வியாதி நிர்த்தாரணத்திற்கு இன்றியமையாத ஹேது-லக்ஷண ஸ்கந்தங்கள் ஒரே கிரந்தத்தில் முற்றிலும் வரிசைக் கிரமமாக எதிலும் விவரிக்கப்படவில்லை. ஓர் ஆசிரியர் தனக்கு முக்கியமாகத் தோன்றிய சிற்சில வியாதிகளையும், மற்றோர் ஆசிரியர் வேறு சிலவற்றையும் குறிப்பிட்டு விவரித்திருக்கின்றனர். அங்ஙனம் பல வேறு கிரந்த கர்த்தாக்கள் விவரித்துள்ள பல வேறு வியாதிகளையும் அவற்றின் ஹேது-லக்ஷணாதிகளோடு ஒருங்கே திரட்டி விவரிப்பதற்கு "மாதவகான்" என்னும் பண்டைக் காலத்திய வைத்திய ஸார்வ பௌமன் "ருக் விநிச்சயம்" * என்கிற நூலை இயற்றினார். அந் நூலே இங்ஙனம் "மாதவ நிதாநம்' † என்று பிரஸித்தி பெற்றது. "நாநா முநீநாம் வசநைரிதாநீம் ஸமாஸதஸ் ஸத்பிஷஜாம் நியோகாத், ஸோபத்ரவாரிஷ்ட நிதாநலிங்கோ நிபத்யதே ரோகவிநிச்சயோயம்" என்கிற ஆரம்ப பத்தியத்தைப் படிப்பதிலிருந்தே, மாதவகரன் அவருக்கு முன்பு இருஷிகள் இயற்றிய அநேகம் வைத்திய நூல்களில் சிதறியுள்ள விஷயங்களைத் திரட்டி இவ்வாறு ஓர் பரிஷ்காரமான நிதானக் கிரந்தம் இயற்றியதாய் விளங்கும். ஆகவே மாதவகரன் ஆங்காங்கு இருஷிப்ரோக்தமாயுள்ள விஷயங்களை ஒழுங்காக ஒருங்கு சேர்த்தவரே யன்றி, இதிலடங்கிய விஷயங்களுக்கெல்லாம் இவர் ஆசிரியரல்லவென்று அறியலாம். "நாநாசாஸ்த்ரவிஹீநாநாம் பிஷஜாமல்பமேதஸாம், ஸுகம் விஜ்ஞாது மாதங்க மயமேவ பவிஷ்யதி" என்கிற மூன்றாவது ச்லோகத்தினால், மாதவ நிதானத்திற்கு முன்பு வியாதி நிர்த்தாரணத்திற்கென்றே தனியாக விவரமான கிரந்தம் வேறொன்று இருந்ததில்லை யென்றும் கருதவேண்டி யிருக்கிறது. மாதவகரனுக்குப் பிறகும் இவ்விதம் வியாதி விஷயங்களை மாத்திரம் தொகுத்து வேறொருவரும் கிரந்தமியற்றவில்லை. அக் காலம் முதல் இதுவரையில் ஹேது-லக்ஷண ஸ்கந்தங்கள் விஷயமாக "ரோக விநிச்சயம்" என்கிற இக் கிரந்தமே ஆயுர்வேத சாஸ்திரஞ்ஞர்களுக்குக் கண்ணாயிருந்து வருகிறது. ஆனதுப்பற்றியே "நிதாநே மாதவச் சிரேஷ்ட:—" நிதானக் கிரந்தங்களுள் மாதவ நிதானம் சிறந்தது என்று முதுமொழியொன்று வைத்திய சாஸ்திரஞ்ஞர்களால் வழங்கப்படுகிறது.

மாதவகரன் இந்துகரன் என்பவருடைய புதல்வனென்றும், "கர" என்கிற உபபதமுள்ள பெயரைக் கொண்டு இவர் கூர்ஜர தேசம் அல்லது அதற்குச் சமீபித்த வட தேசத்திற் பிறந்திருக்க வேண்டுமென்றும், இவரது ஜீவித காலம் ஏழாவது நூற்றாண்டுக்கு (கி. பி.) முற்பட்டதாயிருக்குமென்றும் ஊஹிக்கப்படுகிறது. ‡வடதேசங்களில். கர, குப்த, ஸேன, தத்த முதலிய உப

---

*ருக் என்றால் வியாதி ; விநிச்சயம் என்றால் நிர்ணயித்தல். வியாதிகளைப் பரிசோதித் துணருவதற்கான நூல் எனக் கருத்து.

†மாதவ என்பது மாதவ கரன் என்கிற நூலாசிரியரைக் குறிப்பது; நிதானம் என்றால் வியாதி நிர்த்தாரண முறையைக் குறிக்கும் பாரிபாஷிகப் பெயர்; மாதவகரன் இயற்றிய நிதானக் கிரந்தம் எனப் பொருள்.

‡பி. ஸி. ராயின் ஹிஸ்டரி ஆப் ஹிண்டு கெமிஸ்ட்ரி. பக்கம் 19—பார்க்க.

பதங்கள் வைத்தியத் தொழில் புரியும் ஸந்ததியாருடைய பெயர்களுக்குப் பின் சேர்த்து அழைக்கப்படுவது வழக்கமென்று,'சப்தகல்பத்ருமம்' என்கிற ஸம்ஸ்க்ருத நிகண்டு கூறுவதைக் கொண்டு, மாதவகரன் ஓர் வைத்தியத்தொழில் புரிந்தவர்களுடைய பரம்பரையிற் பிறந்தவர் என்றும் விளங்குகிறது. மேலும் "ப்ரதித ஸர்வாயுர்வேத போத விசுத்த புத்தி: ஸ்ரீ மாதவகர :" என்று வியாக்யாநாரம்பத்தில் விஜயரக்ஷிதன் கூறுவதைக் கொண்டு மாதவகரன் வைத்திய சாஸ்திரத்தில் சுயம் கரை கண்ட நிபுணரென்றும் தெரியவருகிறது.

மாதவநிதாநத்திற்கு மதுகோசமென்றும், ஆதங்க தர்ப்பணமென்றும், பஞ்சிகா என்றும் மூன்று வியாக்கியாநங்கள் உண்டு. அவற்றுள் மதுகோசவியாக்யாநம் மிகவும் பிரஸித்தமானது. மதுகோச வியாக்யாநம் கிரந்தத்தின் ஆரம்பமுதல் அச்மரீநிதாந மீருக விஜயரக்ஷிதன் என்பவராலும், அதற்கு அடுத்த பிரமேஹ நிதாநம் முதல் கிரந்தத்தின் இறுதி வரையில் ஸ்ரீகண்டதத்தன் என்பவராலும் இயற்றப்பட்டு பூர்த்தியாயிற்று. ஸ்ரீகண்டதத்தன் என்பவர் விஜயரக்ஷிதனுடைய சிஷ்யனென்று பிரமேஹ வியாக்யாநத்தின் ஆரம்பத்திலியற்றிய பத்தியத்தினுல் விளங்குகிறது. மாதவ நிதாநத்தை அனுஸரித்து, அதிற் கூறியுள்ள வியாதிகளின் வரிசைக் கிரமத்தில்—ப்ருந்தமாதவன் என்பவர் "ப்ருந்த மாதவம்" என்று வழங்கப்படும் "ஸித்த யோகம்" என்கிற ஓர் வைத்திய நூல் இயற்றினர். இக்கிரந்தம் முற்றிலும் மாதவ நிதாநத்திற் கூறிய வியாதிகளுக்கு முறையே ஔஷத முறைகளையும் சிகித்ஸாக்கிரமங்களையும் விவரிக்கின்றது. இந்த ஸித்தயோகம் என்கிற நூலானது ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் அல்லது எட்டாவது நூற்றாண்டில் இயற்றப்பட்டதெனத் தெரியவருகிறது.

மாதவ நிதாநம் கி. பி. 775-ம் ஆண்டுக்கு முன்பே ஹாருன், மான்ஸன் (Harun, Monsun) என்கிற கலீபாகாலத்தில் துருக்கியிலுள்ள பாக்டாட் நகரத்தில் அரபிபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு யவன வைத்தியர்களுக்கு உபயோகமாயிருந்துவந்ததென்றும், அதற்கு முன்பே பாரஸீக பாஷையிலும் இது மொழிபெயர்க்கப் பட்டிருந்ததென்றும் பிரொபஸர் வில்ஸன் கூறுகிறார். இந்தியாவில் வடதேசங்களில் ஹிந்தி, கூர்ஜரம், மஹாராஷ்ட்ரம், வங்காளி, ஆந்த்ரம் ஆகிய பாஷைகளிலும் மாதவநிதாநத்தின் மொழிபெயர்ப்புகள் வெளியாயிருக்கின்றன. மாதவ நிதாநம் முற்கூறியவாறு பண்டைக்கால முதல் பலராலும் புகழப்பெற்று வந்தும், இதர தேச பாஷைகளிலெல்லாம் மொழிபெயர்க்கப் பெற்றிருந்தும் தமிழில் மாத்திரம் வெளிவராமலிருந்தது. இக்குறையை நிவ்ருத்தி செய்யவேண்டுமென்று என் கருத்தில் வெகு நாட்களாயிருந்துவந்தும், அக் கோரிக்கையை நிறைவேற்ற இப்பொழுதுதான் ஒருவாறு அவகாசம் ஏற்பட்டது. வடமொழியிலுள்ள இவ்வித பிராசீன வைத்திய நூல்களின் சிறப்பை எனது தமிழ் தேசத்துச் சகோதரர்கள் உணர்ந்து பயன்பெறுவாராக.

மே. து.

———

# விஷய அட்டவணை


**பஞ்சலக்ஷண நிதானம்:**—இஷ்டதேவதா நமஸ்காரம், கிரந்தத்தின் பெயரும் இதை இயற்றுவதின் நோக்கமும், பஞ்சலக்ஷணங்கள், நிதானம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி, வியாதிக்குப் பொதுக்காரணங்கள் ரோகமே வேறு ரோகத்திற்குக் காரணமாவது, வியாதிஸங்கரம் முதலிய விசேஷம். பக்கம் 1—6.

**ஜ்வரநிதானம்:**—ஜ்வரத்தின் விப்ரக்ருஷ்ட நிதானம், ஜ்வர ஸம்ப்ராப்தி, ஜ்வரத்தின் ஸாமாந்யலக்ஷணம், ஜ்வரத்தின் ஸாமாந்ய பூர்வ ரூபம், ஜ்வரத்தின் விசேஷ பூர்வரூபங்கள், வாதஜ்வரலக்ஷணம், பித்த ஜ்வரலக்ஷணம், சிலேஷ்ம ஜ்வரலக்ஷணம், வாத பித்தஜ்வர லக்ஷணம், வாத கபஜ்வர லக்ஷணம், பித்த கபஜ்வர லக்ஷணம், ஸந்நிபாத ஜ்வரலக்ஷணம், ஸந்நிபாத ஜ்வரத்தில் அஸாத்ய கஷ்டஸாத்ய லக்ஷணங்கள், ஸந்நிபாத ஜ்வரத்தின் காலாவதி, ஸந்நிபாத ஜ்வரத்தின் உபத்திரவம், அபிந்யாஸ ஸந்நிபாத ஜ்வரம், ஆகந்துஜ்வரத்தின் விப்ரக்ருஷ்டகாரணங்கள், ஆகந்து ஜ்வரலக்ஷணங்கள், ஆகந்து ஜ்வரங்களில் தோஷங்களின் பிரகோபங்கள், விஷமஜ்வரஸாதாரண ஸம்ப்ராப்தி, ஐந்து விஷமஜ்வரங்களின் விசேஷஸம்ப்ராப்தி, ஐந்துவிஷமஜ்வரங்களின்விவரணம், விஷமஜ்வரம் பூதங்களின் ஸம்பந்தத்தினால் உண்டாகும், த்ருதீயகஜ்வரம் மூன்றுவிதம், சதுர்த்தகஜ்வரம் இரண்டுவிதம், சதுர்த்தக விபர்யயம் என்னும் விஷமஜ்வரம், வாதபலாஸக ஜ்வரம், ப்ரலேபக ஜ்வரம், விசேஷ விஷமஜ்வரங்கள், தாதுக்களைப்பற்றிய ஜ்வரங்கள், ப்ராக்ருத-வைக்ருத ஜ்வரங்கள், ப்ராக்ருத ஜ்வரங்களின் உற்பத்திக்கிரமம், அந்தர்வேக ஜ்வரம், பஹிர்வேக ஜ்வரம், ஆமஜ்வரம், பக்குவநிலைமைக்கு வரும் ஜ்வரம், நிராம ஜ்வரம், ஜ்வரத்தின் ஸாத்யாஸாத்ய லக்ஷங்கள், ஜ்வரம் விட்டுவருவதன் குறிகள், ஜ்வரம் நிவாரணமானதன் குறிகள். 6—21

**அதீஸார நிதானம்:**—அதிஸார நிதானம், அதிஸார ஸம்ப்ராப்தி, அதிஸார பூர்வரூபம், வாதாதிஸாரம், பித்தாதிஸாரம், கபாதிஸாரம், ஸந்நிபாதாதிஸாரம், சோகாதிஸார ஸம்ப்ராப்தி, சோகாதிஸாரம், ஆமாதிஸாரம், ஆமதோஷ லக்ஷணம், மலத்தின் பக்வலக்ஷணம், அதிஸாரத்தில் அஸாத்யலக்ஷணம், இரத்தாதிஸாரம், பிரவாஹிகை, அதிஸார நிவ்ருத்திலக்ஷணம், ஜ்வராதிஸாரம். 21—26

**கிரஹணீரோக நிதானம்:**—கிரஹணீ ரோகத்தின் ஸாமாந்ய ஸம்ப்ராப்தி, கிரஹணியின் ஸங்க்யா ஸம்ப்ராப்தியும் ஸாமாந்ய லக்ஷணமும், கிரஹணியின் பூர்வரூபம், வாதக்கிரஹணீ, பித்தக்கிரஹணீ, கபக்கிரஹணீ, ஸந்நிபாதக் கிரஹணீ, ஸங்கிரஹக் கிரஹணீ, கிரஹணியில் ஸாம நிராமாதி லக்ஷணங்கள், கிரஹணியில் ஸாத்யா ஸாத்யங்களைப்பற்றி தன்வந்தரியின் கொள்கை. 26—28.

**அர்சோ நிதானம் (மூலம்):**—அர்சஸ் ஆறுவிதம், அர்சஸ் ஸம்ப்ராப்தி, வாதார்சஸ்ஸின் நிதானம், பித்தார்சஸ்ஸின் நிதானம், த்வந்த்வஜ ஸந்நிபாதஜார்சஸ்ஸுகள், வாதார்சஸ், பித்தார்சஸ், கபார்சஸ், ஸந்நிபாதார்சஸ், இரத்தார்சஸ்ஸின் ஸாமாந்யலக்ஷணம், வாதஜரக்தார்சஸ், கபஜரக்தார்சஸ், அர்சஸ்ஸின் பூர்வரூபம், அர்சஸ்ஸில் பலவேறு உபத்திரவங்கள் உண்டாவதன் காரணம், ஸுகஸாத்யமான அர்சஸ், கஷ்டஸாத்யமான அர்சஸ், அஸாத்தியமான அர்சஸ், அஸாத்ய அர்சோரோகத்திற் காணும் உபத்திரவங்கள், இதர அவயவங்களில் அர்சஸ் உண்டாதல், சர்மகீலகம். 29—33.

**அக்நிமாந்த்ய-அஜீர்ணாதி நிதானம்:**—ஜாடராக்னி நான்குவிதம், நான்குவித ஜாடக்னியின் க்ருத்தியங்கள், அஜீர்ணமும் அதன் பேதங்களும், அஜீர்ணத்தின் காரணம், ஆமாஜீர்ணம், விதக்த்தா ஜீர்ணம், விஷ்டப்த்தாஜீர்ணம், இரஸ சேஷாஜீர்ணம், அஜீர்ணத்தின் உபத்திரவங்கள், அமித போஜனமும் அஜீர்ணமும்,

அஜீர்ணம் விஷூசி முதலியவற்றிற்கும் காரணம், விஷூசி, அலஸகம், விளம்பிகா, உணவு நன்கு ஜீர்ண மாவதன் குறிகள். 34—37.

**கிருமி நிதாநம்:**—பலவகையான கிருமிகள், பாஹ்யக்கிருமிகள், கிருமிக்குப் பொதுக்காரணம், கிருமிக்கு விசேஷ காரணம், கிருமியுண்டாயிருப்பதற்குப் பொது லக்ஷணம், கபஜக்கிருமிகள், இரக்தஜக்கிருமிகள், புரீஷஜக் கிருமிகள். 37—39.

**பாண்டுரோக-காமலாதி நிதாநம்:**—பாண்டுரோகம் ஐந்துவிதம், பாண்டுவின் நிதாநமும் ஸம்ப்ராப்தியும், பாண்டுவின் பூர்வரூபம், வாதபாண்டு, பித்தபாண்டு, கபபாண்டு, ஸந்நிபாதபாண்டு, ம்ருத்திகையாலுண்டாகும் பாண்டுவின் ஸம்ப்ராப்தி, ம்ருத்திகா பாண்டுவின் லக்ஷணம், பாண்டுவில் அஸாத்ய லக்ஷணங்கள், காமலா அல்லது காமாலை, காமாலையின் ஸம்ப்ராப்தி, காமாலையின் லக்ஷணம், கும்பகாமாலை, காமாலையின் அஸாத்யக்குறிகள், கும்பகாமலாவின் அஸாத்ய நிலைமை, ஹலீமகம். 39—42.

**இரக்த-பித்த நிதாநம்:**—இரக்த-பித்த நிதாநமும் ஸம்ப்ராப்தியும், இரக்த பித்தத்தின் பூர்வரூபம், ச்லேஷ்மிக ரக்த-பித்தம், வாதிக ரக்த பித்தம், பைத்திக ரக்த-பித்தம், ஸம்ஸர்க்க-ஸந்நிபாத இரக்த-பித்தங்கள், மூன்றுவித இரக்த-பித்தம், இரக்த-பித்தத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள், இரக்த-பித்தத்தில் உபத்திரவங்கள், இரக்த பித்தத்தின் அஸாத்யலக்ஷணங்கள். 42-44.

**இராஜயக்ஷ்ம க்ஷதக்ஷீண நிதாநம் (க்ஷயம்):**—இராஜயக்ஷ்மநிதாநம், இராஜயக்ஷ்ம ஸம்ப்ராப்தி, இராஜயக்ஷ்மபூர்வரூபம், இராஜயக்ஷ்மாவின் ஸாமாந்ய லக்ஷணம், இராஜயக்ஷ்மாவின் அஸாத்யலக்ஷணங்கள், இராஜயக்ஷ்மாவின் ஸுக ஸாத்ய நிலைமை, எழுவித சோஷங்கள், வ்யாயாம சோஷம், சோக சோஷம், விரணசோஷம், அத்வ சோஷம், வ்யவாயசோஷம், விரண சோஷம், க்ஷதக்ஷீணம, உரக்ஷதநிதாநம், உரக்ஷதலக்ஷணாதிகள், க்ஷதத்தின் விசேஷலக்ஷணம், க்ஷீணத்தின விசேஷலக்ஷணம், க்ஷத-க்ஷீணத்தில் ஸாத்யா ஸாத்ய நிலைமைகள். 44—48.

**காஸநிதாநம்:**—காஸநிதாநம், காஸஸம்ப்ராப்தி, ஐந்து வித காஸம், காஸத்தின் பூர்வரூபம், வாதகாஸம், பித்தகாஸம், கபகாஸம், க்ஷதகாஸம், க்ஷயகாஸம், க்ஷத-க்ஷயகாஸங்களின் ஸாத்யாஸாத்யாதிநிலைமைகள், 48-50.

**ஹிக்கா ச்வாஸநிதாநம்:**—ஹிக்கா-ச்வாஸநிதாநம், ஹிக்காவின் ஸாமாந்யலக்ஷணம், ஐந்துவித ஹிக்கா, ஹிக்கா பூர்வரூபம், அந்நஜஹிக்கா, யமளஹிக்கா, க்ஷுத்ரஹிக்கா, கம்பீரஹிக்கா, மஹாஹிக்கா, ஹிக்காவின் அஸாத்ய லக்ஷணங்கள்; ஐந்துவித ச்வாஸங்கள், ச்வாஸத்தின் பூர்வரூபங்கள், ச்வாஸஸம்ப்ராதி, மஹாச்வாஸம், ஊர்த்வச்வாஸம், சின்ன ச்வாஸம், தமகச்வாஸம், ப்ரதமகச்வாஸம், க்ஷுத்ரச்வாஸம், தமக ச்வாஸத்தில் ஸாத்யாஸாத்யங்கள், ச்வாஸரோகம் மிகக்கடுமையானது. 50—54.

**ஸ்வரபேத நிதாநம்:**—ஸ்வர பேதத்தின் நிதாநம், ஆறுவித ஸ்வரபேதம், பித்தஜ ஸ்வரபேதம், கபஜஸ்வரபேதம், ஸந்நிபாதஜ ஸ்வரபேதம், க்ஷயஜஸ்வரபேதம், மேதோஜ ஸ்வரபேதம், ஸ்வரபேதத்தில் அஸாத்யமானவை. 54—55.

**அரோசக நிதாநம்:**—அரோசகங்களின் நிதாநம், வாதஜாரோசகம், பித்தஜாரோசகம், கபஜாரோசகம், ஆகந்துகாரோசகம், ஸந்நிபாதஜாரோசகம். அரோசகங்களின் விசேஷக் குறிகள். 55—56.

**சர்தி நிதாநம்:**—ஐந்துவித சர்திகள், சர்தி நிதாந ஸம்ப்ராப்திகள், சர்தியின் பூர்வ ரூபம், வாதஜ சர்தி, பித்தஜ சர்தி, கபஜசர்தி, ஸந்நிபாதஜ சர்தி, ஆகந்துக சர்தி, கிருமிஜச் சர்தியின் விசேஷக் குறிகள், சர்தியில் அஸாத்ய லக்ஷணம். 56—57.

**த்ருஷ்ண நிதாநம்:**—த்ருஷ்ண ஸம்ப்ரஸ்தி, த்ளிஷ்ணையின் ஸங்க்யா ஸம்ப்ராப்தி, வாத த்ருஷ்ணை, பித்த த்ருஷ்ணை, கபத்ருஷ்ணை, க்ஷதஜ் த்ருஷ்ணை, க்ஷயத்ருஷ்ணை, ஆமதோஷஜ த்ருஷ்ணை, அன்னஜ த்ருஷ்ணை ஔபஸர்கிக த்ருஷ்ணை, த்ருஷ்ணையின் அஸாத்ய நிலைமைகள். 58—59.

**மூர்ச்சாதி நிதாநம்:**—மூர்ச்சை, மூர்ச்சையின் நிதாந-ஸம்ப்ராப்திகள், மூர்ச்சையின் ஸங்க்யா ஸம்ப்ராப்தி, மூர்ச்சையின் பூர்வ ரூபம், வாத மூர்ச்சை, பித்த மூர்ச்சை, கப மூர்ச்சை, ஸந்நிபாத மூர்ச்சை, இரக்த மூர்ச்சையின் ஸம்ப்ராப்தியும் காரணமும், விஷமத்ய மூர்கசைகளின் ஸம்ப்ராப்தியும் காரணமும், இரக்த மூர்ச்சை, மத்ய மூர்ச்சை, விஷ மூர்ச்சை, மூர்ச்சாதிகளின் மூலதத்துவங்கள், ப்ரமம், தந்த்ரா, ஸந்நியாஸம். 60—62.

**பாநர்த்யயார்தி நிதாநம்:**—மதாத்யயத்தின் பொது நிதாநம், நான்குவித மதங்கள், முதல் மதம், இரண்டாவது மதம், மூன்றாவது மதம், நான்காவது மதம், மதாத்யயாதிகளுக்குக் காரணமான மதுபான முறைகள், வாத மதாத்யயம், பித்தமதாத்யயம், கபமதாத்யயம், ஸந்நிபாத மதாத்யடம், பரமதம், பாநாஜீர்ணம், பாநவிப்ரமம், பாநஹதம். 63—65.

**தாஹ நிதாநம்:**—மத்யஜ தாஹம், இரத்தஜ தாஹம், பித்தஜ தாஹம், த்ருஷ்ணஜ தாஹம், க்ஷதஜ தாஹம், தாதுக்ஷயஜ தாஹம், மர்மாபிகாதஜ தாஹம், தாஹ ரோகத்தில் அஸாத்யக்குறி. 65—67.

**உந்மாத நிதாநம்:**—(பித்து) உந்மாதம், ஸங்க்யா ஸம்ப்ராப்தி, மதம், உந்மாதத்தின் நிதாநம், உந்மாத ஸம்ப்ராப்தி, உந்மாத ஸாமாந்யலக்ஷணம், வாதோந்மாதம், பித்தோந்மாதம், கபோந்மாதம், ஸந்நிபாதோந்மாதம், சோகாதிஜோந்மாதம், விஷஜோந்மாதம், உந்மாதத்தில் அஸாத்யநிலைமை, பூதோந்மாதத்தின் பொதுக் குறிகள், தேவோந் மாதம், அஸுரோந்மாதம், கந்தர்வோந் மாதம், யக்ஷோந் மாதம், பித்ருக்கிரஹோந் மாதம், நாகோந்மாதம், இராக்ஷஸோந் மாதம், பிசாசோந் மாதம், உந் மாதத்தில் அஸாத்ய லக்ஷணங்கள், தேவாதிக் கிரஹஹங்கள் ஆவேசத்திற்குறிய காலங்கள். 67—70

**அபஸ்மார நிதாநம்:**—அபஸ்மாரத்தின் நிதாந ஸம்ப்ராப்திகள், அபஸ்மாரத்தின் பொது லக்ஷணம், அபஸ்மார பூர்வ ரூபம், வாதாபஸ்மாரம், பித்தாபஸ்மாரம், கபா பஸ்மாரம், ஸந்நிபாதா பஸ்மாரமும் அஸாத்யாபஸ்மாரமும், அபஸ்மாரம் கிளம்புவதற்கான காலநியமங்கள். 71.

**வாதவியாதி நிதாநம்:**—வாதரோக ஸாமாந்ய நிதாந ஸம்ப்ராப்திகள், வாத ரோகங்களின் ஸாமாந்ய பூர்வ ரூபம் முதலியது, வாதரோக ஸாமாந்ய லக்ஷணம், வாதம் வெவ்வேறு ரோகங்களை யுண்டுபண்ணுதல், ஸ்த்தாந பேதங்களை யனுஸரித்துண்டாகும் வாத ரோகங்கள், தாதுக்களைப் பற்றிய வாதரோகங்கள், ஆவரண வாதங்கள், ஆக்ஷேபக வாதம், அபதந்த்ரகம் அல்லது அபதாநகம், தண்டாபதாநகம், தநுஸ்தம்பம், அபிகாதஜ வாதம், அஸாத்யாபதாநகங்கள், ஸர்வாங்கவாதம், வாத ரோகங்களில் வேறு தோஷங்களின் ஸம்பந்தங்களாலான குறிகள், பக்ஷவாதத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள், அர்தித வாதம், அர்திதத்தில் அஸாத்ய லக்ஷணம், ஹநுக்ரஹம், மந்யாஸ்தம், ஜிஹ்வாஸ்தம்பம், ஸிராக்ரஹம், க்ருத்ரஸீவாதம், விச்வாசீ, க்ரோஷ்டுக சீர்ஷம், கஞ்ஜம், பங்கு, கலாய கஞ்ஜம், வாத கண்டகம், பாத தாஹம், பாத ஹர்ஷம், அம்ஸ சோஷம், அபபாஹுகம், மூகன் மின்மினன் முதலியவர், தூநீ, பிரதிதூநீ, ஆத்மாநம், பிரத்யாத்மாநம், வாதாஷ்டீலா, பித்தாஷ்டீலா, வஸ்தி வாதம், வேபது, கல்வீ, ஊர்த்வ வாதம், வாதரோக ஸங்கிரஹம், வாத ரோகங்களில் ஸாத்யா ஸாத்யங்கள், வாத ரோக உபத்திரவங்கள், வாதம் இயற்கை நிலைமையிலிருப்பதன் பிரயோஜனம். 72—81.

**வாதரக்த நிதாநம்:**—வாத ரக்தத்தின் நிதாநம், வாத ரக்தத்தின் ஸம்ப்ராப்தி, வாத ரக்த பூர்வ ரூபம், வாதாதிக வாத ரக்தம், இரத்தாதிக வாத ரக்தம், பித்தாதிக வாத ரக்தம், கபாதிக வாத ரக்தம், வாதரக்தத்தின்

விசேஷ லக்ஷணம, வாத ரக்தத்தில் அஸாத்தியாதி நிலைமை, வாத ரக்தத்தில் உபத்திரவங்கள், வாத ரக்தத்தில் ஸாத்தியா ஸாத்தியங்கள். 81—83.

**ஊருஸ்தம்ப நிதாநம்** :—ஊருஸ்தம்பத்தின் நிதாந ஸம்ப்ராப்திகள், ஊருஸ்தம்பத்தின் ரூபம், ஊருஸ்தம்பத்தின் இலக்ஷணாதிகளின் விசேஷம், ஊருஸ்தம்பத்தில் அஸாத்திய நிலைமை. 83—84.

**ஆமவர்த நிதாநம்** :—(கீல் வாயு முதலியது) ஆமவாதத்தின் ஸாமாந்ய லக்ஷணம், ஆமவாதத்தின் உபத்திரவங்கள், ஆமவாதத்தில் வாதாதிகளின் விசேஷ ஸம்பந்தத்தாலுண்டாகும் பேதங்கள், ஆமவாதத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள். 85—86.

**சூல பரிணாமசூலாதி நிதாநம்** :—(வயிற்று வலி) எட்டுவித சூலை, வாத சூலை, பித்த சூலை, கப சூலை, ஸந்நிபாத சூலை, ஆம சூலை, த்வந்த்வ தோஷங்களாலான சூலைகள், சூலையில் ஸாத்யா ஸாத்யங்கள், பரிணாம சூலை, அன்னத்ரவ சூலை. 87—89.

**உதாவர்த்தாநாஹ நிதாநம்** :—உதாவர்த்தத்தின் நிதாநம், அபான வாதஜோதாவர்த்தம், மலஜோதாவர்த்தம், மூத்ரஜோதாவர்த்தம், ஜ்ரும்பாஜோதாவர்த்தம், அச்ருஜோதாவர்த்தம், க்ஷவதுஜோதாவர்த்தம், உத்கார ஜோதாவர்த்தம், உச்சுவாஸஜோதாவர்த்தம், நித்ராஜோதாவர்த்தம், வாதஜோதாவர்த்தம், ஆநாஹம், ஆமாசயத்தைப் பற்றிய ஆநாஹம், பக்வாசயத்தைம்பற்றிய ஆநாஹம். 89—91.

**குல்ம நிதாநம்** :—குல்மத்தின் நிதாநம், குல்மக் கிரந்தியின் ஸாமாந்ய உருவம், ஐந்துவித குல்மங்கள், குல்மத்தின் பூர்வ ரூபம், குல்மமுண்டாயிருப்பதின் ஸாமாந்ய லக்ஷணம், வாத குல்மம், பித்த குல்மம், கப குல்மம், த்வந்த்வதோஷ குல்மங்கள், ஸந்நிபாத குல்மம், இரக்த குல்மம், குல்மத்தில் அஸாத்ய லக்ஷணங்கள், குல்மத்தில் உபத்திரவங்கள். 91—95.

**ஹ்ருத்ரோக நிதாநம்** :—ஹ்ருத்ரோகத்தின் காரணம், ஹ்ருத்ரோகத்தின் ஸம்ப்ராப்தி, வாத ஹ்ருத்ரோகம், பித்த ஹ்ருத்ரோகம், கபஹ்ருத்ரோகம், ஸந்நிபாத ஹ்ருத்ரோகம், க்ருமி ஹ்ருத்ரோகம், ஹ்ருத்ரோகத்தின் உபத்திரவங்கள். 95—96.

**மூத்ரக்ருச்சிர நிதாநம்** :—மூத்ரக்ருச்சிரத்தின் காரணம், மூத்ரக்ருச்சிர ஸம்ப்ராப்தி, வாதஜமூத்ரக்ருச்சிரம், பித்தஜ மூத்ரக்ருச்சிரம், கபஜமூத்ரக்ருச்சிரம், ஸந்நிபாதஜ மூத்ரக்ருச்சிரம், க்ஷதஜ மூத்ரக்ருச்சிரம், புரீஷஜ மூத்ரக்ருச்சிரம், அச்மரீஜ மூத்ரக்ருச்சிரம், சுக்ரஜ மூத்ரக்ருச்சிரம், அச்மரீ சர்க்கரைகளுக்குள்ள ஸம்பந்தமும் பேதமும். 96—97

**மூத்ராகாத நிதாநம்** :—மூத்ராகாதத்தின் ஸங்க்யா ஸம்ப்ராப்தி முதலியது, வாத குண்டலிகா, அஷ்டீலா, வாத வஸ்தி, மூத்ராதீதம், மூத்ரஜடரம், மூத்ரோத் ஸங்கம், மூத்ர க்ஷயம், மூத்ரக் கிரந்தி, மூத்ர சுக்ரம், உஷ்ண வாதம், மூத்ர ஸாதம், விட்விகாதம், வஸ்தி குண்டலம். 97—99.

**அச்மரீ நிதாநம்** :—அச்மரீ ஸம்ப்ராப்தி, அச்மரீ பூர்வ ரூபம், அச்மரியின் ஸாமாந்ய லக்ஷணம், வாதாச்மரீ, பித்தாச்மரீ, கபாச்மரீ, அச்மரியும் பாலர்களும், சுக்ராச்மரீ, சர்க்கரா, அச்மரீ சர்க்கரைகளின் உபத்திரவங்கள், அச்மரியில் அஸாத்ய லக்ஷணம். 99—100.

ஸ்ரீ:

# மாதவ நிதாநம்

என்னும்

# ரோக விநிச்சயம்.

## I. பஞ்ச லக்ஷண நிதாநம்.*

இஷ்டதேவதா நமஸ்காரம்:—உலகத்தின் ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரங்களுக்குக் காரணமாகவும், ஸ்வர்கம் மோக்ஷம் இவற்றைப் பெறுவதற்குப் பிரதாந வாயிலாகவும், மூவுலகங்களுக்கும் முக்கிய இரக்ஷகனாகவுமுள்ள சிவபெருமானைப் பணிந்து இக்கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது. 1

கிரந்தத்தின் பெயரும் இதை இயற்றுவதின் நோக்கமும்:—அறிவிற் சிறந்த அநேக வைத்தியர்களுடைய அநுமதியின்பேரில், பல முனிவரது வசநங்களைப் பிரமாணமாகக் கொண்டு, அக்கிரந்தங்களிலுள்ள விஷயங்களை ஸங்கிரஹித்து, ரோக விநிச்சயம்[1] என்கிற இந்நூல் இயற்றப்படுகிறது; இதில் உபத்ரவம், அரிஷ்டம், நிதாநம், லிங்கம்[2] என்கிற விஷயங்களின் விவரணம் அடங்கியிருக்கும். அநேகவிதமான கிரந்தங்களைக் கிடைக்கப் பெறாதவரும், பிரபலமான பல நூல்களைப் படித்தறிவதற்குப் போதிய திறமையில்லாதவருமான வைத்தியர்கள், வியாதி நிலைமையை எளிதிற் கற்றறிவதற்கு இக்கிரந்தமே ஏற்ற கருவியாயிருக்கும். 2, 3.

பஞ்ச லக்ஷணங்கள்:—நிதாநம், பூர்வரூபம், ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்கிற இவை வியாதிகளைத் தெரிந்துகொள்வதற்கான ஐந்து உபாயங்களாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.[3] 4.

---

* நிதாநம் (அல்லது காரணம்), பூர்வரூபம் ரூபம், உபசயம், ஸம்ப்ராப்தி என்பவை பஞ்ச லக்ஷணங்கள். இவற்றை விவரிக்கும் பிரகரணம் "பஞ்சலக்ஷண நிதாநம்" எனப்படுகிறது. இங்கு ஒவ்வொரு அத்தியாயம் அல்லது பகுதியும் நிதாநம் என்கிற பெயரால் அழைக்கப்படும். பஞ்ச லக்ஷணங்களுடைய விவரணம் இனி கிரமமாகக் கூறப்படும்.

1. மாதவகரன் என்கிற ஆசிரியரால் இயற்றப்பட்ட நிதாநக்கிரந்தமானதால் இது மாதவ நிதாநம் என்று பிரஸித்தமாகக் கூறப்படுகிறது; ஆனால் இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் ரோக விநிச்சயம் என்பதே.

2. ஒரு வியாதியை ஆதாரமாகக் கொண்டு உண்டாகும் மற்றொரு வியாதி 'உபத்ரவம்'; மரணஸூசகமான குறி 'அரிஷ்டம்'; வியாதிக்குக் காரணம் 'நிதாநம்'; வியாதியின் குறி 'லிங்கம்.' அல்லது 'இலக்ஷணம்'. இவற்றின் மற்ற விவரணம் பின்னால் வரையப்படும்.

3. நிதாநம் முதலிய ஐந்து அம்சங்களும் தனித்தனியாகவும், ஒருமிக்கவும் வியாதி நிலைமைகளைப் பற்றி அறிவிக்கக் கூடியனவாதலால், இவை பொதுவாகப் "பஞ்ச லக்ஷணங்கள்" எனப் படுகின்றன. மேலும் ஹேது-லக்ஷணாதிகளை நிர்தேசம் செய்வதால், அல்லது அவற்றை நிச்சயிப்பதற்கு ஸாதகமாயிருப்பதால் இவ்வைந்தும் "நிதாநம்" என்கிற பொதுப்பெயராலும் வழங்கப்படுகிறது. ஆகவே இவ்விஷயங்களை விவரிக்கும் நூலுக்கும் "நிதாநக் கிரந்தம்" என்று பெயரிட்டனர். நிதாநம் என்பதற்கு மூலகாரணம் என்கிற பொருள் பிரஸித்தமாகையால், அதன்படி வியாதிக்குக் காரணம் என்கிற பொருளிலும் இது முக்கியமாக வியவஹரிக்கப்படும். இவற்றிற்குப் "பஞ்ச நிதாநம்" என்றும் பெயருண்டு.

நிதாநம்:—நிமித்தம், ஹேது, ஆயதநம், ப்ரத்யயம், உத்தாநம், காரணம், நிதாநம் ஆக இவற்றை வியாதிக்கு மூலகாரணமென்னும் பொருளைக் குறிப்பிடும் பர்யாய சப்தங்களாக வழங்குவர்.[1] $4\frac{3}{4}$.

பூர்வரூபம்:—(1) பூர்வரூபம் அல்லது ப்ராக்ரூபம் என்றால் முற்குறி; ஒரு வியாதி, குறிப்பிட்ட எத்தோஷ ஸம்பந்தமான குறியையும் பெறுமலிருக்கையிலேயே எந்த இலக்ஷணத்தினுல் அது ஒருவாறு முன்னதாய் அறியப்படுகிறதோ அது பூர்வரூபம். (2) உண்டாகப்போகிற வியாதியின் குறி சொற்பமாயிருக்குமாகையால் இந்த நிலைமையில் வியாதிக்குறி விளங்கத் தோன்றுது; இப்பூர்வரூபமென்கிற முற்குறி அந்தந்த வியாதிக்குத் தகுந்தவாறு பேதப்படும்.[2] 5, 6.

---

1. வாதாதி தோஷங்களைக் கோளாறடையச் செய்து வியாதியை உற்பத்தி செய்வதற்கு ஆதாரமாயிருப்பது நிதாநம் எனப்படுகிறது; அல்லது வாதாதி தோஷங்களே நிதாநமா யிருப்பதுண்டு.நிதாநம் நான்கு விதமாகக் கருதப்படுகிறது:—(1)ஸந்நிக்ருஷ்ட நிதாநம்:ஸமீபித்த காரணம் எனப்பொருள்;ஸாதாரணமாய் பகல், இரவு, போஜநம் முதலியவை தோஷப்பிரகோபத்திற்கு உடனே காரணங்களாகின்றன; சயாவஸ்த்தை முதலியதை இக்காரணங்கள் எதிர் பார்ப்பதில்லை; ஆகவே இவை ஸந்நிக்ருஷ்ட காரணங்கள். (2) விப்ரக்ருஷ்ட நிதாநம்: தூரத்திலுள்ள காரணம் எனப்பொருள்; க்ரீஷ்மருதுவில் சயாவஸ்த்தையை அடைகிற வாயு, பிறகு வர்ஷருதுவில் பிரகோபித்து வியாதியையுண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது; இங்கே வாததோஷம் வர்ஷருதுவில் வியாதியுண்டு பண்ணுவதற்கேற்றவாறு க்ரீஷ்மருதுவில் அதற்குச் சயாவஸ்த்தை ரூபமான கோளாறை யுண்டுபண்ணுவதற்குக் காரணம் ஏற்படுகிறதாகையால் இது விப்ரக்ருஷ்ட காரணமாகும். (3) வ்யபிசாரி நிதாநம்:—வியாதியை முற்றிலும் நன்கு உண்டு பண்ணுவதற்குப் போதிய சக்தியில்லாத காரணம் எனக் கருத்து; அல்லது வியாதியை எளிதில் உண்டு பண்ணுவதற்கு அனுகூலமான துர்பல தாதுக்களுடன் கூடிய தேஹத்திற் பிரவேசிக்காமல், பலமான தேஹத்திற் பிரவேசித்த ஸாதாரண வியாதிகாரணம் என்றும் சொல்லலாம். (4) பிரதாந நிதாநம்:—பலமான காரணம்; விஷம் முதலியது இதற்கு திருஷ்டாந்தம். வேறு வகையில் நிதாநத்தை மூன்று விதமாகவும் பகுக்கலாம். (1) தோஷப்பிரகோபஹேது:— தோஷங்களின் சய-ப்ரகோப-ப்ரசமங்களுக்குக் காரணமாய் அந்தந்த ருதுவில் ஏற்படும் மதுராதி ஸ்வபாவம் நிரம்பிய வஸ்து முதலியது. (2) வியாதிப்பிரகோபஹேது:—மண் உண்பது பாண்டு ரோகத்திற்குக் காரணமாகும் என்பது. (3) உபயப்பிரகோபஹேது:—விதச்த்தமான (காந்தல்) உணவு முதலியதை யுண்பவனுக்கு இரத்தம் அழன்று போய், வாதமும் பிறகு கோளாறடைந்து, வாத ரக்தம் என்கிற வியாதி யுண்டாகிறது; இதில் தோஷம் வியாதி இரண்டும் ஒரே ஸமயத்தில் பிரகோபிக்கும்.

2. இவ்விதமான வியாதி இனி உண்டாகப் போகிற தென்பதை முன்னதாகவே ஸூசிப்பிக்கும் குறி பூர்வரூபம். இது ஸாமாந்ய பூர்வரூபம், விசேஷ பூர்வரூபம் என்று இருவகைப்படும். வியாதியின் காரணம் தேஹத்திற் பற்றி, தோஷ-தாதுக்களுக்குக் கலவரத்தைத் தந்து, ஜ்வரம் முதலிய ஒரு குறிப்பிட்ட வியாதி யுண்டாகப்போகிறதென்பதைமாத்திரம் முன்னதாகத் தெரிவிக்கும் பொதுக்குறி ஸாமாந்ய பூர்வரூபம். இக்குறி, உண்டாகப்போகிற வியாதி வாத ஸம்பந்தமானதா, பித்த ஸம்பந்தமானதா என்கிற இவை முதலிய பேதங்களைப் பகுத்து அறிவிக்கக்கூடியதன்று. ஜ்வரம் உண்டாவதற்கு முன்பு சிரமம், அமைதியின்மை, முகம் முதலியதிற் கலக்கம் முதலியவை அவ்வியாதிக்கு ஸாமாந்ய பூர்வரூபக் குறிகளாகும். உண்டாகப் போகிற வியாதி வாதாதிதோஷங்களில்இதனிதன் கோளாறால் முக்கியமாய் உண்டாகுமென்று ஒருவாறு ஊஹித்தறியக் கூடிய குறி விசேஷபூர்வரூபம் எனப்படும். ஜ்வரத்தில் அது நன்கு உண்டாவதற்கு முன்பு முற்கூறிய ஸாமாந்யக்குறிகளோடு கொட்டாவி அதிகமாயுண்டானல், உண்டாகப் போகிற ஜ்வரம் வாத ஸம்பந்தமாயிருக்குமென்றும், கண்களில் அழற்சி யேற்பட்டால் பித்த ஜ்வரம் உண்டாகுமென்றும், அன்னத்தில் அருசியுண்டானல் அது கபஸம்பந்தமாயிருக்குமென்றும் ஊஹிக்கலாம். இவை விசேஷபூர்வ ரூபத்திற்கு திருஷ்டாந்தமாகும். மேலே முதலிற் குறிப்பிட்ட (1) என்கிற பாகம் ஸாமாந்ய பூர்வரூபத்திற்கும், இரண்டாவது குறிப்பிட்ட (2) எனகிற பாகம் விசேஷ பூர்வரூபத்திற்கும் இலக்ஷணங்களெனக் கருதவேண்டும். குளிர்ந்த காற்று வீசுவதும், கார்மேகம் ஆகாயத்திற் சூழ்வதும் மழை வரப் போகிற தென்பதை முன்னதாய் அறிவிக்குமாபபோலே, பூர்வரூபங்கள் என்கிற சில முந்திய தோற்றங்கள் பிறகு வரக்கூடிய வியாதிக்கு ஸூசகங்களாம்.

ரூபம் :—அப் பூர்வரூபக்குறியே நன்கு விளங்கத் தோன்றிவிட்டதானால் ரூபம் எனப்படும். இதுவே ஸம்ஸ்த்தானம், வ்யஞ்ஜநம், லிங்கம், இலக்ஷணம், சிஹ்நம், ஆக்ருதி என்கிற பெயர்களாலும் வழங்கப்படும்[1] .7.

உபசயம்—(உபசயமும் அநுபசயமும்)[2] :—வியாதியின் காரணத்திற்காவது வியாதிக்காவது இயற்கைத் தன்மையில் நேர் எதிரிடையாயிருப்பவையான, அல்லது அவற்றிற்கு எதிரிடையாகக் காரியங்களையாவது செய்யக்கூடியவையான ஔஷதமென்ன, உணவென்ன, வேலையென்ன இவற்றின் பிரயோகத்தினால் வியாதி நிவாரணரூபமான சுகத்தை உண்டுபண்ணும் யாதொரு உபயோகம் உண்டோ, அதை உபசயம் என்று அறிக; இவ்வுபசயமே வியாதிக்கு 'ஸாத்மியம்' என்று கருதப்படுகிறது. அப்படிக்கின்றி முற்குறிப்பிட்ட ஔஷதாதிகளின் உபயோகம் வியாதியை நிவ்ருத்திக்காமற் போனால், அவ்வநுகூல மின்மையானது அநுபசயம் என்றும், வியாதிக்கு 'அஸாத்மியம்' என்றும் கூறப்படுகிறது. 8, 9.

---

1. ரூபம் என்றால் வியாதி யுற்பத்தியான பிறகு காணும் குறி. ரூபத்தைக் கொண்டு வியாதி யின்னதென்று அறிகிறோம்; ரூபமின்றி வியாதியுண்டாகாது. அருசி, அமைதியின்மை, தாபம் முதலியவை சேர்ந்தால் ஜ்வரம்; பிறகு விவரிக்கப்படுமாறு காஸம் முதலிய பதினொரு இலக்ஷணங்கள் சேர்ந்தால் அவை க்ஷயம் அல்லது இராஜயக்ஷ்மாவைக் குறிப்பிடும். ஆகவே ரூபங்களை வியாதியின் காரியங்களெனக் கூறலாம். "அப் பூர்வரூபக்குறியே......" என்பதால், விசேஷ பூர்வரூபக்குறி முக்கியமாகக் குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் பூர்வரூபம் தோன்றியே அப்பால் ரூபம் காணப்படுமாகையால் "அப் பூர்வரூபக்குறியே" எனக் கூறப்பட்டது. பூர்வரூபத்திற்குப் பிறகு 'ஸம்ப்ராப்தி' உண்டாவது இயல்பு; ஆகவே பூர்வரூபத்திற்குப் பிறகு ஸம்ப்ராப்தி விஷயம் கூறப்பட்டு அதன் பிறகே ரூபவிஷயம் மொழியப்பட வேண்டும். அங்ஙனம் செய்யாமல் பூர்வ ரூபத்திற்குப் பிறகு ரூபம் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம், ஸம்ப்ராபதியைப்பற்றிய விஷயம் சிறிது விரிவாகக் கூறப்படவேண்டி யிருக்கிற தென்பதே; ஆகையால் ஸம்ப்ராப்தி விஷயமான விவரணம் பஞ்ச லக்ஷண நிதானத்தில் கடைசியில் கூறப்படுகிறது. சரகர், வாக்படர் முதலிய கிரந்த கர்த்தாக்களும் இதே கிரமத்தை அநுஸரித்து பூர்வரூப-ரூபாதி விஷயங்களை விவரித்திருக்கின்றனர்.

2. உபசயம் என்றால் வியாதி நிவ்ருத்தியாதல். இதையே சிறிது விளங்கக் கூறுவோம்:—நிதானம் எனப்படும் ரோககாரணத்திற்காவது, ரோகத்திற்காவது குணத்தில் எதிரிடையான ஔஷதத்தையும், உணவையும், வேலையையும் உபயோகிப்பதால் வியாதிக்கு உபசயம் (உபசாந்தி) உண்டாகும்; என்றால்—ஹேதுவிபரீதமான அல்லது வியாதி விபரீதமான ஔஷத அன்ன விஹாரங்களால் வியாதிக்கு உண்டாகும் தணிவுஉபசயமாகும். நிதானத்திற்காவது வியாதிக்காவது எதிரிடையல்லாத குணமுள்ளவைகளாகத் தோற்றுபவையும், இறுதியில் (பலனில்) அவற்றிற்கு எதிரிடையான காரியங்களைச் செய்பவையுமான ஔஷத-அன்ன-விஹாரங்கள் ஹேது விபரீதார்த்தகாரிகள் என்றும், வியாதிவிபரீதார்த்தகாரிகள் என்றும் கூறப்படும். உதாரணங்கள்:—(1) ஹேதுவிபரீதமான ஔஷதம்—குரு ஸ்நிக்த்த சீதங்கள் என்னும் காரணங்களால் உண்டான வியாதியில், இலகு ரூக்ஷ உஷ்ணங்கள் என்கிற குணங்களையுடைய பதார்த்தங்களை முறையே பிரயோகித்தல். (2) ஹேது விபரீதமான அன்னம் — ஸந்தர்ப்பணத்தினால் (தேஹத்துக்கும் மனதுக்கும் த்ருப்தி யுண்டுபண்ணி பலந்தரும் சிகித்ஸையால்) உண்டான வியாதியில் அபதர்ப்பணமான (இலங்கம் முதலிய) சிகித்ஸையைச் செய்தல். (3) ஹேதுவிபரீதமான விஹாரம்—மிதமிஞ்சி உழைப்பதால் ஏற்பட்ட வியாதியில் உடம்பு அசையாமல் அமைதியாயிருத்தல். (4) கபத்தினால் உண்டான ஜ்வரத்தில் கிருதபானம் செய்வித்தல் வியாதி விபரீதமான ஔஷதமாகும். (5) அதே கபஜ்வரத்தில் பேயா என்னும் கஞ்சிவகைகளை உபயோகித்தல் வியாதி விபரீதமான அன்னமாம். (6) அதே ஜ்வரத்தில் அமைதியாகப் படுத்திருப்பது வியாதி விபரீதமான விஹாரமாம். (7) ஹேது விபரீதார்த்த காரியான ஔஷதம்—பித்தப்பிரதானமான வீக்கத்தில் பித்தகரமான உஷ்ணமாயுள்ள பிசுமுதலிய ஒற்றடங்களை உபயோகித்தல்; இதனால் பித்தவீக்கம் தணியும். (8) ஹேது விபரீதார்த்த காரியான அன்னம்—அதே பித்தவீக்கத்தில் உஷ்ண வீர்யமான விதாஹி குணமுள்ள உணவுகளை உபயோகித்தல். (9) சர்த்தியில் விரல் குச்சி முதலியவற்றைத் தொண்டையில் செலுத்தி சர்த்தியையே உண்டுபண்ணுதல் ஹேதுவிபரீதமான செயல் அல்லது விஹாரமாகும். (10) சர்த்தியென்னும் வாந்தியில் அதையே உண்டாக்கக்கூடிய உப்பு முதலியதை உபயோகித்தல்வியாதி விபரீதார்த்தகாரி ஔஷதமாம். (11) அதிஸாரத்தில் விரேசன முண்டுபண்ணும் பாலையே உட்கொள்ள, சில விரேசநம் ஆய் அதிஸாரம் நிற்கும்;இது வியாதி விபரீதார்த்த காரியான அன்னம்.(12) உட்புகுந்து துன்பமளிக்கும் சல்யத்தை வெளிப்படுத்த ரோகியை வண்டியில் ஏற்றி மேடுபள்ளங்களில் இழுப்பது வியாதி விபரீதார்த்த காரியான விஹாரமாகும்,

[ஸாத்மியம் என்றால் அநுகூலமானது. அஸாத்மியம் என்றால் அநுகூலமல்லாதது. இவை நிதானக்கிரந்தத்தில் வியாதி ஸாத்மியம் என்றும், வியாத்யஸாத்மியம் என்றும் அல்லது உபசயம் என்றும், அநுபசயம் என்றும் முறையே வழங்கப்படும்.]

ஸம்ப்ராப்தி:—தோஷம் முதலிற் கோளாறடைந்த வகைகளையும், அப்பால் அத்தோஷம் தேஹத்தில் வியாபிக்கும் விதங்களையும், அதனால் வியாதியுண்டாகும் கிரமத்தையும் அறிவிக்கக்கூடிய முறையானது ஸம்ப்ராப்தி எனப்படும். இதற்கே ஜாதியென்றும் ஆகதியென்றும் பெயராம்.[1] இது ஸங்க்யாஸம்ப்ராதி யென்றும், விகல்பஸம்ப்ராப்தி யென்றும், பிரதாந ஸம்ப்ராப்தி யென்றும், பல ஸம்ப்ராப்தி யென்றும், காலஸம்ப்ராப்தி யென்றும் அநேக வகைப்படும். இதன் பிறகு அடுத்த நிதாநத்திலேயே ஜ்வரம் எட்டுவிதம் என்று ஆரம்பித்து ஒவ்வொரு வியாதியின் உட்பிரிவுகளைப் பகுத்து, அவற்றின் எண்ணிக்கைகளைக் குறிக்கப்போகிற விஷயம் ஸங்க்யா ஸம்ப்ராப்தி யாகும்.[2] பல தோஷங்கள் சேர்ந்து வியாதியை யுண்டாக்கையில், பிரகோபமடைந்த அத்தோஷங்களுக்குள்ள தாரதம்யங்களை, அல்லது தோஷங்கள் பிரகோபிப்பதற்குக் காரணமான ரூக்ஷாதி குணங்களைப் பகுத்தறிந்து, அவற்றின் அம்சங்களாகவோ அல்லது அவ்வம்சங்களின் சில பகுதிகளாகவோ பகுக்கப்பட்டு நிர்ணயிக்கப்படும் விகற்பம் விகல்ப ஸம்ப்ராப்தி யெனப்படும்[3]. சுதந்திர வியாதியென்றும், பரதந்திர வியாதியென்றும் பகுத்து, ஒரு வியாதிக்குப் பிராதாந்யத்தைக் கூறுவது பிரதாந ஸம்ப்ராப்தி யென்று வழங்கப்படும்.[4] ஒரு வியாதிக்கு நிதாநம் முதலிய பஞ்ச லக்ஷணங்கள் முற்றிலும் ஸம்பவித்திருப்பதையும், அல்லது அவற்றில் சிற்சில இலக்ஷணங்கன் மாத்திரம் ஏற்பட்டிருப்பதையும் கொண்டு ரோகம் பலமானது அல்லது துர்ப்பலமானது என்று பேதம் கூறுதல் பல ஸம்ப்ராப்தியாகும்.[5] வியாதியானது இரவிலாவது, பகலிலாவது, ஒவ்வொரு ருதுவிலாவது, ஆஹாரம் உட்கொண்டபொழுதாவது இவ்வாறு ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தில் அந்தந்த தோஷத்தின் தன்மைகளை அநுஸரித்து ஸம்பவிக்கும் வகையைக்கொண்டு, வியாதிக்குக் காலநிர்ணயம் செய்யும் முறையா

1. ஜ்வரத்தில் வாதாதி தோஷங்கள் அவற்றிற்குக் காரணமான பிரதிகூல பதார்த்தங்களால் அல்லது செயல்களால் கோளாறடைய (ஆமதோஷாதிகளால் வாதாதிகள் விகாரமடைய) அதனால் தேஹத்தில் ஸ்ரோதோமுகங்கள் என்னும் நிணநீர்க்குழாய் முதலிய த்வாரங்களில் ஆமதோஷம் அபிவிருத்தியாய், அதனால் தாதுக்களில் இயற்கையில் ஸம்பவிக்கும் பாசநவேலை திமிதப்பட்டு, உட்புற உஷ்ணவேகம் வெளியில் பரவவே ஜ்வரம் ஸம்பவிக்கின்றது என்பது இவ்வியாதியின் ஸம்ப்ராப்தியாகும்.

2. ஸங்க்யா ஸம்ப்ராப்தி—ஜ்வரம் எட்டுவிதம் என்றும், காஸம் ஐந்துவிதம் என்றும், குன்மம் எட்டுவிதம் என்றும் இவ்வாறு ஒவ்வொரு வியாதிக்கும் தோஷாதி விசேஷங்களி லேற்படும் வித்தியாஸங்களைக் குறிப்பிட்டு எண்ணிக்கையில் கூறப்படும் பேதம் ஸங்க்யா ஸம்ப்ராப்தியாம்.

3. விகல்ப ஸம்ப்ராப்தி—வாதாதி தோஷங்கள் தனித்தனியாகவோ, இரண்டிரண்டாகவோ, மூன்றும் ஒருமிக்கச் சேர்ந்தோ வியாதியை யுண்டுபண்ணுகையில் அவற்றின் பிரிவுகளையும், அவற்றுள் ஒவ்வொரு தோஷத்திற்குமுள்ள ஏற்றக்குறைவான அளவுகளையும் குறிப்பிடும் விஷயமாம். அல்லது வாதாதி தோஷங்கள் அததற்குள்ள காரணங்களில் (ரூக்ஷ-இலகு-சீதாதிகளால்) எந்தெந்த அம்சத்தினால் கோளாறடைந்தனவென்று குறிக்கப்பட்டாலும் அது விகல்ப ஸம்ப்ராப்தியைச் சேர்ந்ததே.

4. பிரதாந ஸம்ப்ராப்தி—வியாதி சுதந்திரமானதென்றும், பரதந்திரமானதென்றும் இருவகைப்படும்; சுதந்திரமான (வாதாதிப்ரகோப ரூபமான) காரணங்களால் உண்டாகும் வியாதிகள் சுதந்திரங்கள்; ஒவ்வொரு வியாதியைக் காரணமாகக்கொண்டு உண்டாகும் மற்றொரு வியாதி பரதந்திரமாகும். சுதந்திரமான காரணத்தினால் அஜீர்ணம் உண்டாகும்; அஜீர்ணத்தினால் அதிஸாரம் உண்டாகலாம்; இவற்றுள் அஜீர்ணம் சுதந்திர வியாதியாகவும், அதிஸாரம் பரதந்திரவியாதியாகவும் கருதப்படுகின்றன. இவ்வாறு வியாதிகளுக்கு சுதந்திர பரதந்திர (பிரதான அப்பிரதான) பேதங்களைக் குறிப்பிட்டு விவரிக்கப்படும் விஷயமே ஸம்ப்ராப்தியாம்; ஆகவே பிரதான ஸம்ப்ராப்தி யென்று சொல்லும்போது தானாகவே அப்பிரதாந ஸம்ப்ராப்தி யொன்று உண்டென்பதும் ஏற்படுகிறது. ஆகவே சுதந்திரமென்பதால் பிரதாந ஸம்ப்ராப்தியும், பரதந்திரமென்பதால் அப்பிரதாந ஸம்ப்ராப்தியும் குறிக்கப்படுகின்றன.

5. பல ஸம்ப்ராப்தி—(இதில் துர்பல ஸம்ப்ராப்தி யென்பதும் அடங்கியிருக்கிறது.) ஒவ்வொரு வியாதிக்கும் என்னென்ன காரணங்கள் உண்டோ, அவ்விதமே பூர்வரூப-ரூபாதிகள் எவ்வளவு உண்டோ அவையெல்லாம அந்தந்த வியாதியில் பூர்ணமாகக் கண்டிருந்தால் அது பலமான வியாதியாயிருக்குமாகையால், அது பல ஸம்ப்ராப்தி யென்றும், அவற்றில் ஏதாவது சில பாகங்கள் மாத்திரம் காணப்படுமானால் அந்த ஸம்ப்ராப்தி துர்பலமானதென்றும் கருதப்படும்.

னது காலஸம்ப்ராப்தி யென்று வழங்கப் படும்.[1] 10—13.

வியாதிக்குப் பொதுக் காரணங்கள்:—இங்ஙனம் மேற்கூறியவாறு நிதானஸம்பந்தமான[2] விஷயம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. இனி இவ்விஷயங்களை விவரித்துக் கூறப் படும்.[3] எல்லா வியாதிகளுக்குமே, பிரகோபமடைந்த தோஷங்கள் காரணமாகும். அத்தோஷங்கள் பிரகோபமடைவதற்குக் காரணம் பலவிதமான ஹிதமல்லாத ஆஹாரங்களை உபயோகிப்பதும், அஹிதமான காரியங்களைச் செய்வதுமேயாம்.[4] 14, 14½.

ரோகமே வேறு ரோகத்திற்குக் காரணமாவது: ஒரு ரோகம் வேறு ரோகத்திற்கு நிதானரூபமாகப் பலனில் முடிவதுண்டு.[5] அதெங்ஙனமெனில்—(1) ஜ்வரத்தின் கடுஞ்சூடானது, இரத்த-பித்தம் என்கிற வியாதியைக் கிளப்பிவிடும். (2) இரத்த-பித்தத்தைக் காரணமாகக் கொண்டு ஜ்வரமும் உண்டாவதுண்டு. (3) ஜ்வரம், இரத்த-பித்தம் இவ்விரண்டாலும் சோஷம் என்கிற இராஜயக்ஷ்மா காணும். (4) ப்லீஹம் வீங்குவதால் உதரரோகம் உண்டாகலாம். (5) மஹோதரத்தினால் சோதை யென்கிற வீக்கம் உண்டாகும். (6) அர்சஸ் என்கிற மூலவியாதியிலிருந்தும் உதர ரோகம் உற்பத்தியாகலாம். (7) அர்சஸ் அங்ஙனமே குல்மரோகத்தையும் உண்டாக்கும்.

---

1. கால ஸம்ப்ராப்தி—எந்த தோஷம் பிரகோபமடைய எது அநுகூலமான காலமோ அக்காலத்தில் அத்தோஷம் வியாதியை உண்டுபண்ணலாம், அல்லது விருத்திபண்ணலாம். எப்படியென்றால்—கபஜ்வரம் இரவின் ஆரம்பத்திலும், விடியற்காலத்திலும், புஜித்த ஸமயத்திலும், வஸந்தருதுவிலும் விருத்தியாகும் அல்லது உண்டாகும். கால ஸம்ப்ராப்திக்கு வேறு விவரமான உதாரணமும் கூறலாம்:—இராத்ரியின் ஆரம்பத்தில் கபமும், மத்தியில் பித்தமும், இறுதியில் வாதமும் விருத்தியடையும். பகலிலும் இதே கிரமத்தில் தோஷங்கள் பிரகோபிக்கும். ருதுக்களில் வஸந்தருதுவில் கபமும், சரத்ருதுவில் பித்தமும், வர்ஷருதுவில் வாயுவும் முறையே விருத்தியடையும். அங்ஙனமே போஜநம் செய்த வுடனே கபமும், உணவு ஜீர்ணமாகையில் பித்தமும், ஜீர்ணமான பிறகு வாதமும் பிரகோபிக்கும். இவைகளைக் கொண்டு [illegible]ந்தந்த வியாதியில் வாதாதி தோஷங்களுக்குள்ள நிலைமைகள் காலபேதத்தை அநுஸரித்து வித்தியாஸப்படுமாகையால், இது ஸம்பந்தமான ஸம்ப்ராப்தி கால ஸம்ப்ராப்தி யெனப்படுகிறது.

2. நிதானம் என்பதால் பஞ்ச லக்ஷணங்கள் என்னும் காரண-பூர்வ ரூபாதிகள் ஐந்தும் குறிக்கப்படுகின்றன.

3. இனி ஜ்வர நிதானம் முதலிய பிரகரணங்களில் விவரிக்கப்படும் விஷயங்கள் எனக் கருத்து.

4. இதனால் ரோகத்திற்கு ஸந்நிக்ருஷ்டம் விப்ரக்ருஷ்டம் என்கிற இரண்டு காரணங்கள் குறிக்கப்படுகின்றன. பிரகோபமடைந்த வாதாதி தோஷங்கள் ஸந்நிக்ருஷ்ட காரணங்கள்; அத்தோஷங்களைக் கோளாறடையச் செய்யும் அஹிதமான ஆஹார விஹாரங்கள் விப்ரக்ருஷ்ட காரணங்கள். 'எல்லா வியாதிகளுக்குமே' என்பதால் வாதாதி தோஷங்களின் கோளாறைக் காரணமாகப் பெறாத ரோகமே இல்லை யென்று கூறப்படுவதாய் அறிக. "நாஸ்தி ரோகோ விநா தோஷை:" (தோஷஸம்பந்தமில்லாத வியாதியே கிடையாது) என்கிற சரகவாக்கியம் இதற்குப் பிரமாணம். அடிபட்டு உண்டாகிற விரணம் முதலிய ஆகந்துக விகாரங்களில் முதலில் தோஷப் பிரகோபமில்லை யென்றாலும், அடி தாக்கிய பிறகு (காயம் ஏற்பட்டதன் மூலமாய்) உடனே வாதாதி தோஷங்கள் கோளாறடைவது நிச்சயம். தேஹ தாதுக்களைத் தூஷிப்பிக்குந் தன்மையுள்ளவையாதலால் பித்த-கபங்களுக்கு தோஷங்கள் என்கிற பெயர் வந்ததென்றும், அவை ஒவ்வொருவருடைய தேஹத்தில் எங்கும் எப்பொழுதும் வியாபித்திருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது; அப்படியானால், அத்தோஷங்கள் ஸந்நிக்ருஷ்ட காரணங்களாகவும் இருப்பதால், அவை தேஹத்தில் எப்பொழுதுமே வியாதியை உண்டு பண்ணிக் கொண்டிருக்குமல்லவா என்று கே[illegible]வியுண்டாகும். இவ்வித ஸந்தேஹத்திற்கு இட[illegible]ாகக் கூடாதென்றே 'பிரகோபமடைந்த தோஷங்கள்' (அல்லது கோளாறடைந்த தோஷங்கள்) என்று மேலே குறிக்கப்பட்டது. வாதாதி தோஷங்கள் இயற்கை நிலைமையில் இருந்துவரும் வரையில் அவை தேஹத்திற்கு அநுகூலமானவையே; அவை எப்பொழுது கோளாறடைகின்றனவோ அப்பொழுது தான் வியாதிக்கு அவை காரணங்களாகும். அவை தானாகவே கோளாறடையமாட்டா; ஆனால் பலவித அஹிதமான ஆஹார-விஹாரங்கள் அத்தோஷங்கள் கோளாறடைவதற்குக் காரணங்களாம்.

5. முதலில் உண்டான ஒரு ரோகம் விருத்தியாய் (அல்லது தகுந்த சிகித்ஸை செய்யாமல் அலக்ஷியம் செய்யப்பட்டதால்) பலமான வேறு ஹேதுக்களையும் பெற்று நிதானம் அல்லது காரணத்தைப் போலவே புதிய வியாதியை அல்லது வியாதிகளை யுண்டுபண்ணுமாகையால் 'நிதானரூபமாய் பலனில் முடிவதுண்டு' எனக் கூறப்பட்டது. இதை ஸம்ஸ்க்கிருதத்தில் "நிதானார்த்தகரம்" என்பார்கள்.

(பகல் நித்திரை முதலிய தகாத செயல்களால் ப்ரதிச்யாயம் உண்டாகும்[1]) (8) ப்ரதிச்யாயத்தினுல் காஸமும் (9) காஸத்தினுல் தாது க்ஷீணமும் தோன்றுவதுண்டு. (10) தாது க்ஷீணம் இராஜயக்ஷ்மாவுக்கும் காரணமாகும். ஆகவே அவை முதலில் ரோகமாயிருந்து, பிறகு வேறு ரோகங்களை யுண்டுபண்ணுவதற்கான காரணங்களின் வேலையைச் செய்யும் 15-18½.

வியாதி ஸங்கரம் முதலிய விசேஷம்:—(1)ஒரு ரோகம் மற்றொரு ரோகத்திற்குக் காரணமாயிருந்து, அதை யுண்டுபண்ணிவிட்டு முதலில் உண்டான அந்த ரோகம் தானே தணிந்துவிடுவதுண்டு. (2) மற்றொரு வகையான ரோகமுமுண்டு; அதில் முதலில் உண்டான வியாதி வேறொரு ரோகத்திற்குக் காரணமாயிருந்து அதை உண்டாக்கிவிடுவதோடு தானும் தணியாமலே நிலைத்திருக்கும். இவ்விதமாக மனிதர்களுக்குப் பலவகையில் பெருந்தொல்லை யளிக்கக் கூடிய மிச்ரமான வியாதிகள் காணும். ஆகையால் வியாதிகளைத் திறமையுடன் சிகித்ஸித்துத் தமக்கும் பிணியாளருக்கும் நன்மை பயக்க விரும்பும் உத்தம வைத்தியர்கள் ஜ்வரம் முதலிய ரோகங்களைப்பற்றி இனி விவரிக்கப்படும் நிச்சயார்த்தங்களைப் படித்தறிவாராக.[2] 19—21.

## 2. ஜ்வர நிதாநம்.

ஜ்வரத்தின் விப்ரக்ருஷ்ட நிதாநம்.—முன்னொரு கால் தக்ஷப்பிரஜாபதியினுல் ருத்ரன் அவமதிக்கப் பெற, அதனுல் அவர் சினங்கொண்டார்; அச்சமயம் அவர் வெளி விட்ட பெருமூச்சானது வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்று வித ஜ்வரங்களையும், த்வந்த்வ தோஷங்களால் மூன்று வித ஜ்வரங்களையும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றையும், ஆகந்துக காரணத்தினுல் ஒன்றையும் ஆக எட்டு வித ஜ்வரங்களை ஆதியில் உண்டு பண்ணுவதற்குக் காரணமாயிருந்ததென்று கருதப்படுகிறது.[3]

1. () இக்குறிகளுக்குள் அடங்கியுள்ள விஷயம் மாதவகரனுல் எழுதப்படாத ப்ரக்ஷிப்தம் எனக் கருதப்படுகிறது. இங்ஙனமே இதன்பிறகும்() இவ்விதமான குறிகளுக்கிடையில் எழுதப்பட்டிருப்பவை யெல்லாம் ப்ரக்ஷிப்தங்களாகக் கருதப்படுபவை யென்றறிக.

2. வாதாதி தோஷ ஸ்வரூபங்கள்:— இனி ஒவ்வொரு ப்ரகரணத்திலும் கூறப்படும் வியாதிகளுக்கெல்லாம் வாத- பித்த-கபங்களுடைய ஸம்பந்தம் நியதமாகக் கூறப்படும்; ஆகவே இத்தோஷங்களுடைய (வாத-பித்த-சிலேஷ்மங்களுடைய) குணங்களையும், அவற்றிற்கு எதிரிடையான குணங்களையும் படிப்பவர் தெரிந்துகொள்வது அவசியமெனக் கருதி, அவற்றைச் சுருக்கமாக இங்கு விவரிக்கின்றோம்:— வாதத்தின் குணங்கள்: ரூக்ஷம் (பசையற்றது), சீதம், இலகு (இலேசு), ஸூக்ஷ்மம், சலம் (அசைவு), விசதம் (தெளிவு), கரம் (உரப்பு) இவையாம். இக்குணமுள்ள வஸ்துக்களால் வாயு விருத்தியாகும். ஸ்நிக்த்தம் (பசையுள்ளது), உஷ்ணம், குரு (பாரமானது), ஸ்த்தூலம், ஸ்த்திரம் (அசைவற்றது), பிச்சிலம், மிருது இவை ரூக்ஷாதிகளுக்கு முறையே எதிரிடையான குணங்கள். பித்தத்தின் குணங்கள்: ஸ்நிக்த்தம், உஷ்ணம், தீக்ஷ்ணம், திரவம், அம்லம், ஸரம் (தானே நாற்புறமும் பரவக்கூடியது), கடுரஸம் ஆக இவையாம். ரூக்ஷம், சீதம், மந்தம், கரம், க்ஷாரம், ஸ்திரம், மதுர ரஸம் இவை முற்கூறிய ஸ்நிக்த்தாதிகளுக்கு முறையே எதிரிடையானவை. கபத்தின் குணங்கள்: குரு, சீதம், மிருது, ஸ்நிக்த்தம், மதுரம், ஸ்த்திரம், பிச்சிலம். இவற்றிற்கு எதிரிடையான குணங்களாவன:—இலகு, உஷ்ணம், கடிநம், ரூக்ஷம், திக்தம், சலம், கரம் இவை கபத்தைக் குறைக்குந் தன்மையன.

3. ஜ்வரமானது பொதுப்பட ரோகமனைத்திலும் ப்ரதாநமாயிருப்பதால், அவ்விஷயம் முதன் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டது. சாரீரமான ரோகங்களில் பெரும்பான்மையானவற்றைத் தொடர்ந்துண்டாவது, தேஹத்தையும் மனதையும் தபிக்கச் செய்வதில் முக்கியமாயிருப்பது, ஒவ்வொருவனும் ஆயுள்

ஜ்வர ஸம்ப்ராப்தி:—உண்பதிலும் க்ரியைகளிலும் ஏற்படுகிற மித்தியாயோகங்களால்[1] ஆமாசயம் என்கிற குடலை (இரைப் பையை)ப் பற்றிய தோஷங்கள்[2] குடலிலுள்ள ஜாடராக்கினி யென்னும் உஷ்ணத்தை வெளியில் தள்ளி, இரஸம் என்கிற தாதுவைத் தொடர்ந்து தேஹத்திற் பரவி ஜ்வரத்தை உண்டு பண்ணுகின்றன.[3] 2.

---

காலத்தில் எப்பொழுதேனும் இதை ஒரு முறையாவது அனுபவிக்க நேரிடுவது, ஸர்வப் பிராணிகளுக்கும் ஒவ்வொருவகையில் உண்டாவது என்கிற இவை முதலிய முகாந்தரங்கள் ஜ்வரம் வியாதிகளுள் பிரதானமானது எனக் கூறுவதற்கு ஆதாரங்களாம். மற்ற வியாதிகள் இங்ஙனம் நியதமாய் உண்டாவதில்லை. "தேஹேந்த்ரிய மநஸ்தாபீ ஸர்வரோகாக்ரஜோ பலீ, ஜ்வர: ப்ரதானோ ரோகாணும் உக்தோ பகவதா புரா" என்கிற சரகவாக்கியம் இதற்குப் பிரமாணமாகும். "ஜ்வரம் என்கிற வியாதியினுல் பீடிக்கப்படாத பிராணிவர்க்கமே கிடையாது" (ஜ்வரேணுவிசதா பூதம் நஹி கிஞ்சிந் ந தப்யதே) என்றும் சரகர் கூறுகிருர். ஆனுல் ஒவ்வொரு ஜந்தவுக்கு உண்டாகும் ஜ்வரம் ஒவ்வொரு வித பாரிபாஷிகப் பெயரால் வழங்கப்படுகிறது. யானைக்கு உண்டாகும் ஜ்வரம் பாகலம், குதிரைக்குண்டாவது அபிதாபம், பசுவுக்குண்டாவது ஈச்வரம், ஆடுகளுக்குண்டாவது ப்ரலாபம், ஒட்டகத்துக்குண்டாவது அலஸம், எருமைமாட்டுக்குண்டாவது ஹாரித்ரம், மான்களுக்குண்டாவது மிருகரோகம், பக்ஷிகளுக்குண்டாவது அபிகாதம், மத்ஸியங்களுக்குண்டாவது இந்த்ரமதம், குதித்தோடும் சில பறவைகளுக்குண்டாவது பக்ஷபாதம், ஸர்ப்பஙதிற்குண்டாவது அக்ஷிகம், மனிதனுக்குண்டாவது ஜ்வரம்; ஆக இவ்விதம் எல்லாப் பிராணிகளையுமே ஜ்வரம் ஸாதாரணமாய் வருந்தச் செய்கிறது. தக்ஷயாகம் செய்கையில், தனது ஜாமாதாவான (தாக்ஷாயணியின் பர்த்தாவான) சிவபெருமானை அதற்கு அழைக்காமல் அவமானப்படுத்தவே, அக்குற்றத்தைத் தாங்காத சிவபெருமான் வெகு கோபாவேசங் கொண்டு பெருமூச்செறிய, அவ்விஷவாயுவானது ஆதியில் ஜ்வரங்களுக்குக் காரணமா யேற்பட்டதாகக் கருதப்படுகிறது. சரகத்தில் இந்த ஐதிஹ்யம் ஜ்வரசிகித்ஸாப் பிரகரணத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகிறது. இதனுல் ஜ்வரத்திற்கு ஆதிகாரணமான விப்ரக்ருஷ்ட காரணம் கூறப்பட்டது. இனி பின்னுல் தோஷக்கோளாறு ஸம்பந்தமான ஸந்நிக்ருஷ்ட காரணங்கள் மொழியப்படும். ஐதிஹ்யப் பிரதானமான இவ்விப்ரக்ருஷ்ட நிதானத்தினுல் சிகித்ஸை முதலியதில் எவ்விதப் பிரயோஜனமுமில்லை யெனக் கருதி சிலர் ஒருவித யுக்தி சொல்லுவதுண்டு; அதாவது கோபத்திலிருந்து உண்டானதெனக் குறிப்பிடுவதால், பித்த ஸம்பந்தமான உஷ்ணவேகம் பொதுவாக இவ்வியாதிக்கு உண்டென்பது ஸூசிப்பிக்கப்படுகிறதென்றும், ஆகவே பொதுவாக எல்லா ஜ்வரங்களிலுமே பித்தகுணமுள்ள அனைத்தையும் விலக்கவேண்டுமென்று விதியேற்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயப்படுகிருர்கள். பலவித விஷமஜ்வரங்களும், தாதுகத ஜ்வரங்களும், ப்ராக்ருத-வைக்ருத-அந்தர்தாஹ-பஹிர்தாஹாதி ஜ்வரங்களும், வாதபலாஸக-ப்ரலேபகாதி ஜ்வரங்களும் அநேக விதமாக விவரிக்கப்படப் போகின்றன; என்ருலும் தோஷங்களின் ஸம்பந்தத்தை மாத்திரம் ஒருவாறு ஆதாரமாக வைத்துக்கொண்டு சுருக்கமாக ஜ்வரம் எட்டு விதம் என்று இங்கே கூறப்படுகிறது.

1. மித்தியா யோகம்—எது எவருக்கு எந்த ஸமயத்தில் அநுகூலமானதோ அதற்கு நேர் எதிரிடையானது மித்தியாயோகம் ஆகும். ஆஹாரம் ஒருவனுக்கு ஸ்நிக்த்தமும் குரு குணமுமாயிருப்பது அநுகூலமாயிருக்க, அதை விடுத்து ரூக்ஷமும் இலகுகுணமுமுள்ளதான உணவு கொடுக்கப்படுமானுல் அது மித்தியாஹாரம் எனப்படும். அவரவரது உடற்சக்தியை மீறி வியாயாமம் அல்லது தேஹவுழைப்பைச் செய்வது மித்தியா விஹாரம் எனப்படுகிறது. இவ்விரண்டும் "உண்பதிலும் க்ரியைகளிலும் ஏற்படுகிற மித்தியா யோகங்கள்" எனக் குறிப்பிடப்பட்டன.

2. இங்கே 'ஆமாசயம்' என்பது இரைப்பையே யானுலும், அதனுல் பொதுப்பட நாபிக்கும் மார்புக் குழிக்கும் இடையிலுள்ள குடலின் அம்சமே முக்கியமாய் குறிக்கப்படுகிறது.

3. இந்த ஸம்ப்ராப்தியானது பெரும்பாலும் சாரீர ஜ்வரங்களான எட்டுவித ஜ்வரங்களுக்கே ஸம்பந்தப்பட்டதாகும். பிறகு விவரிக்கப்படும் விஷம ஜ்வரங்கள் என்கிற ஆகந்துக ஜ்வரங்களில் பெரும்பாலும் வியாதி முன்னதாகவும், காரணம் சற்றுப் பிந்தியும் தோற்றுவது இயல்பாகையால், இந்த ஸம்ப்ராப்தி சாரீர ஜ்வரங்களுக்கே பெரும்பாலும் ஸம்பந்தப்பட்டதெனக் கருதவேண்டும். ஆகவே ஸுச்ருதத்தில் ஆகந்துக ஜ்வரங்களின் ஸம்ப்ராப்தி ப்ரத்யேகமாக மொழியப்படுகிறது:—"சிரமம், காயம்படுதல், வேறுவிதமான அபிகாதங்கள் இவற்ருல் மனிதருடைய தேஹத்தில் பிரகோபித்த வாயுவானது உடலெங்கும் நிரம்பவும் பரவி, கடுமையான ஆகந்துக ஜ்வரத்தை யுண்டு பண்ணும்" என்கிருர் ஸுச்ருதர். சரகத்திலும் "அவற்றுள் அபிகாதத்தினுல் பிரகோபித்த வாதம் விசேஷமாக இரத்தத்திற் பரவி அதைக் கோளாறடையச் செய்து வலி, வீக்கம், நிறமாறுபாடு முதலியவற்ருேடு கூடிய ஜ்வரத்தை யுண்டு பண்ணும்" எனக் கூறப்படுகிறது. "ஆகந்து ஜ்வரம் முதலில் கடுமையான நோவுடன் ஆரம்பிக்கும்; அது எட்டாவதாகக் கருதப்படுகிறது. அது சிறிது காலம் முதலில் ஸாதாரண ஆகந்து ஜ்வரமாயிருந்து, பிறகு வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து அவற்ருல் தொடரப்பட்டு சாரீர ஜ்வரம் போலவே ஆய்விடுகிறது" என்று ஆயுர்வேதஜ்ஞர் கூறுவர்.

ஜ்வரத்தின் ஸாமாந்ய லக்ஷணம்[1] :—எந்த ரோகத்தில் வியர்வை வெளிப்படாமல் தடையுறுதல், வெப்பம் கடுமையாக விருத்தியாதல், அவயவங்கள் தோறும் வேதனையும் பிடிப்பும் காணுதல் ஆகிய இக்கோளாறுகள் ஒருமிக்கத் தோன்றுகின்றனவோ அது ஜ்வரம் எனக் கூறப்படுகிறது. 3.

ஜ்வரத்தின் ஸாமாந்ய பூர்வரூபம்:—[2] அலுப்பு, அமைதியின்மை, தேஹம் நிறம் மாறி வாட்ட முறுதல், நாக்கு அருவருப்பான சுவை கொள்ளுதல், கண்களில் நீர் ததும்புதல், குளிர்ச்சியிலும் காற்றிலும் வெயிலிலும் மற்றவைகளிலும் விருப்பும் வெறுப்பும் அடிக்கடி மாறி மாறியுண்டாதல், கொட்டாவி, தேஹம் பாரமாகத் தோற்றுதல், உடலெல்லாம் வேதனை,மயிர்ச்சிலிர்த்தல், அரோசகம், கண் இருளடைதல், மனதிற் களிப்பின்றி வெறுப்புண்டாதல் குளிர் நடுக்குதல் ஆக இக்குறிகள் ஜ்வரம் உண்டாவதற்கு முன்பாகக் காணும். 4, 5.

ஜ்வரத்தின் விசேஷ பூர்வரூபங்கள்:—வாத தோஷத்தினால் உண்டாகப் போகிற ஜ்வரத்தில் அதிக கொட்டாவியும், பித்தத்தினால் உண்டாகப் போவதில் கண்களில் மிகுதியான அழற்சியும், கபத்தினால் உண்டாகப் போகும் ஜ்வரத்தில் உணவில் அதிக அருவருப்பும் உண்டாகும். இவற்றுள் எந்த இரட்டைக் குறிகள் சேர்ந்து தோன்றினாலும், உண்டாகப் போகிற ஜ்வரம் த்வந்த்வ தோஷ ஸம்பந்தமானதெனக் கூறலாம்.[3] எல்லாத் தோஷங்களும் பிரகோபித்து உண்டாகப் போகிற ஸந்நிபாத ஜ்வரத்திற்கு முற்கூறிய பூர்வ ரூபக் குறிகள் யாவும் சேர்ந்து முற்குறியாகக் காணும்.[4] 6, 7.

வாத ஜ்வர லக்ஷணம்:—நடுக்கல், ஒழுங்கீனமான காலங்களில் ஜ்வரவேகம் அதிகரித்தல், தொண்டையும் உதடுகளும் வறண்டுபோதல், நித்திரையின்மை, தும்மலுண்டாகாமை, அவயவங்கள் திமிர்த்து ரூக்ஷமாதல், சிரஸ் இருதயம் மற்றுமுள்ள அவயவங்கள் இவற்றில் வேதனை, வாய் அருவருப்பு கொள்ளுதல், மலம் இறுகுதல், வயிற்றில் வலியும் பொருமலும் தோன்றல், கொட்டாவி ஆக இக்குறிகள் வாதத்தினால் உண்டாகிற ஜ்வரத்திற்காணும். 8. 9.

பித்த ஜ்வர லக்ஷணம்:—கடுமையான ஜ்வரவேகம், அதிஸாரம்,[5] சொற்பநித்திரை, வாந்தி, தொண்டை உதடுகள் வாய் நாசி இவற்றில் அழற்சி, அதிக வியர்வை, வாய்ப் பிதற்றல், வாயில்கடுரஸம் அல்லது கைப்பு, மூர்ச்சை, அதிக அழற்சி, வெறி, நாவறட்சி, மலமும் மூத்திரமும் நேத்திரங்களும் மஞ்சள் நிறமாதல், தலைச்சுற்றல் ஆக இக்குறிகள் பித்தத்தினாலுண்டாகும் ஜ்வரத்திற் காணும். 10, 11.

சிலேஷ்ம ஜ்வர லக்ஷணம்:—உடம்பு திமிர்த்தல், ஜ்வரம் மந்தமாகக் காணுதல், சோம்பல், வாய் இனிப்பாயிருத்தல், மல மூத்திரங்கள் வெளிறியிருத்தல், உடல் ஸ்தம்பித்தல், வயிறு நிரம்ப உணவுண்டதுபோல் எப்பொழுதும் உணர்ச்சி, தேஹத்திற் சூடு அதிகமா

1. ஜ்வரத்தின் ஸாமாந்ய லக்ஷணம்—ஜ்வரத்தின் பொதுக்குறி. ஜ்வரத்திற்கான வாதாதி தோஷங்களின் ஸம்பந்தம் இக்குறிகளால் அறியப்பட மாட்டாது.

2. வாதாதி தோஷங்களின் ஸம்பந்தத்தையும், ஆகவே அவற்றாலான பேதங்களையும் குறிப்பிடாத பொதுவான பூர்வரூபம் எனப் பொருள்.

3. வாத-பித்த ஜ்வரத்தில் கொட்டாவியும் கண்ணெரித்தலும், வாத-கபஜ்வரத்தில் கொட்டாவியும் அரோசகமும், பித்த-கபஜ்வரத்தில் கண்ணெரித்தலும் அரோசகமும் முறையே பூர்வரூபங்களாகத் தோன்றும் எனப் பொருள். ஆகவே இம்மூன்றும் த்வந்த்வ தோஷங்களாம். த்வந்த்வம் என்றால் இரட்டையெனப் பொருள். த்வந்தவம் என்பதே ஸம்ஸர்கம் அல்லது ஸம்யோகம் என்கிற பரிபாஷைகளாலும் வழங்கப்படும்.

4. கொட்டாவி, கண்ணெரித்தல், அரோசகம் இம்மூன்றும் ஒருமிக்க மிகைபடத் தோன்றினால் உண்டாகப்போவது ஸந்நிபாத ஸம்பந்தமான ஜ்வரம் என்றறிக எனக் கருத்து. மூன்று தோஷங்களுடைய ஒருமித்தக் கோளாறு ஸந்நிபாதம் என்று வழங்கப்படுகிறது.

5. பித்த தோஷப் பிரகோபத்தால் பித்த நீர் குடலில் மிதமிஞ்சிக் கசிவதால் மலம் திரவமாகப் போவதையே இந்த அதிஸாரம் குறிப்பிடுகிறது; இது உண்மையில் அதிஸாரமல்ல. ஜ்வரத்தில் அதிஸாரம் உண்டானால் அது ஜ்வரத்திற்கு உபத்திரவமாகும். அப்பொழுது அது ஜ்வராதிஸாரம் எனப்படும்.

யுண்டாகாதிருத்தல், வாந்தி, உடல் வாட்டம், அஜீர்ணம்,) தேஹம் பாரமாயிருத்தல், குளிர், வாயில் நீர் ஊறுதல், மயிர்ச்சிலிர்க்கை, அதிக நித்திரை, பிரதிச்யாயம் என்கிற நாஸிகா ரோகம், அரோசகம், காஸம், கண்கள் வெளுத்துப்போதல் ஆக இக்குறிகள் கபத்தினுலுண்டாகும் ஜ்வரத்திற் காணும். 12, 13.

வாத-பித்த ஜ்வர லக்ஷணம்:—நாவறட்சி, மூர்ச்சை, தலைச்சுற்றல், அழற்சி, நித்திரையின்மை, தலைவலி, தொண்டையும் வாயும் உலர்ந்து போதல், வாந்தி, மயிர்ச்சிலிர்க்கை, அரோசகம், கண் இருளடைதல், கணுக்கள் தோறும் வெட்டப்படுவது போன்ற வலி, கொட்டாவி இவை வாதம் பித்தம் இவ்விரண்டு தோஷங்களாலும் உண்டாகும் ஜ்வரத்தின் குறிகளாகும்.[1] 14, 14½.

வாத-கபஜ்வர லக்ஷணம்:—சரீரம் அசைவற்றுப் போதல், கணுக்களில் பிளக்கப்படுவது போன்ற வலி, அதிக நித்திரை, உடலில் குருத்வம், கழுத்துப் பிடிப்பு, ப்ரதிச்யாயம் என்கிற நாஸாரோகம், காஸம், வியர்வை உண்டாகாமல் தடைபடுதல்[2], ஜ்வர தாபம் மத்திம வேகமாயிருத்தல் ஆக இவை வாத-சிலேஷ்மங்களால் உண்டாகும் ஜ்வரத்திற் காணும் குறிகளாம். 15,16.

பித்த-கபஜ்வர லக்ஷணம்:—வாய் கபத்தினல் பூசப்பட்டும் பித்தத்தினல் கைப்பாக்கப்பட்டும் இருத்தல் சோம்பல், மூர்ச்சை, இருமல், அரோசகம், நாவறட்சி, அடிக்கொருவிதமாய் தேஹம் அதிக சூடாகவும் அதிக குளிர்ச்சியாகவும் ஆகல் ஆக இவை பித்த-ச்லேஷ்மங்களால் உண்டாகும் ஜ்வரத்திற் காணும் குறிகளாகும். 17.

ஸந்நிபாத ஜ்வரலக்ஷணம்:—ஒரு க்ஷணத்தில் உஷ்ணம் அதிகரிக்கும்; அடுத்த க்ஷணத்தில் சைத்யம் மேலெழும்; அஸ்த்திகளிலும், பூட்டுகளிலும், தலையிலும் வலியுண்டாகும்; கண்கள் நீர்ததும்பி, கலங்கி, சென்னிறங் கொண்டு விரிந்து வளைந்திருக்கும்; செவிகளில் ஒருவித ஓசையும் குத்தலும் எடுக்கும்; தொண்டையில் முட்கள் போன்ற முளைகள் சூழ்ந்திருப்பதுபோல் தோன்றும்; சோம்பல், மூர்ச்சை, வாய்ப்பிதற்றல், காஸம், ச்வாஸம், அரோசகம் தலைச்சுற்றல் இவ்விகாரங்கள் காணும்; நாக்கு மிகவும் அழன்றுபோய், பரிசிப்பதற்கு வறட்சியுடன் சொரசொரப்புள்ளதா யிருக்கும்;

1. இங்கே மயிர்ச்சிலிர்க்கை, கணுக்கள் தோறும் வலி முதலிய சில குறிகள் வாத ஜ்வரத்திலாவது பித்த ஜ்வரத்திலாவது குறிப்பிடப்படாதவை. வாத ஜ்வரத்திலும் பித்த ஜ்வரத்திலும் காணும் குறிகள் முற்றிலுமோ சிறுபான்மையோ ஸாதாரணமாய் வாத-பித்த ஜ்வரத்திற் கலந்து காணுவது முறை. அங்ஙனமே வேறு சில குறிகள் காணுமானல் அவை "விக்ருதி விஷம ஸமவாயத்தினல் ஏற்பட்ட குறிகள்" எனப்படும். இதே விதமாக வாத-கபஜ்வரம், பித்த-கபஜ்வரம், ஸந்நிபாத ஜ்வரம் முதலியவற்றிலும், இதன் பிறகு விவரிக்கப்படும் த்வந்த்வ-ஸந்நிபாத ஸம்பந்தமான இதர வியாதிகளிலும் விசேஷக் குறிகள் ஏதேனும் கூறப்படுமானல் அவற்றை யெல்லாம் "விக்ருதி விஷம ஸமவாயக் குறிகள்" என்றறிக [வியாதி லக்ஷணங்கள் ப்ரக்ருதிஸமஸமவாயாரப்த்தங்கள், விக்ருதி விஷம ஸமவாயாரப்த்தங்கள் என்று இருவகைப்படும். (1) வாதாதி தோஷம் முதலிய காரணங்களுடைய குணங்களுக்கு ஏற்றவையாக வியாதி லக்ஷணங்கள் தோன்றினல் அவை ப்ரக்ருதி ஸம ஸமவாயாரப்த்தங்கள். (2) வாதாதி தோஷம் முதலிய காரணங்களுடைய குணங்களுக்கு ஸம்பந்தப்படாத வேறு லக்ஷணங்கள் வியாதிக்குத் தோன்றினல் அவை விக்ருதி விஷம ஸமவாயாரப்த்தங்கள்.]

2. மூலக்ரந்தத்தில் "ஸ்வேதாப்ரவர்த்தநம்" என்று இருக்கிறது. இதற்கு "வியர்வை உண்டாகாமை" என்பதுதான் ஸாதாரணமாகச் சொல்லக்கூடிய பொருள். ஆனல் ஹாரீத ஸம்ஹிதை முதலியதில் இவ்வியாதியில் ஸ்வேதம் விசேஷமாயுண்டாவதாகக் கூறப்பட்டிருப்பதை அநுஸரித்து, "ஆஸமந்தாத் ஸ்வேதப்ரவர்த்தநம்" என்கிற வ்யுத்பத்தியால் "ஸ்வேதாப்ரவர்த்தநம்" என்பதற்கு "வியர்வை அதிகமாயுண்டாதல்" என்று விஜயரக்ஷிதனல் பொருள் கூறப்படுகிறது. வாத-கபஜ்வரத்திற்கு வியர்வை உண்டாவதற்கு நியாயமில்லை; என்றாலும் வியர்வை அதிகமாயுண்டாவதற்கு விக்ருதி விஷம ஸமவாயச் செய்கையை அந்த வியாக்யாதா ஆதாரமாகக் கூறுகிருர்.

அவயவங்கள் மிகவும் சோர்வடையும் ; இரத்தமும் பித்தமும் எச்சில் துப்பும்போது வெளிவரும் ; அவற்றுடன் சிலேஷ்மம் கலந்து வருவதுமுண்டு ; தலை புரட்டியசைக்கப்படும் ; நாவறட்சி, நித்திரையின்மை, இருதயத்தில் வேதனை இவையும் தோன்றும் ; வியர்வை மலம் ஜலம் இவை எப்பொழுதாவது அரிதாகவும் சொற்பமாகவும் வெளியாகும் ; அவயவங்கள் வியாதியின் கடுமைக்குத் தகுந்தவாறு அவ்வளவு இளைத்திருக்கமாட்டா ; எப்பொழுதும் கத்திக் கூவுவான் ; சரீரத்தில் கறுப்பாகவும் சிவப்பாகவுமுள்ள தழும்புகளும் படைகளும் காணும் ; பேசுதல் மந்தப்படும் அல்லது முற்றிலும் தடையுறும்; ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற வாய், நாசி, செவி, குதம், நீர்த்வாரம் முதலியவை அழன்றுபோகும், வயிற்றில் குருத்வமுண்டாகும்[1] ; வாதாதிதோஷங்கள் மிக்க மெதுவாகப் பக்குவநிலைமையடையும் ; இவை முதலியவை ஸந்நிபாதஜ்வரத்தின் குறிகளாகும்.[2] 18—23.

---

1. தோஷங்கள் ஆமாசயத்தைப்பற்றி முதலில் ஜ்வரத்தை உண்டுபண்ண ஆரம்பிக்கின்றன வென்று முன்பு ஜ்வர ஸம்ப்ராப்தியில் கூறப்பட்டது. ஆகவே ஜ்வர ஆரம்பத்தில் தோஷங்கள் ஆமதோஷமுள்ளவைகளாகவும், பிறகு கிரமமாக ஜ்வரம் தணிவடைய வேண்டிய ஸமயத்தில் அத்தோஷங்கள் பக்குவாவஸ்தையைப் பெறுபவைகளாகவும் ஆவது இயல்பு. தோஷஜமான மற்ற ஜ்வரங்களில் தோஷங்கள் சீக்கிரம் (எழெட்டு தினங்களில்) பக்குவமாகும் ; ஸந்நிபாத ஜ்வரம் மூன்று தோஷப் பிரகோபத்தினால் ஏற்பட்ட கடுமையான வியாதியானதால், இதில் தோஷங்கள் எளிதில் பக்குவமாகாமல் வியாதியை நீடிக்கச் செய்வதோடு, ரோகிக்குப் பிராணஸங்கடங்களை யுண்டுபண்ணவும் காரணமாகும் என்பது இதன் கருத்தாகும்.

2. "இவை முதலியவை" என்பதால் வேறு சில குறிகளும் உண்டென்று ஸூசிப்பிக்கப் படுகிறது. அவையாவன:—" * * * பகலில் மிதமிஞ்சிய நித்திரையும், இரவில் கண்விழித்திருத்தலும், அல்லது எப்பொழுதுமே தூங்குவதும், அன்றேல் எப்பொழுதுமே முற்றிலும் நித்திரையின்மையும் ஏற்படுவதுண்டு ; வியர்வை மிகுதியாயுண்டாவதும், அல்லது முற்றிலுமுண்டாகாமற் போவதுமுண்டு; பாடுதல், கூத்தாடுதல், சிரித்தல் முதலிய இயற்கைக்கு விரோதமான சேஷ்டைகளைச் செய்வதுண்டு * * *" என்று வாக்படர் கூறும் குறிகள் இங்கு கிரஹிக்கப்படுவதாய் அறிக. மேலும் ஸந்நிபாத ஜ்வரத்தில் உண்டாகும் விகாரங்கள் நியமமின்றி இன்னும் பலவாறாகத் தோன்றும். ஆகவே ஸுச்ருதர் கூறும் லக்ஷணங்கள் சிறிது வேறுபாடுடையவைகளா யிருக்கின்றன; அவையாவன.— "ஸந்நிபாதஜ்வரத்தால் வருந்துபவனுக்கு உஷ்ணமாவது சைத்தியமாவது மிக்க அதிகமாயிராது; ஞாபகசக்தி சொற்பமாயிருக்கும், பார்வை பிரமங்கொள்ளும்; தேஹகாந்தி மழுங்கும்; நாக்கு மிகச் சுரசுரப்பாயிருக்கும்; தொண்டைவறளும்; வியர்வையும் மல ஜலங்களும் அடைபடும்; கண்கள் விரிந்து குடிலமாயிருப்பதோடு அவற்றில் நீரும் ததும்பும்; அன்னத்வேஷமுண்டாகும்; குரல் விழுந்து போம்; பெருமூச்செறிந்த வண்ணம் திடீரென்று வீழ்வான்; வாய்ப்பிதற்றலும் வேறு உபத்திரவங்களும் தொடரும்; இக்குறிகளுடன் கூடிய வியாதியை அபிந்யாஸம் என்று சிலரும், ஹதௌஜஸ் என்று வேறு சிலரும், ஸந்நிபாதஜ்வரம் என்று மற்றும் சிலரும் வழங்குகிறார்கள். இந்த வியாதி வெகு கஷ்ட ஸாத்தியமானதென்று ஒரு சாராரும், சிகித்ஸைக்கு முற்றிலும் வசப்படாதது (அஸாத்தியம்) என்று வேறொரு சாராரும் அபிப்பிராயப் படுகிறார்கள்" ஸந்நிபாதஜ்வரத்தில் தோஷங்களின் ஸம்யோகத்திலுள்ள தாரதம்யங்களைப் பகுத்துணர்ந்து பாலுகி தந்த்ரம் என்கிற நூலில் மொழிந்துள்ளபடி விஜயரக்ஷிதர் எடுத்து இங்ஙனம் சில பேதங்களைக் குறிப்பிடுகிறார்.—"(1) ஸந்நிபாதஜ்வரத்தில்கபத்தைவிடவாத-பித்தங்கள் இரண்டும் மிக்க மேலாகப் பிரகோபித்திருந்தால் தேஹதாபம், உடலெங்கும் துவைக்கப்படுவது போன்ற வேதனை, நாவறட்சி, தவடை யுலர்தல், சோம்பல், பொருமல், கண்கள் மூடிக்கொள்ளல், அரோசகம், ச்வாஸ-காஸம், தலைச்சுற்றல், சிரமம் இவையுண்டாம். இந்த ஸந்நிபாதத்திற்கு விது ஸந்நிபாதம் எனப் பெயர். (2) ஸந்நிபாதத்தில் பித்தமும் கபமும் பிரகோபித்திருந்தால், உள்ளே தாபமும் வெளியில் சைத்யமும் உண்டாய், சோம்பலும், வலது புறம் நெடுக வேதனையும், மார்பு கழுத்து சிரஸ் இவற்றில் பிடிப்பும், கபம் பித்தம் இவற்றைத் துப்புவதும், நாவறட்சியும், தொண்டை வலியும், மலக்கழிச்சலும், ச்வாஸமும், விக்கலும், உறக்கமும் உண்டாய் பிணியாளி வருந்துவான்; இது பல்கு ஸந்நிபாதம் எனப்படும். (3) வாதமும் கபமும் மிகவும் பிரகோபமடைந்துள்ள ஸந்நிபாதத்தில் குளிர் ஜ்வரம், அதி நித்திரை, பசி, நாவறட்சி, பார்ச்வப் பிடிப்பு, தலைபாரம், சோம்பல், பிடரியில் சுளுக்கு போன்ற பிடிப்பு, உறக்கம், வயிற்றில் அழற்சி, இடுப்பு வலி, வஸ்தி (மூத்திராசய) வேதனை இவை உண்டாகும்; மிகக் கொடிய இவ்வியாதி மகரீ ஸந்நிபாதம் எனப்படுகிறது. (4) வாததோஷம் மிகவும் பிரகோபித்த ஸந்நிபாதத்தில் நாவறட்சி, அதிக ஜ்வரம், தேஹச்ரமம், பக்கவலி, கண்பார்வை யழிதல், கால்களின் ஆட்டுச்சதைகளில் இசிவு, அழற்சி, தொடை சுஷ்கித்தல், தேஹபலம் க்ஷீணித்தல், மல மூத்திரங்களோடு இரத்தமும் கலந்து வருதல், வயிற்றுவலி, தூக்கமின்மை, குதத்தில் பிளக்கப்படுவது போன்ற வலி, வஸ்தி யென்கிற மூத்திரப்பை வலிக்கப்படுவது போன்ற நோவு, உடலெங்கும் இசிக்கப்படுவது

ஸந்நிபாத ஜ்வரத்தில் அஸாத்ய-கஷ்டஸாத்ய நிலைமைகள்:— (1) மலம் முற்றிலும் கட்டப்பட்டுப் போய், ஜாடராக்நியும் அவிந்துபோய், ஸந்நிபாதஜ்வரத்திற்குக் கூறிய லக்ஷணங்கள் அனைத்தும் குறைவின்றி தோன்றியிருந்தால், அந்த ஸந்நிபாதம் அஸாத்யமாகும்.[1] (2) இதற்கு மாருய் வேறுவிதமாகக் குறிகள் கண்டால்[2] அது கஷ்டஸாத்யமான ஸந்நிபாதம் என்றறிக. 24.

ஸந்நிபாத ஜ்வரத்தின் சாலாவதி:—(ஏழாவது தினத்திலாவது, பத்தாவது தினத்திலாவது பன்னிரண்டாவது தினத்திலாவது ஸந்நிபாத ஜ்வரம் மிகக் கடுமையான நிலைமையை யடைந்து, மீண்டும் தணிவையாவது அடையும்,உயிரையாவது போக்கிவிடும்.(1)வாத தோஷம் மேலிட்ட ஸந்நிபாதம் பதினுலு நாட்களும், (2) பித்தாதிகமான ஸந்நிபாதம் பதினெட்டு நாட்களும், (3) கபாதிகமானது இருபத்திரண்டு நாட்களும் போராடி விடுவதற்கு அல்லது ரோகியைக் கொல்லுவதற்கு முறை

போன்ற வேதனை, உடல் பிளக்கப்படுவது போன்ற உணர்ச்சி, விக்கல், வாய்ப்பிதற்றல், மூர்ச்சை, தேஹம் விரிதல், கூச்சலிடுதல் இவையுண்டாகும்; இதற்கு விஸ்புரக ஸந்நிபாதம் என்று பெயர். (5) பித்தம் மிக்க பிரகோபமடைந்த ஸந்நிபாதத்தில் தேஹத்தில் உள்ளும்புறமும் தாபம் மிக்க விருத்தியாய் கடுமையாக ஜ்வரம் விருத்தியாய்விடும்;இந்நிலைமையில் தாபம் பொறுக்காமல் பிணியாளி சைத்தியோபசாரம் செய்து கொள்ள அதனுல் கபமும் வாயுவும் பிரகோபமடையும்; அக்காரணத்தினுல் விக்கல், ச்வாஸம், உறக்கம், விஷூசி, பூட்டுகளில் நோவு, வாய்பிதற்றல், உடம்பில் குருத்வம், உடல் வாட்டம் இவை தொடர்ந்துண்டாகும்; தேஹம் வியர்த்ததும் உடனே நாபியிலும், பார்சவ பாகங்களிலும் வலி விருத்திபடையும்; வியர்க்கும்போது ஸ்ரோதோ மார்க்கங்களிலிருந்து (வாய்-நாசி-குஹ்ய ஸ்த்தானங்கள் முதலியவற்றிலிருந்து) இரத்தம் ஸ்ரவிக்கும்; வயிற்றுவலி யுண்டாகும்; அவ்வலியால் வருந்தும்போது நாவறட்சியும் அழற்சியும் அதிகமாகும்; இந்த ஸந்நிபாதம் அஸாத்தியமானது; இது சீக்ரகாரி ஸந்நிபாதம் எனப்படும்; இந்த ஸந்நிபாதம் தேஹத்திற் பற்றிய பிறகு அறுபது நாழிகைக்கு மேல் மனிதன் பிழைத்திரான். (6) கபம் மிகவும் பிரகோபித்த ஸந்நிபாதத்தில் குளிர் ஜ்வரம், அமித நித்திரை, ஆலஸ்யம், சோம்பல், வாந்தி, மூர்ச்சை, நாவறட்சி, தாபம், வயிறு நிரம்பவும் புஜித்தாற்போல திருப்தி, அரோசகம், இருதயப் பிடிப்பு, அதிகமாக கபத்தைத் துப்பல், வாய் இனிப்பாயிருத்தல், செவி-வாய் நேத்திரத்தின் பார்வை அடைபடுதல் இவையுண்டாம்; வைத்தியர் இப்பிணியாளிக்கு சிலேஷ்மத்தை அடக்குவாராயின், பித்தம் மிகவும் உபத்திரவங்களோடு கூடிய ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; பித்தத்தை அடக்கினுல் வாயு மிகப் பிரகோபித்து, ஏற்கனவே உணவின்றியே தவிக்கும் அவனுடைய மேதஸ், மஜ்ஜை, அஸ்த்தி இவற்றில் விசேஷ வேதனையை யுண்டுபண்ணி அவற்றைக் கோளாறடையச் செய்யும்;இதில் ரோகி ஸ்நானம் செய்யவிரும்புவன்; போஜனத்திலும் விருப்பங்கொள்வான்; இவன் மூன்று நாட்களுக்குமேல் பிழைத்திருக்கமாட்டான்; இது மேதோதாதுவைப்பற்றிய ஸந்நிபாதம்; இது கப்பண ஸந்நிபாதம் என்று வழங்கப்படும். ஸந்நிபாத ஸம்பந்தமானகோளாறுகளில்ஒருஆக்ஷேபம் உண்டு;அதாவது.-வாதாதிதோஷங்கள் ஒன்றேடொன்றுநேர்விரோதமான தன்மைகளைப்பெற்றவை;நீரும் நெருப்பும்போல அவையெல்லாம் ஒருமிக்க விருத்தியடைய வகையில்லையே; ஆகவே அவை ஒரு தேஹத்தில் ஒரேஸமயத்தில் விருத்தியடைந்துஒருவியாதிரூபமான காரியத்தை ஒற்றுமையாக நிறைவேற்றுவது எங்ஙனம்? என்பதே ஆக்ஷேபம். "வாத-பித்த கபங்கள் ஒன்றுக்கொன்று குணங்களில் விரோதமான சுபாவ முடையவைகளா யிருந்தாலும், தேஹத்தில் அவை ஸஹஜமாய் கர்ப்போற்பத்தி முதலே ஒன்றுசேர்ந்து உண்டானவையாகையாலும், ஸாத்மியம் என்கிற தன்மையைப் பெற்றவை (விரோதமானவையானுலும் பழக்கத்தினுல் அநுகூலமானவையாகப் போனவை) ஆகையாலும், அவற்றில் ஒன்று மற்றொன்றை அடித்துப் போடுவதில்லை" என்று இதற்கு த்ருடபலன் என்பவர் ஸமாதானம் கூறியிருக்கிறர். இந்த ஸமாதானம் சில ஸமயங்களில் யுக்தமாக அநுபவத்திற் காணப்படுவதில்லை யெனக் கருதி கயாதாஸன் என்பவர் வேறொரு விதமாக யுக்தி யுக்தமாய் ஸமாதானம் விளக்கியிருக்கிறர்; அதாவது—'தோஷங்கள், இயற்கையில் பரஸ்பரம் எதிரிடையான குணங்களைப் பெற்றிருந்தும், ஸந்நிபாதக் கோளாறு அவற்றிற்கு நேர்ந்திருக்கையில், தோஷங்களுக்குள்ள சுபாவத்தினுலேயோ தைவச் செயலாலேயோ அவை ஒன்றையொன்று அடித்துப்போடாமல் ஒரு வியாதியை நிறைவேற்றுகின்றன.'

1. அஸாத்யம்.—சிகித்ஸைக்கு வசப்படாமல் ரோகிக்கு சீக்கிரத்தில் பிராணுபாயம் உண்டாக்கும் வியாதி. கஷ்டஸாத்யம் —வெகு சிரமப்பட்டு சிகித்ஸிக்கத் தகுந்தது; இவ்வித வியாதி க்ருச்சிரஸாத்யம் என்றும வழங்கப்படும.

2. மலம் வெளிவருதல், ஜாடராக்னி சிறிதாவது தொடர்தல், ஸந்நிபாதல க்ஷணங்களில் சிலக் குறிதன் மாத்திரம் தோன்றுதல் ஆகிய இவைகள் வேறுவிதமான குறிகள்.

யே ஸாதாரணமாயேற்பட்ட காலாவதிகளாம். [1] 1,2.)

ஸந்நிபாத ஜ்வரத்தின் உபத்திரவம்:— ஸந்நிபாத ஜ்வரத்தின் இறுதியில் காதுக்குக் கீழே மிகக் குரூரமான வீக்கம் ஒன்றுண்டாவதுண்டு; அதிலிருந்து மனிதன் மீளுவது அரிது. [2] 25.

அபிந்யாஸ ஸந்நிபாத ஜ்வரம்:—(மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்து, உரஸ் ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற மார்பறையிலடங்கிய குழல்களுக்குள் சென்று, அங்கு ஆம தோஷம் அதிகரிக்க, அத்துடன் சேர்ந்து அதைக் கெட்டியாகத் தோயச் செய்து; அவ்வாமதோஷத்துடன் புத்தி ஸ்தாநத்திலும், மனதுட்பட இதர இந்திரிய மார்க்கங்களிலும் பிரவேசித்து, "அபிந்யாஸம்" என்கிற மிகவும் தீவ்ரமானஜ்வரத்தை உண்டுபண்ணும். இது எளிதில் நிவ்ருத்தியாகும் தன்மையதல்ல. இது உண்டானதும் செவியும் நேத்திரமும் அதனதன் செயலில் மந்தப்பட்டுப்போம்; பிணியாளி எக்காரியத்திலும் எவ்வித அசைவிலும் விருப்பமற்றவனுவான்; பார்வையும் சப்தத்தைக் கேட்கும் சக்தியும் மந்தப்படுவது போலவே வாஸனை யறிவதிலும், பரிச வுணர்ச்சியிலும் அவன் திறமையிழந்தவனுவான்; தலையை அடிக்கடியும் இங்குமங்குமாகப் புறட்டுவான்; உணவை விரும்பான்; கூக்குரலிடுவான்; துடிப்பான்; படுக்கையிற் புறண்டசைவான்; வெகு சொற்பமாகப் பேசுவான்; அபிந்யாஸம் என்கிற இந்த ஜ்வரம் பெரும்பாலும் அஸாத்தியமானதால், இதிலிருந்து தேறுபவன் அரிது. [3])

ஆகந்து ஜ்வரத்தின் [4] விப்ரக்ருஷ்ட காரணங்கள்:-அலைத்தலால் அல்லது அடிபடுவதாலும், அபிசாரம் என்கிற ஏவலாலும், சாபத்தினுலும், காம-சோக-பூத-பயாதிகளின் பலமான பற்றுதலாலும் ஆகந்து ஜ்வரம் உண்டாகும்; இதில் ஒவ்வொரு ஜ்வரத்திலும் வாத-பித்த-கபங்களின் ஸம்பந்தங்களைக் கண்டறிந்து வியாதி நிர்த்தாரணம் செய்யவும். 26.

ஆகந்து ஜ்வர லக்ஷணங்கள்:—(1) விஷ ஸம்பந்தத்தினுலுண்டாகும் ஜ்வரத்தில் வாய் கறுநிறமாகும்; அத்துடன் அதிஸாரமும், அன்னத்வேஷமும், நாவறட்சியும், உடலெங்கும் குடைத்தலும், மூர்ச்சையும் காணும். (2) மூலிகைகள் அல்லது ஔஷதங்களின் கடுமையான வாஸனையை முகர்வதால் காணும் ஜ்வரத்தில் மயக்கம், தலைவலி, வாந்தி, தும்மல் இக்குறிகள் உண்டாகும். (3) காமத்தினுல் உண்டாகும் ஜ்வரத்தில் சித்தப் பிரமையும், சோம்பலும், ஆலஸ்யமும், உணவில் விருப்பமின்மையும் காணும். (இப்பிணியாளிக்கு இருதயத்தில் வேதனை யுண்டாகும்; உடம்பும் மிகவும் இளைத்துவிடும்.) (4) பயத்தினுலும், (5) மனத்துயரத்தினுலும், (6) கோபத்தினுலும் உண்டாகிற ஜ்வரத்தில் வாய்ப்பிதற்றலும் உடல் நடுக்கலும் காணும். (7) அபிசாரம் என்கிற ஏவல், (8) சாபம இவற்றாலுண்டாகும் ஜ்வரங்களில் மூர்ச்சையும், நாவறட்சியும் தோன்றும். (9) பூதங்கள் பற்றிக் கொள்வதால் ஸம்பவிக்கும் ஜ்வரத்தில் மனதில் ஏக்கம, திடீரென்று சிரித்தல், அழுதல், நடுக்கல் இக்குறிகள் உண்டாகும். [5] 27—29½.

1. இங்கு குண்டலங்களுக்குள் எழுதப்பட்டிருப்பவை பிரக்ஷிப்தங்கள் எனப்படுகின்றன. இவ்விதமே மற்றவிடங்களிலும் அறிக. வெவ்வேறு சாராருடைய அபிப்பிராயங்களுக்கிணங்கி ஸந்நிபாதத்திற்கு இரண்டுவிதமான காலாவதிகள் கூறப்பட்டன.

2. இந்த உபத்திரவம் இக்காலத்தில் ஸந்நிபாதஜ்வரங்களில் காண்பது அரிது; பிளேக் எனப்படுகிற வியாதியில் இவ்வித வீக்கம் உண்டானுலும், அது காதுக்கடியிலேயேதான் உண்டாகிறதெனகிற நியமமில்லை.

3. அபிந்யாஸஜ்வரம் என்பதே, இக்காலத்தில் மேல்நாட்டார் Pneumonia (நியுமோனியா) என்று வழங்கும் வியாதியென்று கருதப்படுகிறது.

4. திடீரென்று வெளிக்காரணங்களால் ஸம்பவிப்பது ஆகந்து ஜ்வரம் எனப்படுகிறது.

5. இந்த ஒன்பது விதமான ஆகந்து ஜ்வரங்களும் முறையே (1) விஷ ஜ்வரம், (2) ஔஷதிகந்தஜ ஜ்வரம், (3) காமஜ்வரம், (4) பயஜ்வரம், (5) கோப ஜ்வரம், (6) சோக ஜ்வரம், (7) ஆபிசாரிக ஜ்வரம், (8) சாப ஜ்வரம், (9) பூதாபிஷங்க ஜ்வரம் என்கிற பெயர்களால் வழங்கப்படும். தீக்ஷ்ணமான வாஸனையுள்ள மூலிகைகள் அல்லது ஔஷதங்களின் வாஸனை சுவாஸிக்கப்படுவதால் ஸம்பவிக்கும் (ஔஷதிகந்தஜ) ஜ்வரத்தை ஸுச்ருதர் "த்ருண புஷ்ப ஜ்வரம்" என்று வழங்குகிறார். காமஜ்வரம் என்றால் ஒருவனுக்குத் தான் வெகு அபிமானத்துடன் விரும்பிய ஸ்த்ரீ கிடைக்காமையால் ஏற்படும் சித்தப்பிரமையாலான ஜ்வரம் எனக் கருத்து. "காமத்தினுல் சித்தப் பிரமையும்,

ஆகந்து ஜ்வரங்களில் தோஷங்களின் பிரகோபங்கள்:—(1) காமத்தினாலும், சோகத்தினாலும், பயத்தினாலும் காணும் ஜ்வரங்களில் வாததோஷமும், (2) கோபத்தினால் உண்டாகும் ஜ்வரத்தில் பித்தமும், (3) பூதங்களின் பற்றுதலால் உண்டாவதில் மூன்று தோஷங்களும் பிரகோபிக்கும். ஆனால் பூதாவேச ஸம்பந்தமான ஜ்வரங்களில் அந்தந்த பூதத்தின் பொதுக்குறிகளும் த்ரிதோஷ ஸம்பந்தமான குறிகளும் கலந்து காணும் 1. 30½.

விஷம ஜ்வர ஸாதாரண ஸம்ப்ராப்தி:—சொற்ப தோஷம்[2] சரீரத்தில் வியாதிக்கு மூலமாயிருந்து, அப்பால் ஹிதமல்லாத ஆஹாராதிகளால் கிரமமாக விருத்தியடைந்து, அல்லது வேறுவித ஜ்வரம் வந்து திடீரென்று விடுபட்டதும் அபத்தியத்தினால் மீண்டும் தோஷம் பெருகியாவது,[3] ஸப்த தாதுக்களில் ஏதேனும் ஒன்றை முக்கியமாகப் பற்றிக்கொண்டு விஷம் ஜ்வரத்தை[4] யுண்டு பண்ணுகிறது. 31½.

ஐந்து விஷம ஜ்வரங்களின் விசேஷ ஸம்ப்ராப்தி:—(ஸந்ததம், ஸததம், அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சதுர்த்தகம் என்று விஷமஜ்வரம் ஐந்து வகைப்படும்.) விஷம ஜ்வரங்களுக்குக் காரணமான தோஷம் முதலில் இரஸ தாதுவைப் பற்றிக்கொண்டு ஸந்தத ஜ்வரத்தையும், அப்பால் அது இரத்த தாதுவை ஆச்ரயித்து ஸதத ஜ்வரத்தையும், பிறகு அதுவே மாம்ஸ தாதுவிற் பற்றி அந்யேத்யுஷ்கம் என்கிற ஜ்வரத்தையும், மேதோ தாதுவிற் சேர்ந்து த்ருதீயக ஜ்வரத்தையும், அஸ்த்தியிலும் மஜ்ஜையிலும் பற்றி சதுர்த்தகஜ்வரத்தையும் உண்டுபண்ணுகிறது;[5] இவற்றுள் சதுர்த்தக ஜ்வரம் வேறு அநேக ரோகங்களால் சூழப்பட்டதாகவும், மிகக் கொடிய மிருத்யுவெனத் தகுந்ததாகவும் இருக்கும். 32, 33.

அரோசகமும், அழற்சியும் உண்டாவதோடு, இலஜ்ஜை நித்திரை புத்தி தைர்யம் இவையும் க்ஷயிக்கும்'' என்று வாக்படர் கூறுகிறார். கோபஜ்வரத்தில் தலைவலியும் விசேஷமாய் உண்டாகும் என்றும் வாக்படரால் கூறப்படுகிறது. இவற்றுள் காமஜ்வரம், பயஜ்வரம், கோபஜ்வரம், சோகஜ்வரம் இந்நான்கும் மனதைப்பற்றி யுண்டாகுபவை யாகையால் மாநஸிக ஜ்வரங்கள் என்றும் கூறப்படுவதுண்டு. பூதாபிஷங்க ஜ்வரத்தில் குறித்துள்ள பூதம் என்பதற்கு இனி உந்மாத நிதாநத்தில் மொழியப்படும் தேவர்கள், கிரஹங்கள் முதலியவை எனப் பொருள்.

1. சரகத்தில் "அபிஷங்க ஜ்வரம் வாத-பித்தங்களால் உண்டாகும்'' என்று கூறப்பட, இங்கே மூன்று தோஷங்களாலும் உண்டாவதாகக் கூறப்படுவதற்கு, "அபிஷங்க ஜ்வரம் என்றால் காமக்ரோதாதி அபிஷங்கத்தினால் உண்டானதென்றே பொருள், பூதாபிஷங்கம் என்று அதற்குப் பொருளல்ல'' என்று ஜெஜ்ஜடர் முதலியவர் ஸமாதாநம் கூறியிருக்கிறார்கள்.

2. தோஷம் சொற்பமானதால், போதிய பலமில்லாததாயிருப்பதால், அது காலக்கிரமத்தில் போதிய பலத்தைப் பெற்று ஜ்வரத்தை யுண்டு பண்ணும்; தோஷம் போதிய பலமுள்ளதாயிருந்தால், அது விடா ஜ்வரத்தையே உண்டு பண்ணும் என்று இதனால் அறிய வேண்டும்.

3. "மீண்டும் தோஷம் பெருகியாவது'' என்று மொழிவதிலிருந்து வேறுவித ஜ்வரமில்லாமலே ஆரம்பத்திலிருந்தே ஜ்வரம் விஷமமாயிருக்கலாமென்றும் தெரியவருகிறது. ஆகையினாலேயே "ஆரம்பத்திலிருந்தே எது விஷமமாயிருக்கிறதோ'' என்று இனி கூறப்போகிறார்.

4. விஷம ஜ்வரம்:—"யாதொன்று காலம் தவறித் தவறி வருகின்றதோ, நியமமில்லாமல் குளிரும் தாபமும் மாறி மாறி யுண்டாகிறதோ, ஜ்வரவேகமும் ஒழுங்கீனமாக அப்போதைக்கப்போது கிளம்புகிறதோ அது "விஷம ஜ்வரம்'' எனப்படும் என்று பாலுகியென்பவர் கூறுகிறார். இது முறைக்காய்ச்சல் என்று பொதுவாக வழங்கப்படுகிறது.

5. ஸந்ததம் ஸததமாகவும், ஸததம் அந்யேத்யுஷ்கமாகவும், அது த்ருதீயகமாகவும், த்ருதீயகம் சதுர்த்தகமாகவும் மாறுவதாக அர்த்தமல்ல; விஷம ஜ்வரத்திற்குப் பொதுக்காரணமாயுள்ள தோஷம் அந்தந்த விஷமஜ்வரத்திற் கேற்றவாறு ஒவ்வொரு தாதுவை ஆச்ரயித்து ஸந்ததாதி ஜ்வரங்களை யுண்டு பண்ணுகின்றன என்பது கருத்து.

ஐந்து விஷம ஜ்வரங்களின் விவரணம்:—(1) யாதொரு ஜ்வரம் ஏழு நாட்களாவது, பத்து நாட்களாவது, பன்னிரண்டு நாட்களாவது ஒய்வின்றியே தொடர்ந்து காய்கின்றதோ அது ஸந்தத ஜ்வரம் என்று கூறப்படுகிறது. [1] (2) ஓர் இராப்பகல் முழுவதிலும்-ஒரு தினத்தில்-ஸதத ஜ்வரம் என்பது இருமுறை தணிந்து மேலெழும். [2] (3) அந்யேத்யுஷ்க ஜ்வரம் என்பது ஒரு தினத்தில் ஒருமுறை யுண்டாகும் [3]. (4) த்ருதீயக ஜ்வரம் என்பது ஒருநாள் இடையில் விட்டு விட்டு மூன்றாவது நாள் மீண்டும் கிளம்பும். [4] (5) சதுர்த்தக ஜ்வரமானது [5] இடையில் இரண்டிரண்டு தினங்கள் விட்டு நான்காவது தினத்தில் மறுபடியும் உண்டாகும். [6] 34—35½.

1. ஸந்தத ஜ்வரத்தை ஸந்நிபாத (த்ரி தோஷ) ஸம்பந்தமானது என்று சரகர் கூறுகிறார்:—"ஸந்தத ஜ்வரத்தில் எப்பொழுதுமே வாதாதி தோஷங்களெல்லாம் தாதுக்களிலும், மல-மூத்திரங்களிலும் ஒருமிக்க வியாபித்துக் கோளாறுகளை யுண்டுபண்ணுகின்றன". மேலும் "பித்தம், கபம், வாதம் இம்மூன்றின் மிகைபட்ட அபிவ்ருத்தியால் ஸந்நிபாதத்தினாலுண்டான ஸந்தத ஜ்வரமானது முறையே பத்து நாட்களிலாவது, பன்னிரண்டு நாட்களிலாவது, ஏழு நாட்களிலாவது நிவ்ருத்தியாய்விடவோ அல்லது உயிரைப் போக்கிவிடவோ கூடும்" என்றவாறு, வாதம் அதிகரித்த ஸந்தத ஜ்வரம் ஏழு நாட்களும், பித்தம் அதிகரித்த ஸந்ததம் பத்து நாட்களும், கபம் அதிகரித்தது பன்னிரண்டு நாட்களும் தொடரும் எனக் கருத்து. விடாமலே தொடர்ந்து ஏழு, அல்லது பத்து, அல்லது பன்னிரண்டு தினங்களளவும் காய்வதால் ஸந்ததம் என்று வழங்கப்படும். விட்டு விட்டு வருவது விஷமஜ்வரமாயிருக்க எப்பொழுதும் தொடர்ந்தடிக்கும் ஸந்தத ஜ்வரம் விஷம ஜ்வரங்களோடு எங்ஙனம் சேர்க்கப்படுகிறது என்பது ஓர் ஆக்ஷேபம். "ஸந்தத ஜ்வரமானது பன்னிரண்டாம் நாளில் தணிவடைந்து, மீண்டும் வெளிப்படையாகக் கிளம்பி, அப்பால் தணிவடைந்து அரிதாக மீண்டும் நீண்டகாலம் தொடர்ந்திருப்பதுமுண்டு" என்று சரகர் கூறும் பிரமாணத்தை அநுஸரித்து, இது இடையில் தணிவடைந்து கிளம்புமியல்புள்ளதாகையால், விஷம ஜ்வரவரிசையில் சேர்க்கப்படுவது யுக்தம என்று சிலர். "நான் முற்கூறிய ஸந்ததம முதலிய ஐந்து ஜ்வரங்களுள் ஸ்ந்ததத்தைத் தவிர்த்தது மற்ற நான்கு மாத்திரம் விஷம ஜ்வரங்கள் ஆகும்" என்று கரநாதன் மொழியுமாறு, விஷம ஜ்வர வரிசையில் ஸந்தத ஜ்வரம சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அது விஷம ஜ்வரமாகக் கருதப்படமாட்டாதென்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள், ஆகிலும் சிகித்ஸை முதலியதில் இவ்வைந்துக்கும் ஒற்றுமையுண்டென்கிற ஸாதாரணவிதியை அநுஸரித்து, ஸந்ததமும் விஷம ஜ்வரங்களின் வரிசையிலேயே எல்லாக கிரந்த கர்த்தாக்களாலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

2. ஒரு தினத்தில் இரண்டு தடவை ஸததஜ்வரம் உண்டாகும். ஓர் "இராப்பகலில்" என்றதால், பகலில் இரு முறையும், இரவில் இரு முறையும் வருவது என்று சிலர் கூறுவர்.

3. அந்யேத்யுஷ்கம்—மறு நாளுண்டாவது என்பது இதன் பொருள். இதில் என்றைய தினம் ஜ்வரம உண்டாகிறதோ அன்றையதினமே விட்டுப் போய், மீண்டும் மறு நாள் கிளம்பும்.

4. த்ருதீயக ஜ்வரம்—மூன்றாவது நாள் உண்டாகும் ஜ்வரம். என்றைக்கு ஜ்வரம் உண்டாகிறதோ அன்றைக்கே விட்டு மறுநாள் உண்டாகாமல் அன்று முதல் (அந்த தினத்தையும் சேர்த்து) மூன்றாவது நாள் மறுபடியும் கிளம்பும் ஜ்வரம்.

5. சதுர்த்தகம்—என்றைக்கு ஜ்வரம் காண்கிறதோ அதற்கு (அந்த நாளையும் சேர்த்து) நான்காவது தினத்தில் (அதாவது இடையில் இரண்டு தினங்கள் விட்டு) மறுபடியும் உண்டாவது.

6. ஸததம் முதலிய ஜ்வரங்கள் ஐந்து கபஸ்த்தாநங்களில் (இரைப்பை, இருதயம், தொண்டை, சிரஸ், ஸந்திகள் இவவைந்தும் கபஸ்த்தாநங்கள்) இருந்து முறையே கிளம்பும் தோஷங்களால் உண்டாக்கப்படுகின்றன. இவற்றுள் (1) ஆமாசயத்திலேயே தங்கிய தோஷத்தினால் (இரவிலும் பகலிலும் ஆமதோஷம் அதிகரிக்கும் போதெல்லாம்) தினத்திற்கு இரண்டு முறை ஜ்வரம் உண்டு பண்ணப்படும். (2) இருதயத்திலுள்ள தோஷம் ஆமாசயத்திற்கு வந்து சேர்ந்து, அதன் பிறகு ஆமாசயத்தில் பிரகோபித்து, தினத்திற்கு ஒரு முறை ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; ஸதத ஜ்வரத்தை யுண்டுபண்ணும் தோஷத்தைவிட இது சிறிது தூரத்திலுள்ள ஸ்த்தாநத்திலிருந்து ஆமாசயத்திற்கு வரவேண்டியிருப்பதால் தினத்திற்கு ஒருமுறையே ஜ்வரத்தை உண்டாக்கும். (3) கண்டத்திலுள்ள தோஷம் இருதயத்தைச்சேர ஒரு நாளாகும்; இரண்டாவது நாள் ஆமாசயத்திற்கு வந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; இதில் தோஷம் இடையில் ஒரு நாள் இருதயத்தில் தங்கியிருந்து அப்பால் ஆமாசயத்திற்கு வரவேண்டியிருப்பதால், த்ருதீயக ஜ்வரத்தில் நடுவில் ஒருநாள் ஜ்வரம் ஓய்வடைந்திருக்கும். (4) சிரஸிலுள்ள தோஷம் கிரமமாக கண்டத்திற்கும், அங்கிருந்து இருதயத்திற்கும் வந்து, அப்பால் ஆமாசயத்தை அடைந்து சதுர்த்தக ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; தோஷம இடையில் இரண்டு இடங்களில் தங்கி அப்பால் மூன்றாவது இடத்திற்கு வந்து ஜ்வரத்தையுண்டுபண்ண வேண்டியிருப்பதால், இடையில் இதில் இரண்டு நாட்கள் ஜ்வரம் ஓய்வடைந்திருக்கும். (5) ஸந்திகளிலுள்ள தோஷங்கள் (பிறகு கூறப்படும்) ப்ரலேபக ஜ்வரத்தை யுண்டுபண்ணும். (ஸந்திகள் தேஹமெங்கும்—அஸ்த்தி ஸந்திகள், மாம்ஸ ஸந்தி

விஷம ஜ்வரம் பூதங்களின் ஸம்பந்தத்தினு லுண்டாகும்:—சிலர் விஷம ஜ்வரம் பூதங்கள் சரீரத்தைத் தாக்குவதால் நேரிடுகின்றது எனக் கூறுகிறார்கள்.[1] 36.

த்ருதீயக ஜ்வரம் மூன்று விதம்:—த்ருதீயக ஜ்வரம் மூன்று வகைப்படும்; அவற்றுள் (1) கபமும் பித்தமும் மேலெழுந்திருக்கும் ஜ்வரத்தில் இடுப்பில் விசேஷ வேதனையும்,[2] (2) வாதமும் கபமும் அதிகரித்துள்ள ஜ்வரத்தில் முதுகில் வேதனையும், (3) வாதமும் பித்தமும் அதிகரிந்த ஜ்வாத்தில் சிரஸ்ஸில் அமித வேதனையும் காணும். 37.

சதுர்த்தக ஜ்வரம் இரண்டு விதம்:—வாதிகமென்றும் ச்லேஷ்மிகமென்றும் சதுர்த்தக ஜ்வரம் இரண்டு விதமாகத் தனது சக்தியை வெளிப்படுத்துகிறது: அவற்றுள் (1) கபம் மேலிட்ட சதுர்த்தகமானது முதலில் கால்களில் வேதனையை யுண்டுபண்ணிக் கொண்டும், (2) வாதம் மேலிட்டது சிரஸ்ஸில் வேதனையைக் கொடுத்துக் கொண்டும் உண்டாகும்.38.

சதுர்த்தக விபர்யயம் என்னும் விஷமஜ்வரம்:—சதுர்த்தக ஜ்வரத்திற்கு மாறான நிலைமையுடன் உண்டாகும் ஜ்வரம் "சதுர்த்தக விபர்யயம்" எனப்படும்; அதுவும் விஷம ஜ்வரந்தான். இதில் மத்தியில் ஜ்வரம் காய்ந்து, ஆதியிலும், இறுதியிலும் தணிந்து விடும்.[3] 39.

---

கன் என்று—வியாபித்திருப்பதால். இந்த ஜ்வரம் எப்பொழுதுமே வரும். ப்ரலேபக ஜ்வரம் விட்டு விட்டு வாராததாயிருந்தாலும், கபஸ்த்தானஸம்பந்தம் இருப்பதையுத்தேசித்து ஸுச்ருதாதிகளால் விஷமஜ்வாத்துடன் இங்ஙனம் சேர்த்துப் படிக்கப்பட்டதென்று அறிக.

1. பூதங்கள் என்றால் ஸூக்ஷ்ம ஜீவராசிகளுக்கும் பெயருண்டு; ஆகவே பூதங்கள் என்பதற்கு இங்கே தேவக்கிரஹங்கள் என்று பொருள் கூறுவதைவிட நுண்ணுயிர்கள் எனப் பொருள் கூறுவதே பொருந்தும். விஷம ஜ்வரங்கள் (முறைக் காய்ச்சல்கள்) நுண்ணுயிர்களால் உண்டாவது அநுபவத்தில் பிரஸித்தம.

2. "இடுப்பு (த்ரிகம்) வாததோஷத்திற்கு இயற்கையான ஸ்த்தானம்; பித்த-கபங்களுக்கு அது அன்னிய ஸ்த்தானமாகும்; ஆகவே இவ்விரண்டும் அங்கு எளிதில் பலம் பெற முடியாது; ஆகையால் உடனே வியாதியை வெளிப்படையாக உண்டு பண்ணாமல், மெதுவாக பலம் பெற்று மூன்றாவது நாள் ஜ்வரமுண்டு பண்ணும்." என்று கூறுகிறார் ஜெஜ்ஜடர். இங்ஙனமே கபஸ்த்தானமான சிரஸ்ஸில் வாத-பித்தங்களும், பித்தஸ்த்தானமான ப்ருஷ்டத்தில் வாத-கபங்களும் கிரமமாக பலம் பெற்று த்ருதீயக ஜ்வரத்தை யுண்டு பண்ணுவதாய் அறிக. இடை வாதஸ்த்தானமாயிருக்க அங்கு பித்த கபங்களும், சிரஸ் கபஸ்த்தானமாயிருக்க அங்கு வாத-பித்தங்களும்,முதுகு பித்தஸ்ததானமாயிருக்க அங்கு வாத-கபங்களும் விருத்தியடைந்து வியாதியை யுண்டுபண்ணுவது எங்ஙனமென்று ஆக்ஷேபம் எற்படும். "இயற்கை நிலைமையிலேயே தோஷங்களுக்கு அவ்வித ஸ்த்தான நியமங்கள்; அவை பிரகோபித்து விட்டால் தேஹத்தில் எங்கும் பரவிவிடும். அப்பொழுது தோஷங்கள் எங்கெந்த விடத்தில் தங்கிவிடுமோ ஆங்காங்கு கோளாறை யுண்டுபண்ணும்" என்கிற ஸுச்ருதருடைய வாக்கியம் அவ்வாக்ஷேபத்திற்கு ஸமாதானம். [இதர ஸ்த்தானங்களில் தோஷங்கள் வியாதியை யுண்டுபண்ணுவதற்கான இந்த ஆக்ஷேபமும் ஸமாதானமும் பிறகு கூறப்படும் சதுர்த்தக ஜ்வரத்துக்கும் பொதுவானவை யென்றறிக.] "பெரும்பாலும் ஸந்ததாதி ஐந்து ஜ்வரங்களும் ஸந்நிபாதத்தினால் உண்டாகின்றன; அதிலும் ஸந்நிபாதத்தில் எந்த தோஷம், மிக்க அதிகரித்திருக்குமோ அது அந்த ஜ்வரத்தில் முக்கிய தோஷமாகக் கருதப்படும் என்று சரகர் கூறியிருப்பதிலிருந்து விஷம ஜ்வரங்களெல்லாம் ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமானவை யென்று தெரியவந்தாலும், 'பெரும்பாலும் ஸந்நிபாத ஸம்பந்தமானவை' என்றிருப்பதாலும், 'அதிலும் எந்த தோஷம் எதில் அதிகரித்திருக்குமோ அது அத்தோஷ ஸம்பந்தமானதாகக் கருதப்படும்' என்று கூறப்பட்டிருப்பதாலும் இங்கே த்ருதீயக ஜ்வரத்திலும் சதுர்த்தக ஜ்வரத்திலும் வாத-பித்தாதிகளுக்குத் தனித்தனியே விசேஷ ஸம்பந்தம் கூறப்பட்டதாய் அறிக.

3. "தோஷம் அஸ்த்தி மஜ்ஜை இவ்விரண்டையும் பற்றியதாய் சதுர்த்தக விபர்யயம் என்னும் ஜ்வரத்தையுண்டுபண்ணும்; இதில் முதலிலும் இறுதியிலும் ஜ்வரம் தணிந்திருக்கும்; மத்தியில் மாத்திரம் காயும்' என்று இதர கிரந்தங்களிலும் கூறப்படுகிறது. இதற்குப் பொருள்:"ஆதியில் ஒருநாள் ஜ்வரம் வாாமலிருக்கும்; இடையில் இரண்டு நாட்கள் ஜ்வரம் கிளப்பியடித்துக்கொண்டிருக்கும்; பிறகு இறுதியில் ஒரு நாள் ஜ்வரம் உண்டாகாது" என்று ஜெஜ்ஜடர் முதலியவர்களால் கூறப்படுகிறது. "இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக ஜ்வரம் காய்ந்து, இடையில் ஒரு நாள் தணிவடைந்து, மீண்டும் முன்போலவே ஜ்வரம் அடிக்கும்" என்பது அதற்குப் பொருள் என்று ஹரிசந்திரன் கூறுகிறார். இங்ஙனமே அந்யேத்யுஷ்கம், த்ருதீயகம் இந்த ஜ்வரங்களுக்கும் விபர்யயம் (அந்யேத்யுஷ்க விபர்யயம், த்ருதீயக விபர்யயம்) என்கிற பேதங்கள் உண்டென்று கூறப்படுகிறது. "தோஷமானது இரண்டு மூன்று கபஸ்த்தானங்களிலாவது இருந்து விபர்யயங்களான விஷமஜ்வரங்களை யுண்டுபண்ணும்" என்றுவருத்த ஸுச்ருதர் மொழிவதாக ஜெஜ்ஜடர் வரைகிறார்.

வாத-பலாஸக ஜ்வரம்:— எப்பொழுதுமே ஜ்வரம் சொற்பமாகக் காய்ந்து கொண்டிருக்கும்; உடம்பு ரூக்ஷமாகும்; வீக்கம் காணும்; மிக்கஇளைப்புடன் கஷ்டப்படுவான்; அவயவங்கள் அசைவற்றுப் போகும்; இது சிலேஷ்ம தோஷம் அதிகரித்த வியாதி; வாத-பலாஸகம் என இதற்குப் பெயர்.[1] 40.

ப்ரலேபக ஜ்வரம்:— உஷ்ணத்தினாலும், குருத்தன்மையினாலும்அவயவங்கள் பூசப்பட்டவை போல் தோன்றும்;குளிரும் தொடரும்; சொற்ப ஜ்வரமும், தேஹத்திற் பிசுபிசுப்பும் காணும்;இது ப்ரலேபக ஜ்வரம் எனப்படும்.[2] 41.

விசேஷ விஷம ஜ்வரங்கள்:—(1) தேஹத்தில் அன்னரஸம் காந்திப்போய் கோளாறடைந்தும், சிலேஷ்மமும் பித்தமும் விகாரப்பட்டுமிருக்கையில், அதனால் சரீரத்தில் ஒரு பகுதி சீதளமாகவும் மற்றொரு பகுதி உஷ்ணமாகவும் ஆய்விடும்[3]. (2) எப்பொழுது பித்தமானது மத்திய சரீரத்திலும், சிலேஷ்மம் கை-கால்களிலும் வியாபித்து நிற்கின்றனவோ அப்பொழுது அதனால் உடலில் உஷ்ணமும் கை-கால்களில் சீதளமும் காண்பதுண்டு. (3) மத்திய காயத்தில் எப்பொழுது கபம் வியாபித்து கை-கால்களில் பித்தமும் பரவி யிருக்கின்றனவோ, அப்பொழுது அதனால் உடலிற் சீதளமும்,கை-கால்களிற் சூடும் அதிகரிக்கும். (4) கபமும் வாயுவும் சர்மத்தை ஆச்ரயித்திருக்கையில் முதலில் அவ்விரு தோஷங்களும் ஜ்வரத்தில் சைத்தியத்தைக் கிளப்பி, அவ்விரண்டும் தணிவடைந்ததும்[4], பித்தம் அதிகரித்து அப்பால் உஷ்ணத்தை விருத்தி செய்கின்றது. (5) அவ்விதமே பித்தமானது சர்மத்தைப் பற்றியதாய் முதலில் அதிக உஷ்ணத்தைக் கிளப்பி, அப்பால் அது தணிவடைந்ததும் மற்றஇரண்டு தோஷங்களும் இறுதியில்சீதளத்தை யுண்டுபண்ணுகின்றன இறுதியிற் கூறிய இரண்டுவித ஜ்வரங்களும் தாஹசீதாதி ஜ்வரங்கள் எனப்படும்;[5] இவ்விரண்டும் ஸம்ஸர்க்க தோஷங்களால் உண்டாகுபவையாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதலில் எதில் உஷ்ணம் அதிகரிக்குமோ அது கடுமையான ஜ்வரம்; ஆகவே சிகித்ஸை செய்து அதைப் பரிஹரிப்பது மிகவும் கடினம்.[6] 42—47.

---

1. வாத தோஷத்தினாலும் விசேஷமாக சிலேஷ்மத்தினாலும் உண்டாக்கப்படுவதால் இது வாதபலாஸகம் எனப்படுகிறது, (பலாஸகம் என்று சிலேஷ்மத்திற்குப் பெயர்) "வாயு பிரகோபமடைந்து, மற்ற இரண்டு தோஷங்களையும் பிரகோபிக்கச் செய்து தேஹமெங்கும் ஓடும்; அப்பொழுது அத்தோஷம் சிரஸ்விலிருந்தால் தலைவலியையும் * * * *" என்றவாறு வேறு சில நூல்களில் கூறப்படுவதால் வாத பலாஸகத்தில் பித்தத்திற்கும் சிறிது ஸம்பந்த முண்டென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். வாத-பலாஸகம் கும்பம் என்கிற பாண்டுரோகத்தை (கும்பகாமலாவை) ச்சேர்ந்ததென்றும் சிலர். இதில் உடம்பு ரூக்ஷமாயிருப்பது வியாதியின் பிரபாவத்தினாலென்க. வாத பலாஸகம் ப்ரலேபக ஜ்வரத்திற்கு உபத்திரவமாயுண்டாவதாகக் கருதப்படுகிறது.

2. ப்ரலேபக ஜ்வரம் கப-பித்தங்களால் உண்டாகின்றது. இராஜயக்ஷமாவில் உண்டாவது இதே ஜ்வரமென்றும், அதில் அதிஸாரம் முதலிய வேறு சில இலக்ஷணங்களும் காண்கின்றன வென்றும், ஆகவே இது ஸந்நிபாதத்தினால் காண்கிறதென்றும் சிலர் கூறுகிறார்கள்.

3. இதில் தேஹத்திற் கீழ்பாதி மேல்பாதியாகவோ, அல்லது நெடுகவும் வலது பகுதி இடது பகுதியாகவோ உஷ்ண சீதளங்கள் காணும்.

4. தணிவு என்பதற்கு நிவாரணம் என்பது பொருளல்ல; ஆனால் ஜ்வரத்திற்குக் காரணமானதோஷத்தின் வேகம் அடங்கியிருக்கிறதென்பதே பொருள். ஏனெனில் ஜ்வரதோஷம் நிவ்ருத்தியானால் மறுமுறை ஜ்வரம் கிளம்புவதற்குக் காரண மில்லாமற் போய்விடும். "விஷம ஜ்வரம் உள்ளவரையில் தோஷம் ஒருக்காலும் தேஹத்திலிருந்து முற்றிலும் விலகுவதில்லை. ......... ஜ்வரவேகம் தணிவடைந்ததும் ஜ்வரம் விட்டு விட்டதாகத் தோற்றும்; ஜ்வரதோஷம் தாதுக்களின் இடையில் ஸூக்ஷ்மமாக மறைந்திருப்பதால், அநுட்பமான தோஷ நிலைமையைக் கண்டறிய முடிவதில்லை" என்கிற ஸுச்ருதருடைய வசநம் இதற்குப் பிரமாணமாகும்.

5. தாஹ சீதாதி ஜ்வரங்கள்—இதை தாஹாதி ஜ்வரம் என்றும், சீதாதி ஜ்வரம் என்றும் பகுத்துக் கூறவேண்டும். உஷ்ணத்தை முதலிற் பெறுவது தாஹாதி ஜ்வரம் என்றும், சீதளத்தை முதலிற் பெறுவது சீதாதி ஜ்வரம் என்றும் கூறப்படும், இவற்றுள் தாஹாதிஜ்வரத்தில் பித்தம் அநுபந்தி தோஷம், அதில் வாத-கபங்கள் அநுபந்தங்கள். சீதாதி ஜ்வரத்தில் வாத-கபங்கள் அநுபந்திகள்; அதில் பித்தம் அநுபந்தம் [அநுபந்தி யென்பது பிரதாநம்; அநுபந்தம் என்பது அதைத் தொடர்வது.] அநுபந்த தோஷத்தையும் கவனித்து அநுபந்திக்குச் சிகித்ஸை செய்ய வேண்டுமென்பது இதையறிவதின் பலன்.

6. விஷம ஜ்வரங்களில் ஸந்ததம் முதலியவை ஸததம் முதலிய ஜ்வரங்களாகவும், அங்ஙனமே சதுர்த்தகாதிகள் த்ருதீயகாதி ஜ்வரங்களாகவும் கால தேசா

தாதுக்களைப்பற்றிய ஜ்வரங்கள்:[1] —(1) சரீரம் பாரமாயிருத்தல், இருதயத்திலிருந்து ஏதோ தோஷம் வெளிவருவதுபோலக் குமட்டல், உடல் இளைத்தல், வாந்தி, அரோசகம் ஆக இக்குறிகளும் மனச்சோர்வும் இரஸ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[2] தோன்றும். (2) இரத்தம் கக்குதல், அழற்சி, மூர்ச்சை, வாந்தி, தலைச்சுற்றல், வாய்ப்பிதற்றல், இரத்தக்கட்டிகள், நாவறட்சி ஆக இக்குறிகள் இரத்ததாதுவைப்பற்றிய ஜ்வரத்தில் காணும். (3) ஆடுச்சதை விரைத்து வலித்தல்,[3] நாவறட்சி, மல-ஜலங்கள் அதிகமாய் வெளிவருதல், தேஹத்தில் உள்ளும் புறமும் தாபம், கை-கால்களில் வலிப்பு, சிரமம் ஆக இக்குறிகள் மாம்ஸ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில் ஸம்பவிக்கும். (4) மிதமிஞ்சிய வியர்வை, நாவறட்சி, மூர்ச்சை, வாய்ப்பிதற்றல், வாந்தி, துர்நாற்றம், அரோசகம், சோர்வு, ஸஹிக்கவியலாத ஜ்வரம் ஆக இக்குறிகள் மேதோதாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[4] தோன்றும். (5) அஸ்திகள் உடைக்கப்படுவது போன்ற வேதனை, கூக்குரலிடல், பெருமூச்சு, பேதி, வாந்தி, அவயவங்கள் வலித்து இழுக்கப்படுதல் ஆக இவ்விகாரங்கள் அஸ்த்தியைப்பற்றிய ஜ்வரத்தில் உண்டாகும். (6) கண்கள் இருளடைதல், விக்கல், இருமல், சைத்தியம், வாந்தி, தேஹவுட்புறத்தில் அழற்சி, பெருமூச்சு, மர்மங்கள் அறுக்கப்படுவது போன்ற வலி இக்குறிகள் மஜ்ஜ தாதுவைப்பற்றிய ஜ்வரத்தில்[5] தோன்றும். (7) சுக்ரதாதுவைப்பற்றிய[6] ஜ்வரத்தில் ஆண்குறி மிகவும் விம்மிக் கொள்ளும்; சுக்ரதாது வெகு அதிகமாக வெளியாகும்; மரணமும் இதில் நேரிடும். 48—54, (இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ் இந்த தாதுக்களைப் பற்றிய ஜ்வரங்கள் ஸாத்யமாகும்; அஸ்த்தியையும் மஜ்ஜையையும் பற்றிய ஜ்வரங்கள் கஷ்டஸாத்யம்; சுக்ரதாதுவைப்பற்றியது அஸாத்யமாம்.)

ப்ராக்ருத-வைக்ருத ஜ்வரங்கள்.[7]—வர்ஷருதுவிலும், சரத்ருதுவிலும், வஸந்த ருதுவிலும் முறையே வாதத்தினாலும், பித்தத்தினாலும், கபத்தினாலும் உண்டாகிற ஜ்வரம் ப்ராக்ருத ஜ்வரம் ஆகும்; இதர ஜ்வரம் எதுவும் வைக்ருத ஜ்வரம் எனப்படும். இவற்றுள் வைக்ருத ஜ்வரம் அனைத்தும், ப்ராக்ருத ஜ்வரத்தைச் சேர்ந்த வாதஜ்வரமும் கஷ்டஸாத்யமான வியாதிகள். [8] 55.

---

தி நிலைமைகளுக்கேற்ப மாறக்கூடும். "ருது, இராப்பகல், தோஷம் மனது இவற்றின் பலா பலங்களுக்குத் தகுந்தவாறு ஒரு ஜ்வரம் மற்றொரு ஜ்வரமாக அவ்வப்பொழுது மாறுவதுண்டு" என்று கூறுகிறார் சரகர்.

1. முற்கூறிய வாதாதிஜ்வரங்கள் தாதுக்களைப் பற்றிக் கொள்ளும்போது முற்குறிப்பிட்ட அந்தந்த லக்ஷணங்களைத் தவிர வேறு சில அந்தந்த தாதுவுக்கேற்ற லக்ஷணங்களும் உண்டாகும்; அவ்விசேஷலக்ஷணங்களே இங்கு வரிசையாக ஏழு தாதுக்களின் ஸம்பந்தமாக விவரிக்கப்படுகின்றன. இரஸாதிதாதுக்களுக்குக் கெடுதியின்றிய வாதாதி தோஷங்களுக்குச் சிகித்ஸை செய்யவேண்டுமென்பதே இவ்விவரணங்களுக்குப் பிரயோஜனம்.

2. ஜ்வரம பொதுவாகவே இரஸதாதுவைத் தொடர்ந்து ஸம்பவிக்கின்றதாயினும், இங்கே விசேஷமாக அது இரஸதாதுவைப்பற்றியிருப்பதாகக் கருதவேண்டும்.

3. ஆடுச்சதை—முழங்காலுக்குக் கீழே பின்புறமாகக் காலிலுள்ள பெரிய தசைநார்; இத்தசைநார்ச் சேர்க்கைக்கு பிண்டிகை யென்று பெயர்; இதிலுண்டாகும் வலிப்புக்கு பிண்டிகோத்வேஷ்டநம் எனப் பெயர்.

4. மேதோதாது—கொழுப்பு.

5. மஜ்ஜதாது—எலும்புக்குள்ளிருக்கும் ஒருவித கொழுப்பு ஸம்பந்தமான சோறு.

6. சுக்ரதாது—இரேதஸ் என்கிற பிந்து.

7. ப்ராக்ருத ஜ்வரம்—அவ்வப்பொழுது காலவேற்றுமைகளால் உற்பத்தியாகும் இயற்கை ஜ்வரம். வைக்ருத ஜ்வரம்—வர்ஷருதுவைத் தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் வாத ஜ்வரமும், சரத்ருதுவைத் தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் பித்த ஜ்வரமும், வஸந்தருதுவைத்தவிர்த்து மற்ற ருதுக்களிலுண்டாகும் கபஜ்வரமும், விஷம ஜ்வரம் முதலிய வேறு ஜ்வரங்களும் வைக்ருதங்களாகும்.

8. "வஸந்த ருதுவிலும் சரத்ருதுவிலும் காண்கிற ப்ராக்ருத ஜ்வரங்கள் ஸுகஸாத்யமானவை" என்கிற பிரமாணப்படி கபஜ்வரமும் (வஸந்த ருதுவில் உண்டாவது), பித்த ஜ்வரமும் (சரத்ருதுவில் உண்டாவது) ஸுகஸாத்யமானவை யாகையால் மற்றவை கஷ்டஸாத்யங்கள் எனப்படுகின்றன. [வர்ஷா காலத்திலுண்டாகும் வாத ஜ்வரம் ப்ராக்ருத ஜ்வர

ப்ராக்ருத ஜ்வரங்களின் உற்பத்தி க்ரமம்.—(1) வாததோஷமானது வர்ஷருதுவில் பிரகோபமடைந்து, பிறகு பித்த-கபங்களோடு சேர்ந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும். (2) அங்ஙனமே பித்தமானது சரத்ருதுவில் பிரகோபித்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்; அதற்கு கபம் பக்கபலமாகும். இவ்விரு தோஷங்களின் சுபாவத்தினாலும், அது விஸர்க்க காலமாகையாலும் அந்த ஜ்வரம் வருகிறபோது உணவுண்ணுமலிருப்பதால் யாதொரு தீங்கும் நேரிடாது.[1] (3) வஸந்த ருதுவில் கபதோஷம் பிரகோபிக்க, அதையும் வாத-பித்தங்கள் தொடர்ந்து ஜ்வரத்தை யுண்டுபண்ணும்.[2] அந்தந்த தோஷம் பிரகோபிக்கக் கூடிய காலத்தில் அந்தந்த தோஷத்தினுலுண்டாகக் கூடிய ஜ்வரங்கள் யாவும் உற்பத்தியாவதோ விருத்தியாவதோ இயல்பு. நிதாநமென்று கூறப்பட்டவைகளால்[3] வியாதிக்கு அநுபசயமும்,[4] நிதாநத்திற்கு எதிரிடையானவைகளால்[5] உபயசமும்[6] உண்டாகும். 56—58.

அந்தர்வேக ஜ்வரம்:—சரீரத்தின் உட்புறத்திலேயே தாபம் அதிகம், நாவறட்சி, வாய்ப்பிதற்றல், பெருமூச்சு, தலைச்சுற்றல், ஸந்திகளிலும் அஸ்திகளிலும் கடுப்பு, வியர்வையின்மை, தோஷங்களும் மலமும் இறுகிப்போதல் ஆக இவை அந்தர் வேக ஜ்வரத்தின் குறிகள் என்றறிக[7]. 59, 59½.

---

மாயிருந்தும், ஆசார்ய வாச்படராலும் அங்ஙனமே கூறப்பட்டிருந்தும், அது கஷ்டஸாத்தியம் என்கிற முகாந்தரத்தினுல் சரகாதிகள் அதையும் வைக்ருத ஜ்வரங்களிற் சேர்ந்ததாகவே மொழிகின்றனர். இதர ரோகங்களெல்லாம் ப்ராக்ருதங்களானுல் கஷ்டஸாத்யமாகவும், வைக்ருதங்களானுல் ஸுகஸாத்யங்களாகவும் இருக்க, ஜ்வரத்தில் மாத்திரம் அத்தன்மை நேர் எதிரிடையாயிருப்பது, ஜ்வரப் பிரபாவமெனக் கருதவேண்டும்.]

1. "கபமும் பித்தமும் திரவதாதுக்கள் (கார்யத்தில் திரவரூபமான தன்மையைக் காட்டும் தோஷங்கள்); ஆகவே நீண்டகால லங்கநத்தைத் தாங்குவதற்சேற்ற சக்தி அத்தோஷங்களால் உண்டாகும்" என்கிற பிரமாணத்தின் படியும் இங்ஙனம் கூறப்பட்டது என்றறிக.

2. "வஸந்தருது ஆதாந காலத்தின் மத்திய பாகமானதால், அதில் பிரகோபிக்கும் கபத்தை வாத-பித்தங்களும் தொடரும்" என்று சரகர் கூறும் பிரமாணத்தை அநுஸரித்து இவ்விஷயம் மொழியப்படுகிறது. இது ஆதாந மத்திய காலமாகையால் இதில் லங்கநம் செய்வது அவ்வளவு பிரசஸ்தமல்ல. முன்பு விஸர்க்ககாலத்தில் "லங்கநம் செய்வதால் தீங்கொன்றுமில்லை" எனக் கூறப்பட்டதிலிருந்தே ஆதாந காலத்தின் மத்தியபாகமாகிய வஸந்தருதுவில் ஜ்வரத்திற்கு லங்கநம் சிறிது தீங்கிழைக்கக் கூடியதென்றுரைக்கப்பட்டதாகவே யறியவேண்டும். [விஸர்க்க காலம்—வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது இக்காலங்கள். இவற்றில் மழையும் பனியும் பெய்து உலகத்திற்கு வேண்டிய ஸத்துவம் விருத்திசெய்யப்படுவதால் இதற்கு இப்பெயரிடப்பட்டது. ஆதாநகாலம்—சரத்ருது, வஸந்தருது, க்ரீஷ்மருது. இவற்றில் வெய்யிலின் கடுமையினுலும் வாயுவின் சோஷண சக்தியினுலும் உலகத்தின் ஸத்துவம் ஆகர்ஷிக்கப்படுவதால் இதற்கு இப்பெயர் அளிக்கப்பட்டது.]

3. நிதாநம் என்றால் இங்கே காரணம் எனப் பொருள்; ஜ்வரத்திற்குக் காரணமான ஆமதோஷம் முதலியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய ஆஹாரங்களும் இங்கே நிதாநம் என்பதால் குறிப்பிடப்படுகின்றன.

4. அநுபசயம்—ரோகம் நிவாரணமாகாமை அல்லது வியாதி தணியாமை.

5. வியாதியை உற்பத்தி செய்யக் கூடியவாறு கோளாறடைந்துள்ள வாதாதிதோஷங்களுடையவும், இரஸாதி தாதுக்களுடையவும் சுபாவங்களுக்கு எதிரிடையான குணமுள்ள ஆஹாரங்களும் ஆசாரங்களும் எனக் கருத்து.

6. உபசயம்—ரோகநிவ்ருத்தி அல்லது வியாதியின் தணிவு.

7. சில ஜ்வரங்கள் தேஹத்தின் உட்புறத்தையே தபிக்கச் செய்யும்; அவ்விதமான ஜ்வரம் அந்தர் வேகம் அல்லது உட்காய்ச்சல் எனப்படும். வெளிதேஹத்திலேயே அழற்சியை யுண்டுபண்ணுவது பஹிர் வேக ஜ்வரம் அல்லது வெளிஜ்வரம் எனப்படுகிறது. ஸுச்ருதர் அந்தர்வேகஜ்ரத்தையே கம்பீரஜ்வரம் என்கிறார்.

பஹிர்வேக ஜ்வரம்:—சரீரத்தின் வெளியங்கங்களில் அதிக தாபமுண்டாகும்; நாவறட்சி முதலியவை[1] மிகக் குறைவாயிருக்கும்; இவை பஹிர்வேக ஜ்வரத்தின் குறிகளாம். இது ஸுக ஸாத்யமான ஜ்வரம். 60½.

ஆம ஜ்வரம்:—[2] உமிழ் நீர் அதிகமாயூறும்; இருதயம் இயற்கைக்கு விரோதமாய் அடித்துக்கொள்ளும்; இருதயம் ஏதோ அசுத்தமாயிருப்பது போன்ற உணர்ச்சியும் அரோசகமும் உண்டாகும்; சோம்பல், ஆலஸ்யம், உணவு ஜீர்ணமாகாமை, வாயில் அருவருப்பு, தேஹம் பாரமாதல், பசியின்மை, வெகு மூத்திரம், உடல் விரைப்பு, கடுமையான ஜ்வரம் ஆக இவைகளும் உண்டாகும்; ஆமஜ்வரத்திற்கு இவை குறிகளாம். இந்த நிலைமையில் ஔஷதம் கொடுக்கலாகாது; ஆமதோஷத்தில் ஔஷதம் கொடுப்பதானது ஜ்வரத்தை இன்னும் அதிகமாகக் கிளப்பிவிடும்[3]. 61—63.

பக்குவ நிலைமைக்கு வரும் ஜ்வரம்:[4] —ஜ்வரத்தின் வேகம் அதிகமாதல், நாவறட்சி, வாய்ப்பிதற்றல், பெருமூச்செறிதல், தலைச்சுற்றல், மலம் ஸாதாரணமாய் வெளிவருதல், வாந்திக்கு வருவது போல் உணர்ச்சியுடன் உமிழ் நீரூறுதல் ஆக இவை ஜ்வரம் பக்குவ நிலைமை அடைந்துவருவதற்கான குறிகளாகும். 64.

நிராம ஜ்வரம்[5] :—எட்டாவது நாள் வந்தும் பசியால் வாடுதல், தேஹம் இலகுவாதல், ஜ்வரம் தணிவடைதல், தோஷங்கள் வெளிவருதல் ஆக இவை ஜ்வரத்தில் ஆமதோஷம் நீங்குவதன் குறிகளாம். 65.

ஜ்வரத்தின் ஸாத்யாஸாத்ய லக்ஷணங்கள்[6] :—(1) ஸாத்யம்.—பிணிபாளி பலிஷ்டனாயிருத்

---

1. நாவறட்சி முதலியவை யென்பதால், அந்தர்வேகஜ்வரத்திற் கூறிய வாய்ப்பிதற்றல், பெருமூச்சு, தலைச்சுற்றல், ஸந்தி அஸ்த்திகளில் வேதனை என்கிற மற்றக்குறிகளும் கிரஹிக்சப்படுவதாய் அறிக.

2. ஆமஜ்வரம்—பக்குவநிலைமைக்கு வராத ஜ்வரம். ஜ்வரத்தில் ஆமதோஷம் நீங்கி பக்குவ நிலைமையுண்டாவதற்கு எட்டு நாட்கள் ஆகும் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. பசி முதலியவை யுண்டாய், உடம்பு இலகுவாகப் போகும் இலக்ஷணம் எப்பொழுது உண்டாகிறதோ அதுவே ஆமதோஷம் நீங்கி ஜ்வரத்திற்குப் பக்குவ நிலைமை யுண்டாய்விட்டதென்றும், ஆகவே எட்டு நாட்கள் வரையில் ஆமதோஷம் நிலைத்திருக்குமென்று நிச்சயமாக விதியேற்படுத்துவது சரியல்லவென்றும் வேறு சில ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

3. இரஸ ஸம்பந்தமான ஆமதோஷம், தோஷ ஸம்பந்தமான ஆமதோஷம் என்று ஆமதோஷம் இரண்டு விதம். வாய் அருவருப்பா யிருத்தல் முதலிய சில இலக்ஷணங்களைக் கொண்டு இரஸ ஸம்பந்தமான ஆமத்தையும், தருணஜ்வரமாக ஏழு நாட்கள் வரையில் இருந்து வருவதைக் கொண்டு தோஷ ஸம்பந்தமான ஆமத்தையும் அறிக. ஆகவே தோஷ ஸம்பந்தமான ஆமதோஷம் எட்டாவது நாள்தான் தணிவடையும் எனக் கூறவேண்டும். "ஏழு தாதுக்களைப்பற்றிய தோஷங்கள் தணிவதற்கு வரிசையாக ஏழு நாட்கள் செல்லும்; ஆகையால் அதற்குப்பிறகு எட்டாவது தினத்தில்தான் பெரும்பாலும் ஜ்வரத்தின் ஆமதோஷம் நீங்கியதாகக் கூறப்படுகிறது" என்று ஹரிசந்திரன் என்பவர் அதற்குக் காரணம் சொல்லுகிறார். இரஸ ஸம்பந்தமான ஆமதோஷமோ எட்டாவது தினத்திற்குப் பிறகு கூட தொடரக்கூடும். இதற்குத் "தருண ரூபமான ஆமதோஷம் எட்டு நாட்களில் நிவ்ருத்தியாகும்; ரஸஸம்பந்தமான ஆமமோ அதற்குப் பிறகும் அநுவர்த்திக்கும்" என்கிற ஸுச்ருதடீகையின் வாக்கியம் பிரமாணமாகும். (தருணரூபமான என்றால் வ தாதி தோஷஸம்பந்தமான ஆமதோஷம் எனப் பொருள்.) தருணரூபமான ஆமதோஷத்தில் ஔஷதம் கொடுக்கக்கூடாது. ஆனால் இரஸ ஸம்பந்தமான ஆமத்தில் ஔஷதம் தகுந்தவாறு உபயோகிக்கலாமென்பதே இவ்விருவித ஆமதோஷங்களைப் பகுத்தறிவதன் பிரயோஜனமாம். ஆகிலும் ஆமதோஷம் எதுவாயிருப்பினும், பொதுவாக அந்த நிலைமையில் ஔஷதப் பிரயோகம் செய்வது உசிதமல்ல.

4. இது பச்சியமாந ஜ்வரம் என்று வழங்கப்படும்.

5. நிராம ஜ்வரம்—ஆமதோஷம் நீங்கிய ஜ்வரம். இது பக்வ ஜ்வரம் என்றும் மொழியப்படும். [பக்வ ஜ்வரத்தின் இலக்ஷணங்கள் கூறப்பட்டதிலிருந்து, ஜீர்ண ஜ்வர விஷயமும் இங்கு குறிக்கப்படுவது யுக்தமென்றறிகிறோம். "பதின் மூன்று நாட்களுக்கு மேற்பட்டது ஜீர்ண ஜ்வரம் ஆகும்" என்று ஜதூகர்ணன் என்பவர் குறிப்பிடுகிறார். ஆனால் "யாதொரு ஜ்வரம் இருபத்தோரு நாள் தொடர்ந்து அடித்து, அப்பால் சொற்பமாகக் குறைந்து போய், ப்லீஹம் என்கிற அவயவவீக்கத்தையும், ஜாடராக்னிக்குக் குறைவையும் உண்டு பண்ணுகிறதோ அது ஜீர்ண ஜ்வரம் எனப்படுகிறது" என்று வேறு சில ஆயுர்வேதக் கிரந்தங்களில் கூறப்படுகிறது.

6. ஜ்வரத்தினுடைய ஸாத்யலக்ஷணங்களும் அஸாத்ய லக்ஷணங்களும் எனப் பொருள். ஸாத்ய லக்ஷணங்கள்—சிகித்ஸையினால் எளிதில் நிவ்ருத்திக்கக்

தல்,[1] வியாதிக்குக் காரணமான தோஷங்கள் சொற்பமாயிருத்தல், உபத்திரவங்கள் உண்டாகாமலிருத்தல்[2] ஆக இந்நிலைமைகளில் ஜ்வரம் ஸாத்யமாகும். (2) அஸாத்யக் குறிகள்:- அநேக காரணங்களாலும் வலுவான காரணங்களாலும் உண்டாவது, பெரும்பான்மையான குறிகளோடு கூடியிருப்பது, பலவிதமாய் பிராணுவஸ்த்தை யுண்டுபண்ணுவது, எளிதில் புலன்களைப் பழுதாக்குவது, தேஹமிளைத்தவனுக்கும் வீங்கியவனுக்குமுண்டாவது ஆகிய இந்த ஜ்வரங்களும், கம்பீரஜ்வரமும், நீண்ட காலமாய் தொடரும் ஜ்வரமும், வெகு கடுமையாகத் தோன்றிய ஜ்வரமும், தலைமயிர்கள் உதிர்ந்து சிரஸ்ஸில் வடுக்களையுண்டாக்கும் ஜ்வரமும்[3] அஸாத்யமாகும். அதிக உட்காய்ச்சல், நாவறட்சி, அதிக மலபந்தம், கடுமையான ச்வாஸ-காஸங்கள் இக்குறிகளைக் கொண்டு அது கம்பீர ஜ்வரம்[4] என்பதாகத் தெரிந்துகொள்ளவும். மேலும் ஆரம்பம் முதற்கொண்டே எது விஷமஜ்வரமாயிருக்கின்றதோ எது நீடித்த காலமாகத் தொடருகிறதோ, இளைத்தும் அதிரூக்ஷமாயுமிருப்பவனுக்கு யாதொன்று கம்பீர ஜ்வரமாயுண்டாகிறதோ அவ்விதமான ஜ்வரங்கள் ரோகியைக் கொன்றுவிடும். அல்லாமலும் யாதொரு ஜ்வரரோகி ஞாபகமிழந்து வருந்துகிறனே, அல்லது படுத்த விடத்திலிருந்து மீண்டும் எழுந்திருக்கமுடியாமல் வீழ்ந்திருக்கிறனே, கடுங்குளிரால் தாக்கப்பட்டு கஷ்டப்படுகிறனே, அதிக உட்காய்ச்சலுடையவனாயிருக்கிறனே அவனும் ஜ்வரத்தினல் இறப்பான். அன்றியும் யாதொருவன் மயிர்ச்சிலிர்க்கையோடு கூடியவனாய், கண்கள் மிகச் சிவந்து, இருதயத்தில் இடிக்கப்படுவது போன்ற நோவையும் பெற்று, வாயாலேயே ச்வாஸம் விடுகிறனே அம்மனிதனையும் ஜ்வரம் மாய்த்துவிடும். பின்னும் விக்கல், பெருமூச்சு, நாவறட்சி இக்குறிகளோடு கூடியிருத்தல், மதிமயக்கங்கொள்ளல், கண்களை விறண்டு விழித்தல், இடைவிடாது ஊர்த்வ ச்வாஸமுண்டாதல், மிக இளைத்துப் போதல் ஆக இந்த இலக்ஷணங்களும் பிணியாளி பிழைக்க மாட்டானென்பதை அறிவிப்பவைகளாம். மேலும் உடலின் இயற்கையொளி அழிதல், புலன்கள் பஞ்சடைந்து உணர்ச்சியற்றுப் போதல், தேஹம் க்ஷீணித்தல், கடுமையான அரோசகமுண்டாதல், கம்பீரமும் தீக்ஷ்ணமுமான உஷ்ணவேகத்தால் பீடிக்கப்படுதல் ஆகிய இக்குறிகளோடு கூடிய ஜ்வரரோகியையும் கைவிட வேண்டியதுதான். 66—73.

ஜ்வரம் விட்டுவருவதன் குறிகள்:—தேஹத்தில் வெட்பமதிகரித்தல், அடுத்தாற்போல வியர்த்தல், மயக்கம், நாவறட்சி, உடம்பு உதறல், மலம் சிறிது உடைந்து வெளிவருதல்,

---

கூடிய வியாதிக்கான குறிகள். அஸாத்யலக்ஷணங்கள்—சிவ்ருத்திக்கக்கூடாத வியாதிக்கான குறிகள்.

1. "பலாதிஷ்டாநமாரோக்யம்" (ஆரோக்கியம் தேஹவன்மையை முக்கிய ஆதாரமாகப் பெற்றது) என்கிற பிரமாணப்படி பலிஷ்டனயிருப்பவன் ஆரோக்கிய சாலியாயிருப்பானுகையால் அவனிடம் எளிதிற் பிணியணுகாது.

2. உபத்திரவம்—I—வது பக்கம் வியாக்யாநத்தைப் பார்க்க. "இருமல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, நாவறட்சி, அதிஸாரம், மலபந்தம், விக்கல் ச்வாஸம், உடம்பெல்லாம் வேதனை ஆக இப்பத்தும் ஜ்வரத்தின் உபத்திரவங்கள்" எனப் படுகின்றன.

3. "எவனுக்குத் தலையில் வடுக்களைப்போல மயிர்களுதிர்ந்து வரி வரியாக வடுக்கள் உண்டாகின்றனவோ, புருவங்கள் உதிர்ந்து மிகவும் செறிப்புள்ளவைகளாக ஆகின்றனவோ, இமைமயிர்களும் எளிதில் விழுந்து விடுகின்றனவோ அவன் சீக்கிரம் மரணமடைவான்" என்று வேறு கிரந்தங்களில் கூறப்படுகிறது.

4. கம்பீர ஜ்வரம் என்கிற இப் பெயர் ஸுச்ருதரால் வழங்கப்படுகிறது; இதையே சரகர் அந்தர்வேக ஜ்வரம் என்கிறர்.

ஞாபகக் குறைவு, கூவுதல்,[1] வாயில் ஒருவித துர்நாற்ற மேற்படுதல் இவை ஜ்வரம் விட்டு வருவதன் குறிகள்.[2] 74.

ஜ்வரம் நிவாரணமானதன் குறிகள்:—வியர்வை தாராளமாயுண்டாவது, தேஹம் இலகுவாவது, தலையில் தினவுண்டாவது, வாய் ஒருவாறு அழற்சியுறுவது, தும்மலுண்டாவது, உணவில் விருப்பமேற்படுவது ஆக இவை ஜ்வரத்திலிருந்து விடுபட்டுவனுக்கு ஏற்படும் இலக்ஷணங்களாகும். 75.

## 3. அதிஸார நிதாநம்.*

அதிஸார நிதாநம்:—குரு,[3] அதிக [4] ஸ்நிக்த்தம், ரூக்ஷம், உஷ்ணம், திரவம், ஸ்த்தூலம், சீதளம்[5] ஆக இத்தகைய குணங்களையுடைய உணவுகளாலும், விருத்தமாகவும்[6] அமிதமாகவும் அஜீர்ணம் பண்ணக்கூடியவையாகவும், விஷமமாகவுமுள்ள போஜனங்களாலும்,[7] அதியோகமாகவும் [8] மித்தியாயோகமாகவும்[9] உபயோகிக்கப்பெற்ற ஸ்நேஹாதி க்ரியைகளா

1. ஜ்வரம் விடுகிற ஸமயத்திற் கூவுவதற்குக் காரணம் வாக்படரால் கூறப்படுகிறது: 'ஜ்வரம் விடுகிற ஸமயத்தில் தோஷமானது தாதுக்களைக் கிளறிக் கலக்கும்; ஆகையால் அப்பிணியாளி பெருமூச்செறிந்துகொண்டு, வியர்த்துக் கூவுவான்; அத்துடன் வாந்தி செய்து களைத்துப்போய் வருந்துவான். ஜ்வரத்திற்குக் காரணமான தோஷங்கள் ஜ்வரம் விடுகிற ஸமயத்தில் மிகக் குன்றி சக்தியற்றவையாகப் போகவேண்டியிருந்தும், அவை, எண்ணெயில்லாமல் அவிந்து போகுந் தருவாயில் தீபம் மிகப் பிரகாசமாயெரிவதுபோல் இவ்விதம் கடுமையான சிற்சில குறிகளைக் கடைசியிற் காட்டுவது இயல்பு.

2. "தேஹத்தில் வெப்பமதிகரித்தல் முதலிய குறிகள் தோஷங்களால் (ஸந்நிபாதத்தினால்) உண்டாகும் ஜ்வரத்திலும், அந்தர்வேக ஜ்வரத்திலும், தாதுக்களைப்பற்றிய ஜ்வரத்திலுமே அவை விடுகிற ஸமயத்தில் தோன்றும். இவற்றைத் தவிர ஏனைய ஜ்வரங்களில் வியர்வைதான் விசேஷமாயுண்டாகும்" என்று பாலுகி முதலியவர்கள் கூறுகிறார்கள்.

* பித்த ஜ்வரத்தில் அதிஸாரம் உண்டாவது, ஜ்வரம் அதிஸாரம் இவ்விரண்டும் ஒன்றோடொன்றுஉபத்திரவமாக ஏற்படுவது ஆக இத்யாதி ஸம்பந்தங்களால் ஜ்வரத்திற்குப் பிறகு அதிஸாரம் கூறப்படுகிறது.

3. குரு—இது மாத்ராகுரு என்றும், ஸ்வபாவகுரு என்றும் பாககுரு என்றும், குணத்தில் குரு என்றும் நாலு வகைப்படும். (1) மாத்திரையில் (அளவில்) அதிகமாகப் பிரயோகிக்க வேண்டிய ஔஷதம் மாத்ரா குரு வாகும். (2) உருவத்தில் இயல்பாகவே பாரமாயிருப்பது ஸ்வபாவ குரு. (3) சுபாவத்தில் குருவாகவோ இலகுவாகவோ இருந்தபோதிலும் சொற்ப அளவிலுபயோகித்தும் எளிதில் ஜீர்ணமாகாதது குணத்தில் குரு. (4) சுபாவாதிகளில் இலகுவாகத் தோற்றிய போதிலும் உபயோகித்த பிறகு ஜீர்ணமாகுந் தருவாயில் குருத்தன்மையை (எளிதில் ஜீர்ணமாகாமையை) அடைவது குணத்தில் குருவாம்.

4. "அதிக" என்பது அடுத்து வரும் ஸ்நிக்த்தம் ரூக்ஷம் முதலியவற்றிற்கும் சேர்ந்த விசேஷணம்.

5. ஸ்பர்ச சீதளம் என்றும், வீர்ய சீதளம் என்றும் சீதளம் இரண்டு விதம். [உஷ்ணமும் அங்ஙனமே ஸ்பர்சஉஷ்ணம், வீர்யோஷ்ணம் என்று இரண்டு வகையாம்.]

6. விருத்தம் என்பதால் ஒன்றோடொன்று அநேக பதார்த்தங்கள் சேருவதால், அப்பதார்த்தங்கள் விஷத்தன்மையடைவதென்ன, கால தேசாதிகளால் நல்ல பதார்த்தங்களும் தீங்கிழைக்கக்கூடிய குணங்களைப் பெறுவதென்ன இவை முதலியவை குறிக்கப்படுகின்றன. விருத்தம் என்பது ஸுச்ருதத்தில் ஹிதாஹிதீயாத்தியாயத்திலும், சரகத்தில் ஆத்ரேயபத்ரகாப்யீயாத்தியாயத்திலும் பல பேதங்களுள்ளதாக விவரிக்கப்படுகிறது.

7. அதிகபோஜநம் என்பது அத்யசநம் எனப்படும்: 'முதலில் புஜித்த உணவு நன்கு ஜீர்ணமாகாமலிருக்கையிலேயே மீண்டும் புஜிப்பது அத்யசநமாகும்,' என்று சரகர். அஜீர்ண போஜநம் என்பது அபக்வாந்நம் என்றும் கூறப்படும். "அதிகமாகவும், சொற்பமாகவும், அகாலத்திலும் இங்ஙனம் தோன்றியவாறு புஜிக்கப்படும் உணவு விஷமபோஜநம் (விஷமாசநம்) எனப்படும்" என்று ஸுச்ருதர்.

8. அதி யோகம்—ஸ்நேஹ ஸ்வேத வமநாதி சிகித்ஸைகளை மிதமிஞ்சிப் பிரயோகித்தல். (காலம் பொருள் முதலியவற்றிற்கும் இங்ஙனமே அதியோகம் உண்டு.)

9. மித்தியா யோகம்—பலமான சிகித்ஸை செய்வதற்கு அற்பசிகித்ஸையைப் பிரயோகிப்பதும், சொற்ப சிகித்ஸை செய்வதற்கு வெகு பலமான சிகித்ஸை

லும்,[1] விஷங்களாலும், விசேஷ பயத்தினுலும், மனத்துயரத்தினுலும், கெட்டுப்போன ஜலம் மது இவற்றையும் அமிதமான மதுவையும் பானம் செய்வதாலும், அஸாத்மிய போஜனத்தினுலும்,[2] அந்தந்த ருதுவுக்கு ஏற்றவையல்லாத பதார்த்தாதிகளாலும், மிதமிஞ்சிய ஜலக்ரீடைகளாலும், வேகங்களை[3] அடக்குவதாலும், கிருமிகளாலாகிய தோஷங்களாலும்[4] மனிதருக்கு அதிஸாரம் உண்டாகின்றது. இதன் இலக்ஷணம் பின்னல் கூறப்படும்.[5] 1—3.

அதிஸார ஸம்ப்ராப்தி:—(1) அப்தாதுக்கள் எனப்படும் நீர்மயமான தேஹ-தாதுக்கள்[6] மிகப் பிரகோபித்து ஜாடராக்னியை மிகவும் மந்தமாகச்செய்து, மலத்துடன் மிச்ரமாகப் போய், வாயுவினல்[7] கீழ் நோக்கித் தள்ளப்பட்டு, மிகத் திரவமாக அதிகமாய் வெளிப்படுகின்றன; ஆகவே கொடியதான இவ்வியாதியையே "அதிஸாரம்" என்பார்கள்.[8] (2) வாத பித்த-கபங்களால் தனித்தனியே ஒவ்வோர் அதிஸாரமும், ஸந்நிபாதத்தினுல் ஒன்றும், சோகத்தினுல் ஒன்றும், ஆமதோஷத்தினுல்[9] ஒன்றும் ஆக ஆறுவித அதிஸாரங்கள் உண்டு. 4, 4½.

---

யைப் பிரயோகிப்பதும் இப்பெயரால் வழங்கப்படும். (காலத்திற்கும், சிகித்ஸாதிகளில் உபயோகிக்கப்படும் பதார்த்தங்களுக்கும் இவ்விதமே மித்தியாயோகம் உண்டு. மித்தியாயோகம் என்பதை ஹீநயோகம் என்று இவ்விடத்திற் கருதவேண்டுமென்று விஜயரக்ஷிதன் கூறுகிறுர்.)

1. ஸ்நேஹாதி க்ரியைகள்—ஸ்நேஹாதி என்பதால் ஸ்நேஹ சிகித்ஸை, ஸ்வேத சிகித்ஸை, விரேசந சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை முதலிய சிகித்ஸாக்ரமங்கள் குறிக்கப்படுகின்றன.

2. அஸாத்மிய போஜநம்—ஸாத்மியம் என்ருல் ஹிதமானது எனப் பொருள். பிறவியிலேயே சரீரத்திற்கு அனுகூலமாயேற்பட்டுவிட்ட விஷயம் அல்லது வஸ்து பிரக்ருதி ஸாத்மியம் என்றும், பிற்காலத்தில் பழக்கத்தினுல் அநுகூலமாகச் செய்து கொள்ளப்பட்டது அப்யாஸ ஸாத்மியம் என்றும் வழங்கப்படும். ஆகவே பிரக்ருதியிலேயோ அப்யாஸத்திலேயோ சரீரத்திற்கு அனுகூலமல்லாத போஜநம் இங்கு "அஸாத்மிய போஜநம்" எனப்படுகிறது.

3. வேகங்கள்—மலமூத்திராதி விஸர்ஜநங்களின் பிரவ்ருத்தி; மல-மூத்திர-அபாநவாதாதிகளை வலிய அடக்குதல் வேகநிரோதம் எனப்படும்.

4. கிருமிகளாலாகிய தோஷங்கள் என்பதால் குடலிலுண்டாகும் பூச்சிகளாலும், இதர நுண்ணுயிர்களாலும் உற்பத்தியாகும் தோஷங்கள் குறிக்கப்படுகின்றன.

5. இங்கு கூறப்பட்டுள்ள நிதாநங்களில் சில வாததோஷத்தையும், சில பித்ததோஷத்தையும், வேறு சில கபதோஷத்தையும் அதனதன் தன்மைகளுக்கேற்ப பிரகோபிக்கச் செய்து, வாத-பித்த-கபாதிஸாரங்களை முறையே உண்டு பண்ணும்.

6. இரஸம், மூத்திரம், ஸ்வேதம், மேதஸ், கபம், பித்தம், இரத்தம் முதலிய திரவரூபமான சாரீர பதார்த்தங்கள் அப்தாதுக்கள் என்பதால் குறிக்கப்படுகின்றன. மூத்திர-ஸ்வேதாதிகள் சில தோஷங்களாயிருந்தும், அவையும் இங்கு பொதுவாக தாதுக்களாகவே கருதப்படும் என்று விஜயரக்ஷிதனுல் வியாக்யாநம் செய்யப்படுகிறது.

7. வாயு என்பதால் இங்கே முக்கியமாக அபாந வாயு கிரஹிக்கப்படுகிறது.

8. அதீவ ஸரதி (மிகுதியாகத் திரவரூபமாய் மலம் வெளியாகிறது) என்கிற வியுத்பத்தியின்மேல் "அதிஸாரம்" என்கிற பெயர் வந்தது.

9. சரக ஸம்ஹிதை முதலியவற்றில் ஆமதோஷ ஸம்பந்தமான அதிஸாரத்திற்குப் பதிலாக பயஸம்பந்தமான அதிஸாரம் கூறப்படுகிறது. அஜீர்ணத்தினுல் ஏற்படும் ஸந்நிபாத தோஷஸம்பந்தமான அதிஸாரத்தில் ஆமாதிஸாரம் அடங்கிவிடுவதாகக் கருதி சரகர் அதைவிட்டு பயாதிஸாரம் என்பதைப் பிரத்தியேகமாய் ஆருவதாகக் கூறுகிறுர். எந்த அதிஸாரத்திலும் ஆரம்பத்தில் ஆமதோஷம் அதிகரிப்பதும், அது நிவ்ருத்தியாகும் ஸமயத்தில் ஆமம் நீங்கி பக்வநிலைமையேற்படுவதும் இயல்பு; அங்ஙனமிருக்க ஆமதோஷத்தினுல் ஓர் அதிஸாரம் உண்டாவதாகக் கூறுவது எவ்வாறு? என்ருல் அதற்கு ஸமாதாநம் பின்வருமாறு: ஆமம் என்று அஜீர்ண நிலைமைக்குப் பெயர்; இந்த நிலைமையே எல்லா அதிஸாரங்களுக்கும் ஆரம்பத்திலேற்படுவது. குடலில் கெட்டுப்போன உணவிலிருந்து பிரத்தியேகமாயுண்டாகும் வேருெரு தோஷமும் ஆமம் எனப்படுகிறது; வாதாதி தோஷங்களுக்காவது, இரஸாதி இதர தாதுக்களுக்காவது, மலஜலாதி தோஷங்களுக்காவது, ஸம்பந்தப்படாமல் வாதாதிகளைப்போலவே தனித்துள்ள ஒரு தோஷம்; அவ்விதமான ஆமதோஷத்தினுல் பிரத்தியேகமாய் மற்ருெரு அதிஸாரம் உண்டாகிறது. த்வந்த்வ தோஷங்களால் ஸம்பவிக்கும் அதிஸாரங்கள் பிரக்ருதி ஸம ஸமவாயாரப்தங்களாயிருக்குமாகையால் அவற்றை இங்கு பிரத்தியேகமாக விவரிக்க அவசியமில்லை. இனி இதர வியாதிகளில் கூட த்வந்த்வஜ இலக்ஷணங்கள் விக்ருதி விஷமஸமவாயாரப்தங்களாயிருப்பவைகளுக்கே பெரும்பாலும் பிரத்தியேகமாய் விவரிக்கப்படும்.

அதிஸாரபூர்வரூபம்:-மார்பிலும் நாபியிலும், குதத்திலும், ஆமாசயத்திலும், வயிற்றிலும், மற்ற பாகத்திலும் குத்தல் வேதனையுண்டாகும்; தேஹம் வாடியிளைக்கும்; அபானவாயு வெளிவராமல் அடைபட்டுப் போம்; மலச்சிக்கல் காணும்; வயிறு விம்மிக் கொள்ளும்; அப்பால், ஆஹாரம் ஜீர்ணமாவதில்லை; ஆக இவையெல்லாம் அதிஸாரம் உண்டாகப்போகிறதென்பதைக் குறிப்பிடும் பூர்வரூபங்களாம்.5.

வாதாதிஸாரம்:— வாததோஷக் கோளாறால் உண்டாகும் அதிஸாரத்தில் வெளிவரும் மலமானது ஒருவாறு சிவந்த நிறமாகவும், நுரைத்ததாகவும், பசையற்று ரூக்ஷமாகவும் காணப்படும்; மேலும் அது சொற்பம் சொற்பமாகவும் அடிக்கடியும் அபக்குவமாகவே வெளியாகும்; மலம் வெளிவரும்போதெல்லாம் வயிற்றுநோவையும் சப்தத்தையும் உண்டுபண்ணும். 6.

பித்தாதிஸாரம்:— பித்த தோஷத்தினால் உண்டாகும் அதிஸாரத்தில் மலம் மஞ்சள் நிறமாகவோ இலைப்பசுமை நிறமாகவோ ஒரு சிறிது சிவந்த நிறமாகவோ இருக்கும்; நாவறட்சி, மயக்கம், தேஹ அழற்சி, குடலில் வேக்காடு இவையும் காணும். $6\frac{1}{2}$.

கபாதிஸாரம்:—மலமானது வெண்மையாகவும், திரள் திரளாகவும், சிலேஷ்மத்துடன் கூடியதாகவும், துர்நாற்றமதிகரித்ததாகவும், மிகக் குளிர்ந்ததாகவும் வெளிவருமானால், அப்பிணியாளியும் மயிர்ச்சிலிர்த்து வருந்துவானாகில் அது சிலேஷ்மதோஷக்கோளாறால் உண்டான அதிஸாரம் என்றறிக. 7.

ஸந்நிபாதாதிஸாரம்:—பன்றியின் கொழுப்பு அல்லது நெய் போன்றதும், மாம்ஸம் கழுவிய நீர் போன்றதும், முன் வாதாதிஸாரம் முதலிய மூன்றுக்கும் விவரித்துள்ள எல்லாக் குறிகளுடனும் கூடியதுமான மலப்போக்கை மூன்று தோஷங்களாலுமுண்டான அதிஸாரம் என்றறிக; இவ்வதிஸாரம் க்ருச்சிர ஸாத்யமானது. 8.

சோகாதிஸார ஸம்ப்ராப்தி:—பலவேறு முகாந்தரங்களால் மனத்துயரமுற்று, போதிய போஜனமுண்ணாமலிருக்கும் மனிதனுக்குச் சோகத்தினாலெழும் ஆவியும் உடற்சூடும் குடலிற் சென்று ஜாடராக்னியுடன்[1] சேர்ந்து அவனது இரத்தத்தைக் கலக்கிக் கோளாறடையச் செய்யும்; நிறத்திற் குன்றுமணி போன்ற அந்த இரத்தம் கீழ்நோக்கி வந்து சோகாதிஸாரமென்னும் இவ்வியாதியையுண்டு பண்ணும். 9.

சோகாதிஸாரம்: — அவ்விதம் கீழ்நோக்கி வரும் இரத்தமானது மலத்துடன் கூடியதாகவோ, மலமின்றி தனிப்பட இரத்தமாகவோ வெளியாகும்; அது துர்கந்தந்தமாகவோ அல்லது துர்வாஸனையற்றதாகவோ இருக்கலாம். சோகத்தினாலுற்பத்தியாகும் இந்த அதிஸாரத்தைச் சிகித்ஸிப்பது வைத்தியர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும்; ஆகவே இது அதிக க்ருச்சிரஸாத்யமான ரோகம் என்று கூறப்படுகிறது. 10.

ஆமாதி ஸாரம்:—அதன் ஸம்ப்ராப்தியும் இலக்ஷணமும்:—உணவு ஜீர்ணமாகாமையால் அதிலிருந்துண்டான தோஷங்கள் தேஹத்தில் பலவேறு பாகங்களில் ஊடுருவியோடி, குடலையும் ஸகல தாதுக்களையும், மலங்களையும் கலக்கி, பலவித நிறங்களுள்ளதாக மலத்தை அடிக்கடியும் திரவமாக வெளிப்படுத்தும்; இதில் வயிற்றுளைத்தலுமுண்டாகும். இதை ஆமாதிஸாரமாகக் கூறுவர். 11.

ஆமதோஷ லக்ஷணம்: [2] முற்கூறிய தோஷங்களுடன்[3] கூடிய மலமானது ஜலத்தில்

1. பித்தத்துடன் சேர்ந்து என்று வேறொரு பாடம். வஹ்னி யென்கிற மூலபதத்துக்குப் பித்தம் என்று பொருளென்றும், ஜாடராக்னி யென்பதல்லவென்றும் கதாதரன் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

2. அதிஸாரத்தில் ஆமதோஷத்திற்குள்ள விசேஷ ஸம்பந்தத்தை யுத்தேசித்து, ஆமதோஷலக்ஷணமும் இங்கேயே குறிக்கப்படுகிறது. ஆமதோஷலக்ஷணம் கூறப்படவே, அதற்கடுத்தாற்போல ஆமத்திற்கு எதிரிடையான (தேஹத்திற்கு அனுகூலமான) பக்வலக்ஷணமும் மொழியப்படுகிறது.

3. முற்கூறிய தோஷங்கள் என்றால் வாதாதிஸாரம் முதலியதற்குக் கூறிய தோஷங்கள் என்று விஜய

விடப்பட்டால் உடனே அமிழ்ந்து விடும்;[1] அதிக துர்கந்தமாகவும், அதிக பிசுபிசுப்புள்ளதாகவும் இருக்கும்; இவை மலம் ஆமதோஷமுடையதாயிருப்பதற்கான குறிகளாம். 12.

மலத்தின் பக்வ லக்ஷணம்:—எந்த மலத்திற்கு முற்கூறிய இக்குறிகளே நேர் எதிரிடையான நிலைமையிலிருக்கின்றனவோ,[2] மலம் அதிக இலகுவாகவும் காணப்படுகிறதோ அந்த மலம் பக்குவ நிலைமையடைந்திருப்பதாகக் கூறலாம். 13.

அதிஸாரத்தில் அஸாத்ய லக்ஷணம்:—மலமானது அளிந்த நாவற்பழம் போன்றிருத்தல், யக்ருத்தென்கிற கல்லீரலின் கண்டம் போன்றதாயிருத்தல், அதிக தெளிவாகத் தோற்றுதல், நெய்-தைலம்-வஸையென்னும் நிணம் மஜ்ஜை-வேஸவாரம்-[3] பால்-தயிர் - மாம்ஸம் கழுவிய நீர் இவற்றைப்போல் காணப்படுதல், கறுப்பாகவோ கருஞ்சிவப்பாகவோ ரூக்ஷமான இளங்கறுப்பாகவோ[4] ஸ்நிக்த்தமாகப் பல நிறங்கொண்டதாகவோ சந்த்ரகமென்னும் பல நிறங்கொண்ட இரேகைகளோடு கூடியதாகவோ தோன்றல், பாரமாயிருத்தல், சவர்நாற்றங் கொள்ளுதல், மூளை போலிருத்தல், ஸுகந்தம் வீசுதல், அழுகிக் கிடத்தல், அளவில் வெகு அதிகமாய் வெளிவருதல்; இவை வியாதி அஸாத்தியமென்பதை விளக்கக் கூடிய மலஸம்பந்தமான குறிகளாம். நாவறட்சி, அழற்சி, கண் இருளடைதல், ச்வாஸமதிகரித்தல், விக்கல், பார்ச்வசூலை, எலும்புகளில் உளைத்தலுண்டாதல், மூர்ச்சை, அமைதியற்று வருந்தல், இந்த்ரியங்கள் உணர்ச்சியற்றுப்போதல், குதத்தினுள்ளிருக்கும் வலிகளென்கிற மடிப்பான பாகங்கள் அழன்றுபோதல், தன்னையறியாமலே வாயால் பிதற்றுதல் இக்குறிகளுடன் கூடிய அதிஸார ரோகியையும் வைத்தியன் கைவிடவேண்டியது தான். மேலும் ஆஸநத்வாரம் மூடாமல் மலர்ந்த வண்ணமாகப் போதல், உடல் மிகவும் இளைத்தல், வயிறு மிகவும் பொருமலடைதல், அநேக உபத்திரவங்களுண்டாதல்,[5] குதம் வெந்துபோகக்கூடிய நிலைமையுண்டாதல், தேஹச்சூடு முற்றிலும் போய் சீதளம் மேலிடுதல் ஆகிய இந்த இலக்ஷணங்களுடன்கூடிய அதிஸாரரோகியையும் கைவிடவேண்டியதே. அன்றியும் பெருமூச்சு, வயிற்றுளைத்தல், நாவறட்சி இவற்றால் வருந்துபவனையும், மிகவும் இளைத்திருப்பவனையும், ஜ்வரத்தினால் பீடிக்கப்படுபவனையும், அதிக வயது சென்றவனையும்[6] அதிஸாரநோய் அழித்துவிடும். 14-19.

---

ரக்ஷிதனது வியாக்யானம். ஆனால் ஆமதோஷமானது ஆமாதிஸாரத்திலேயே விசேஷமாக ஸம்பந்தப்பட்டிருக்குமாகையால், "முற்கூறிய தோஷங்கள்" என்பதால் ஆமாதிஸாரத்திற்குக் கூறிய தோஷங்கள் என்று பொருள் கூறுவதுதான் நன்றாகப் பொருந்துமென்று வேறு சிலரது கொள்கை.

1. ஆமதோஷ ஸம்பந்தமுடைய வஸ்து இயற்கையில் அதிக குருகுணமுடையதாகையால், ஆமதோஷமுள்ள மலமும் நீரில் அமிழ்ந்துவிடுவதாகக் கூறப்படுகிறது.

2. ஆமதோஷாதிகளுடைய கலப்பற்றிருத்தல், ஆகவே இலகுவாயிருந்து நீரில் மிதத்தல், பிசுபிசுப்பில்லாமலிருத்தல் இவை எதிரிடையான சுபாவங்கள்.

3. வேஸவாரம் — எலும்புகளில்லாமலெடுக்கப்பட்ட இறைச்சியில் சுக்கு, கொத்தமல்லிவிதை, ஓமம், காயம், நெல் இவற்றைக் கூட்டி இடித்து எடுத்துக் கொள்ள அது வேஸவாரம் எனப்படும்.

4. பித்தாதிஸாரத்தில் மலம் ஸாதாரணமாகவே கறுப்பு அல்லது பசுமை நிறங்கொண்டதாயிருப்பது இயல்பாகையால், பித்தாதிஸாரத்தைத் தவிர மற்ற அதிஸாரங்களிலே இந்த நிறங்கள் அஸாத்தியக் குறிகளாகும் என்றறிக.

5. "வீக்கம், உளைத்தல், ஜ்வரம், அதிகநாவறட்சி, ச்வாஸம், காஸம், அரோசகம், வாந்தி, மூர்ச்சை, விக்கல் இவை அதிஸாரத்தின் உபத்திரவங்கள்."

6. பாலர்களுக்கு உண்டாகும் கடுமையான அதிஸாரமும் அஸாத்யமாகும் என்று ஸுச்ருதர்,

இரக்தாதி ஸாரம்:—பித்தாதிஸாரம் இருக்கையிலே, பித்தத்தை விருத்தி செய்யும் பதார்த்தங்களை அடிக்கடியும் அதிகமாகவும் புஜித்தால், அப்பொழுது கடுமையான இரக்தாதிஸாரம் உண்டாகிறது.[1] 20.

பிரவாஹிகை.—அஹிதமான உணவுகளைப் புஜிப்பவனுக்குப் பிரகோபமடைந்த வாயுவானது குடலில் மிகுதியாகச் சேர்ந்துள்ள சிலேஷ்மம் போன்ற ஒருவித தோஷத்தை[2] ஒவ்வொரு முறையும் சொற்பம் சொற்பமாக அடிக்கடியும் கீழ்நோக்கித் தள்ளும்; அத்தோஷம் சிறிது மலம் கலந்ததாகவுமிருக்கும்; அப்பொழுது ரோகி பிரயாஸப்பட்டு முக்குவான். சாஸ்திரஞ்ஞர் அந்த வியாதியை பிரவாஹிகை யென்பார்கள்.[3] (1) வாதம் மிக்க அதிகரித்த பிரவாஹிகையில் வயிற்று நோயதிகரித்துக் காணும்.[4] (2) பித்த ஸம்பந்தமான பிரவாஹிகையில் அழற்சி அதிகமாயுண்டாகும். (3) கபாதிகமான பிரவாஹிகையில், கபம் கலந்த தோஷம் வெளியாகும். (4) இரத்த தோஷத்தினாலுண்டாகும்[5] பிரவாஹிகையில் வெளிவரும் தோஷத்தில் இரத்தமும் கலந்திருக்கும். இவையெல்லாம் பொதுவாக ஸ்நிக்தத் தன்மையோ ரூக்ஷத் தன்மையோ மிக்க அதிகரிப்பதால் உண்டாகின்றன.[6] அவற்றிற்கெல்லாம் தனித்தனி இலக்ஷணங்களென்ன, ஆம நிலைமை பக்குவ நிலைமை இவையென்ன, சிகித்ஸா முறையென்ன இவைகள் அதிஸாரத்திற்குக் கூறப்பட்ட இலக்ஷணாதிகளைப் போன்றவையேயாம். 21, 22.

அதிஸார நிவ்ருத்தி லக்ஷணம்:—எவனுக்கு மூத்திரோத் ஸர்க்கம் செய்யும்போது மலப் பிரவ்ருத்தியேற்படாமல் நீர் மாத்திரம் இற

---

1. பித்தாதிஸாரத்தில் பித்தத்தை விருத்தி செய்வதற்கான ஆஸ்பதம் ஏற்பட்டால் இரக்தாதிஸாரம் உண்டாகுமென்பதனால், பித்தாதிஸாரத்திற்கு இரத்தாதிஸாரம் உபத்திரவமாயேற்படுகிறது எனக் கருத்து. ஆகவே கீழே அதிஸாரம் ஆறு என்று கூறப்பட்டது. இரக்தாதிஸாரம்ஸ்வதந்திரவியாதியாயிருந்தால்,இதையும் கூட்டி, அதிஸாரம் எழு விதம் என்று சொல்லப்பட்டிருக்கும். பித்தாதிஸாரம் உண்டாவதற்கு வேண்டிய ஆஸ்பதங்கள் தோன்றும்போது பித்தத்தை விருத்தி செய்யும் உணவு முதலியதை உபயோகித்தாலும் இரக்தாதிஸாரம் உண்டாகும். அப்பொழுதும் இது பித்தாதிஸாரத்தைச் சேர்ந்ததேயன்றி தனியான எழாவது அதிஸாரமாகமாட்டாது.

2. சிலேஷ்மம்போன்ற தோஷம் என்பதால், உண்மையில் அத்தோஷம் சிலேஷ்மமல்ல எனக் கருத்து. பிரவாஹிகையில் வெளியாகும் தோஷம் கபமாகவே இருக்குமானால், பிறகு கபப்பிரவாஹிகையில் அத்தோஷத்துடன் கபம் கலந்திருக்குமென்று கூறுவதற்குப் பொருளில்லாமற் போய்விடும்.

3. பிரவாஹிகை—இது ஸாதாரணமாய் சீதபேதி யென்று வழங்கப்படுகிறது. அதிக கடுப்புடன் குடலின் உட்புறமும் குதமும் கீழ் நோக்கி அடிக்கடியும் நெளிந்து தோஷத்தைச் சிறுகச் சிறுக வெளித்தள்ளுவதால் பிரவாஹிகை (அல்லது ப்ரவாஹிகா) என்கிற பெயர் வந்தது. இதை போஜன் முதலியவர் விஸ்ரய்ஸீ யென்றும், பராசரர் அந்தர் க்ரந்தி யென்றும், ஹாரீதர் நிச் சாரகம் என்றும் வழங்குவதாகத் தெரிகிறது.

4. பிரவாஹிகை யெல்லாம் பொதுவாக வாதப் பிரகோபத்தினாலேயே உண்டாவதாக முதலிற் கூறப்பட்டது. அங்ஙனமிருக்க இங்கே மறுபடி வாதப் பிரவாஹிகை யென்று வேறொன்று கூறுவதன் கருத்தென்ன? என்றால்—வாதப்பிரவாஹிகையில் மற்ற பித்தாதி தோஷஸம்பந்தமான பிரவாஹிகையைவிட வாதம் மிக்க பலமாக விருத்தியாயிருக்குமென்று அதன் பொருள்.

5. வாத பித்த கபங்களைப்போல் இரத்தத்தையும் ஒரு தோஷமாக (நான்காவது தோஷமாக)க் கூறும் ஸம்ப்ரதாய மொன்றுண்டு. ஆகவே இரத்த தோஷ ஸம்பந்தமான பிரவாஹிகை யொன்று பிரத்தியேகமாக இங்கே கூறப்பட்டது.

6. ஸ்நேஹத்தன்மை அதிகரிப்பதால் கபப்பிரவாஹிகையும், ரூக்ஷத்தன்மை அதிகரிப்பதால் வாதப் பிரவாஹிகையும் உண்டாகும். ஸம்ஸ்க்ருத மூலத்தில் "தா: ஸ்நேஹரூக்ஷப்ரபவா மதாஸ்து" 'என்றுள்ள வாக்கியத்தில் அடங்கியுள்ளது' என்னும் சொல்லால் தீக்ஷ்ணத்தன்மையினால் பித்தப் பிரவாஹிகையும், உஷ்ணத்தன்மையினால் இரத்தப் பிரவாஹிகையும் உண்டாகுமென்று அறியவேண்டுமென விஜயரக்ஷிதனது வியாக்யானம்.

ங்குகிறதோ, அபானவாயுவும் நன்றாக வெளிப்படுகிறதோ, ஜாடராக்னியும் விருத்தியாய் குடலும் இலகுவாகத் தோற்றுகிறதோ அவனுக்கு அதிஸாரம் நீங்கியதாய் அறிக[1]. 23.

ஜ்வராதிஸாரம்[2] :—(தனித்தனியே ஜ்வரத்திற்குக் கூறப்பட்ட காரண இலக்ஷணாதிகளும், அதிஸாரத்திற்குக் கூறிய காரண இலக்ஷணாதிகளும் ஒருமிக்கச் சேர்ந்து ஜ்வராதி ஸாரத்திற்குத் தோன்றும். ஆகவே இவ்விஷயம் பிரத்தியேகமாக இங்கு கூறப்படவில்லை.)

## 4. கிரஹணீரோக நிதானம். *

கிரஹணீரோகத்தின் ஸாமாந்ய ஸம்ப்ராப்தி:- அதிஸாரம் நிவ்ருத்தியாயிருக்கையிலும்,[3] ஜாடராக்நி மந்தமாயிருந்து,[4] தகாத உணவைப் புஜித்தால் அவனுடைய ஜாடராக்நியானது மீண்டும் மிகக் கோளாறடைந்து கிரஹணீயென்கிற குடலின் பாகத்தையும் கெடுக்கும்.[5] 1.

கிரஹணியின் ஸங்க்யாஸம்ப்ராப்தியும் ஸாமாந்ய லக்ஷணமும்:—தனித்தனியே ஒவ்வொரு தோஷமும் மிகவும் விருத்தியாய் மூன்று வித கிரஹணீவியாதிகளையும், மூன்று தோஷங்களும் ஒருமிக்க விருத்தியாய் ஸந்நிபாதக் கிரஹணீ வியாதியையும் உண்டுபண்ணும். இத்தோஷங்களால் கோளாறடைந்த கிரஹணீயென்னும் அவயவம் புஜித்த உணவை வெகுவாக ஜீர்ணமாகாத ஆமமென்னும் நிலைமையிலேயே வெளிவிடும்; சில ஸமயம் பக்வமான நிலைமையிலும் வெளிவிடும். அப்பொழுது வயிற்றில் நோவுண்டாகும்; அந்த மலம் துர்க்கந்தமாகவும், அடிக்கடி திரவமாகவும், அடிக்கடி கெட்டியாகவும் இருக்கும். ஆயுர்வேத மறிந்தவர் அதை கிரஹணீரோகம் என்பார்கள். 2, 3.

---

1. குடலில் வாயு அதிகரித்து, வயிற்றுப் பொருமலுண்டாய் அதிஸாரத்தில் மலம் கட்டிப் போவதுண்டு. அவ்விதமான தொந்தரவுகளுடன் கூட மலம் கட்டிப்போவது அதிஸார நிவ்ருத்தியாக மாட்டாது. அதிஸாரத்தில், ஸாதாரணமாக மூத்திரமாகப் பரிணமிக்க வேண்டிய திரவப்பொருள் கூட அவ்விதமாகாமல் மலத்திற் கலந்து குதமார்க்கத்தினால் வெளியாகிறது; ஆகவே அதிஸாரத்தில் மூத்திரம் வெகு சொற்பமாயிறங்கும் அல்லது சில ஸமயம் இறங்காமற் போவதுமுண்டு. மேலும் மூத்திரோத்ஸர்க்கம் மாத்திரம் செய்ய விரும்பினாலும், அச்சமயம் மலமும் திரவரூபமாகக் கூடவே வெளிவரும். அதிஸாரம் நிவாரணமானால், அப்பொழுது மேலே கூறியவாறு குறிகள் தோன்றும்.

2 அதிஸாரத்தில் ஜ்வரமும் சேர்ந்துண்டாவது ஜ்வராதிஸாரம்.

* கிரஹணீ—ஆமாசயம் என்கிற இரைப்பைக்கும் பக்வாசயத்திற்கும் இடையில் அமைந்துள்ள பாகத்திற்கு "கிரஹணீ" யென்று பெயர். உணவு ஆமாசயத்தில் ஒருவாறு பக்குவமாய் ஒருவித குழம்பான பக்குவ நிலைமையை அடையும் வரையில் அதைச் சிறு குடலுக்கு விடாமல் ஆமாசயத்தின் கீழ் முனையிலுள்ள த்வாரம் நன்கு மூடிக்கொண்டிருக்கும். இவ்விதம் மூடிக்கொள்ளும் பாகம் (ஆமாசயத்திலேயே அபக்வான்னத்தைப் பிடித்து நிறுத்துவதால்) கிரஹணீ யெனப்படுகிறது. இவ்விதம் சரகராலும், ஸுச்ருதராலும் கிரஹணீ யென்கிற அவயவத்தின் ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த கிரஹணீ யென்கிற பாகம் கோளாறடைந்தால் ஆமாசயத்தில் உணவு பக்குவமானதும் பக்குவமாகாததுமாய் பலவாறாக க்குடலுக்குள் செல்ல, அங்ஙனமே அது குதமார்க்கத்தினால் வெளியாகும். ஆகவே ஒருவகையான இவ்வஜீர்ண வியாதியும் கிரஹணீ யென்றே வழங்கப்படுகிறது.

3. "அதிஸாரம் நிவ்ருத்தியா யிருக்கையிலும்" என்றதனால், அதிஸாரமின்றியே பிறகு கூறப்படும் காரணங்களால் சுயமாகவும் கிரஹணீரோகம் உண்டாகலாம் எனக் கருத்து.

4. மந்தாக்நியா யிருந்து என்றதால், ஜாடராக்நி பலமாயிருந்தால் தகாத உணவும் ஜீர்ணமாய் விடக் கூடும் என்றறிக.

5. "அதிஸாரம் நிவாரணமான பிறகும் ஜாடராக்நி நன்கு பலப்படும் வரையில் அஜீர்ணமுண்டாக்கும் பதார்த்தங்களைப் புஜிக்கக் கூடாது" என்று ஸுச்ருதர் கூறுகிறார்.

கிரஹணியின் பூர்வரூபம்:-நாவறட்சி, சோம்பல், தேஹவன்மை க்ஷீணித்தல், உணவு குடலில் காந்திப்போதல், அல்லது வெகு நேரம் கழித்து ஜீர்ணித்தல், உடல் பாரமாதல் ஆக இவை கிரஹணீரோகத்தின் முற்குறிகளாம். 4

வாதக் கிரஹணீ.-(நிதாந-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்):—கடு, கைப்பு, துவர்ப்பு, அதிக ரூக்ஷம், மிகக் கெட்டுப்போனது[1] ஆக இத்தகைய உணவுகளாலும், வெகு சொற்ப அளவான போஜனத்தினுலும், [2] உபவாஸத்தினுலும், அதிக தூரம் வழி நடப்பதாலும், வேகங்களை அடக்குவதாலும், அமிதமான புணர்ச்சியாலும் வாயு பிரகோபமடைந்து, ஜாடராக்னியைக் கோளாறடையச் செய்து விகாரங்களையுண்டுபண்ணுகின்றன. அவன் உண்ணும் உணவு ஜீர்ணமாவது வெகு கஷ்டம்; அது வயிற்றில் காந்தி புளித்துப்போகிறது; அவனது தேஹம் உரத்துப்போகும்; தொண்டையும் வாயும் வறட்சியடையும்; பசியும் தாஹமும் அதிகரிக்கும்; கண் பார்வை மந்தப்படும்; செவிகளில் ஒருவித ஓசை கிளம்பும்; விலாப் பக்கங்கள், துடைகள், துடையிடுக்குகள், கழுத்து இவற்றில் அடிக்கொரு முறை நோவுண்டாகும்; விஷூசியும்[3] காணும்; இருதயத்தில் வேதனையுண்டாகும்; தேஹம் இளைத்து பலஹீநப்படும்; அரோசகமுண்டாகும்; குதம் கடுக்கும்; எல்லாவிதமான இரஸங்களிலும் விருப்பம் ஏற்படும்; மனம் குன்றும்; உணவு ஜீர்ணமாகும்போதும் ஜீர்ணமான பிறகும் வயிற்றில் பொருமலேற்பட்டு, போஜனம் செய்தவுடனே தணிவடையும்; அவனுக்குண்டாயுள்ள வியாதி வாதகுல்மமோ, இருதய ரோகமோ, ப்லீஹவ்ருத்தியோ என்று ஸந்தேஹிக்கக் கூடியதாயிருக்கும்; ஒவ்வொரு ஸமயம் திரவமாகவும், சில ஸமயம் சுஷ்கமாகவும், சில வேளை தெளிவாகவும், சில ஸமயம் ஆமதோஷத்துடன் கூடியதாகவும் வெகு நேரம் அதிக சிரமப்பட்டு அதிக அபாநவாயுவின் சப்தத்தோடு மலத்தை வெளிவிடுவான்; அதிலும் இருமிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் மலவிஸர்க்கம் செய்யப்படுவதோடு, அந்த மலம் நுரைத்து மிருக்கும். 5—10.

பித்தக் கிரஹணீ: (நிதாந-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்.):— கடுரஸம், அஜீர்ணதோஷம், விதாஹியான பதார்த்தம்,[4] அம்லரஸம், க்ஷாரங்கள்[5] இவை முதலியவைகளால்[6] பித்தம் விருத்தியடைய, அது உஷ்ணஜலம் நெருப்பை அவிப்பதுபோல, ஜாடராக்னியைக் கலைத்து அழியச் செய்கிறது; அப்பிணியாளியின் தேஹம் மஞ்சள்நிறம் பெறும்; கறுத்தும் மஞ்சள் நிறமும் கலந்து திரவரூபமாக மலம் வெளியாகும்; பூதிகந்தமென்கிற ஒருவித துர்நாற்றம் அவனிடம் தோன்றும்; புளித்த தேக்கெறிவு காணும்; மார்பிலும் தொண்டையிலும் அழற்சியேற்படும; அரோசகமுண்டாகும்; அமித நாவறட்சியினுலும்அவன்வருந்துவான். 11,12.

1. "மிகவும் கெட்டுப்போனது" என்பதற்குப் பதிலாக "மிகவும் குளிர்ந்துபோனது" என்று வேறொரு பாடமுண்டு.

2. "வெகு சொற்ப அளவான போஜனத்தினுலும்" என்பதற்குப் பதிலாக "காலம் தவறியுண்பதாலும்" என்று வேறொரு பாடமுண்டு.

3. விஷூசி— இனி அக்நிமாந்த்யாதிப் பிரகரணத்தில் விவரிக்கப்போகிற வியாதி.

4. விதாஹி — ஆமாசயத்தில் மிகவும் புளித்துப் போய் (அல்லது காந்திப்போய்), மார்பில் (அன்னவாஹியென்கிற குழல் மூலமாய்) அழற்சியை யுண்டுபண்ணும் வஸ்து.

5. 'க்ஷாரங்கள்' என்பதால் அபாமார்க்கக்ஷாரம் (நாயுருவியுப்பு) முதலியவை குறிக்கப்படுகின்றன; யவக்ஷாரம் முதலியவை கலந்த வேறு திரவ்யங்களும், க்ஷாரஜலம் முதலியவைகளும் கிரஹிக்கப்படுகின்றன. காமரூபம் முதலிய சில தேசங்களில் க்ஷார நீரில் பக்குவம் செய்த வியஞ்ஜநாதிகளை யுபயோகிப்பது வழக்கம் என்று கூறப்படுகிறது. 'முதலியவை' என்பதால் லவணம், தீக்ஷ்ணம், உஷ்ணம் இக்குணங்களுள்ள பதார்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.

6. "இவை முதலிய குணம்" என்பதால் பிசுபிசுப்பு, மதுரம் முதலியவை கிரஹிக்கப்படுகின்றன.

கபக் கிரஹணீ: (நிதான-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்.):—குருவாகவும், அதிக ஸ்நிக்த்தமாகவும், அதிக சீதமாகவும் உள்ள இவை முதலிய குணங்களையுடைய உணவுகளாலும், மிதமிஞ்சிய போஜநத்தினாலும், போஜனம் செய்தவுடனே நித்திரை யுறுவதாலும்[1] பிரகோபமடைந்த கபமானது ஜாடராக்னியை அழித்துவிடுகிறது; அம்மனிதனுக்கு உணவு ஜீர்ணமாவது வெகு கஷ்டம்; இருதயம் மிகப்பட படத்துத் துடித்தல், வாந்தி, அரோசகம், பசையினால் வாய்பூசப்பட்டது போன்றிருத்தல், வாய் இனிப்பாக ஆதல், இருமல், தும்மல், பீநஸம் இக்கோளாறுகள் காணும்; இருதயம் இறுகித்திரண்டிருப்பதுபோன்ற உணர்ச்சி யுண்டாகும்; வயிறு கனத்துப் பொருமலடையும்; ஒருவித அருவருப்புடன் தித்திப்பான தேக்கெறிவு உண்டாகும்; ஜாடராக்னி அழியும்; ஸ்த்ரீகளிடம் சேருவதற்குத் தென்புண்டாகாது; மலமானது உடைந்து ஆமதோஷத்தோடும் கபத்தோடும் கலந்து வெகு கனமாக வெளியாகும்; உடம்பு இளைக்காமலிருக்கையிலும்[2] தேஹம் பலஹீனமடையும்; சோம்பலும் உண்டாகும்; இவை கபக்கிரஹணியின் இலக்ஷணங்களாம். 13—16.

ஸந்நிபாதக்கிரஹணீ:—வாதக் கிரஹணீமுதலியதற்குத் தனித்தனியே கூறப்பட்டுள்ள காரணங்களும் இலக்ஷணங்களும் ஒருமிக்கச் சேர்ந்து காணப்படுமானல் இது ஸந்நிபாதக் கிரஹணியாகும்.[3] 17.

ஸங்கிரஹக் கிரஹணீ:— (குடலிரைத்தல், சோம்பல், வலிவின்மை, தேஹம் இளைத்தல் இக்கோளாறுகளும், திரவமாகவும் திரண்டதாகவும் குளிர்ந்ததாகவும் ஸ்நிக்த்தமாகவும் மலம் இடுப்புவலியோடு வெளியாவதும் உண்டு; சில ஸமயம் மலம் ஆமதோஷத்துடன் கூடியதாகவும், அளவில் அதிகமாகவும், பிசுபிசுப்புள்ளதாகவும், சொற்ப வேதனையோடு அதிக சப்தமுண்டுபண்ணிக்கொண்டும்வெளியாகும்; ஆனல் இவ்விதமான கோளாறு பக்ஷத்திற்கு ஒரு முறையாவது, மாஸத்திற்கு ஒரு முறையாவது, பத்து நாட்களுக்கு ஒரு முறையாவது அல்லது தினந்தோறுமாவது உண்டாகும்; இது பகலில் விருத்தியடைந்து இரவில் தணிவடைவது முண்டு. இது இந்த நிலைமையில்தான் இருக்குமென்று நிச்சயிக்க முடியாததாகவும், எளிதில் சிகித்ஸைக்கு வசப்படாததாகவும், வெகு நாட்கள் தொடர்ந்து தொந்தரவளிக்குந் தன்மையதாகவும் இருக்கும்; ஆமதோஷத்துடன்கூடிய வாதக் கோளாறால் காண்கிறது; இது "ஸங்கிரஹக் கிரஹணீ" யென்று வழங்கப்படும். தூங்கும்போது இரண்டு பார்ச்வங்களிலும் குத்துவலி யுண்டாகும்; மேலும் குடத்திலிருந்து நீரைக் கொட்டுவதுபோன்ற சப்தமுண்டாகும்; இது அஸாத்தியமான வியாதி; இந்தக்கிரஹணீரோகத்தை கடீயந்த்ரம் என்றும் கூறுவார்கள்.)

கிரஹணியில் ஸாம நிராமாதி லக்ஷணங்கள்.-(1) கிரஹணீ ரோகத்தில் மலாதிகளுக்குள்ள ஆம நிலைமையென்ன, பக்குவ நிலைமையென்ன இவற்றை அதிஸாரத்திற் கூறிய விதமாகவே அறிக. (2) மேலும் அதிஸாரம் எந்த லக்ஷணங்கள் கண்டால் அஸாத்தியமாகிறதோ அதே லக்ஷணங்கள் கிரஹணியிலும் அஸாத்தியக் குறிகளாகக் கருதப்படுகின்றன. (3) வயது சென்றவருக்குக் காணும் கிரஹணீரோகமானது, அவனது தேஹத்தைச் சீரழித்து நிவாரணம் செய்ய முடியாததாய்விடுவது நிச்சயம். 18, 19.

கிரஹணியில் ஸாத்யாஸாத்யங்களைப்பற்றி தந்வந்தரியின் கொள்கை:—(கிரஹணீரோகம் பாலர்களுக்குண்டானல் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியது; யுவாக்களுக்குண்டானல் கஷ்டஸாத்யமாகும்; கிழவருக்கானல் அஸாத்யமென்றறிக. இது தந்வந்தரியின் கொள்கை.)

1. பகல் போஜனத்திற்குப் பிறகு உடனே நித்திரையுறுவது தகாதென்பது இதன் கருத்து. இரவில் நன்கு நித்திரை யுறுவது ஆரோக்கிய ஹேதுவாகுமாகையால், பகல் போஜனத்திற்குப் பிறகு என்கிற பொருள்தான் பொருந்தும்.

2. தேஹம் இளைக்காமை கபத்திற்கு இயல்பான செயலாம்.

3. ஸமாக்னி, மந்தாக்னி, தீக்ஷ்ணாக்னி, விஷமாக்னி யென்று ஜாடராக்னி நான்கு விதம்; இவற்றுள் ஸமாக்னியைத் தவிர மற்ற மூன்றும் கிரஹணீதோஷம் என்றே கூறப்படும் என்று சரகர்.

## 5. அர்சோ நிதானம்.*

அர்சஸ் ஆறுவிதம்:—வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்றுவித அர்சஸ்ஸும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்த ஸம்பந்தமாக ஒன்றும், ஸஹஜமானது[1] ஒன்றும் ஆக ஆறுவித அர்சஸ்ஸுகள் குதத்தினுள் அமைந்துள்ள மூன்று வலிகள்[2] என்கிற மடிப்புகளை ஆச்ரயித்து உண்டாகின்றன. 1.

அர்சஸ் ஸம்ப்ராப்தி.—வாத-பித்த-கபங்கள் சர்மமென்ன, மாம்ஸமென்ன,[3] மேதஸ்ஸென்ன இவற்றைக் கோளாறடையச் செய்து அபானத்வாரம் முதலியதில்[4] பலவித உருவமுள்ள மாம்ஸ முளைகளை உண்டுபண்ணுகின்றன; அம்முளைகளை "அர்சஸ்" என்பார்கள். 2.

வாதார்சஸ்ஸின் நிதானம்:—துவர்ப்பும் காரமும் கைப்புமான இரஸங்கள், ரூக்ஷமும் சீதமும் இலகுவுமான குணங்கள் ஆக இத்தன்மையுள்ள பதார்த்தங்களும், மிகச் சொற்ப அளவான உணவும், தீக்ஷ்ணகுணமுள்ள மதுவும், அதிக புணர்ச்சியும், இலங்கநமும், வெகு குளிர்ச்சியான தேச காலங்களும்[5] கடுமையான வியாயாமமும்[6] மனத்துயரமும், வெயிலும் காற்றும் அதிகமாகத் தாக்குவதும் வாததோஷஸம்பந்தமான அர்சஸ் உண்டாவதற்கேற்ற காரணங்களாம். 3, 4.

பித்தார்சஸ்ஸின் நிதானம்:—கடுரஸம், அம்லரஸம், இலவணரஸம்,உஷ்ணவீர்யம் ஆக இத்தன்மையுள்ள பதார்த்தங்களும், அதிக வியாயாமமும், அக்னியின் சூடு வெயில் இவை தாக்குவதும்,உஷ்ணமான தேசகாலங்களும்[7],கோபமும், மதுபானமும், பொறாமையும், விதாஹியும் தீக்ஷ்ணமுமான ஸகலமாயுள்ள பானவகைகளென்ன அன்னமென்ன ஔஷதமென்ன இவையும் பித்தப்பிரதானமான அர்சஸ்[5] உண்டாவதற்கான காரணங்களாகும். 5,6.

கபார்சஸ்ஸின் நிதானம்:—இனிப்பு உப்பு புளிப்பு இச்சுவைகளையும், ஸ்நிக்த்தம் சீதம் குரு இக்குணங்களையும் உடைய பதார்த்தங்களும், சிறிதும் வியாயமமின்மையும்,பகலில் நித்திரையுறுவதும், படுப்பது உட்கார்ந்திருப்பது முதலிய இச்சுகங்களிலேயே கருத்தாயிருத்தலும், கீழ்காற்றுக்கு எதிரிலிருப்பதும், சீதளமான தேச காலங்களும், கவலையற்றிருத்தலும் சிலேஷ்ம ஸம்பந்தமான அர்சஸ்ஸுக்குக் காரணங்களாகின்றன.7,8.

---

* அர்சஸ் என்பது மூலரோகம். அரிவத் ப்ராணாஞ்ச்ருணாதி-(சத்ருவைப்போல் உயிரை ஹிம்ஸிக்கிறது) என்கிற வியுத்பத்தியைக்கொண்டு "அர்சஸ்" என்கிற பெயர் வந்தது.

1. ஸஹஜார்சஸ்—பிறக்கும்போதே ஏற்பட்டுள்ள அர்சஸ். கற்போற்பத்திஸமயத்தில் சிசுவின் குதம் என்னும் அவயவத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரணமான மாத்ரு-பித்ரு பீஜம் மூலதோஷப் பற்றுள்ளதாயிருந்தால், ஸஹஜார்சஸ் உண்டாகும்.

2. குதம் என்னும் அவயவம் நாலரை அங்குலம் நீண்டது. அதில் மூன்று விதமான வலிகள் என்னும் மடிப்புகள் அமைந்துள்ளன; அவை சங்குச் சுழிபோன்றிருக்கும்; அவற்றுள் ஒன்றுக்கு **பிரவாஹணீ** யென்றும், இரண்டாவதுக்கு **விஸர்ஜநீ** யென்றும், மூன்றாவதுக்கு **ஸம்வரணீ** யென்றும் பெயர். குதத்தின் உதடு குதௌஷ்டம் எனப்படும்; அக்குதௌஷ்டம் அரையங்குலம் அளவு. அதன்மேல் முதல் வலி ஓர் அங்குலம் நீளமானது; இரண்டாவது மூன்றாவது வலிகள் ஒவ்வொன்றும் ஒன்றரை அங்குலம் நீளம்.

3. சர்மம் மாம்ஸம் இவற்றைப்போல் இவற்றிலடங்கிய இரத்தமும் இவ்வியாதியில் கோளாறடையுமென்றறிக; ஆகையினாலேயே அர்சஸ் சிகித்ஸையில் இரக்த மோக்ஷணம் செய்யவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

4. "அபானத்வாரம் முதலியது" என்பதால் நாசி முதலிய இதர அவயவங்களிலும் இவ்வித முளைகள் உண்டாகுமென்பது குறிக்கப்படுகிறது. ஆனால் காய சிகித்ஸகர்கள் குதத்திலுண்டாவதையே அர்சஸ் என்றும், நாசி முதலியவற்றிலுண்டாகின்றவைகளை அதிமாம்ஸம் என்றும் வழங்குகின்றார்கள்.

5 குளிர்ச்சியான தேச காலங்கள்—ஆநூபதேசமும், ஹேமந்தாதி காலங்களும்.

6 வியாயாமம்—கஸரத்து என்கிற தேஹவுழைப்பு.

7 உஷ்ணமான தேச காலங்கள்—ஜாங்கல தேசமும் க்ரீஷ்மருது முதலிய காலங்களும்.

8 அர்சோரோகம்— பொதுவாக ஸந்நிபாத(த்ரி) தோஷக்கோளாறால் உண்டாவதாக சரகர் கூறுவதால்,ஸந்நிபாதத்திலும் பித்த தோஷம் மற்றவைகளை

த்வந்த்வஜ ஸந்நிபாதஜார்சஸ்ஸுகள்:—வாதாதிஅர்சஸ்ஸுகளுக்குத் தனித்தனியே கூறியுள்ள காரணங்களும் இலக்ஷணங்களும் இரண்டிரண்டாகச் சேர்ந்திருந்தால் த்வந்த்வார்சஸ்ஸுகளென்றும், மூன்று தோஷங்களுடைய காரண லக்ஷணாதிகள் சேர்ந்துண்டானால் ஸந்நிபாதார்சஸ் என்றும் அறிக. ஸந்நிபாதார்சஸ்ஸின் லக்ஷணங்கள் ஸஹஜார்சஸ்ஸுக்குச் சமானமாயிருக்கும்.[1] 9.

வாதார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:--வாததோஷம் அதிகரித்து மூல முளைகள் உண்டாயிருந்தால் அவை சுஷ்கமாகவும், சிமசிமாவென்கிற ஒருவித தினவுடன் கூடியவையாகவும், வாடியவையாகவும், கறுஞ்சிவப்பாகவும், விரைத்துக் கசிவற்றவையாகவும், கடினமானவையாகவும், ஒன்றோடொன்று உருவத்தில் வேறுபட்டவையாகவும், வக்ரங்களாகவும், தீக்ஷ்ணமாகவும், பிளவுண்ட முகமுள்ள வையாகவும், கோவை-பேரீச்சு- குமுழன்-பருத்தி இவற்றின் கனிகளுக்கொப்பான உருவங்களுடையவையாகவும் இருக்கும்; மேலும் சில முளைகள் கடப்பம் பூபோன்றவையாகவும், சில முளைகள்வெண்கடுகுக்கொப்பானவையாகவும்காணப்படும்; சிரஸ்ஸு, விலாப்பக்கங்கள், இடுப்பு, துடைகள், துடையிடுக்குகள் இவை முதலியவற்றில் அதிக வேதனையை இவ்வர்சஸ் உண்டுபண்ணும்; தும்மல், தேக்கெறிவு, வயிற்றுப்பொருமல், மாரடைப்பு, அரோசகம் இவையும் காணும்; இருமல், ச்வாஸம், ஜாடராக்னி சில ஸமயம் அதிகரித்தல் சில ஸமயம் குறைவாதல், காதிரைத்தல், தலைச் சுற்றல் இவ்விகாரங்களும் தோன்றும்; வாதார்சஸ்ஸால் வருந்துபவன்கட்டிக்கட்டியாகவும், சொற்ப அளவாகவும், பிசுபிசுப்பான நீர் நுரை இவற்றுடன் கூடிய தாகவும், வயிற்றுக்கடுப்பையுண்டு பண்ணுவதுமான மலத்தை அதிக அபானவாயுவோடு வெளியிடுவான். இப்பிணியாளியின் சர்மமும், நகங்களும், மலமூத்திரங்களும், முகமும் கறுநிறங் கொள்ளும். இதனால் குல்மம், ப்லீஹவிருத்தி, மஹோதரம் அஷ்டீலா இந்த ரோகங்களும் உபத்திரவமாக[2] உண்டாகலாம். 10-15.

---

விட அதிகரித்திருக்கக் கூடிய நிலைமையைக் குறிப்பிடுவதற்காகப் பித்தப் பிரதானமான அர்சஸ்' என்று கூறப்பட்டதாய் அறிக. இதேவிதமாய் வாதார்சஸ் கபார்சஸ் இவற்றிலும் ஸந்நிபாதஸம்பந்தமுண்டென்றுணருக.

1 ஸந்நிபாதஸம்பந்தமான அர்சஸ்வின் இலக்ஷணாதிகள் ஸஹஜார்சஸ்வின் இலக்ஷணாதிகளைப் போன்றவையாயிருக்கும் எனக் கருத்து. ஸஹஜார்சஸ்வின் நிதானம் மாதவகரனால் இங்கே விவரிக்கப்படாததன் காரணம் தெரியவில்லை. ஸுசருதத்தில் **ஸஹஜார்சஸ்ஸின்** இலக்ஷணாதிகள் இங்ஙனம் மொழியப்பட்டுள்ளன.—"ஸஹஜார்சஸ்ஸுகள் (பிறவி முளைகள்) காணக்கூடாத விதமாயுண்டாயிருக்கும்; அவை க்ரூரமானவை; சிவந்தும் பழுத்த நிறமாகவுமிருக்கும்; அவற்றின் முளைகள் உட்புறமாகவும் தொந்தரவளிக்கக் கூடியவையாகவும் அமைந்திருக்கும்; ஸஹஜார்சஸ்வினால் பீடிக்கப்படுபவன் இளைத்திருப்பான்; சொற்பவுணவே புஜிப்பான்; உடம்பெங்கும் ஸிரைகள் (காரிரத்தகுழாய்கள்) தடித்துப் பரவியிருக்கும்; அவனுக்குக் குழந்தைகள் வெகு சொற்பமாகத்தான் பிறக்கும்; சுக்ரம் க்ஷீணித்திருக்கும்; குரல் க்ஷீணிக்கும்; அவன் அதிக கோபக்காரனாயிருப்பான்; அவனுக்கு ஜாடராக்னி மந்தப்பட்டிருக்கும்; நாசி சிரஸ் நேத்திரம் செவி இவற்றைப்பற்றிய ரோகங்கள் அடிக்கடியும் உண்டாகும்; குடலிரைத்தல், வயிற்றுப்பொருமல், மார்பினுள் ஏதோ பூசப்பட்டது போன்ற உணர்ச்சி, அரோசகம் இவற்றால் இவன் எப்பொழுதும் வருந்துவான்; இவை ஸஹஜார்சஸ்ஸுள்ளவனிடம் காணக்கூடிய குறிகளாகும். சரகத்தில் வேறு சில இலக்ஷணங்களும சேர்க்கப்பட்டு ஸஹஜார்ஸ்வின் தன்மைகள் வெகுவிஸ்தாரமாகவர்ணிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாஅர்ச ஸ்ஸுகளுமே மூன்று தோஷங்களாலும் (ஸந்நிபாதத்தினால்) உண்டாவதாகக் கூறப்படும் போது, தனியே "ஸந்நிபாதார்சஸ்" என்று ஒன்று மொழியப்படுவதெங்ஙனம்? என்றால் மற்ற அர்சஸ்ஸுகளில் வாதபித்தகபங்கள்மூன்றும் பிரகோபிக்கின்றனவாயினும் அவை ஏற்றத்தாழ்வான நிலைமையில் பிரகோபித்திருக்கும். ஸந்நிபாதார்சஸ்விலோவென்றால் தோஷங்கள்மூன்றும் ஒரே அளவாக அல்லது ஸமபலமாகப்பிரகோபித்து கடுமையான அர்சோரோகத்தை உண்டுபண்ணும்.

1 இங்கே குறிக்கப்படுகிற குல்மம் முதலிய வியாதிகளைப்பற்றிய விவரங்கள் பிறகு கிரமமாக அந்தந்த நிதானத்தில் வர்ணிக்கப்படும்.

பித்தார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:—பித்தம் அதிகரித்துண்டான மூலமுளைகள் சிவப்பு மஞ்சள் கறுப்பு இந்த நிறமுள்ள வையாகவும் முகத்தில் நீலமாகவும் காணப்படும்; அவற்றிலிருந்து தெளிவான இரத்தக்கசிவு உண்டாகும்; மேலும் அவை சவர்நாற்ற முள்ளவையாகவும், மெலிந்து மிருதுவானவையாகவும், நீண்டு தளர்ந்தவையாகவும், கிளியின் நாக்கு யக்ருத் என்னும் கல்லீரல் துண்டு-அட்டையின் முகம் இவற்றைப் போன்றவையாகவும், அழற்சி-அதிக வெப்பம்-ஜ்வரம்-வியர்வை-நாவறட்சி-மூர்ச்சை-அரோசகம்-மோஹம் இக்கோளாறுகளையுண்டுபண்ணுபவையாகவும், வெகு உஷ்ணமானவையாகவும இருக்கும். இவ்வர்சோரோகிக்கு திரவமாகவும் கறுப்பாவும் உஷ்ணமாகவும் மஞ்சள் நிறமாகவும் இரத்தம் போன்றதும் ஆமதோஷ முள்ளதுமான மலம் வெளியாகும். இந்த முளைகள் வாற்கோதுமை போல மத்தியில் பருத்திருக்கும். இப்பிணியாளியின் சர்மம் நகம் முதலியவை[1] இலைப்பசுமை அல்லது மஞ்சள்நிறங்கொள்ளும். 16-18.

கபார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:—கபம் அதிகரித்துண்டான மூலமுளைகளின் வேர்கள் அதிகஆழ்ந்தும் விசாலமாகப் பரவியும் உண்டாயிருக்கும்; அம்முளைகள் அடர்த்தியாகவும், அதிகவலியுண்டு பண்ணுதவையாகவும், வெண்மையாகவும் காணப்படும்; நன்கு நீண்டும், தடித்தும், ஸ்நிக்த்தமாகவும், விறைத்துக்கொண்டும், உருட்சியாகவும், குருவாகவும், அசைந்தாடாதவையாகவும், பிசுபிசுப்புள்ளவையாகவும், ஸ்திமிதமாகவும், வழவழப்பாகவும், அதிக தினவுள்ளவையாகவும் அடிக்கடி பரிசிப்பதற்கு இதமானவையாகவும், மூங்கிற்குருத்து-பலாவித்து-பசுவின் முலை இவற்றைப் போன்றவையாகவும், துடையிடுக்குகளில் பிடிப்புண்டாக்குபவையாகவும், குதம் வஸ்தி நாபி இவற்றில் இசிவுண்டுபண்ணுபவையாகவும் இருக்கும். மேலும் இவ்வியாதியில் ச்வாஸம், காஸம், இயற்கைக்கு விரோதமான இருதய சலனம், வாயில் உமிழ்நீர் சுரத்தல், அரோசகம், பீநஸம், பிரமேஹம், மூத்திரக்ருச்சிரம், தலைவலி, குளிர்ஜ்வரம், நபும்ஸகத்தன்மை, அக்னிமாந்த்யம், வாந்தி, ஆமதோஷம் அதிகரித்த வேறு விகாரங்கள் இவை உபத்திரவங்களாகக் காணும்; மேலும் கொழுப்பு போன்றதும், கபத்துடன் கூடியதும், அளவில் அதிகரித்ததும், வயிற்றுக்கடுப்புடன்கூடியதுமான மலம் வெளியாகும்; இரத்தக்கசிவு முதலியது இதில் காண்பதில்லை; இந்த முளைகள் உடைவதுமில்லை; இப்பிணியாளியின் சர்மம் முதலியவை வெளிறியும் ஸ்நிக்த்தமாகவும் இருக்கும். 19—23.

ஸந்நிபாதார்சஸ்ஸின் இலக்ஷணங் ள்:—வாதார்சஸ் முதலிய மூன்றுக்குங் கூறிய இலக்ஷணங்கள் அனைத்தும் ஒருமிக்கக் கண்டால், அதை 'ஸந்நிபாதார்சஸ்' என்றறிக. ஸஹஜார்சஸ்ஸின் இலக்ஷணங்களும்[2] ஸந்நிபாதார்சஸ்ஸுக்கு ஒப்பானவையே. 23½.

இரக்தார்சஸ்ஸின் ஸாமாந்ய லக்ஷணம்:--இரத்தம் அதிகரித்துண்டான மூலமுளைகள் குதத்தில் சிலைங்களைப் போன்று அடைத்துக் கொண்டிருக்கும்; பித்தார்சஸ்ஸுக்குஸமானமான மற்ற இலக்ஷணங்களும் இதற்குண்டாகும். ஆலம்விழுது போலவும், குன்றுமணி போலவும், பவழக்கொடி போலவும் கிளம்பியிருக்கும்; இப்பிணியாளிக்கு மலம் மிகவும் இறுகிப்போகும்; அவ்விதம் இறுகிய மலம் வெளிவருகையில், அதனால் அம்முளைகள் நசுக்கப்பட்டு திடீரென்று இரத்தப் பெருக்குண்டாகும்; இரத்தம் மிகுதியாக வெளிப்படவே, அந்த ரோகி அவ்வித இரத்தக்ஷயத்தினாலான கோளாறுகளால் தவளையைப் போன்ற தேஹ நிறத்தைப் பெற்று, தேஹநிறம், தேஹபலம், மனத்தென்பு இவை க்ஷீணிக்க, ஓஜோதாது

1 முதலியவை யென்பதால், மூத்திரம், கண், வாய் இவைகளும் குறிக்கப்படுகின்றன.

2 ஸஹஜார்சஸ்ஸின் விவரணத்தைப்பற்றி 29-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

க்ஷயிக்க, இந்த்ரியங்கள் கலக்கங்கொள்ள வருந்துவான்; அவனது மலம் கறுத்தும் கடினமாகவும் பசையற்றதாகவுமிருக்கும்; அபானவாயுவும் அவனுக்கு வெளியாகாது. 24-27.

வாதஜ ரக்தார்சஸ்:—இரத்தார்சஸ்ஸில் மூலமுளைகளிலிருந்து வெளியாகும் இரத்தம் தெளிவாகவும், இளஞ்சிவப்பாகவும், நுரையோடு கூடியதாகவும் இருந்து, இடுப்பு துடைகள்குதம் இவற்றில் நோவும்அதிக பலஹீனத்தன்மையும் உண்டானால், அவ்வர்சஸ்ஸு உற்பத்தியாவதற்கு ரூக்ஷகுணமும் காரணமாயேற்பட்டிருந்தால் அதில் வாத தோஷம் அநுபந்தமாயிருக்கும்.[1] 28-28½.

கபஜ ரக்தார்சஸ்:—இரத்தார்சஸ்ஸில் மலமானது உடைந்தும், வெளுத்தும், சிறிது மஞ்சளாகவும், ஸ்நிக்த்தமாகவும், குருவாகவும், குளிர்ந்ததாகவும் இருந்து, மூலமுளைகளிலிருந்து கசியும் இரத்தம் தோய்ந்தும், நூல்போன்றதாகவும், வெண்மையாகவும், பிசுபிசுப்பாகவும் வெளிவந்து, குதத்வாரம் பிசுபிசுப்பாகவும் ஸ்தப்த்தமாகவுமிருந்து, அர்சஸ் உண்டாவதற்கு குரு குணமும் ஸ்நிக்த்த குணமும் காரணமா யேற்பட்டிருந்தால் அதில் கபதோஷம் அநுபந்தமாயிருப்பதாகக் கற்றறிந்தவர் கருதுவர். 29,30.

அர்சஸ்ஸின் பூர்வரூபம்:—உணவு ஜீர்ணமாகாமை, பலக்குறைவு, வயிறு விம்மிச் சப்தித்தல், உடலிளைத்தல், அதிக தேக்கெறிவு, துடைகள் க்ருசமாதல், மலம் சொற்பமாக வெளியாதல் ஆக இக்குறிகள் காண்பதும், இது கிரஹணீரோகமோ-பாண்டுவோ- உதரரோகமோ வென்கிற ஸந்தேஹம் ஜனிப்பிப்பதும் பலமாக உண்டாகப் போகிற அர்சஸ்ஸுக்கு முற்குறிகளாகும். 31 32.

அர்சஸ்ஸால் பல வேறு உபத்திரவங்கள் உண்டாவதன் காரணம்[3]:—ஐந்து விதமான வாயுவும்[4]. ஐந்து விதபித்தமும்[5] ஐந்து வகையான கபமும்[6] குதத்திலுள்ள மூன்றுவலிகள் என்கிற மடிப்புகளும் ஆக இவை யாவும் அர்சோரோகம் உண்டாகையில் மிகக் கோளாறடைகின்றன. ஆகையினாலேயே அர்சோரோகங்கள் துன்பந்தரக்கூடியவையாகவும், அநேகம் வேறு வியாதிகளை யுண்டுபண்ணுபவையாகவும், ஸகல தேஹத்திலும் தாபமளிக்கத்தகுந்தவையாகவும், பெரும்பாலும்[7] கஷ்ட ஸாத்யமாகவும் இருக்கின்றன. 33,34.

ஸுகஸாத்யமானஅர்சஸ்.—குதத்தின்வெளிப்புறத்து வலி யென்னும் மடிப்பில் உண்டானதும், ஒரே தோஷம் கோளாறடைந்துண்டானதும்,[8] ஸமீப காலத்தில் உற்பத்தியானதுமான மூலரோகம் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியதாகும். 35.

---

1 அநுபந்தம் என்பதன் விவரணத்தைப்பற்றி 16-ம் பக்கம் டிப்பணியில் விவரம் பார்க்க.

2 இரத்தார்சஸ் பொதுவாகப் பித்தார்சஸ்ஸுக்குச் சமான லக்ஷணமுள்ள தென்று முன்னமே கூறப்பட்டதால், பித்தஜரக்தார்சஸ் தனியே கூறப்பட வில்லை. பித்த இரத்தங்களுடைய குணம் ஒரேமாதிரியானது.

3 ஆஸநத்வாரத்தில் மூலம் உண்டாகிறது; அங்ஙனமிருக்க எல்லா தேஹத்திலும் பலவிதமான கோளாறுகள் காண்பதாகக் கூறியதற்கு ஆதாரம் என்ன? என்கிற ஸந்தேஹம் இதனால் நிவாரணம் செய்யப்படுகிறது.

4, ஐந்துவிதமான வாயு:—பிராணவாயு, அபாநவாயு, ஸமாநவாயு, உதாநவாயு, வியாநவாயு. இவற்றிற்கு மார்பு, குதம், நாபி, கண்டம், ஸர்வசரீரம் ஆக இவை முறையே ஆச்ரய ஸ்த்தலங்களாம்.

5. ஐந்து வித பித்தம்:—ஆலோசகம், இரஞ்ஜகம், ஸாதகம், பாசகம், ப்ராஜகம். இவற்றிற்கு நேத்திரம், யக்குத் என்னும் கல்லீரல், இருதயம், பக்வாசயம், சர்மம் ஆகிய அவயவங்கள் முறையே ஆச்ரய ஸ்த்தலங்கள்.

6. ஐந்து வித கபம்.—அவலம்பகம், க்லேதகம், போதகம், தர்ப்பகம், ச்லேஷகம் இவற்றிற்கு மார்பு, ஆமாசயம், நாக்கு, சிரஸ், ஸந்திபாகங்கள் ஆகிய இவ்வவயவங்கள் ஆச்ரயஸ்த்தலங்களாகும்.

7. பெரும்பாலும் என்பதால் ஸுகஸாத்ய, அஸாத்ய, யாப்ய ரூபமான அர்சஸ்ஸுகளும் உண்டென்று குறிக்கப்படுவதாய் அறிக.

8. முதல் வலியில் உண்டானதாயிருந்தும் அது இரண்டு தோஷங்களால் உண்டாயிருந்தால் கஷ்டஸாத்யமாகும். மூன்று தோஷங்களால் ஏற்பட்டிருந்தால் யாப்யம் அல்லது அஸாத்ய மாகவும் ஆகும் என்றறிக.

கஷ்டஸாத்யமான அர்சஸ்:--இரண்டு தோஷங்களால் உற்பத்தியானதும், இரண்டாவது வலியில் கிளம்பியதும், ஒரு வருஷத்திற்கு முன்னால் உண்டானதுமான மூல ரோகம் வெகு கஷ்டப்பட்டு நிவ்குத்திக்கக் கூடியதாகும். 36.

அஸாத்யமான அர்சஸ்:—(1) ஸஹஜமான அர்சஸ்ஸும், ஸந்நிபாதார்சஸ்ஸும், உட்புறமாயுள்ள மூன்றாவது வலியை ஆச்ரயித்துண்டாகும் அர்சஸ்ஸும் சிகித்ஸைக்கு வசப்படாத அர்சஸ்ஸுகளாகும். (2) அதே அர்சஸ்ஸுகள், நான்கு பாதங்களும்[1] குறைவின்றி அமைந்திருந்தால், ஜாடராக்னியும் நல்ல நிலைமையிலிருந்தால் ஆயுள் மிச்சமிருப்பவனுக்கு யாப்யங்களாகும்;[2] அவ்வித மில்லையேல் இப்பிணியாளிகளைக் கைவிடவேண்டியதே. 37, 38.

அஸாத்ய அர்சோரோகத்திற் காணும் சில உபத்திரவங்கள்:– கையிலும், பாதத்திலும், முகத்திலும், நாபியிலும், குதத்திலும், பீஜங்களிலும் வீக்கமுண்டாதல், இருதயத்திலும் விலாப்பக்கங்களிலும் வலி ; ஆக இக்குறிகள் எவனுக்குக் காண்கின்றனவோ அவனுடைய மூலவியாதியும் அஸாத்யமாகும். மேலும் இருதயத்திலும் பார்ச்வங்களிலும் வலி, மயக்கம், வாந்தி, உடம்பெல்லாம் வலி, ஜ்வரம், நாவறட்சி, ஆஸநத்வாரத்தின் வேக்காடு இவ்வுபத்திரவங்களும் அர்சோரோகியைக் கொன்றுவிடும். அன்றியும் நாவறட்சி, அரோசகம், வயிற்று வலி இவைகளால் பீடிக்கப்படுகிறவனும், அதிக இரத்தப் பெருக்குள்ளவனும், வீக்கம் அதிஸாரம் இவற்றுடன் கூடியவனுமான அர்சோரோகி க்ஷீணித்து உயிர் துறப்பான். 39–41.

இதர அவயவங்களில் அர்சஸ்ஸுண்டாதல்:- அந்தந்த அவயவத்திற்குத் தகுந்தவாறு ஆண்குறி முதலியவற்றிலும்[3] நாபியிலும் அர்சஸ்ஸுகள் உண்டாவதுண்டு. அவை மண்ணுணிப் பாம்பின் முகம் போன்றவையாகவும், பிசுபிசுப்புள்ளவையாககவும், மிருதுவாகவும் இருக்கும். 42.

சர்மகீலம் :—வியானம் என்கிற வாயுவானது கபதோஷத்தைக் கிரஹித்து, வெளிப்புறத்து சர்மத்தில் கடினமாகவும் அசைவற்றதும் பெரிய அடைப்பான் போன்றதுமான முளையை யுண்டுபண்ணும்.அதை 'சர்மகீலம்' என்றறிக. (1) வாத தோஷத்தினாலான சர்மகீலம் குத்தல் வலியுண்டு பண்ணுவதாகவும், கடினமாகவும் இருக்கும். (2) பித்த தோஷத்தினாலுண்டான சர்மகீலத்தின் முகம் ஒருவாறு கறுநிறங்கொண்டதாகக் காணப்படும். (3) கப தோஷம் அதிகரித்த சர்மகீலம் கிரந்திபோன்றதாகவும், சர்மத்திற்குச் சமமான நிறமுள்ளதாகவும் இருக்கும். 43, 44.

1, வைத்தியன், ரோகி, பரிசாரகன், ஔஷதம் இவற்றிற்கு நான்கு பாதங்கள் அல்லது 'சதுஷ்பாதம்' எனப் பெயர் [1. திறமையுள்ளவனாகவும், யோக்யதையிற்சிறப்புற்ற ஆசிரியரிடம் வித்யாப்யாஸம் செய்தவனாகவும், வேலைகளை அநுபவப்படி கற்றறிந்தவனாகவும், முற்றிலும் பரிசுத்தனாகவும் வைத்தியன் இருக்க வேண்டும். 2. செல்வம்,வைத்தியனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், ஞாபகசக்தி, தைர்யம் இவை ரோகிக்கு அவசியமான நான்கு லக்ஷணங்கள். 3. ரோகியினிடம் அன்பு, பரிசுத்தமாயிருத்தல், திறமையுடன் வேலைகளைச் செய்தல், புத்திசாலித்தனம் இவை பரிசாரகனுக்கு அவசியமான நான்கு குணங்கள். 4. அநேகவித முறைகளாகப் பக்குவம் செய்யக் கூடியதாயிருத்தல்,அநேக குணங்கள் அடங்கியதாயிருத்தல், சிறந்த பூமியிலுண்டாய் தகுந்தவாறு ஸம்ஸ்கரிக்கப்பட்டிருத்தல், அந்தந்த வியாதிக்கு ஏற்றதாயிருத்தல் ஆக இவை ஔஷதத்திற்கு அவசியமான நான்கு குணங்கள்.]

2. யாப்யம்—வியாதி அஸாத்யமானதா யிருந்தும், பிணியாளிக்கு ஆயுள் இன்னும் மிச்சமிருக்கையில், வியாதி தொடர்ந்திருக்க, சீக்கிரத்தில் பிராணபாயமுண்டாகாமல் சில காலம் வரையில் பிணியாளி பிழைத்திருக்கக் கூடிய வியாதி நிலைமை யாப்யம் எனப்படுகிறது [ஆகவே வியாதியின் அஸாத்ய நிலைமை இரண்டு விதம்—ஒன்று யாப்யம்: ஆயுள் மிகுதியால் காலங்கழிதல்.மற்றொன்று ப்ரத்யாக்யேயம்: சீக்கிரத்தில் பிராணபாய முண்டாகுமென்று கைவிடக் கூடியது.]

3. முதலியவற்றிலும் என்று கூறியதால் நாசி, செவி முதலிய வேறு அவயவங்களிலும் முளைகள்(அர்சஸ்ஸுகள்) உண்டாகலாம் என்பது குறிப்பிடப்படுவதாய் அறிக .நாசியிலுண்டாவது நாசார்ஸ் என்றும், செவியிலுண்டாவது கர்ணார்சஸ் என்றும் வழங்கப்படும்.

## 6. அக்நிமாந்த்ய-அஜீர்ண-விஷூசி - அலஸக விலம்பிகா நிதானம்.*

ஜாடராக்னி நான்கு விதம்:—குடலில் உணவுகளைப் பக்குவம் செய்வதற்கான அக்னியானது கபம் அதிகரிப்பதால் மந்தமாகவும்,[1] பித்தம் அதிகரிப்பதால் தீக்ஷ்ணமாகவும்,[2] வாதம் அதிகரிப்பதால் விஷமமாகவும்,[3] மூன்று தோஷங்களும் இயற்கையான ஸமநிலைமையிலிருப்பதால்ஸமமாகவும்[4] இருக்கும். ஆகவே ஜாடராக்னி நான்கு விதமாகின்றது.1.

நான்கு வித ஜாடராக்னியின் க்ருத்யங்கள்:- விஷமமான ஜாடராக்னி வாதஸம்பந்தமான ரோகங்களையும், தீக்ஷ்ணமான ஜாடராக்னி பித்த ஸம்பந்தமான வியாதிகளையும், மந்தமான அக்னி கபஸம்பந்தமான வியாதிகளையும் உண்டுபண்ணும். ஏற்றக் குறைவில்லாமல் இயற்கை யளவிலுள்ள ஜாடராக்னி ஸமாக்னி யெனப்படும்; தகுந்த அளவில் புஜிக்கப்பட்ட உணவு அவ்வக்னியினால் நன்கு ஜீர்ணம் செய்யப்படும். மேலும் மந்தமான ஜாடராக்னியையுடையவன் வெகு சொற்ப அளவான உணவை யுட்கொண்டபோதிலும் அது ஜீர்ணமாகமாட்டாது. விஷமாக்னியான மனிதனுக்கோவென்றால் ஆஹாரம் சில ஸமயம் நன்கு ஜீர்ணமாகும்; சில ஸமயங்களில் ஜீர்ணமாகாமலுமிருக்கும். உணவு சரியான அளவில் உபயோகிக்கப்பட்டாலும், அல்லது அதிக அளவாக புஜிக்கப்பட்டாலும் எவனுக்கு எளிதில் ஜீர்ணமாய் விடுகிறதோ அவன் தீக்ஷ்ணமான ஜாடராக்னி யுடையவன்[5] என்றறிக. இவர்களுக்குள் ஸமாக்னியாயிருப்பவனையே ஆரோக்கியத்திற் சிறந்தவன் என்பார்கள். 2-4.

அஜீர்ணமும் அதன் பேதங்களும்:—கபம், பித்தம், வாதம் இம்மூன்றின் கோளாறால் முறையே ஆமம், விதக்த்தம், விஷ்டப்த்தம் என்று மூன்று வித அஜீர்ணங்கள்[6] உண்டாகும். இரஸதாதுவானது நன்கு இரத்தம் முதலியதாகப் பரிணமமடையாமல் நின்று,

* அக்னி மாந்த்யம்,அஜீர்ணம், அலஸகம்,விஷூசி, விலம்பிகா என்கிற ஐந்து விதமான வியாதிகள் இந்தப் பிரகரணத்தில் விவரிக்கப்படும். இவ்வைந்தும் குடலைப்பற்றிய கோளாறுகள்.

1. மந்தமான அக்னி-உணவை நன்கு ஜீர்ணிப்பதற்குப் போதிய சக்தியில்லாத ஜாடராக்னி.

2. தீக்ஷ்ணாக்னி — மிதமிஞ்சியுட்கொண்ட உணவையும் எளிதில் ஜீர்ணம் செய்யும் சக்தியுள்ள ஜாடராக்னி.

3. விஷமாக்னி—ஸமநிலைமை தவறிய அக்னி; ஏற்றத் தாழ்வான அக்னியெனப் பொருள்.

4. ஸமாக்னி—கோளாறடையாமல் இயற்கை நிலைமையிலுள்ள ஜாடராக்னி; இதுதான் தாதுக்களைச்சம நிலைமையில் வைத்து தேஹத்தைப் பரிபாலிக்கக் கூடியது. ஸமாக்னி யென்பதை விவரிக்காமல் கோளாறடைந்த மற்றவைகளைக் கூறினால் விஷயம் நன்கு விளங்காதெனக் கருதி, ஸமாக்னியென்பது வியாதி நிலைமைக்குச் சம்பந்தப்படாவிட்டாலும், இங்கு குறிப்பிடப்பட்டது.

5, "பஸ்மகம்" என்கிற வியாதி தீக்ஷ்ணாக்னி யென்பதால் குறிக்கப்படுகிறது. அதிக கடுமையான ஜாடராக்னியே தீக்ஷ்ணாக்னி யெனப்படுகிறது. சரகர் கூறுகிறார்,— "ஒரு மனிதனுக்கு கபம் க்ஷீணித்து, பித்தம் மிகப் பிரகோபமடைந்து, வாத தோஷமும் பித்தத்திற்கு அனுகூலமாக விருத்தியாய் விட்டால், அப்பொழுது அப்பித்தமானது ஜாடராக்னியை மிகவும் தீக்ஷணமாகச் செய்கிறது. அப்பொழுது வாதத்துடன் கூடிய ஜாடராக்னி அதிக பலம் பெற்று உடலை வாட்டும், அடிக்கடி மிதமாக புஜித்தபோதிலும்உடனுக்குடனே உணவு ஜீர்ணமாய்விடும்.மீண்டும் உடனே உணவு உட்கொள்ளப்படாவிட்டால் கடுமையான அந்த ஜாடராக்னி இரத்தம் முதலிய தேஹதாதுக்களை எரிக்க ஆரம்பிக்கும். அதனால் தேஹபலம் குன்றியும் போய், பலவித கோளாறுகள் ஏற்பட்டு ஒருக்கால் மரணமும் ஸம்பவிக்கும். இவனுக்கு உணவு வயிற்றில் விழுந்ததும் அமைதியேற்பட்டாலும், அது அந்த க்ஷணமே ஜீர்ணமாய் விடுவதால் அடுத்தாற்போல அவன் கடும்பசியால் தவிப்பான். நாவறட்சி, இருமல், தேஹதாபம், மூர்ச்சை இவையும் காணும்."

6. இந்த மூன்றுவித அஜீர்ணங்களுக்கும் பிறகு கிரமமாக விவரணங்கள் கூறப்படும்,

இரஸசேஷாஜீர்ணம் என்கிற நான்காவது அஜீர்ணம் ஒன்று உண்டாவதாகச் சிலர் கூறுகிறார்கள்.[1] உட்கொண்ட உணவு பக்குவமாவதற்கு ஓர் அஹோராத்ரம் செல்லுகையில், அதற்கிடையில் உள்ள அபக்வ நிலைமை ஐந்தாவது அஜீர்ணம் என்றும், ஆகவே அதற்கு திநபாகி[2] எனப் பெயரென்றும் சிலர் கூறுவர்; இவ்வஜீர்ணம் எக்கெடுதியையும் செய்யாதது. [3] அன்றியும் தினந்தோறும் போஜனம் செய்தவுடனே உணவு ஜீர்ணமாகாத இயற்கை நிலைமையை ப்ராக்ருதாஜீர்ணம் என்கிற ஆறாவது அஜீர்ணம்[4] என்றும் சிலர் கருதுகிறார்கள். 5.6.

அஜீர்ணத்தின் காரணம்:—ஏற்ற காலத்தில் ஸாத்மியமாகவும்[5] இலகுவாகவும் புஜித்த ஆஹாரங்கூட அதிக தண்ணீர் அருந்துவதாலும் விஷமமான உணவுகளைப்[6] புஜிப்பதாலும், வேகங்களை அடக்குவதாலும்,[7] பகல் நித்திரை முதலிய விபரீதமான நித்திரையாலும் நன்கு ஜீர்ணமாவதில்லை.[8] 7. (பொறாமை-பயம்-கோபம் இவற்றால் மனம் கலங்கி யிருக்கையிலும், பேராசை-வலி-தீனத்தன்மை- பகைமை இவற்றால் மனம் பீடிக்கப்படுகையிலும் புஜிக்கப்படும் உணவு நன்றாக ஜீர்ணமாகமாட்டாது.)

---

1. "இரஸசேஷம் என்றால் அந்நசேஷம் எனப் பொருள்; இரஸம் என்பதால் இரஸத்துடன் கூடிய ஆஹாரம் குறிக்கப்படுகிறது; ஆகவே ஜீர்ணமாகாமல் குடலில் தங்கிப்போன உணவு மூலமாய் உண்டாவது இரஸசேஷாஜீர்ணம்" என்று ஜெஜ்ஜடர் கூறுகிறார். இப்படியானால் ஆம விதக்த்த விஷ்டப்த்தா ஜீர்ணங்களின் குறிகளுள் முக்கியமானவை சில இதில் காணவேண்டும். அப்பொழுது அம்மூன்றினும் இது வேறுபட்டதாக மாட்டாது. அம்லோத்காரம் என்கிற புளித்த தேக்கெறிவு முதலிய கோளாறு ஜீர்ணமாகாத உணவு குடலில் தங்கியிருக்கையில் அவசியம் உண்டாக வேண்டும். இரஸசேஷாஜீர்ணத்தில் அப்படிம்பட்ட குறிகள் காண்பதில்லை யென்று ஸுச்ருதர் முதலியவர் கூறுகிறார்கள்:-"தேக்கெறிவு சுத்தமாயிருந்தும் உணவில் அபேக்ஷையுண்டாகாது; இருதயம் குருவாகத் தோற்றும்; வாயில் உமிழ் நீர் அதிகமாய் ஊறும்; இது இரஸசேஷம் என்கிற நான்காவது அஜீர்ணம்." ஆகவே இரஸசேஷம் என்பது அன்னசேஷமாக மாட்டாது என்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஆகிலும், அன்னசேஷம் மிகச் சொற்பமாயிருக்கையில், தேக்கெறிவு சுத்தமாயிருத்தலும் கூடும்; எனவே இரஸசேஷம் என்றால் அன்ன சேஷம் என்றே பொருள் கொள்ளலாம் எனப்படுகிறது. "ஆஹாரம் குடலில் ஏற்றவாறு பக்குவமடையாமையால் ஆமம், விதக்த்தம், விஷ்டப்த்தம், இரஸ சேஷம் என்று நான்குவித அஜீர்ணம் உண்டாகிறது" என்று வேறு சில நூல்களிலும் கூறப்படுகிறது. "இரஸதாதுவில் ஜீர்ணமாகாத ஆஹாரத்தின் ஸூக்ஷ்மாம்சம் கலந்து விடுவதால் இரஸ சேஷம் என்கிற அஜீர்ணம் உண்டாகிறது" என்று கதாதரன் என்பவர் கூறுகிறார். எவரது அபிப்பிராயம் எங்ஙனமிருப்பினும், இரஸதாது சிறிது கோளாறடைந்து நன்கு பக்குவமாகாமல் ஸம்பவிக்கும் ஒருவித ரோகம் இரஸ சேஷா ஜீர்ணம் என்று கருதப்படுகிறது. இதில் மற்ற அஜீர்ணங்களுக்கு இருப்பதுபோல வாதாதி தோஷஸம்பந்தம் விசேஷமாகக் கிடையாது.

2. திநபாகி—அறுபதுநாழிகையில் ஜீர்ணமாவது.

3. வயிற்றுப் பொருமல், பேதி, வாந்தி, வயிறளைத்தல் முதலிய விகாரங்களற்றது எனக் கருத்து. காலம் தவறி பக்குவமாகியும் விகாரங்களையுண்டுபண்ணாதது; இவ்வஜீர்ணத்தில், அவ்வறுபது நாழிகைகாலத்திற்கிடையில் மீண்டும் எவ்வுணவும் உபயோகிக்கலாகாது என்றறிக.

4. உணவு உட்கொண்டவுடனே குடலிலுள்ள ஆஹாரம் ஜீர்ணமாகாத நிலைமையிலிருக்கிறது. அவ்வுணவு நன்கு ஜீர்ணமாகிற வரையில் அது ஒரு அஜீர்ண நிலைமையாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அது ஜீர்ணமாவதற்கு முன்பு (உடனே) மீண்டும் ஆஹாரமுபயோகிக்கக் கூடாது. ஆகிலும் அது எக்கோளாறையும் உண்டுபண்ணாத இயற்கை அஜீர்ணம் (ப்ராக்ருதாஜீர்ணம்) என்று கருதப்படுகிறது.

5, ஸாத்மியம்—3-ம் பக்கத்திலும் 22-ம் பக்கத்திலும் டிப்பணியில் விவரம் காண்க.

6. விஷமமான உணவு—விஷமபோஜநம் அல்லது விஷமாசநம் எனப்படுவது. "அளவு மீறியும், வெகு சொற்ப அளவாகவும் அகாலத்திலும் செய்யப்படும் போஜநம் விஷமபோஜநம் எனப்படுகிறது" என்று பாவமிச்ரர்.

7. வேகங்களை அடக்குவது—வேகவிரோதம் எனப்படுவது. இதைப்பற்றிய விவரத்தை 22-ம் பக்கம டிப்பணியிற் பார்க்க.

8. அஜீர்ணஸாமாந்ய லக்ஷணம்—"மலம் அதிகமாக வெளியாதல் அல்லது முற்றிலும் கட்டிப் போதல், சோர்வு, அபாநவாயு அடைபடுதல், வயிறு விம்மிக் கொள்ளுதல், உடல பாரமாயிருத்தல், தலைச்சுற்றல் ஆகிய இவை அஜீர்ணத்தின் பொதுக்குறிகள்" என்று வாக்படர்.

ஆமாஜீர்ண லக்ஷணம்:—அவற்றுள் ஆம தோஷஸம்பந்தமான அஜீர்ணத்தில் தேஹம் பாரமாயிருப்பது போன்ற உணர்ச்சி, வாயில் நீருறுதல், கன்னங்களிலும் கண்களைச் சுற்றிலும் வீக்கம், புஜித்த உணவு அப்படியே தேக்கெறிவுடன் மேல் நோக்குதல், அத்தேக்கெறிவு அம்லத்தன்மையற்றிருத்தல் ஆக இக்குறிகள் காணும். 8.

விதக்த்தா ஜீர்ண லக்ஷணம்:—தலைச்சுற்றல், நாவறட்சி, மூர்ச்சை, பித்தம் அதிகரித்துக் காணும் பற்பல விதமான விகாரங்கள், புகைந்த புளிப்பான தேக்கெறிவு உண்டாதல், வியர்வை, தேஹதாபம் இக்குறிகள் விதக்த்தம் என்னும் அஜீர்ணத்தில் உண்டாகும். 9.

விஷ்டப்த்தாஜீர்ண லக்ஷணம் :— வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், பல வேறு விதமான வாத ஸம்பந்தமான வேதனைகள், மலமும் அபானவாயுவும் வெளிப்படாமை, உடல் விறைத்தல், மயக்கம், தேஹமெங்கும் வேதனை இக்குறிகள் விஷ்டப்த்தம் என்னும அஜீர்ணத்திற் காணும். 10.

இரஸ சேஷாஜீர்ண லக்ஷணம் :—இரஸ சேஷம என்கிற அஜீர்ணத்தில் அன்னத்வேஷம், இருதயம் தெளிவடையாமலிருப்பது போன்ற உணர்ச்சி, தேஹம் பாரமாயிருத்தல் ஆக இக்குறிகள் உண்டாகும். 10½.

அஜீர்ணத்தின் உபத்திரவங்கள்:—மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, வாயில் உமிழ் நீர் அதிகமாயூறுதல், தேஹமிளைத்தல், தலைச்சுற்றல் இவை அஜீர்ணத்தினால் உண்டாகக் கூடிய உபத்திரவங்கள்; அல்லது அதனால் மரணமாவது நேரிடும்.[1] 11½.

அமிதபோஜனமும் அஜீர்ணமும்:—எவர்கள் விஷயமுணராதவர்களாய் மிருகங்களைப்போல அளவின்றி அமிதமாகப் புஜிக்கிறார்களோ அவர்கள் அநேகவிதமான வியாதிகளுக்குக் [2] காரணமான அஜீர்ண வியாதியை அடைகிறார்கள். 12½.

அஜீர்ணம் விஷூசி முதலிய வற்றிற்கும் காரணம்:—ஆமம், விஷ்டப்த்தம், விதக்த்தம் என்று கூறப்பட்ட எந்த அஜீர்ணமுண்டோ அதனால் விஷூசி யென்ன, அலஸக மென்ன, விளம்பிகை யென்ன இவ்வியாதிகளும் உண்டாகும்.[3] 13½.

விஷூசி:—வாயுவானது எந்த வியாதியில் அவயவங்களை ஸூசிகளால் குத்துவது போலத் தொந்தரவு செய்கின்றதோ[4] அது "விஷூசி" யென்று கூறப்படுகிறது. சாஸ்திரமறிந்து, மிதமாக புஜித்து வருபவர் அவ்வியாதியைப் பெறமாட்டார்; இந்த்ரியங்களை அடக்கியாள முடியாத மூடர்கள், தோன்றிய வாறு உணவுகளைத் தின்பதிற் பேரவா கொண்டவர்களாய் இவ்வியாதிக்கு ஆளாகிறார்கள். இதில் மயக்கம், அதிஸாரம், வாந்தி, அதிக நாவறட்சி, வயுற்றுளைத்தல், தலைச்சுற்றல், காலின் ஆடுசதை முதலியவற்றின் வலிப்பு, கொட்டாவி, தேஹதாபம், உடல் கறுநிறங் கொள்ளல், நடுக்கல், இருதயத்தில் வேதனை, தலைவலி ஆக இந்த லக்ஷணங்கள் காணும்.[5] 14—16.

1. கடுமையான அஜீர்ணம் மரணத்திற்கும் காரணமாகும் என்று விஜயரக்ஷிதன.

2. அநேக வித வியாதிகள் என்பதால் விஷூசி, அலஸகம், விளம்பிகை முதலியவை குறிக்கப்படுகின்றன. அஜீர்ணத்திற்கு முற்கூறியவை ஸாமாந்ய காரணம், அமித போஜநம் அதற்கு விசேஷகாரணமாகும்.

3 "ஆமாஜீர்ணத்தால் விஷூசியும், விஷ்டப்த்தாஜீர்ணத்தால் அலஸகமும், விதக்த்தாஜீர்ணத்தால் விளம்பிகையும் முறையே உண்டாகும" என்று கார்த்திககுண்டன் முதலியவர் கூறுகிறார்கள். "ஆனால் விதக்த்தம் என்பது விசேஷமாக பித்தத்தினால் உண்டாவது. விளம்பிகை யென்பது வாத-கபங்களின் ஆதிக்யத்தால் உதிப்பது. ஆகவே-விதக்த்தாஜீர்ணம் விளம்பிகைக்குக் காரணமென்று கூறுவது யுக்தமல்ல. ஆகவே மூன்று அஜீர்ணங்களில் எதனாலும் எந்த அஜீர்ணமும் ஸம்பவிக்கலாமென்று மொழிவது நியாயம். 'அஜீர்ணத்தினால் வாதம் முதலிய தோஷங்கள் வெகு பலமாகக் கோளாறடைகின்றன; என்கிற இப்பிரமாணத்தை அநுஸரித்து, அஜீர்ணத்தினால் பொதுவாக விஷூசி முதலிய எக்கோளாறும் காணக்கூடும்" என்று வகுளகரர் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

4. ஸூசி யென்றால் ஊசி. பொதுவாக உடலெங்கும், முக்கியமாக வயிற்றில் ஊசிகளால் குத்தப்படுவது போன்ற வேதனை விஷூசியில் உண்டாவதால் இதற்கு விஷூசி யென்கிற பெயர் வந்தது எனக் கருத்து.

5. வாந்தியும் அதிஸாரமும் ஒரு மிக்கக் காணும் வியாதியே விஷூசியாகும் என்று ஸுச்ருதமதத்தை

அலஸகம் :—எவனொருவனுக்கு வயிறு மிகவும் விம்மிக்கொள்கிறதோ, சோர்வும் கூக்குரலும் உண்டாகிறதோ, அபானவாயு குதமார்க்கத்தில் தடையுற்று மேல் நோக்கியதாய் குடலின் மேற்புறமாய் ஓடுகின்றதோ, அதிகமாய் மலமும் அபானவாயுவும் கட்டப்பட்டுப்போகின்றனவோ, நாவறட்சியும் தேக்கெறிவும் அதிகமா யுண்டாகின்றனவோ அவனுக்குண்டாயுள்ள ரோகம் "அலஸகம்" எனப்படும்.[1] 17, 18.

விளம்பிகா:—புஜிக்கப்பட்ட உணவு கபத்தினாலும், வாததோஷத்தினாலும் விகாரமடைய, அது வாந்தி ரூபமாய் வாயினாலாவது மலரூபமாய் குதத்தினாலாவது வெளிவராமல் எவன் வருந்துகிறானோ அவனுக்குண்டாயுள்ள வியாதி "விளம்பிகை" எனப்படும்[2]. இது சிகித்ஸைக்கு எளிதில் வசப்படாத வெகு கஷ்டஸாத்யமான வியாதி யென்றும் பிராசீன சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகிறார்கள். 19.

ஆமதோஷ-விஷூசிகளிற் காணும் விசேஷ லக்ஷணங்கள்:—(1) ஆமதோஷமானது தேஹத்தில் எவ்விடத்தில் தங்குகிறதோ, அவ்விடத்திலேயே விசேஷமானக் கோளாறுகளைப் பலவாறு உண்டுபண்ணிக்கொண்டு தொந்தரவளிக்கும்; மேலும் எந்த தோஷம் சரீரத்தில் விசேஷமாக வியாபித்திருக்கின்றதோ, அத்தோஷ ஸம்பந்தமான விகாரங்களும் ஆமதோஷஸம்பந்தமான கோளாறுகளோடுகூட பிணியாளியை வருந்தச் செய்யும்[3]. (2) எவனுக்குப் பற்களும் உதடுகளும் நகங்களும் கறு நிறங் கொள்கின்றனவோ, ஞாபகசக்தி மிகவும் சொற்பமாய் விடுகிறதோ, வாந்தியினால் மிகவும் வருந்த நேரிடுகின்றதோ, கண்கள் ஆழத்தில் புதைந்து விடுகின்றனவோ, குரல் மிகக் குன்றிப்போகின்றதோ, தேஹமெங்கும் பூட்டுகள் வெகுவாகத் தளர்ந்து விடுகின்றனவோ அவ்விஷூசி ரோகி உயிர் துறப்பான். 20, 21.

உணவு நன்கு ஜீர்ணமாவதன் குறிகள்:—புளித்த தேக்கெறிவு முதலிய துர்க்குணங்கள் நிவ்ருத்தியாதல், உத்ஸாஹம் விருத்தியாதல், தகுந்தவாறு அந்தந்த வேகங்கள் நன்கு வெளியாதல், தேஹம் இலகுவான நிலைமையைப் பெறுதல், பசியும் தாஹமும் உற்றவாறுண்டாதல் ஆக இவை யெல்லாம் உணவு நன்கு ஜீர்ணமாவதற்கான குறிகளாம். 22.

---

## 7. கிருமி நிதானம்.

பலவகையான கிருமிகள்:—(1) பாஹ்யக் கிருமிகள் என்றும், ஆப்யந்தரக் கிருமிகள் என்றும்[4] கிருமிகள் பொதுவாக இருவகைப்படும். (2) வெளியில் சர்மம் முதலிய வற்றின் அழுக்கிலும், கபத்திலும், இரத்தத்திலும், குடலிலுள்ள மலத்திலும் ஆக நான்கிடங்

---

அநுஸரித்தவர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே உலக வழக்கத்திலும் இது வாந்தி-பேதி யெனப்படுகிறது. "மேல் நோக்கி வாந்தியும், கீழ் நோக்கி அதிஸாரமும் காணும். இதில் நீர் ரூபமான திரவதாதுவைத் தவிர மலரூபமான வஸ்து விசேஷமாகக் கலந்திராது. இது விஷூசி யென்றறிக" என்று சரகர் கூறுகிறார்.

1. அலஸகம் என்பது, தோஷம் ஓரிடத்தில் அசையாமல் நின்று விடுவதைக் குறிப்பிடும் பெயர். "புஜித்த உணவு மேல் நோக்கியும் வருவதில்லை, கீழ் நோக்கியும் போவதில்லை, ஜீர்ணமுமாவதில்லை; ஆனால் ஆமாசயத்திலேயே மந்தித்துத் தங்கிக்கொண்டு தொந்தரவளிக்கும்; ஆகவே இவ்வியாதி அலஸகம் எனப்படுகிறது." என்று வாக்படர்.

2. அலஸகத்திலும் விளம்பிகையிலும் இலக்ஷணங்கள் ஸமானமாயிருப்பதால், இவ்விரண்டுக்கும் உள்ள பேதம் என்ன வென்பது ஒரு பிரச்னை. அலஸகத்தில் சூலை முதலிய கோளாறுகள் வெகு கடுமை யானவை. விளம்பிகையில் அவ்விதமிரா.

3. பிறகு கூறப்படப்போகிற ஆமவாதம் என்கிற வியாதி இதனால் சுருக்கமாகக் கூறப்படுவதாய் அறிக.

4. பாஹ்யக்கிருமிகள்—தேஹத்தின் வெளிப்புற

களில் உற்பத்தியாவதால் கிருமிகள் ஜன்ம பேதத்தைக்கொண்டு நான்குவகையாகக் கூறப்படுகின்றன. (4) முற்கூறப்பட்ட கிருமிகள் பெயர்களைக்கொண்டுஇருபதுவிதங்களாகும்.[1] 1¼.

பாஹ்யக் கிருமிகள்:—அவற்றுள் பாஹ்யக் கிருமிகள் சர்மாதிகளிலுண்டாகும் அழுக்குகளில் உற்பத்தியாகின்றன. அவை உருவத்திலும் நிறத்திலும் எள்ளுக்குச் சமானமானவை. உரோமங்களையும் அழுக்கு வஸ்திரங்களையும் ஆச்ரயித்து வளரும். அவற்றிற்குக் கால்கள் அநேகம் உண்டு. உருவத்திற் சிறியவையாகவுமிருக்கும். இவற்றுள் அதிக கால்களுள்ளவை யூகங்கள் என்றும்,[2] சிறியவையாயிருப்பவை லிக்ஷைகள் என்றும்[3] ஆக இக்கிருமிகள் இரண்டு வகையாக வழங்கப்படும். இக்கிருமிகள் கோடமென்கிற தழும்புகள், பிடகைகள் என்னும் கட்டிகள், சொறி, கொப்புளங்கள் இவற்றை யுண்டுபண்ணும்[4]. 2. 3.

கிருமிக்குப் போதுக் காரணம்:—புஜித்த உணவு ஜீர்ணமாகாமலிருக்கையிலேயே மீண்டும் உண்பவன், இனிப்பும் புளிப்புமான பதார்த்தங்களை அதிகமாய் புஜிப்பவன், திரவமான வஸ்துவை விசேஷமாகப் பருகுபவன், மாப்பண்டங்களையும் வெல்லத்தையும் அமிதமாய் உண்பவன், அத்துடன் வியாயாமம் என்கிற தேஹ வுழைப்பில்லாதவன், பகலில் தூங்குபவன், விருத்தமான ஆஹாரங்களை[5] அருந்துபவன் ஆக இத்தகையவர்கள் கிருமிகளின் உற்பத்திக்கு ஏற்றவராவர். 4.

கிருமிக்கு விசேஷ காரணம்.—(1) உளுந்து, மாப்பண்டம், அம்லரஸம், இலவண ரஸம், வெல்லம், சில சாகங்கள் இவற்றை புஜிப்பதால் புரீஷஜங்கள் எனப்படுகிற மலத்தை ஆச்ரயித்த கிருமிகள் உண்டாகின்றன. (2) மாம்ஸம், மத்ஸியம், வெல்லம், பால், தயிர், சுக்தம் என்கிற ஒருவித காடி இவற்றை மிதமிஞ்சியுட்கொள்வதால் 'கபஜங்கள்' என்கிற சிலேஷ்மத்தைப்பற்றிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. (3) விருத்த போஜநம், அஜீர்ண போஜநம், சாகாஹாரம இவை முதலியவற்றால் 'சோணிதஜங்கள்' என்கிற இரத்தத்தைப்பற்றிய கிருமிகள் விருத்தியாகின்றன. 5, 5½.

கிருமி யுண்டாயிருப்பதற்கான போது லக்ஷணம்:—ஜ்வரம், முகம் முதலிய வற்றின் நிறம் கருப்பாதல், வயிற்றுவலி, இருதயரோகம், தேஹமிளைத்தல், தலைச்சுற்றல், அன்னத்வேஷம், அதிஸாரம் ஆக இவை கிருமி யுண்டாயிருப்பதற்கான குறிகளாம். 6½.

கபஜக்கிருமிகள்;—கபத்தை ஆதாரமாகக் கொண்டு ஆமாசயத்தில் உற்பத்தியாய் விருத்தியடைந்து கிருமிகள் அப்பால் குடலிலெங்கும் பரவும். அவற்றுள் சில பெரிய நாடாக்களைப் போன்றவை; சில கிருமிகளோ மண்ணுணிப்பாம்பு போன்றிருக்கும்; வேறு சில முளைத்த தானியங்களின் முளைகளைப்போலிருக்கும்; அவை மிக மெல்லியவைகளாய் நீண்டும் அல்லது மிகக் குறுகியும் இருக்கும். அவற்றுள் சில வெண்மையாகவும் வேறு சில சிவந்த நிறமாகவும் காணப்படும். அவை அந்

---

த்தை ஆச்ரயித்து விருத்தியாகும் நுண்ணுயிர்கள். ஆப்யந்தரக்கிருமிகள்—தேஹத்தின் உட்புற அவயவங்களை ஆச்ரயித்து விருத்தியாகும் ஸூக்ஷ்மக்கிருமிகள்.

1. இங்கே ஸாதாரண கிருமிகள் இருபது விதங்கள் எனப்படுகிறது. ஆனால் இவற்றினும் அதிக ஸூக்ஷ்மமான கிருமிகள், இருபது விதங்களுக்கு மேற்பட்டவையுண்டு என்று சரகர் கூறுகிறார்.

2. யூகம்—பேன்.

3. லிக்ஷா (அல்லது லிக்ஷை)—ஈர் என்னும் பேன் முட்டை. (மலினமான வஸ்திரம் முதலியதிலுள்ள வெண்மையான பேன் என்று சிலர்.)

4. பேன்களும் ஈருகளும் விசேஷமாகத் தலையில் உற்பத்தியாவது வழக்கமாகையால், இக்கட்டி முதலிவையும் விசேஷமாகத் தலையிலேயே உண்டாகுமென்று அறிக.

5. விருத்தாஹாரம்—31-ம் பக்கம் டிப்பணியில் 6-என்கிற குறிப்பைப் பார்க்க.

ராதம், உதராவேஷ்டம், ஹ்ருதயாதம், மஹாகுதம், சுரு, தர்ப்பகுஸுமம், ஸுகந்தம் என்கிற பெயர்களைக் கொண்டு ஏழு விதமாகப் பிரிக்கப்படும்.[1] இக்கிருமிகள் இருதயத்திற்கு இயற்கையினும் அதிகமான அடிப்பையும், வாயில் அதிக உமிழ் நீர் ஊறுவதையும், அஜீர்ணத்தையும், அரோசகத்தையும், மூர்ச்சையையும், வாந்தியையும், ஜ்வரத்தையும், வயிற்றுப்பொருமலையும், இளைப்பையும், வீக்கத்தையும், பீநஸத்தையும் உண்டுபண்ணும் 7—10½.

இரக்தஜக் கிருமிகள் —இரத்தக் குழாய்களிலுள்ள இரத்தத்திலுண்டாகும் ஜீவன்கள் அணுரூபமானவை; அவற்றிற்குக் கால்கள் கிடையா; வட்ட வடிவமாகவும் செந்நிறமாகவும் இருக்கும்; வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதால் வெறுங்கண்ணுக்குத் தென்பட மாட்டா; அவை கேசாதம், ரோம வித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், ஸௌரஸம், மாக்ரு என்று ஆறு வகைப்படும்; இவை குஷ்டத்திற்குக் காரணமாகின்றன.[2] 11, 12.

புரீஷஜக்கிருமிகள்[3] :—குடலில் பக்வாசயத்தில் மலங்களில் கிருமிகள் உண்டாகும்; அவை கீழே குதத்தை நோக்கி ஊர்ந்து செல்லும். அவையே எப்பொழுது முதிர்ந்து பெரிதாகின்றனவோ அப்பொழுதுமேலே ஆமாசயத்தை நோக்கிச் செல்லும். அச்சமயம் இப்பிணியாளிக்கு அதிக தேக்கெறிவும், பெருமூச்செறிதலும், மலத்திற்குச் சமானமான ஒருவித துர் நாற்றம் அப்பால் ஏற்படுவதும் ஆக இக்கோளாறுகள் காணும். அவற்றுள்சில கிருமிகள் வெகு நீண்டவையாகவும், சில கிருமிகள் உருட்சியாகவும், சில வெகு மெல்லியவையாகவும், வேறு சில மிகப் பருமனாகவும் இருக்கும். அங்ஙனமே நிறத்திலும் சில கிருமிகள் கபிலமாகவும், சில பசுமையாகவும், சில வெண்மையாகவும், வேறு சில கறுவலாகவும் காணப்படும். அக்கிருமிகள் ககேருகம், மகேருகம், ஸௌஸுராதம், ஸசூலம், லேலிஹம் என்கிற பெயர்களைக் கொண்டு ஐந்து விதங்களாகும். பேதி, வயிற்றுளைத்தல், வயிற்றுப் பொருமல், தேஹவாட்டம், தேஹம் கடினமாதல், தேஹம் வெளுத்துப் போதல், மயிர்ச் சிலிர்கை, ஜாடாராக்னி மந்தமாதல், குதத்தில் தினவு இவையும் பலவிதமான வேறு கோளாறுகளும் இக்கிருமிகளால் காணும். 13-16.

## 8. பாண்டு ரோக-காமலா-கும்பகாமலா-ஹலீமக நிதானம்.*

### பாண்டு ரோகம்.

பாண்டு ரோகம் ஐந்து:—வாத பித்த கபங்களால் தனித்தனியே ஒவ்வொரு பாண்டு ரோகமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், மண்ணுண்பதால்[4] மற்றொன்றும் ஆக பாண்டு ரோகங்கள் ஐந்து விதமாயுண்டாகும். 1.

**பாண்டுவின் நிதானமும் ஸம்ப்ராப்தியும்.**—சக்தியை மீறி வியாயாமம் செய்தல், அம்லரஸத்தையும் இலவணரஸத்தையும், மதுவையும் அமிதமாய் உபயோகித்தல், மண்ணுண்பது, அதிகமாய் பகலில் நித்திரையுறுவது,

1. இவற்றுள் சில பெயர்கள் அந்தந்தக் கிருமியின் தன்மைக்கு ஏற்றவாறு ஏற்பட்டவை. சில விவஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பெயர்.

2. இரத்தத்திலேயே இயற்கையில் இக்கிருமிகள் வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதாகவும், இவை கோளாறடைந்தால் குஷ்டம் உண்டாகு மென்றும் சிலரது கருத்து. வேறு சிலர் இவ்வித கிருமிகள் குஷ்டமுண்டாவதற்கே காரணமானவை யென்றும், ஆகவே குஷ்டரோகிகளுடைய இரத்ததில் இவை ஏராளமாயிருக்கு மென்றும் கூறுவதுண்டு, "எந்த குஷ்டமும் ஸந்நிபாத தோஷத்தையும் கிருமிகளையும் காரணமாயுடையதாகும்" என்று ஸுச்ருதர்.

3. புரீஷஜக்கிருமிகள்—குடலிலுள்ள மலத்திலுண்டாகும் கிருமிகள் எனப் பொருள்.

* இந்த அத்தியாயத்தில் பாண்டு ரோகம், காமலா (காமாலை), கும்பகாமலா (வீக்கத்துடன் கூடிய ஒருவித காமாலை), ஹலீமகம் (பலவித உபத்திரவங்களோடு கூடிய கருங்காமாலை) இவை விவரிக்கப்படும்.

4. மண் உண்பதால் உண்டாகும் பாண்டு ரோகத்தைப்பற்றி ஸுச்ருதர் கூறவில்லை. 'கஷாயரஸமுள்ள

தீக்ஷ்ணமான வஸ்துக்களை யுபயோகிப்பது ஆக இவற்றால் வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து இரத்தத்தைக் கெடுத்து சர்மத்தை வெளிறச் செய்கின்றன.[1] 2.

பாண்டுவின் பூர்வரூபம்:—சர்மம் சிறிது வெடித்துப் போதல், மூக்கிலிருந்து சளி யொழுகுதல், உடல் இளைத்தல், மண்ணுண்பதில் விருப்பம், கண்களைச் சுற்றிலுமுள்ள பாகம் வீங்குதல், மலமும் மூத்திரமும் பசுமை நிறமாதல், உணவு ஜீர்ணமாகாமை ஆக இவை பாண்டு ரோகம் உற்பத்தியாவதை யறிவிக்கும் முற்குறிகளாம். 3.

வாத பாண்டு:—சர்மம், மூத்திரம், கண்கள் இவை முதலியவை ரூக்ஷமாகவும், கறு நிறம் அல்லது செந்நிறமாகவும் ஆதல் [2], தேஹத்தில் குத்தல் வலி, நடுக்கல், வயிற்றுப் பொருமல், தலைச்சுற்றல் இவை முதலிய குறிகள் வாத ஸம்பந்தமான பாண்டு ரோகத்திற்காணும். 4.

பித்த பாண்டு:—பித்ததோஷக் கோளாறால் உண்டாகும் பாண்டுவில் மூத்திரம், மலம், கண் இவை மஞ்சள் நிறங்கொள்ளும்; தேஹ தாபமும், நாவறட்சியும், ஜ்வரமும் உண்டாயிருக்கும்; பலம் உடைந்து பேதியாகும்; உடல் மிகவும் பசுமையாய் விடும்[3]. 5.

கப பாண்டு:—வாயில் கோழை அதிகமாய் ஊறுதல், வீக்கம், சோம்பல், ஆலஸ்யம், உடல் அதிகமாய் பாரமாதல், சர்மம்-மூத்திரம்-கண்கள்-முகம் இவை வெளிறிப்போதல் ஆக இவ் விகாரங்கள் கபதோஷக் கோளாறாலான பாண்டுவிற் காணும். 6.

ஸந்நிபாத பாண்டு:—மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்துண்டான பாண்டு ரோகத்தில் ஒவ்வொரு தோஷத்தின் குறிகளும் சேர்ந்து காணும்; அவற்றோடு ஜ்வரம், அரோசகம், இயற்கைக்கு அதிகமான இருதயத்துடிப்பு, வாந்தி, நாவறட்சி, சோர்வு, உடலிளைத்தல், இந்த்ரியங்கள் க்ஷீணித்தல் ஆக இக்குறிகளும் கண்டால் அது அஸாத்ய வியாதியாகும். 7.

ம்ருத்திகையாலுண்டாகும் பாண்டுவின் ஸம்ப்ராப்தி:—மண்ணை உண்ணும் வழக்கமுடையவனுக்கு தோஷங்களில் ஏதேனும் ஒன்று பிரகோபமடையும். அவற்றுள் கஷாயரஸமுள்ள மண் வாதத்தையும், உவர் மண்ணானது பித்தத்தையும், இனிப்பான சுவையுள்ள மண் கபதோஷத்தையும் பிரகோபிக்கச் செய்யும்; மேலும் ம்ருத்திகையானது இரஸாதிதாதுக்களையும், ரூக்ஷத் தன்மையினால் புஜித்த உணவையும் வறண்டு போகச் செய்யும். மெலும் ம்ருத்திகை பக்வமடையாதாகையால், அது அங்ஙனமே ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் இரஸ இரத்தக்குழாய்களை நிரப்பி அவற்றில் அடைப்பையும் உண்டு பண்ணுகிறது; மேலும் அது இந்த்ரியங்களுடைய சக்தியைப் போக்கி, அங்ஙனமே சரீரகாந்தியையும்,[4] வீர்யத்தையும், ஓஜோதாதுவையும் அழித்து, சீக்கிரத்தில் பாண்டு ரோகத்தை யுண்டு பண்ணும் 8—9¾.

ம்ருத்திகாபாண்டுவின் இலக்ஷணம்:—ம்ருத்திகையினாலுண்டாகும் பாண்டுரோகம் தேஹ பலத்தையும், தேஹ நிறத்தையும், ஜாடராக்னியையும் அழிக்கும். கண்மண்டலம், கன்னம், புருவம் இவை வீக்கங்கொள்ள, பாதங்களும், நாபியும்-குதமும் வீங்க, குடலில் கிருமிகள் சேர, இரத்தம் கபம் இவற்றோடு கூடிய மலம் இப்பிணியாளிக்கு அதிஸார ரூபமாய் வெளியாகும். 10, 11.

---

மண் வாதத்தையும், உழமண் பித்தத்தையும், மதுரமான மண் கபத்தையும் பிரகோபிக்கச் செய்யும் என்கிற பிரமாணப்படி ம்ருத்திகாபக்ஷணத்தினாலும் தோஷங்கள் கோளாறடைந்து, அப்பால் தோஷக் கோளாறால் பாண்டு உண்டாகின்றதெனக் கருதி, ஸுச்ருதர் ம்ருத்திகாபக்ஷணத்தினாலான பாண்டுவைக் கூறவில்லைபோலும்.

1. இரத்தம் என்பது உபலக்ஷணம்; மாம்ஸமும் இரஸமும் கூட கோளாறடைவதாக த்ருடபலனும் ஹாரீதரும் கூறுகிறார்கள்.

2. "ஸர்வ வித பாண்டு ரோகங்களிலும் பாண்டுத்வம் என்கிற வெளுமை அதிகமிருப்பதால் இது பாண்டு எனப்படுகிறது" என்று ஸுச்ருதர் கூறுவதால் இங்கே கறுநிறம் செந்நிறங்கள் உண்டாவதாக மொழியப்படினும், ரோகத்தின் முக்கியலக்ஷணமான வெண்மை அதிகமிருக்கு மென்பதை மறக்கக்கூடாது.

3. பாண்டு ரோகம் பொதுவாகப் பித்தத்தினாலேயே உற்பத்தியாவதாகச் சாஸ்திரகாரஞ்ஞர் கூறுவர். அப்படிக் கிருந்தும் இதர தோஷஸம்பந்தமில்லாமல் கேவலம் பித்தத்தினால் உண்டாகும் பாண்டு பித்த பாண்டுவாகும்.

4. தேஜஸ் என்பதை சரீர காந்தி யென்று சிலரும் உடற் சூடு என்று சக்ரதத்தர் முதலியவர்களும் கூறுகிறார்கள்.

பாண்டு ரோகத்தில் அஸாத்ய லக்ஷணங்கள்:—(1) வெகு நாட்களுக்கு முன்பு உண்டாய் மிக்க முதிர்ந்து போயுள்ளதும் ஆகவே உரத்துப்போனதுமான பாண்டுரோகம் சிகித்ஸைக்கு வசப்படாது. (2) அவயவங்கள் வீங்கிப்போய், பார்க்கப்படுபவை யெல்லாம் மஞ்சள் நிறமாக எவனுக்குத் தோற்றுகின்றனவோ அவனுக்குண்டாயுள்ள பாண்டுவும் அஸாத்யமாகும். (3) இறுகிய சொற்ப மலத்துடன் மஞ்சள் நிறமாகவும் கபத்துடன் கூடியதாகவும்[1] எவனுக்கு அதிஸாரமும் உண்டாயிருக்கிறதோ அப்பாண்டு அஸாத்யமாம். (4) அதிக தீநத்தன்மையடைந்து, மிகுதியாக வெண்மை நிறத்தினாலேயே அவயவங்கள் பூசப்பட்டதை போலத் தோற்ற, வாந்தி மூர்ச்சை நாவறட்சி இவற்றால் வருந்துபவனான பாண்டுரோகியும் பிழைக்கமாட்டான். (5) இரத்தம் க்ஷீணித்துப் போய் அதனால் உடலெல்லாம் வெண்மையாகப் போனால், அவ்வித பாண்டுவும் அஸாத்யமே. (6) எவனொருவனுக்குப் பற்களும் நகங்களும்வெளிறியிருக்கின்றனவோ, நேத்திரங்களும் அவ்விதமே வெண்மையாகப் போயிருக்கின்றவோ, வெண்ணிறமான மண்டலங்கள் எவனது பார்வைக்கு எங்கும் புலப்படுகின்றனவோ அப்பாண்டுரோகியும் இறந்துவிடுவான். (7) தேஹத்தின் முனைகளில்[2] வீக்கமுண்டாய், மத்தியப்பிரதேசத்து அவயவங்கள் மிகவும் இளைத்துப் போயுள்ள பாண்டுரோகியென்ன, அங்ஙனமே முனைபாகங்கள் இளைத்து மத்திய அவயவங்கள் வீக்கங்கொண்டுள்ள பாண்டுரோகியென்ன, குதத்திலும் ஆண்குறியிலும் பீஜங்களிலும் வீக்கங்கொண்ட பாண்டுரோகியென்ன இவர்களையும் கைவிடவேண்டியதே. (8) மிக்க இளைத்து வியாதியால் தவித்துக்கொண்டு பிரஞ்ஞையற்றவன் போல் வீழ்ந்திருக்கும் பாண்டுரோகியையும் நற்பெயரை விரும்பும் வைத்தியன் சிகித்ஸை செய்ய ஏற்றுக்கொள்ளக் கூடாது[3]. (9)அவ்விதமே அதிஸாரம் ஜ்வரம் இவ்விரண்டாலும் கஷ்டப்படும் பாண்டுரோகிக்கும் சிகித்ஸை செய்வதிற் பிரயோஜனமில்லை. 12—15.

### சாமலா அல்லது காமாலை.[4]

காமாலையின் ஸம்ப்ராப்தி:-யாதொரு பாண்டுரோகியானவன் பித்தத்தை விருத்தி செய்யக்கூடிய பதார்த்தங்களை வெகு அதிகமாயுபயோகிக்கின்றானோ,அவனுடைய இரத்தத்தையும் மாம்ஸத்தையும் பித்தமானது தஹித்து காமாலை யென்கிற காமலாரோகத்தை யுண்டு பண்ணுகிறது. 16.

காமாலையின் இலக்ஷணம்:—அப்பிணியாளியின் நேத்திரங்களும், சர்மமும், நகங்களும், முகமும் பசுமை நிறங்கொள்ளும்; மலமும் மூத்திரமும் செந்நிறமாகவேனும், மஞ்சள் நிறமாகவேனும் மாறும்; அவன் தவளையைப் போன்ற தேஹவர்ணத்தைப் பெற்று, புலன்கள் மங்கலடைய, உடலழற்சியாலும், அரோசகத்தினாலும், உணவு ஜீர்ணமாகாமையாலும், தேஹபலம் குன்றுவதாலும், சரீரமிளைப்பதாலும் துன்புறுவான். 17

1. இதில் கபம் முக்கியமாய் ஸம்பந்தித்திருந்தும் மலமானது இளகியிருப்பதற்குப் பதிலாய் இறுகலாகவும், அதிகமாயிருப்பதற்குப் பதிலாகச் சொற்பமாகவும், வெண்மைக்குப் பதிலாக மஞ்சள் நிறமாகவும் இருப்பது வியாதியின் பிரபாவத்தினால் என்றறிக.

2. கைகள், கால்கள், சிரஸ் இவை இங்கே தேஹ முனைகள் என்று வழங்கப்படுகின்றன.

3. இந்த நிலைமையை ஸுச்ருதர் பாலகம் என்றும், அதனால்பீடிக்கப்படுவனை பாலகீயென்றும் கூறுகிறார். “முனைகளில் வீங்கியும், இடையில் இளைத்தும்’ அல்லது முனைகளில் இளைத்தும் இடையில் வீங்கியும், குதம் ஆண்குறி இவற்றில் வீங்கியும், ஜ்வரம் அதிஸாரம் முதலியவைகளால் மூர்ச்சித்து இறந்தவன் போலும் தோற்றும் ரோகி பாலகீ யெனப்படுவான்” என்று மற்றோர் ஆசிரியர் கூறுகிறார்.

4. காமாலை யென்கிற இவ்வியாதி ஸம்ஸ்க்ருதத்தில் “காமலா” என்று வழங்கப்படும். காமாலை பாண்டுரோகத்தின் உபத்திரவமாகவும் உண்டாகலாம், அல்லது தனித்துச் சுதந்திரமாகவும் காணலாம்.

கும்ப காமாலை:—கோஷ்டத்தையும்[1] சாகைகளையும்[2] பற்றி, மிகுதியாகப் பித்தமேலீட்டினால் உண்டாகும் இக்காமாலையானது காலக்கிரமத்தில் மிகவும் முதிர்ந்து போய், கஷ்டஸாத்யமான கும்பகாமலா (கும்பகாமாலை) என்பதாக[3] மாறும். 18.

காமாலையின் அஸாத்யக் குறிகள்:-எவனொருவனுக்கு மலம் கறுநிறமாகவும் மூத்திரம் பசுமையாகவும் இருந்து, தேஹம் மிகவும் வீங்கி, கண்களும் முகமும் சென்னிறமடைந்து, வாந்தியும் இரத்தங் கலந்துண்டாகிறதோ, அங்ஙனமே மூத்திரமும் இரத்தங் கலந்ததாய் வெளியாகிறதோ, எவன் மிகத் துவண்டு வருந்துகிறானோ, தேஹதாபம், அரோசகம், நாவறட்சி, வயிற்றுப் பொருமல், சோம்பல், மூர்ச்சை இவற்றாலும் துன்பப்படுகிறானோ, முற்றிலும் பசியற்றுப் போய் ஞாபகசக்தியுமிழக்கிறானோ அந்த காமாலை ரோகி சீக்கிரம் இறந்துவிடுவான். 19, 20.

கும்பகாமலாவின் அஸாத்ய நிலைமை:—வாந்தி, அரோசம், இருதயம் வெகு அதிகமாகத் துடித்தல், ஜ்வரம், தேஹம் துவண்டு போதல் இவற்றால் பீடிக்கப்பட்டும், ச்வாஸம் காஸம் இவற்றால் துன்பப்பட்டும், அதிஸாரத்தினால் வருந்தியுங் கொண்டுள்ள கும்பகாமாலை ரோகி பிழைக்கமாட்டான். 21.

ஹலீமகம்:—எப்பொழுது பாண்டுரோகத்தில் தேஹநிறம் மஞ்சளாகவும், கறும் பசுமையாகவும் ஆய்விடுகிறதோ, தேஹபலமும் உத்ஸாஹமும் க்ஷீணித்துப் போகின்றனவோ, சோம்பல் - ஜாடராக்னி மந்தித்தல்-மிருதுவான ஜ்வரம் இவை தொடர்கின்றனவோ, ஸ்த்ரீகளிடம் ஆவலற்று, உடலுளைத்தல் கண்டு, தேஹத்தில் அழற்சியும் நாவறட்சியும் அரோசகமும் தலைச்சுற்றலும் உண்டாகின்றனவோ, அப்பொழுது அப்பிணியாளிக்கு "ஹலீமகம்" என்னும் வியாதி கண்டிருப்பதாய் அறிக. இது வாதமும் பித்தமும் மிகப் பிரகோபித்து உண்டாகிறது.[4] 22, 23.

## 9. இரக்த-பித்த நிதானம். *

இரக்த-பித்த நிதானமும் ஸம்ப்ராப்தியும்:—வெயிலில் அதிகமாய் நடமாடுதல், அதிகமாய் வியாயாமம் செய்தல், அதிக மனத்துயரம், மிகுதியாக வழி நடத்தல், மிதமிஞ்சிய புணர்ச்சி இவற்றாலும், தீக்ஷணமான வஸ்துக்களையும், உஷ்ணமான வஸ்துக்களையும், க்ஷாரத்திரவ்யங்களையும்,[5] அம்லங்களையும், கடுரஸமுள்ள சரக்குகளையும் அமிதமாயுபயோகிப்பதாலும் பித்தம் பிரகோபித்து விதக்த்தம் என்கிற அழலும் நிலைமையைப் பெற்று, அப்பித்தமானது தனது கோளாறடைந்த குணத்தினாலேயே இரத்தத்தையும் சீக்கிரம் அழன்று போகச் செய்கிறது. அதன் பிறகு அவ்வித ரக்தம் மேல் நோக்கியும், கீழ்நோக்கியும்.

1. கோஷ்டம்—ஆமாசயம், அக்னியாசயம், பக்வாசயம், மூத்திராசயம், இரத்தாசயம், ச்வாஸாசயம், மலாசயம் இவையெல்லாம் கோஷ்டங்களாகும். இது விசேஷ பரிபாஷை. ஸாதாரணமாக இரைப்பை முதல் குதம் வரையிலுள்ள குடலே கோஷ்டமெனப்படும்.

2. சாகைகள்—இரத்தம் முதலிய ஆறு தாதுக்கள் சர்மம் இவற்றின் பொதுப் பெயர்.

3. கும்பகாமாலை—இது தமிழில் வறட்காமாலையென்று வழங்கப்படும். இதில் வீக்கமும் அதிகமாயுண்டாகும்.

4. பாண்டுவிலேயே லாகவகம் அல்லது அலஸம் என்கிற மற்றொரு நிலைமை ஸுச்ருதரால் கூறப்படுகிறது. [லாகவகம்—ஜ்வரம், உடலுளைத்தல், தலைச்சுற்றல், அக்னிமாந்த்யம், சோம்பல், தேஹம் க்ஷீணித்தல் இவை இதற்குக் குறிகள்.] ஹலீமகத்திலேயே இக்குறிகளெல்லாம் அடங்கியிருப்பதால் லாகவகம் அல்லது அலஸம் என்பது பிரத்தியேகமாக மாதவகரால் கிரஹிக்கப்படவில்லை.

* இரக்த-பித்தம்—பித்தம் வேக்காட்டையடைந்து (காந்தலுற்று), இரத்தமும் அதனால் அழற்சியடைந்து தேஹத்தில் ஏதேனும் ஒரு வழியால் அத்தோஷம் வெளியாகும் வியாதி.

5. க்ஷாரத்திரவ்யங்கள்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம் முதலியன.

அல்லது இரண்டு பக்கங்களிலுமாய் வெளிப் படுகின்றது. அதாவது மேலே நாசி, செவி, கண்கள், வாய் இவற்றின் மூலமாகவும், கீழே ஆண்குறி அல்லது யோநி, குதம் இவற்று ளும், மற்ற தேஹத்திலும் எல்லா மயிர்க் கால்கள் மூலமாகவும் அவ்விதம் பிரகோ பித்து அழன்றுபோன இரத்தம் வெளிப்படு கிறது.[1] 1—3.

இரக்த-பித்தத்தின் பூர்வரூபம்:— ஜாட ராக்னி மந்தமாதல், குளிர்ச்சியில் விருப்பம் அதிகரித்தல், தொண்டை புகைந்து உஷ்ண மாதல், வாந்தி, ச்வாஸத்தில் அபத்தின் வா ஸனையேற்படுதல் ஆகிய இக்குறிகள் இரக்த-பித்தம் உண்டாவதை அறிவிக்கக் கூடிய முற் குறிகளாம். 4

ச்லேஷ்மிக இரக்த-பித்தம்:— கபஸம்பந்த மான இரக்த பித்தத்தில் வெளியாகும் இரக் தமானது கனமாகத் தோய்ந்தும், வெளிறி யும், ஸ்நிக்த்தமாகவும், பிசுபிசுப்புள்ளதாக வும் இருக்கும். 4½.

வாதிக இரக்த-பித்தம்:—வாததோஷம் அதி கரித்த இரக்த-பித்தத்தில் வெளியாகும் இரத்தமானது கறுஞ்சிவப்பாகவும், நுரை யுடையதாகவும், ரூக்ஷமாகவும் இருக்கும் 5.

பைத்திக இரக்த-பித்தம்:—பித்த ஸம்பந்த மான இரக்த-பித்தத்தில்[2] வெளியாகும் இர க்த-பித்ததோஷம் கஷாய நிறமாகவும், கறுப் பாகவும், பசு மூத்திரம் போன்றதாகவும், ஒருவித ஊதாநிறமாகவும், ஒட்டடை போன் றதாகவும், மைபோன்ற நிறமுள்ளதாகவும் ஆக இவ்வாறு பல வேறு நிறமுள்ளதாகக் காணப்படும். 6.

ஸம்ஸர்க்க-ஸந்நிபாத இரக்த-பித்தங்கள்:— ஸம்ஸர்க்கம் என்கிற இரட்டை தோஷங்க ளால் காணும் இரக்த-பித்தம் ஒவ்வொன்றி லும் இரண்டிரண்டு தோஷங்களுடைய குறி கள் கலந்து உண்டாகும். அங்ஙனமே ஸந்நி பாத இரக்த-பித்தத்தில், மூன்று தோஷங் களில் ஒவ்வொன்றுலு முண்டாகும் இரக்த-பித்தத்திற்காணும் குறிகளெல்லாம் ஒரு மிக் கச் சேர்ந்து காணப்படும். 6½.

இரக்த-பித்தம் மூன்று வகைப்படும்:—(1) மேல் நோக்கி வெளியாவது ஊர்த்வக ரக்த-பித்தம் எனப்படும்; இது கபதோஷத்துடன் கூடியது. (2) கீழ் த்வாரங்களால் வெளியா வது அதோக ரக்த-பித்தம் ஆகும்; இதில் வாத தோஷம் தொடர்ந்திருக்கும். (3) இரண்டு மார்க்கங்களாலும் வெளியாவது உபய மார்க் க ரக்த-பித்தம் எனப்படுகிறது; இதில் வாத-கபங்களாகும் இரண்டு தோஷங்களும் தொ டர்ந்திருக்கும். 7½.

இரக்த-பித்தத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமை கள்:—அவற்றுள் ஊர்த்வக ரக்த-பித்தம் சிகி த்ஸையினால் எளிதில் நிவாரணமாகக் கூடி யது. அதோக ரக்த-பித்தம் யாப்யமாகும். உபயமார்க்கமான இரக்த-பித்தம் அஸாத்ய மாம். மேலும் ஒரு மார்க்கத்தினால் வெளி யாகும் இரக்த-பித்தமும், பலசாலிக்குக் காணும் இரக்த-பித்தமும், அதிக வேகமில் லாமல் மிதமாய் வெளிப்படுவதும், சொற்ப காலத்திற்குள் உண்டானதும், ஸௌக்கமான சீதள காலத்தில் தோன்றியதும், உபத்திர வங்களால் தொடரப்படாததுமான இரக்த-பித்தமும் எளிதில் நிவ்ருத்தியடையும். அன்றியும், ஒரு தோஷத்தினால் தொடரப் பட்டுக் காணும் இரக்த பித்தம் ஸாத்யமா கும்; இரண்டு தோஷங்கள் தொடருமானால்

1. இங்கு குறிப்பிட்டுள்ள நிலைமைகளை யனுஸரி த்து, இவ்வியாதியானது "ஊர்த்வகரக்த-பித்தம்", "அதோகரக்த-பித்தம்", "உபயமார்க்க ரக்த-பித்தம்' என்று மூன்று விதமாய் வழங்கப்படுகிறது.

2. எல்லா இரக்த-பித்தமும் சேர்ளாறடைந்த பித் தத்தினால் உண்டாகின்றன, அப்படியிருக்க பித்தத் தினால் உண்டாகும் இரக்த-பித்தமென்று பிரத்தியேக மாகக் கூறப்படுவ தெங்ஙனம்? என்றால், இதர தோ ஷங்களுடைய ஸம்பந்தமில்லாமல் பித்ததோஷக் கோளாறு ஒன்றையே ஆதாரமாகக் கொண்ட இரக்த-பித்தம் எனக் கருத்து.

அது யாப்யம்; மூன்று தோஷங்களால் உண்டாவதும், அதிக வேகமாக வெளியாவதும், அக்னி மாந்த்யமிருக்கையிற் காண்பதுமான இரக்த பித்தம் அஸாத்யமாகும். வேறு வியாதிகளால் தேஹம் க்ஷீணித்தவனுக்கும், கிழவனுக்கும், அரோசகம் முதலியதால் உணவுண்ணுமலிருப்பவனுக்கும் உண்டாகும் இரக்த பித்தமும் அஸாத்யமாகும். 8-10

இரக்த-பித்தத்தில் உபத்திரவங்கள்:-பல மின்மை, ச்வாஸ-காஸம், ஜ்வரம், வாந்தி, வெறி, தேஹம் வெளுத்துப் போதல், தேஹத்தில் தாபம், மூர்ச்சை, புஜித்த உணவு மிகக் கடுமையாகக் குடலில் புளித்துக் காந்தலுறுதல், எப்பொழுதும் மனதில் அதைர்யம், இருதயத்தில் அபரிமிதமான வேதனை, நாவறட்சி, மலம் உடைந்து பேதியாதல், சிரஸ்ஸில் தாபம், நாசியினால் சீழைச் சிந்துதல், அன்னத்வேஷம், உணவு ஜீர்ணமாகாமை ஆக இவை இரக்த பித்தத் திற்காணும் பலவேறு விகாரங்களும் உபத்திரவங்களுமாம். 11.

இரக்த-பித்தத்தின் அஸாத்ய லக்ஷணங்கள்:- இதில் வெளியாகும் இரக்த-பித்த தோஷமானது மாம்ஸம் கழுவிய தண்ணீர் போன்றதாகவும், கொதிக்க வைத்துப் பழுதடைந்த இரத்தம் போன்றதாகவும், சேறு கலந்த தண்ணீர் போன்றதாகவும், கொழுப்பும் சீழும் இரத்தமும் கலந்த தோஷம் போன்றதாகவும், அல்லது யக்ருத் என்கிற கல்லீரல் போன்றதாகவும், பழுத்த நாவற்கனி போன்றதாகவும், கறுப்பாகவும், அதிக நீலமாகவும், அதிக சவநாற்றமுடையதாகவும், இந்திரதனுஸ்ஸூக்குச் சமானமான காந்திகளைப்பெற்றதாகவும்—ஆக இக்கோளாறுகளோடு கூடியதாக—இருக்குமானால், இக்கோளாறில் எதுவும் அஸாத்யக் குறியென்றறிக. மேலும் யாதொரு இரக்த-பித்தத்தினால் வருந்தும் ரோகியானவன், தான் நோக்கும் வஸ்துக்களையும், ஆகாயத்தையும் இரக்த நிறமாகவே காண்கிறானோ, அவனுக்குண்டாயுள்ள அந்த வியாதியும் நிச்சயமாய் அஸாத்ய மென்றே யறிக. அன்றியும் எவனொருவன் மிகுதியாக இரத்தத்தைக் கக்குகிறானோ, இரத்தம் போன்று மிகச் சிவந்த நேத்திரங்களையுடையவனாகவும் ஆகிறானோ, பார்க்கப்படுவ தெல்லாம் இரத்தமயமாகவே எவனுக்குத் தோற்றுகின்றதோ அவ்வித இரக்த-பித்தரோகியும் ஜடிதியில் உயிரிழப்பான். 12—14.

## 10. இராஜயக்ஷ்ம-க்ஷதக்ஷீண நிதாநம் *

### இராஜயக்ஷ்மா.

இராஜயக்ஷ்ம நிதாநம்:—வேகங்களைத் தடுப்பது,[1] தாதுக்கள் க்ஷீணமடைவது, ஸாஹஸமான கடும் வேலைகளைச் செய்வது[2], விஷமமான உணவுகளைத் தின்பது[3] ஆக இந்த நான்கு முக்கியமான காரணங்களால் மூன்று தோஷங்களும் கோளாறடைந்து இராஜயக்ஷ்மா வென்கிற க்ஷயரோகம்[4] உண்டாகிறது 1.

* இராஜயக்ஷ்மா—ஸாதாரணமாய் க்ஷயம் என்று வழங்கப்படும் பிரஸித்தமான வியாதி. க்ஷதக்ஷீணம்-இதற்கே உரக்ஷதம் என்றும் பெயர்; இது ச்வாஸாசயத்தை ஆச்ரயித்துண்டாகும் கழலைரோகம்.

1. வேகங்களைத் தடுப்பது என்பதால் அபானவாதம், மலம், மூத்திரம் இவைகளின் வேகத்தை அடக்குதல் எனப் பொருள்: அஷ்டாங்க ஹ்ருதயத்தின் வேகவிதாரணீயாதி அத்தியாயங்களில் கூறப்படுகிற கொட்டாவி முதலிய இதரவேகங்கள் இங்கு குறிக்கப்படவில்லை. "ஏதேனும் முகாந்தரத்தினால் அபானவாதம், மூத்திரம், மலம் இவற்றின் வேகம் தடுக்கப்படுமானால் அது யக்ஷ்மாவுக்குக் காரணமாகும்" என்று சரகர்.

2. ஸாஹஸமான கடுமையாயுள்ள வேலைகளை வலியச் செய்வது க்ஷதக்ஷீணம என்கிற உரக்ஷதரோகத்திற்கு முக்கிய காரணமாகும்.

3, "பலவேறு உணவுகளை மாற்றி மாற்றி யுண்கிறவர்களுக்கு வாத தோஷம் முதலியவை வைஷம்யமடைந்து, போஷணத்திரவ்யம் செல்லும் மார்க்கங்களான ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்து, தாதுக்கள் போஷிக்கப்படாமையால் மிகக் கோளாறடைய அத்தோஷங்கள் வியாதியை (க்ஷயத்தை) உண்டுபண்ணுகின்றன; தாதுக்களும் போஷணையின்றி க்ஷீணிக்கும்" என்று சரகர்.

4. இதற்கே சோஷம், யக்ஷ்மா என்றும் பெயர். ஆனால் தாதுக்களின் ஸதாரணமான இளைப்பு அல்லது சிதைவுக்கு சோஷம் என்கிற பெயா முக்கியமாக வழங்கப்படுகிறது.

இராஜயக்ஷ்ம ஸம்ப்ராப்தி:—முக்கியமாக கப மும்[1] ஸாதாரணமாய் மற்ற தோஷங்களும் பிரகோபித்து இரஸதாது ஓடுவதற்கு ஆதார மான ஸ்ரோதோ மார்க்கங்கள் தடுக்கப்படுவ தாலும், அதிகமாகச் சிற்றின்பத்தில் ஈடுபடு வதால் சுக்ரதாது க்ஷீணிப்பதாலும் மற்ற தா துக்கள் அனைத்தும் கிரமமாக க்ஷீணித்து வர,[2] அதனால் அம்மனிதன் முற்றிலும் சுஷ் கித்து விடுகிறான். 2.

இராஜயக்ஷ்ம பூர்வரூபம்:—ச்வாஸக் கோ ளாறு, தேஹமெங்கும் வேதனை, கோழை யூறுதல், தவடைகள் சுஷ்கித்தல், வாந்தி, பசியின்மை, வெறி, பீநஸம், காஸம், அதிக நித்திரை இவ்விகாரங்கள் இராஜயக்ஷ்மாவென் கிற சோஷம் உண்டாவதற்கு முன்பு பூர்வரூ பமாகத் தோன்றும்; அம்மனிதன் கண்கள் வெளிறி, இறைச்சியுண்பதில் அதிக விருப் பத்தையும், புணர்ச்சியில் அதிக ஆவலையும் பெறுவது வழக்கம். மேலும் ஸ்வப்னத்தில் காகம், கிளி, ஸல்லகி யென்கிற பக்ஷி, மயில், கழுகு ஆக இப்பறவைகளும், குரங்குகளும், ஓணான்களும் தன்னைச் சுமந்து கொண்டு போ வதாக அல்லது தீண்டுவதாக அவனுக்குத் தோற்றும்; வற்றிப்போன நதிகளையும், உலர் ந்தும், காற்று புகை காட்டுத்தீ இவைகளால் அழிக்கப்பட்டும் கிடக்கும் விருக்ஷங்களையும் அவன் ஸ்வப்னத்திற் காண்பான். 3, 4.

இராஜயக்ஷ்மாவின் ஸாமாந்ய லக்ஷணம்:—தோள்கள் விலாப்பக்கங்கள் இவற்றில் வேக் காட்டுடன் கூடிய வேதனை, கைகளிலும்பாதங் களிலும் எரித்தல், எல்லா அவயவங்களையும் ஆச்ரயித்த ஜ்வரதாபம் ஆக இவை இராஜ யக்ஷ்மாவில் காணும் பொதுக்குறிகளாம்[3]. 5.

இராஜயக்ஷ்மாவின் பதினோருவித விசேஷ லக்ஷணங்கள்:—(1) வாததோஷம் அதிகரித்த இராஜயக்ஷ்மாவில் குரல் பேதித்துப் போதல், வயிற்றுளைத்தல், தோள்கள் விலாப்பக்கங்கள் இவை சுருக்கங் கொள்ளல் ஆகிய இக்கோ ளாறுகள் காணும். (2) பித்ததோஷம் அதி கரித்த இராஜயக்ஷ்மாவில் ஜ்வரம், உடலழற்சி, அதிஸாரம், இரத்தம்வெளியாதல் ஆகிய விகா ரங்கள் தோன்றும். (3) கபதோஷம் அதிகரி த்துள்ள இராஜயக்ஷ்மாவில் சிரஸ் நிறைந்து பாரமாயிருப்பதாகத் தோற்றல், உணவில் விருப்பமின்மை, காஸம், தொண்டை பிளக் கப்படுவது போன்ற வேதனை ஆக இக்கோ ளாறுகள் உண்டாகும். 6. 7.

இராஜயக்ஷ்மாவின் அஸாத்ய லக்ஷணங்கள்:- இராஜயக்ஷ்மாவில் முற்கூறிய பதினோரு குறிகளுமோ அல்லது அவற்றுள் ஆறு குறி களோ[4] ஒரு மிக்கக் காணுமானாலும், காஸம், அதிஸாரம், விலாப்பக்க நோவு, தொண்டை நோவு, அரோசகம், ஜ்வரம் இவற்றுடன்கூடிய தாயிருந்தாலும், காஸம் ச்வாஸம் இரக்த வா ந்தி ஆக இம்மூன்று வித விகாரங்கள் சேர்ந் திருந்தாலும் அவ்வித க்ஷய ரோகத்தினால் வருந்துபவனுக்கு சிகித்ஸை செய்ய நற்பெய ரில் விருப்பமுள்ள வைத்தியன் பிரவ்ருத்திக்

1. க்ஷய ரோகத்தில் மிகுதியாக கபதோஷம் கோ ளாறடைவதும், அதனாலேயே ச்வாஸாசயம் விசேஷ மாகச் சீரடைவதும், ஆகவெ விகாரமடைந்த கபதோ ஷம் அதிகமாய் ஸ்ரவிப்பதும் இயல்பு.

2. இரஸம், இரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்த்தி, மஜ்ஜா, சுக்ரம் என்கிற ஸப்ததாதுக்களால் ஆனது தேஹம். இதில் முதலில் இரஸதாது க்ஷீணித்து, அதற்கப்பால் போஷணையின்மையினால் இரத்தம் முதலியதாதுக்கள் க்ஷயிப்பது அநுலோமக்ஷயம். அல் லது கடைசியான சுக்ரதாது க்ஷயித்து, அப்பால் கிரம மாக அதற்குமுன்புள்ள மஜ்ஜாதி தாதுக்கள் க்ஷீண மடைவது விலோமக்ஷயம். இவ்விரண்டு விதமான க்ஷயங்களுக்கும் முறையே இங்கு ஸம்ப்ராப்திக்ரமம் குறிக்கப்படுவதாய் அறிக.

3. போஜன் முதலிய வேறுசிலர் "காஸம், ஜ்வரம், இரக்த-பித்தம் ஆகிய மூன்றும் இராஜயக்ஷ்மாவின் பொதுக்குறிகள்" என்கிறார்கள்.

4. அன்னத்வேஷம், ஜ்வரம், ச்வாஸம், காஸம், இரத்தம் கக்குதல், குரல் உடைந்து மாறுபடுதல் ஆகிய இவை ஸுச்ருதரால் கூறப்படும் ஆறு குறி களாம்.

கக் கூடாது. ஆகவே ஸகல லக்ஷணங்களோடும் கூடியதாகவோ, அல்லது அதிற் பாதியான ஆறு லக்ஷணங்களுள்ளதாகவோ, அல்லது காஸம் ச்வாஸம் இரக்தம்கக்குதல் இம்மூன்று குறிகளோடு கூடியதாகவோ காணப்படும் இராஜயக்ஷ்மரோகத்திற்கு சிகித்ஸை செய்வதிற் பிரயோஜனமில்லை; மற்ற எந்த லக்ஷணங்கள் இருந்த போதிலும் அது நிவாரணம் செய்யக்கூடிய தேயாம்.[1] அன்றியும் அபரிமிதமாகப் புஜிப்பவனும், மிக க்ஷீணித்து வருபவனும், அதிஸாரத்தினால் வருந்துபவனும், பீஜமும் வயிறும் வீங்கியவனுமான க்ஷய ரோகிக்கு சிகித்ஸை செய்வதில் உபயோகமில்லை. கண்கள் வெளுத்துப் போனவனும், அன்னத்தில் வெறுப்புண்டானவனும், ஊர்த்வச்வாஸத்தினால் கஷ்டப்படுபவனும், கஷ்டப்பட்டு அதிகமாய் மூத்திர விஸர்க்கம் செய்பவனுமான யக்ஷ்மரோகி பிழைக்கமாட்டான். 8—12.

இராஜயக்ஷ்மாவில் ஸுஸாத்யமான நிலைமைகள்:—ஜ்வரம் தொடராததும், பலசாலி- பலமான சிகித்ஸைகளைத் தாங்கு மியல்புள்ளவன்- தைரியசாலி- நல்ல ஜாடராக்னியுடையவன்- பருமனான தேஹமுள்ளவன் ஆகியவர்களுக்குக் காணுவதுமான இராஜயக்ஷ்மா சிகித்ஸையினால்நிவ்ருத்திக்கக் கூடியதாம். 13.

ஏழுவிதமான சோஷங்கள்:—வ்யவாய சோஷம், சோக சோஷம், ஜரா சோஷம், வ்யாயாம சோஷம், அத்வ சோஷம், விரண சோஷம், உரக்ஷத சோஷம் என்கிற சோஷ வியாதிகளின்[2] இலக்ஷணங்கள் அடியிற் கூறப்படுகின்றன. 14.

வ்யவாய சோஷம்:—வ்யவாயம் என்கிற மித மிஞ்சிய புணர்ச்சியினால் உண்டாகும் க்ஷயமானது சுக்ரக்ஷயத்தினால் உண்டாகும் குறிகளுடன் கூடியதாய்[3] பிணியாளியைத் தொந்தரவு செய்யும்; அவனுடைய தேஹம் மிக்க வெளிறிப் போகும்; அவனுடைய சுக்ரம் முதல் இரஸம் வரையிலும் உள்ள தாதுக்கள் கிரமமாக க்ஷயித்து வரும். 15.

சோக சோஷம்:—இதில் மனிதன் எப்பொழுதும் எதையேனும் நினைத்து நினைத்துக் கவலையுற்றிருப்பான்; அவயவங்கள் தளர்ச்சியடைந்தவனாய், சுக்ரம் க்ஷீணித்ததாலுண்டாகும் மற்றக் கோளாறுகளுடன் கூடியவனாயிருப்பான்.[4] $15\frac{1}{2}$.

ஜரா சோஷம்[5]:—கிழத்தனத்தினாலான க்ஷயத்தில் சுக்ரம், புத்தி, தேஹவன்மை, நேத்திரம் முதலிய இந்த்ரியங்கள் ஆகியஇவை க்ஷீணிக்கும்; நடுக்கம் காணும்; அரோசகம் உண்டாகும்; அவனது குரல் உடைந்துபோன வெண்

1 "வாதரோகம், அபஸ்மாரம், குஷ்டம், பீஜரோகம், புராணஜ்வரம், குல்மம், மது மேஹம், இராஜயக்ஷ்மா ஆகிய இந்த ரோகங்களில் சரீர பாரமும் தசைநார்களும் க்ஷீணித்து விட்டால் அஸாத்யமாகும்" என்று சரகர்.

2. இவ்வேழும் முற்றிலும் இராஜயக்ஷ்மாவைச் சேர்ந்தவையல்ல வென்றும், கேவலம் அந்தந்த தாது முதலியதின் பலமான இளைப்பால் உண்டாகுபவை யென்றும் கூறவேண்டும்; சோஷம் என்கிற வியாதியில் சில தோஷங்களுடைய லக்ஷணங்களே தோன்றும்; மூன்று தோஷங்களுடையவும் எல்லாக் குறிகளுமே இதில் காணுவதில்லை. ஆகையால் இவ்வித வியாதிகள் தாது க்ஷயங்கள் என்று மாத்திரம் கூறப்படுமேயன்றி இராஜயக்ஷ்மா வென்று வழங்கப்படுவதில்லை.

3. சுக்ரக்ஷயத்திலுண்டாகும் முக்கியமான குறிகள் பின்வருமாறு:-'சுக்ரக்ஷயத்தில் ஆண்குறி பீஜங்கள் இவற்றில் வேதனை, புணர்ச்சியில் சக்தியின்மை, சுக்ரம் சிறிதும் ஸ்ரவிக்காமை அல்லது மிகச்சொற்பமாக ஸ்ரவித்தல் அல்லது சுக்ரத்திற்குப் பதிலாக இரத்தம் ஸ்ரவித்தல் இவை குறிகளாம்.' ஸுச்ருதர்.

4. "சுக்ரம் க்ஷயித்துப் போவதைத் தவிர சுக்ர க்ஷீணஸம்பந்தமான மற்றக் கோளாறுகளோடு கூடியது" என்று ஸுச்ருதர்.

5. ஜரா சோஷம் — கிழத்தனத்திலேற்படும் க்ஷயம்.

கலத்தைத் தட்டுவதாலுண்டாகும் சப்தம் போன்றதாயிருக்கும்; கபமில்லாமலேநாசியைச் சிந்துவான்; தேஹகுருத்வம், புறட்டல் இவற்றால் பீடிக்கப்படுவான்; வாயிலும், நாசியிலும், கண்களிலும் நீர் ஊறும்; மலம் இறுகி சுஷ்கித்திருக்கும்; தேஹ காந்தி மழுங்கி ரூக்ஷமாகும். 16—17½.

அத்வ சோஷம்[1] :—மிதமின்றி வழி நடப்பதாலான சோஷத்தில் அவயவங்கள் சோர்ந்து விழும்; வறுக்கப்பட்டதுபோல் தேஹநிறம் கோளாறடையும்; அவயவங்களின் உணர்ச்சியிழந்துபோம்; க்லோமம், தொண்டை, வாய் இவை வறட்சியுறும். 18½.

வ்யாயாம சோஷம்:—வ்யாயாம மென்னும் தேஹவுழைப்பினால் உண்டாகும் சோஷத்தில் அத்வ சோஷத்திற்குக் கூறிய லக்ஷணங்களே பெரும்பாலும் காணும்.[2] மேலும் இரக்தப் பெருக்கைத் தவிர்த்து[3] உரக்ஷதத்திற்கான மற்றக் குறிகளும் இதில் உண்டாகும். 19.

விரண சோஷம்:—விரணம் உண்டானவனுக்கு இரத்தம் மிகவும்க்ஷீணித்துப்போவதாலும், பலவித வேதனைகளாலும், அங்ஙனமே உணவை உட்கொள்ளாமற் போவதாலும் ஒருவித க்ஷயம் உண்டாகும்; அது மிகவும் அஸாத்யமாகக் கருதப்படுகிறது.[4] 20.

க்ஷத-க்ஷீணம்[5]

உரக்ஷத நிதாநம்:—வில் முதலிய ஆயுதப் பழக்கத்தினால் மிக்க அதிகமாய் ஆயாஸப்படுதல், வெகு பாரமான சுமையைச் சுமத்தல், பலிஷ்டர்களோடு த்வந்த்வயுத்தம் செய்தல், மேடுபள்ளமான உயர்ந்த பிரதேசத்திலிருந்து விழுதல், ஓடுகிற விருஷபம் அல்லது குதிரை அல்லது சிரமப்பட்டு அடக்கக்கூடிய வேறு அத்தகைய மிருகத்தை அடக்குதல், பாறை பெரிய மரக்கட்டை கனத்த கருங்கல் முதலிய குண்டு இவற்றையெடுத்து வீசி யெறிதல், எதிரிகளை பலமாகத் தாக்குதல், மிகவும் உரத்துக் கூச்சலிட்டுப் படித்தல், வேகமாக நெடுந்தூரம் ஓடுதல், பெரிய ஆறுகளை நீந்திக் கடத்தல், குதிரைகளோடு விரைந்தோடுதல், வலிய உயர எழும்பிக் குதித்தல், வெகு வேகமாகக் கூத்தாடுதல், அங்ஙனமே கடுமையான வேறு காரியங்களால் மிகவும் தாக்கப்படுதல், ஸ்த்ரீகளிடம் மிதமின்றிப் பிரவ்ருத்தித்தல், ரூக்ஷமாகவும் சொற்பமாகவும் அல்லது அமிதமாகவும் புஜித்தல் ஆகிய இத்தகைய காரியங்களால் மார்பினுட்புறம் சிதைவடைய அதனால் கடுமையான இந்த வியாதி ஸம்பவிக்கின்றது[6]. 21-25.

உரக்ஷதத்தின் லக்ஷணாதிகள்:—இந்த வியாதியில் மார்பு விறிந்து போவது போலவும், பிளக்கப்படுவது போலவும், சிதைக்கப்படுவது போலவும், நசுக்கப்படுவது போலவும் கடுமையான நோவுண்டாகும். அப்பால் விலாப்

1. அத்வ சோஷம்—வழி நடப்பதால் உண்டாகும் க்ஷயம்.

2. மிதமின்றி வழிநடப்பதும் கடுமையான வ்யாயாமமாகையால், வ்யாயாமம், வழிநடப்பது இவற்றால் உண்டாகும் கோளாறுகள் சற்றேறக்குறைய ஒரு மாதிரியானவை யெனக் கூறப்பட்டது. வ்யாயாமத்தின் குறிகள் அத்வ சோஷத்தின் குறிகளைவிட அதிக பலமா யிருக்கும்.

3. இரத்தப் பெருக்கைத் தவிர்த்து என்பதற்குப் பதிலாக "விரணத்தைத் தவிர்த்து" என்றும் கூறுவதுண்டு.

4. விரண சோஷம் முற்றிலும் அஸாத்ய மென்று கூறப்படுகிறது. அப்படியானால் "இளைத்துப் போகிறவர்களுக்கும், விரண சோஷிகளுக்கும் ப்ருஹ்மண சிகித்ஸை செய்யவேண்டும்" என்று ஸுச்ருதர் சிகித்ஸை கூறியிருப்பது எங்ஙனம்? என்றால், விரணத்தினால் சோஷம் ஆரம்பிக்கும் போதே, அக்குறிகள் பலமாகத் தோன்றாமலிருக்கையிலேயே ப்ருஹ்மண சிகித்ஸை செய்வது உசிதமென்பது ஸுச்ருதரின் கருத்து.

5. க்ஷதம்—விரணம் உண்டாவது, பிறகு அச்சிதைவை ஆதாரமாகக்கொண்டு ஏற்படும் க்ஷயத்திற்கு க்ஷீணம் எனப் பெயர். ஆகவே இவ்விரண்டிற்கும் ஒருங்கே க்ஷத-க்ஷீணம் எனப் பெயர் வழங்கப்படுகிறது. க்ஷதமே உரக்ஷதம் என்றும் கூறப்படும்.

6. இக்காரணங்களுள் சில எல்லா தேஹத்திற்கும், சில மார்புக்கு மாத்திரமும் தீங்கிழைப்பவையென்றறிக.

பக்கங்கள் சுஷ்கிக்கும்; அவயவங்கள் நடுக்கங் கொள்ளும்; தேஹத்தின் சுறுசுறுப்பும், வன்மையும், காந்தியும், உணவுகளில் விருப்பமும், ஜாடராக்னியும் கிரமக்கிரமமாகக் குன்றிப்போம்; ஜ்வரம், மனத்துயரம், மனச்சோர்வு, பேதி, ஜாடராக்னி அழிதல் ஆகிய இத்துர்க்குணங்களும் காணும்; அடிக்கடி இருமலுண்டாகும்; அங்ஙனம் இருமும் போது கெட்டுப்போய் ஆகவே ஒருவாறு கறுநிறமாகவும், அதிக துர்க்கந்தமுள்ளதாகவும், மஞ்சள் நிறமாகவும், கட்டிக்கட்டியாகவும், அளவில் அதிகமாகவும் இரத்தத்தோடு கூடியதாய் கபம் வெளியாகும். இது க்ஷதம் (அல்லது க்ஷதக்ஷீணம்) எனப்படும். இப்பிணியாளிக்கு சுக்ரதாதுவும், ஓஜோதாதுவுங்கூட க்ஷயிக்கும்; ஆகவே இப்பிணியாளி மிகவும் க்ஷயித்துப் போவான். இக்குறிகள் நன்கு விளங்காத வகையில் தோன்றியிருந்தால் அவையே க்ஷீணத்தின் பூவர்ரூபமாகும். 26—29.

க்ஷதத்தின் விசேஷலக்ஷணம்: க்ஷதம் என்கிற நிலைமையில் மார்பில் நோவுண்டாகும்; இரத்தம் கக்கப்படும்; இருமலுண்டாகும்; ஆக இவை க்ஷதத்தின் விசேஷ லக்ஷணங்களாம். $29\frac{1}{2}$.

க்ஷீணத்தின் விசேஷ லக்ஷணம்:—க்ஷீணம் அல்லது க்ஷயமடைவது என்கிற நிலைமையில் மூத்திரம் இரத்தங்கலந்திருக்கும்; விலாப்பக்கங்களிலும, ப்ருஷ்ட பாகத்திலும், இடுப்பிலும் இசுவும் பிடிப்பும் ஏற்படும்.[1] 30.

க்ஷத க்ஷீணத்தில் ஸாத்யா ஸாத்ய நிலைமைகள்:—லக்ஷணங்கள் சொற்பமாகக் கண்டு, ஜாடராக்னியும் நல்ல நிலைமையிலிருந்து, வியாதிக்ரஸ்தனும் இயற்கையிலேயே பலிஷ்டனாகவுமிருந்துவந்தால், வியாதியும் சொற்ப காலத்திற்குள்ளேயே ஏற்பட்டதாயிருந்தால் அது சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக் கூடியதாகும். வியாதி ஒருவருஷத்திற்கு மேற்பட்டு முதிர்ந்து போனதாயிருந்தால் அது யாப்யமாகும். எல்லாக்குறிகளும் பூர்ணமாயுண்டான வியாதி அஸாத்யம். 31.

## 11. காஸ நிதாநம்.

காஸ நிதாநம்:—புகையினால் ச்வாஸமார்க்கம் அடைபடுதல், அங்ஙனமே ஆமரஸம் ச்வாஸாசயத்திற்சேருதல்,[2] அதிகவியாயாமம், ரூக்ஷமான அன்னத்தைப் புஜித்தல், விழுங்கும்போது உணவு அதன் பாதையை விட்டு வேறு வழியில் பிரவேசிப்பது, வேகங்களை அடக்குவது, அவ்விதமே தும்மலை அடக்குவது இத்யாதிகாரணங்களால் காஸ நோய் உண்டாகிறது. 1.

காஸ ஸம்ப்ராப்தி.—பிராணவாயுவானது கோளாறடைந்து உதாநவாயுவினுடன் பின்பற்றப்பட்டதாய், உடைந்த வெண்கலப் பாத்திரத்திற் கொப்பான சப்தத்தையுண்டு பண்ணிக் கொண்டு, தோஷங்களுடன் கூடியதாய்[3] பலமாக வாயிலிருந்து கிளம்புகிறது; இது அறிஞர்களால் காஸம் எனப்படுகிறது.[4] 2.

காஸம் ஐந்து விதம்:—வாதம், பித்தம், கபம், க்ஷதம், க்ஷயம் இவ்வொவ்வொன்றையும் காரணமாகக் கொண்டு ஒவ்வொருவித காஸமாக ஐந்துவித காஸங்கள் உண்டாகின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும் மேன்மேலும்

1. க்ஷதம், க்ஷீணம் (அல்லது க்ஷயம்) இவை ஸம்பந்தமாய் அடுத்து வரும் காஸப்பிரகரணத்தில் (க்ஷதகாஸம, க்ஷயகாஸம்) என்கிற வேறு சில விவரங்கள் கூறப்படுவதையும் கவனிக்க.

2. ஆமரஸம் வாதத்தினால் மேல் நோக்கித் தள்ளப்பட்டு, கோளாறடைந்த கபமாகக் காஸத்தில் வெளியாகும். [ரஸம என்பதற்கு ஆமரஸம் என்று இங்கு பொருள்; ரஸம் என்பதற்குப் பதிலாக "ரஜஸ்" என்கிற பாடம் ஒன்றுண்டு; ச்வாஸமார்க்கத்தில் ரஜஸ் (தூசுகள்) பிரவேசிப்பதாலும் காஸம் உண்டாகும் எனப்பொருள்.]

3. தோஷங்கள் என்பதால் கபம் முக்கியமாகவும் பித்தமும் இங்கு குறிக்கப்படுகின்றன.

4. காஸம் என்றால் இருமுதல் எனப் பொருள்.

ஒன்றைவிட மற்றொன்று தன்மையில் வலுத்த தாகும்; இவற்றுள் எதையுபே பக்ஷித்த போதிலும் இறுதியில் அது க்ஷய காஸமாகப் பரிணமிக்கும். 3.

காஸத்தின் பூர்வரூபம்:—தொண்டை, வாய் இவை சூகங்கள் என்கிற சின்னஞ் சிறிய முனைகள் நிரம்பியதாயிருக்கும்; அல்லது அவ்விதம் நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சியுண்டாகும்; தொண்டையில் தினவும், உணவில் விருப்ப மின்மை அல்லது உணவை விழுங்கமுடியாமையும்[1] அந்த காஸங்களுக்குப் பூர்வரூபங்களாகத் தோன்றும். 4.

வாதகாஸம்:--வாததோஷத்தினுலுண்டான காஸத்தில் இருதயம், கன்னங்கள், சிரஸ், வயிறு, விலாப்பக்கங்கள் இவற்றில் வலியுடையவனுகவும், வாடி மெலிந்த முகமுடையவனுகவும், தேஹவன்மை - குரல் - ஓஜோதாது இவை க்ஷீணித்தவனுகவும், தொண்டை மிகக் கம்மிப்போய் குரல் மாறியவனுகவும், தொடர்ந்தாற் போல் பிணியாளி அடிக்கடியும் சுஷ்கமாகவே இருமுவான். 5.

பித்தகாஸம்:—பித்தத்தினுலுண்டாகும் காஸத்தில் மார்பில் எரித்தல், ஜ்வரம், வாயுலர்ந்து போதல் இவற்றுல் ரோகி வருந்துவான்; வாய் கைப்பாயிருக்கும்; நாவறட்சியினுல் மிகக்கஷ்டப்படுவான்; மஞ்சள் நிறமாகவும் கைப்பாக அல்லது காரமாகவும் வாந்தி செய்வான்; உடல் வெளுத்தும் தொண்டை அழற்சியுண்டும் வருந்தியவாறு இருமுவான். 6.

கப காஸம்:—கபம் பிரகோபித்துண்டான காஸரோகத்தில் சிலேஷ்மம்சூழ்ந்த வாயுடன் வருந்தியவனுய், தலைவலியாலும் துன்பப்பட்டவனுய், தேஹத்தில் கபம் நிரம்பி, உணவில் விருப்பமற்று, தேஹத்தில் பாரமும் தினவும் ஏற்பட்டு தோய்ந்துபோன கபத்தை வெளிப்படுத்திக்கொண்டு அதிகமாயிருமுவான். 7.

க்ஷத காஸம்:—அதிக வியாயாமம், அதிகமாய் வழிநடத்தல், மிகவும் கனமான சுமைகளைச் சுமத்தல், கடுமையாக யுத்தம் செய்தல், யானை குதிரைகளை பலமாக எதிர்த்துப் பிடித்து அடக்குதல், இவற்றுல் ருக்ஷமாயிருப்பவனுக்கு மார்பில் சிதைவு ஏற்பட, அந்தச் சிதை விலிருந்து இரத்தத்தை வாயுவானது கிரஹித்து காஸத்தை யுண்டுபண்ணும்; அப்பிணியாளி முதலில் வறட்டிருமலாகவே இருமி, அப்பால் இரத்தங்கக்குவான்; அப்பொழுது அவனுக்குத் தொண்டைவலி வெகு அதிகமாயிருக்கும்; மார்பு பிளக்கப்படுவது போன்றிருக்கும்; மேலும் கூர்மையான ஊசிகளால் குத்தப்படுவது போன்ற வலியினுலும், பிளக்கப்படுவது நசுக்கப்படுவது எரிக்கப்படுவது போன்ற வலியினுலும் மார்பில் கடும் நோயுண்டாக, அதனுல் மார்பு பரிசிக்கவுங் கூடாமலிருக்கும். கணுக்களில் பிளக்கப்படுவது போன்ற வலியும், ஜ்வரமும், ச்வாஸமும், நாவறட்சியும், அரோசகமும் உண்டாய் மிகத் தொந்தரவளிக்கும்; மாடப்புறுபோல் கூக்குரலிட்டு வருந்துவான்; க்ஷதம் என்கிற மார்புச்சிதைவாலான காஸத்தில் இக்குறிகள் காணும். 8—11.

க்ஷயகாஸம்:—விஷமமான ஆஹாரம்-அஸாத்மியமான ஆஹாரம் இவற்றைப் புஜிப்பது, அதிக வியாயாமம், வேகங்களை அடக்குதல், மிகவும் இளகிய மனதாயிருத்தல், துயரப்படுதல் இக்காரணங்களால் ஜாடராக்னிமுற்றிலும் அழிந்துபோக, அதனுல் மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்து, தேஹத்திற்கு க்ஷய முண்டுபண்ணக் கூடியதான க்ஷயகாஸம் என்கிற வியாதியை யுண்டுபண்ணுகின்றன. அந்த காஸரோகியானவன் அவயவங்கள் தோறும் வலி, ஜ்வரம், தேஹதாபம், மூர்ச்சை இவற்றையும், இறுதியில் ஜீவிதநாசத்தையும் பெறுகிறுன். இவன் சுஷ்கித்துப் போய் மிகவும் பலஹீனமடைந்து, மாம்ஸம்

1. தொண்டையினுள் கிரந்தி முதலிய கைலிங் கிப்போவதால் உணவு விழுங்க முடியாமற் போவது வழக்கம்.

மிக க்ஷீணதசையைப் பெற்று, சீழுடன் கூடிய இரத்தத்தைக் கக்குகிறுன். இந்த க்ஷயகாஸம் ஸந்நிபாத தோஷத்தினு லுண்டாவதாகவும், மிகவும் கஷ்ட ஸாத்தியமான தென்றும் சாஸ்திரமறிந்த வைத்தியர்கள் கூறுவர். 12, 13.

க்ஷதகாஸ - க்ஷயகாஸங்களின் ஸாத்யாஸாத்யாதி நிலைமைகள்:—முற்கூறிய க்ஷதகாஸமானது ஏற்கனவே தேஹம் மெலிந்துள்ள மனிதனுக்குண்டானுல் அவனுடைய தேஹத்திற்கு அதுநாசத்தைவிளைவிக்கும். அதுவேபலிஷ்டர்களுக்குண்டானுல் ஸாத்யமாகவாவது ஆகும், அல்லது யாப்யமாகவாவது ஆகும். க்ஷதகாஸத்திலும் ஸாத்யாஸாத்யாதி நிலைமைகளை இங்ஙனமே யறிக. இவ்விரண்டுவித காஸங்களும் ஆரம்ப தசையிலிருந்தாலும், சதுஷ்பாதங்களும் குறைவில்லாமலிருந்தாலும்[1] ஒருக்கால் சிகித்ஸையினுல் நிவாரணமாகலாம். கிழவர்களுக்குண்டாகும் ஜராகாஸம் எவருக்குமே யாப்யமாகத்தானுகும். முதலிற்கூறிய மூன்றுவித காஸங்களும் சிகித்ஸையினுல் நிவாரணம் செய்யக்கூடியவையாம். யாப்யங்களென்று கூறப்பட்டுள்ள காஸங்கள் அநுகூலமான சிகித்ஸை முதலியவற்றைச் செய்து வந்தால் தான் யாப்யங்களாயிருக்கும். 14, 15.

---

## 12. ஹிக்கா ச்வாஸ நிதாநம். *

ஹிக்கா ச்வாஸ நிதாநம்:—விதாஹி,[2] குரு, விஷ்டம்பி[3], ரூக்ஷம், அபிஷ்யந்தி[4] என்கிற குணமுள்ள போஜனங்களாலும், சீதளமான அன்ன-பானங்களாலும், அவ்விதமான இடங்களில் அதிகமாய் நடமாடுவதாலும், தூம்பு தூசுகள், தூமம்-வாயு இவை உட்புகுவதாலும், வியாயாமம்-பாரமான சுமையைச் சுமத்தல்-அதிக வழி நடத்தல்-வேகங்களை அடக்குதல்-இலங்கநம் முதலிய அபதர்ப்பணகிரியை[5] ஆகிய இவற்றுலும் மனிதருக்கு ஹிக்காவென்கிற விக்கலும், ச்வாஸமும், காஸமும் உண்டாகின்றன[6]. 1, 2.

---

1. சதுஷ்பாதங்கள்—இதன் விவரம் 33-ம் பக்கத்தில் டிப்பணியில் கூறப்படுகிறது.

* ஹிக்கா—விக்கல்; இது ஹித்மா என்றும் கூறப்படும். ச்வாஸம் என்ருல் ச்வாஸ ரோகம்.

2. விதாஹி—27ம் பக்கம் டிப்பணியைப் பார்க்க.

3 விஷ்டம்பி—மலமூத்திராதிகளைக்கட்டி வயிற்றுப் பொருமல் முதலியதையுண்டு பண்ணும் தன்மை.

4. அபிஷ்யந்தி—பசையினுலும், குருத்தன்மையினுலும் இரஸாயனியன் என்னும் குழாய்கள் ஒருவாறு அடைபட்டு ஒருவகைச் செழிப்பு உண்டாகும் குணம்.

5. அபதர்ப்பணம்—உபவாஸம், விரேசநம், வமநம் முதலியதால் தேஹத்தை இளைக்கச் செய்யும் சிகித்ஸை.

6. ஹிக்கா,ச்வாஸம்,காஸம் இம்மூன்றும் ஒரே காரணத்தினுல் உற்பத்தியாகையில், காஸத்தை மாத்திரம் பிரத்தியேகமான அத்தியாயத்தில் விவரிப்பதற்குக் காரணம் யாது என்ருல், வாதகாஸம், பித்தகாஸம், கபகாஸம் என்றவாறு மூன்று தோஷங்களாலும் தனித்தனியே காஸம் உண்டாகின்றது; ஹிக்கா-ச்வாஸங்களோ வென்ருல் கப-வாதங்களால் ஸம்பவிக்கின்றன. "கப-வாதங்களால் உண்டாகிற இவ்விரண்டுக்கும் பித்தாசயம் ஸ்த்தாநமாகும்" என்று த்ருடபலர். ஆனுல் ச்வாஸத்திற்கும் ஹிக்காவுக்கும் பேதம் என்னவென்ருல் ஸம்ப்ராப்தி, வேசங்கள், க்ரியைகள் இவற்றிலுள்ள வேற்றுமைகளைக் கொண்டு இவ்விரண்டுக்கும் பேதம் கூறப்படுகிறது. [பித்தஸ்த்தாநத்திலிருந்து இவ்விரண்டும் உண்டாகின்றன வென்று த்ருடபலர் கூறினுலும், க்ஷுத்ரஹிக்கா முதலியதற்கு அது பொருந்தாது; க்ஷுத்ரஹிக்கா கண்ட மூலத்திலிருந்து கிளம்புவதாகக் கூறப்படுகிறது.]

## ஹிக்கா.

ஹிக்கா ஸாமாந்ய லக்ஷணம்:—வாயுவானது[1] அடிக்கடியும் சப்தத்துடன் கூடியதாய் மேல் நோக்கி வாயிலிருந்து வெளிக்கிளம்பும்: அப்பொழுது யக்ருத், ப்லீஹம், குடல் இவை வாய் மூலமாக வெளிக்குப் பிடுங்கித் தள்ளப் படுவது போன்ற உணர்ச்சியுண்டாகும்; ஹிக் என்கிற தொனியுடன் சீக்கிரத்தில் பிராணனைப் பறிப்பது போன்றிருப்பதால் இது அறிஞர்களால் ஹிக்கா[2] என்று கூறப்படுகிறது. 3.

ஹிக்கா ஐந்து விதம்:—வாயுவானது கபத்தினால் பின்தொடரப்பட்டதாய், ஐந்து விதமான ஹிக்கா என்கிற விக்கலை யுண்டுபண்ணுகின்றது; அவையாவன:—அன்னஜ ஹிக்கா, யமளஹிக்கா[3], க்ஷுத்ரஹிக்கா, கம்பீரஹிக்கா, மஹாஹிக்கா என்பனவாம். 4.

ஹிக்கா பூர்வரூபம்:—தொண்டை மார்பு இவற்றில் குருத்வம், வாய் கஷாயரஸமடைதல், வயிற்றிற் குழப்பம் இவ்விகாரங்கள் எல்லா ஹிக்காவுக்கும் உண்டாகிற பொதுவான பூர்வரூபமாகும். 5.

அன்னஜ ஹிக்கா:—அமிதமாயுட் கொள்ளப்பட்ட அன்ன பானங்களால் திடீரென்று ஒரு மிக்க அழுத்தப்பட்ட வாயுவானது மேலே கிளம்பி விக்கலை யுண்டு பண்ணுகிறது; இதை அன்னஜ ஹிக்கா என்றறிக. 6.

யமள ஹிக்கா:—வெகு தாமதித்து இரட்டையான வேகங்களோடு, சிரஸ் கழுத்து இவைகளை நடுங்கச் செய்து கொண்டு[4] யாதொரு விக்கல் உண்டாகின்றதோ அது யமள ஹிக்கா எனப்படும் 7.

க்ஷுத்ர ஹிக்கா:—வெகு நேரம் கழித்துச் சொற்பவேகத்துடன், தொண்டையின் அடிப்புறத்திலிருந்து யாதொரு விக்கல் கிளம்புகிறதோ அது க்ஷுத்ர ஹிக்கா எனக் கூறப்படும். 8.

கம்பீர ஹிக்கா:—யாதொரு விக்கல் நாபிஸ்த்தானத்திலிருந்து கிளம்பியதாய், கம்பீரமான சப்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு கடுமையாகவும், அநேகம் உபத்திரவங்களையுடையதாகவும் வெளியாகின்றதோ அது கம்பீர ஹிக்கா எனக் கருதப்படுகிறது. 9.

மஹா ஹிக்கா:—மர்மஸ்த்தானங்களைக் களைந்து வெளித்தள்ளுவதுபோன்றதாய், அகில அவயவங்களையும் நடுங்கச் செய்துகொண்டு இடைவிடாது யாதொரு விக்கல் உண்டாகிறதோ அதை மஹாஹிக்கா என்றறிக. 10.

ஹிக்காவின் அஸாத்ய லக்ஷணங்கள்:—(1) விக்கும்போது எவனுக்கு தேஹமானது மிக்க விரிவதுபோல வாகின்றதோ, கண் பார்வையும் மேல்நோக்கி யிழுக்கப்பட்டு எப்பொழுதும் கஷ்டமுண்டாகிறதோ அந்த ஹிக்காரோகியும், (2) இளைத்துப் போய், உணவை வெறுத்து எவன் மிக்க அதிகமாய் விக்கலால் வருந்துகிறானோ அவனும், (3) இறுதியிற் கூறிய இரண்டு ஹிக்காரோகிகளும்[5] சிகித்ஸையினால் ஸௌக்கியப்படுத்த வியலாதவராவர். மேலும் தோஷம் தேஹத்தில் மிகுதியாகச் சேர்ந்துவிடுபவனுக்கும், உணவின்மையினால் இளைத்தவனுக்கும், வியாதிகளால் தேஹம் க்ஷீணித்தவனுக்கும், கிழவனுக்கும், அதிகபுணர்ச்சியுள்ளவனுக்கும் முற்கூறிய ஹிக்கைகளுள் எதுஉண்டானபோதிலும் அவனது உயிரைச் சீக்கிரம் போக்கிவிடும். வாய்ப்பிதற்றல், நோவு, மூர்ச்

---

1. வாயு வென்று இங்கே பொதுவாகக் கூறப்பட்டாலும் உதாந வாயுவுடன் கூடிய பிராணவாயு குறிக்கப்படுவதாகச் சிலரது அபிப்பிராயம்.

2. ஹிநஸ்தி ப்ராணாந் (உயிரை வதைக்கிறது) என்கிற வ்யுத்பத்தியின் பேரில் ஹிக்கா என்கிற பெயர் வந்தது.

3. யமளஹிக்கா என்பது சரகரால் வ்யபேதஹிக்கா என்று கூறப்படுகிறது.

4. சிரஸ்ஸையும் கழுத்தையும் நடுங்கச் செய்வது என்பது உபலக்ஷணம்; வாய்ப்பிதற்றல், மூர்ச்சை, வாந்தி, நாவறட்சி, கொட்டாவி, வாயுலர்தல் முதலிய சரகரால் கூறப்படுகிற வேறு சில லக்ஷணங்களும் காணும் என்று கயாதாஸன் கூறுகிறார்.

5. இங்கே இரண்டு ஹிக்கா ரோகிகளும் என்பது, (1) விக்கும்போது எவனுக்கு தேஹம் ... ... என்கிற குணங்களையும், (2) இளைத்துப் போய் ... ... என்கிற இவை முதலிய குணங்களையும் ஆக இவ்விரண்டு விஷயங்களைக் குறிப்பதாக விஜயரக்ஷிதனது வியாக்யாநம். அது அவ்வளவு யுக்தமாகத் தோற்றவில்லை; ஏனெனில் "இறுதியிற் கூறிய" என்பதற்கு அப்பொழுது பொருளில்லாமற் போகிறது. ஐந்து ஹிக்காக்களில் இறுதியிற் கூறியவை கம்பீர மஹா ஹிக்காக்களே. இவ்விரண்டும் வெகு கடுமையான அஸாத்ய வியாதிகள் என்பதும் பிரஸித்தம்.

சை, நாவறட்சி இவற்றுடன் கூடிய 'யமிகா' என்கிற ஹிக்காவும்அஸாத்யமேயாம். இளைக்காதவனாகவும், தீனத்தன்மையற்றவனாகவும், பலமான தாதுக்களையும் இந்திரியங்களையும் பெற்றவனாகவும் யாதொருவன் உண்டோ அவனுக்குண்டாயுள்ள யமிகை [1] என்னும் ஹிக்கா சிகித்ஸையினால் நிவாரணம் செய்யக் கூடியதாம்; அவ்விதமில்லாத வேறுவிதமான குறிகளுடன் கூடிய ஹிக்காவானது மனிதனை சீக்கிரம் கொன்றுவிடும். 11—14.

## ச்வாஸம்.

ச்வாஸம் ஐந்து விதம்:—ச்வாஸம் என்கிற ஒரு மஹாவியாதியே மஹாச்வாஸம், ஊர்த்வ ச்வாஸம், சின்ந ச்வாஸம், தமக ச்வாஸம், க்ஷுத்ர ச்வாஸம் என்று ஐந்து விதமான பேதங்களுள்ளது.[2] 15. (க்ஷுத்ரச்வாஸம் வாததோஷம் அதிகரித்தது; தமகச்வாஸம் கபதோஷத்தின் மேலீட்டால் உண்டாவது; சின்நம் என்பது பிரகோபித்த கபம் வாதம் இவ்விரண்டின் ஸம்யோகத்தினாலுண்டாகிறது; மஹாச்வாஸத்தில் அவ்விரண்டு தோஷங்களோடு வாதமும் ஸம்பந்தித்திருக்கும்; ஊர்த்வச்வாஸமும் அங்ஙனமே யுண்டாகும்.)

ச்வாஸத்தின் பொதுவான பூர்வரூபம்:—இருதயத்தில் வேதனை, வயிற்றில் வலி, வயிற்றிலும் மார்பிலும் பொருமல், வயிற்றிற்குழப்பம், வாய் அரோசகமடைதல், கன்னங்களில் வேதனை ஆகிய இவை ச்வாஸரோகத்தின் பூர்வரூபங்களாகும். 16.

ச்வாஸ ஸம்ப்ராப்தி:—முதலில் கபமும் பின்னால் வாதமும் மார்பறையைச் சேர்ந்த ஸ்ரோதஸ்ஸுகள் என்னும குழல்களை நிரப்பியடைத்து, அந்த ஸ்ரோதஸ்ஸுகளில் [3] நாற்புறமும் எப்பொழுது அவை வேகமாகப் பரவுகின்றனவோ அப்பொழுது, அவ்வேகமானது பலவிதமான ச்வாஸ விகாரங்களையும் உண்டு பண்ணுகிறது. 17.

மஹா ச்வாஸம்:—இப்பிணியாளி பெரிதும் மேல் மூச்செறிந்து கொண்டு பஹத்தான சப்தத்தோடு, ஏக்கமுற்று, ச்வாஸம் அடைபட, கொழுத்த விருஷபம் மூச்சுவிடுவது போல இடைவிடாது உரத்து மூச்சுவிடுவான்; ஞான-விஞ்ஞானமென்கிற ஸகல அறிவையும் இழப்பான்; விரண்ட பார்வையுடையவனாயிருப்பன்; கண்களும் முகமும் விரியும்; மூத்திரமும் மலமும் கட்டிப்போகும்; வார்த்தை தழுதழுக்கும்; தீனமான நிலைமையைப் பெறுவான்; இவன் விடும் பெருமூச்சானது வெகு தூரத்திலிருந்தே கேட்கப்படும்; இது "மஹா ச்வாஸம்" எனப்படும். இவ்வியாதிக்ரஸ்தன் சீக்கிரம் உயிர் துறப்பான். 18—20

ஊர்த்வ ச்வாஸம்:—எவனுக்கு மேல் நோக்கிவரும் ச்வாஸம் மிகவும் நீண்டிருக்கிறதோ, மீண்டும் அந்த ச்வாஸத்தை உள்ளுக்கு இழுக்கச் சக்தியற்றவனாகிறானோ,[4] வாய் தொண்டை முதலிய த்வாரங்கள் கபத்தினால் மிகவும் சூழப்படுகின்றனவோ, மிகப் பிரகோபித்து மேலெழும் வாயுவால் ஸங்கடமுண்டாகிறதோ, எவன் மேல் நோக்கியும் இங்கு மங்குமாய் விரண்டு விழித்துப் பார்க்கிறானோ, வேதனைகளால் வருந்தி-முகம் வெளுத்து,

1. யமிகா—யமளஹிக்கா. சரகர் யமிகாவைப் பிரத்தியேகமாகக் கூறியிருக்கிறார்.

2. ச்வாஸம் — துருத்தியினால் ஊதப்படுகையில், வாயுவானது துருத்தியை நிரப்பி நிரப்பி எவ்விதம் பலமாக மேற்கிளம்புகிறதோ அவ்விதம் ச்வாஸாசயத்திலிருந்து கடும் வேகத்துடன் உண்டாவது ச்வாஸ வியாதி.

3. ஸ்ரோதஸ்ஸுகள் என்பதால் ஹிக்கா ரோகத்திற் குறிப்பிட்ட ப்ராணவஹ ஸ்ரோதஸ்ஸுகளும், உதாநவஹஸ்ரோதஸ்ஸுகளும் இங்கு கூறப்படுவதாய் அறிக.

4. நிச்வாஸம் என்கிற வெளியிடும் மூச்சு வெகு நீடித்தும், உச்சுவாஸம் என்கிற உள்ளுக்கு வாங்கும் மூச்சு வெகு சொற்பமாகவும் இருக்குமென்பது பொருள். மேல் நோக்கி வருகிற சவாஸம் வெகு நீடித்ததாகையாலேயே இது ஊர்த்வச்வாஸம் எனப்படுகிறது

இருந்தவிடத்திலிருக்க முடியாமல் தவித்து மயக்கங் கொள்கிறனே, மேல் நோக்கிய (ஊர்த்வ) ச்வாஸம் பிரகோபிக்கையில் உள்ளுக்கு இழுக்கப்படவேண்டியது(உச்சுவாஸம்) தடைபடுகிறதோ அப்பிணியாளி ஊர்த்வ ச்வாஸத்தினுல் வருந்துவதாய் அறிக. மூர்ச்சையடைந்து கொண்டும், வேறு பல வேதனைகளால் தவித்துக் கொண்டுமுள்ள இவன் சீக்கிரம் உயிர்துறக்க நேரிடும். 21—23.

சின்ன ச்வாஸம்:—உயிருடன் மன்றுடிக் கொண்டு இடையிடையே விட்டு விட்டு ச்வஸிப்பது, அல்லது ச்வஸிக்க முடியாமலே மர்மங்கள் அறுக்கப்படுவது போன்ற வேதனைகளால் வருந்துவது, வயிற்றுப் பொருமல் அதிக வியர்வை-மூர்ச்சை இவற்ருல் பீடிக்கப்படுவது, வஸ்தி யென்னும் மூத்திரப்பை எரிக்கப்படுவது போல் ஆவது, கணகளில் நீர்ததும்புவது, மிக்க இளைத்துப் போவது, இடையிடையே பெருமூச்செறிவது, ஒரு கண் மிகச் சிவந்துபோவது, ஞாபகம் தவறிப் போவது, வாய் உலர்ந்துபோவது, முகம் கறுத்துப்போவது, எதையெதையோ பிதற்றுவது ஆக இவை மூச்சு மிகவும் தடையுண்டு சின்னச்வாஸம் என்கிற வியாதியால் வருந்துபவனுடைய குறிகளாம். மூச்சு முற்றிலும் தடைபுறுவதால் இவன் சீக்கிரம் உயிர் துறப்பான். 24—26

தமகச்வாஸம்:—எட்பொழுது ச்வாஸமானது இயற்கைக்கு எதிரடையான வகையில் வெவ்வேறு ஸ்ரோதோமார்க்கங்களிற் புகுந்து, தொண்டை சிரஸ் இவற்றின் ஸ்ரோதஸ்ஸுகளென்கிற வழிகளைத்தடுத்து, கபத்தை மிகுதியாகக்கிளப்பி குர் குர் என்கிற சப்தத்தையும் பீநஸவியாதியையும் உண்டு பண்ணுகிறதோ,பிராணனைப் பீடிக்கவல்ல மிகக்கடுமையான ச்வாஸமு முண்டாகின்றதோ அப்பொழுது அக்கடுமையான ச்வாஸ வேகத்தினுல் பிணியாளி மிகவும் சோர்வடைவான்; நாவறட்சியுள்ளவனுவான்; அசைவற்று மிருப்பான்; அடிக்கடி இருமிக்கொண்டே அதிகமாக மூர்ச்சையடைவான்; கபம் உள்ளிருந்துவெளிப்படாதவரையில் மிகவும் கஷ்டப்படுகிறன்; அது வெளிப்பட்டவுனே ஒரு முகூர்த்த நேரம் ஸுகமாயிருப்பான்; இவனது தொண்டையில் அதிக தினவுண்டாகும்; மிகவும் சிரமப்பட்டு சிறிது பேசுவான்; இந்த ச்வாஸத்தினுல் வருந்தியவனுப் படுத்துக்கொண்டு நித்திரையுறமுடியாமல் வருந்துவான்; படுத்துக் கொள்ளும் போது வாயுவானது அவனது பார்ச்வ பாகத்தைப்பற்றிக் கொள்கிறது; உட்கார்ந்து கொண்டால் ஸுகம் பெறுகிறன்; உஷ்ணம் உடம்பில் தாக்கினுல் அது அவனுக்கு இதமாயிருக்கின்றது.[1] நெற்றி வியர்க்க, கண்கள் வீங்கிப்போக பெரிதும் துன்பப்பட்டுக்கொண்டு, வாய் உலர்ந்துபோக, அடிக்கடியும் பெருமூச்சு விட்டுக்கொண்டு தேஹம் குலுங்க அடிக்கடி வருந்துவான்; இந்த ச்வாஸமானது மேகம், தண்ணீர், குளிர்ச்சியான வஸ்து, கிழ்க்காற்று, கபத்தை விருத்தி செய்யும் வேறுபதார்த்தங்கள் இவற்ருல் விருத்தியடையும். இது "தமக ச்வாஸம்" எனப்படுகிறது. இது யாப்யமான வியாதி. புதிதாக உண்டானதாயிருந்தால், ஸாத்யமாகவும் ஆகும். 27—34.

ப்ரதமக ச்வாஸம்:—அதேதமகச்வாஸத்தில் ஜ்வரமும், மூர்ச்சையும் கூடியிருந்தால், அதை ப்ரதமகச்வாஸம் என்றறிக[2]. உதாவர்த்தம், தூசுகள், அஜீர்ணம், விதக்தமான உணவு, வேகங்களைஅடக்குதல்இவற்ருலும் இது உண்டாகிறது. இருட்டில் இவ்வியாதி மிகவும் விருத்தியடைகின்றது. சீதளமான வஸ்து முதலியவற்ருல் சீக்கிரம் உபசாந்தியடைகிறது. இருட்டில் ஆழ்ந்து போவதுபோல் பிணியாளி யுணருவான். இவ்வித வியாதியை "ஸந்தமகம்"[3] என்றறிக. 35, 36.

1. இந்த வியாதி வாதகபங்களால் ஏற்பட்டது. ஆகவே வாதகபங்களுக்கு எதிரிடையான உஷ்ணத்தினுல் இவனுக்கு இதம் உண்டாகிறது.

2. ப்ரதமகத்தில் பித்தமும் அதிகமாய் அநுஸரிப்பதால் இதில் ஜ்வரமும் காண்கிறது.

3. ப்ரதமக ச்வாஸத்தையே 'ஸந்தமகம்,' என்று கூறுவர்.

க்ஷுத்ரச்வாஸம்:—ரூக்ஷத்தன்மை அதிகரிக்க ஆயாஸகரமான காரியங்களைச் செய்வதால் ச்வாஸாசயத்தில் அதிகபலமில்லாமல் ஒருபெருமூச்சு கிளப்பும். அது 'க்ஷுத்ர ச்வாஸம்' எனப்படுகிறது. அது அதிகமாய் சரீரத்தை வருத்தக்கூடிய கொடிய துர்க்குணங்களை யுண்டு பண்ணுவதன்று. அங்கங்களுக்கு எவ்வித துன்பமும் இது விளைவிப்பதில்லை. மற்ற ச்வாஸவியாதிகள் உண்டுபண்ணும் துன்பங்கள் இதனால் உண்டாவதில்லை. போஜனம், பானம் இவைஇயற்கையில் உட்செல்லுவதற்குத் தடங்கலையுமுண்டுபண்ண மாட்டாது. இந்திரியங்களில் எதற்கும் கெடுதியுண்டு பண்ணுவதுமில்லை. அல்லது வேறு எவ்விதமான நோவும் இதனால் உண்டாகாது. இது ஸுகஸாத்யமானது. 37—38½.

ச்வாஸத்தில் ஸாத்யாஸாத்யங்கள்:—நல்ல பலிஷ்டர்களுக்குண்டாகுபவையும், ச்வாஸ வியாதிக்குரிய லக்ஷணங்கள் நன்கு தோன்றாதவையுமான எல்லா ச்வாஸ ரோகங்களும், க்ஷுத்ரச்வாஸமும் ஸாத்யங்கள். தமகச்வாஸம் க்ருச்ர ஸாத்யம்; அதிலும் துர்ப்பலமான மனிதனுக்குண்டாகும் தமக ச்வாஸமும் அஸாத்யமாகும். மற்ற மூன்று ச்வாஸங்களும் அஸாத்யமாகும். 39,40.

ச்வாஸரோகம் மிகக்கடுமையானது:—உயிரைப்பறிப்பவையான வியாதிகள் பல உண்டென்பது வாஸ்தவம்; [1] ஆனால் அவை யெல்லாம் ச்வாஸம் ஹிக்கா இவற்றைப் போன்றவையல்ல; இவ்விரண்டும் சீக்கிரத்தில் பிராணனைப் போக்கி விடுகின்றன. 41.

---

## 13. ஸ்வர பேத நிதாநம்.*

ஸ்வர பேதத்தின் நிதாநம்:—மிகவும் உரத்துப் பேசுதல், ஏதேனும் விஷம் ஸம்பந்தப்படுதல், உரத்த குரலுடன் ஓதுதல், அடிதாக்குதல் ஆகிய இக்கோளாறுகளால் வாதம் முதலிய தோஷங்கள் பிரகோபமடைந்து, குரலுக்கு ஆதாராமாயுள்ள ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற த்வாரங்களில் தங்கி தொண்டையிலிருந்து குரல் கிளம்புவதைக் கெடுத்துவிடுகின்றன. 'ஸ்வரபேதம்' எனப்படுகிற அந்த வியாதி ஆறுவிதம். 1.

ஸ்வரபேதம் ஆறுவிதம்:—(வாதம் முதலிய மூன்று தோஷங்களால் தனித்தனியே ஒன்றும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், மேதஸ் என்னும் கொழுப்பு அதிகரிப்பதால் ஒன்றும், க்ஷயத்தினால் ஒன்றுமாக ஸ்வரபேதம் ஆறுவிதம்.)

வாதஜ ஸ்வரபேதம்:—வாத தோஷத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் பிணியாளியின் கண்களும், முகமும், மல-மூத்திரங்களும் கறு நிறங்கொள்ளும்; [2] அவனது தொனி உடைந்தும்வெகு மெதுவாகவுமிருக்கும்; கழுதையின் குரலைப்போல அவன் பேச்சு ஒருவாறு கர கர வென்றும் தோன்றும். 1½.

பித்தஜ ஸ்வரபேதம்:—பித்தத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் கண்கள், முகம், மலமூத்திரங்கள் இவை மஞ்சள் நிறமாயாகும்; அவன் பேசும்போது தொண்டையில் அவனுக்கு அழற்சியுண்டாகும். 2.

கபஜ ஸ்வரபேதம்:—கபதோஷத்தினாலுண்டாகும் ஸ்வரபேதத்தில் எப்பொழுதுமே தொண்டையில் கபம் சூழ்ந்து அடைத்துக்கொள்ள, சொற்பமாகவும், மெதுவாகவும் பேசுவான்; பகல் வேளையில் மாத்திரம் நன்றாகப் பேச முடியும். 2½.

ஸந்நிபாதஜ ஸ்வரபேதம்:—மூன்று தோஷங்களாலும் உண்டாகிற ஸ்வரபேதத்தில் முன் கூறிய ஒவ்வொரு தோஷத்தினாலு முண்டாகிற ஸ்வரபேதம் ஒவ்வொன்றுக்கும் காண்கிற இலக்ஷணங்கள் அனைத்தும் தோன்றும். இது அஸாத்ய வியாதியென்று இருஷிகள் அபிப்பிராயப்படுகிறார்கள் [3]. 3.

---

1 ஸபந்நிபாத ஜ்வரம் முதலியவை பிராணஹரமான வேறு கொடியவியாதிகளாம்.

*ஸ்வரபேதம்.—தொண்டையின் குரல்விகாரப்படுதல். குரல் கெட்டுப்போவது எனப்பொருள். 'ச்வாஸரோகம் போலவே இதிலும்பிராணவாயுவும், உதாநவாயுவும் கோளாறடைகின்றன.

2. ஸ்வரபேதத்திற்குக் காரணமான தோஷங்கள் தேஹமெங்கும் வியாபிப்பதால் மல மூத்திராதிகளும் விகாரமடைகின்றன.

3. ஸந்நிபாத ஸ்வரபேதத்தையும் க்ஷயஜஸ்வரபேதத்தையும் விலக்கி மற்ற வைக்கு சிகித்ஸை செய்யலாம் என்று ஸுச்ருதர் கூறுவது இங்கு குறிக்கப்படுகிறது.

க்ஷயஜ ஸ்வரபேதம் :—க்ஷயத்தினாலுண்டாகும்[1] ஸ்வரபேதத்தில், பேசும்போது வாயிலிருந்து கடுமையான ஆவி கிளம்பும்; பிறகு வாக்கும் க்ஷீணமடையும்;[2] அவ்விதம் பேசுவதற்கு முற்றிலும் சக்தியற்றுப் போய்விட்ட பிறகு இவனது வியாதிக்கு சிகித்ஸை செய்ய முடியாது. $3\frac{1}{2}$.

மேதோஜ ஸ்வரபேதம்: —மேதஸ் என்கிற கொழுப்பு கோளாறடைவதாலான க்ஷயத்தில் குரல் உள்ளுக்கு இழுக்கப்பட, சொற்கள் விளங்காவண்ணம் பேசுவான்; அதுவும் வெகு நேரத்திற்கு ஒரு வார்த்தையாகப் பேசுவான்; கபம் அல்லது மேதஸ் அவன் தொண்டையில் சூழ்ந்திருக்கும் ; நாவறட்சியினால் வருந்துவான். 4.

ஸ்வரபேதத்தில் அஸாத்யமானவை :—தேஹம் இளைத்துப் போனவன், கிழவன், இயற்கையில் மெலிந்த தேஹமுடையவன், இவர்களுக்குண்டாகும் ஸ்வரபேதமும், நீடித்த காலமாகத் தொடரும் ஸ்வரபேதமும், பிறந்தது முதலேயுள்ள ஸ்வரபேதமும்,[3] மிகக் கொழுத்த சரீரமுடையவனுக்குக் காணும் ஸ்வரபேதமும்,[4] ஸந்நிபாத தோஷங்களாலுண்டாகும் ஸ்வரபேதமும் சிகித்ஸையினால் நிவ்ருத்திக்க முடியாதவைகளாம். 5.

## 14. அரோசக நிதாநம்.

அரோசக நிதாநம்:—(ஐந்து வித அரோசகங்கள்.) வாத-பித்த கபங்களால் தனித்தனியே மூன்றுவித அரோசகங்களும், ஸந்நிபாதத்தினால் ஒருவித அரோசகமும், [5] மனத்துயரம், பயம், அதிகலுப்தத்தன்மை, அதிககோபம், மனவெறுப்புண்டாக்கும் உணவு, அத்தகைய ரூபங்களைப் பார்த்தல், அவ்விதமான வாஸனை ஆக இவற்றால் ஆகந்துகமான அரோசகமும் உண்டாகின்றன. $\frac{3}{4}$.

வாதஜாரோசகம்:—வாததோஷத்தினாலுண்டாகும் அரோசகத்தில் பற்கள் கூசும்; வாய் கஷாயரஸமுடையதாயாகும். 1.

பித்தஜாரோசகம்.— பித்தத்தினாலுண்டாகும் அரோசகத்தில் வாய் கைப்பாகவும், அம்லமாகவும், உஷ்ணமாகவும், ஒரு ஸமயம் விரஸமாகவும், இலவணரஸமுள்ளதாகவும், துர்காற்றமுடையதாகவும் ஆகும். $1\frac{1}{2}$.

கபஜாரோசகம்:—கபத்தினாலுண்டாகும் அரோசகத்தில் வாய் இனிப்பாகவும், அதிக பசை சேர்ந்துள்ளது போலவும், குருத்தன்மையும் சைத்யமும் உள்ளதாகவும், அதிக கோழை சூழ்ந்ததாகவும், கட்டப்பட்டது போல் திறந்து அசைக்க முடியாததாகவும் ஆகும். 2.

ஆகந்துகாரோசகம்:—சோகம், பயம், அதிக லோபியாயிருத்தல், கோபம் இவைமுதலியவற்றாலும், மனதுக்குப் பிடிக்காத அசுத்தமா

1. க்ஷயம் என்றால் தேஹதாதுக்கள் க்ஷீணமாவது.

2. ஓஜோ தாது அழிவதால் பேசுவதற்குச் சக்தியற்றுப் போவதாகக் கூறப்படுகிறது.

3. பிறந்தது முதலே யுள்ள ஸ்வரபேதத்தை காகஸ்வரம் என்பார்கள்.

4. இதற்குமுன் கூறிய மேதோஜ ஸ்வரபேதம் கொழுப்பு விகாரங்கொள்வதால் ஏற்படுகிறது. இங்கே கூறப்படுவது மிகவும் கொழுப்பு அதிகரித்தவனுக்குண்டாவது எனப்பொருள். ஆகவே மேதஸ் கோளாறடைந்துண்டாகும் ஸ்வரபேதம் சிகித்ஸையினால் நிவாரணம் செய்யக்கூடியது எனக் கருதுக.

5. மனத்துயரம், பயம் முதலிய பல காரணங்களால் உண்டான போதிலும், ஆகந்துகம் என்கிற ஒரு பொதுவான ஹேதுவை ஆதாரமாகக் கொண்டு, இவ்வனைத்தாலும் உண்டாவது ஒரேவித அரோசகமாகக் கருதப்படுகிறது. "அரோசகம் ஐந்து விதந்தான்" என்று ஸுச்ருதரும் கூறுகிறார். சோகம் முதலியவற்றாலான அரோசகமும் வாதாதி தோஷங்களாலேயே உண்டாகின்றவையாயினும், மூல காரணத்திற்குப் பரிஹாரம் தேடுவது அவசியமென்பதைக் கருதி ஆகந்துகாரோசகமும் தனியாகக்கூறப்படுகிறது.

யுள்ள நாற்றம் முதலியவைகளாலும் உண்டாகும் அரோசகத்தில் வாய்மாத்திரம் ஸாதாரண நிலைமையுடையதாகவே இருக்கும். 2½.

ஸந்நிபாதஜாரோசகம் :— மூன்று தோஷங்களாலும் காண்கிற அரோசகத்தில் வாய் வாதஜாரோசகாதிகளிற் கூறிய பலவிதமான சுவைகளைப் பெற்றதாயிருக்கும். 3.

அரோசகங்களிற் காணும் விசேஷக்குறிகள் :— வாதஜாரோசகம் இருதயத்தில் குத்தல் வேறுவிதமான வலி இவற்றுடன் கூடியதாயிருக்கும். பித்தஜாரோசகம் நாவறட்சி தேஹஅழற்சி உறியப்படுவதுபோன்ற நோவு இவற்றால் சூழப்பட்டிருக்கும். கபஜாரோசகம் அதிக கபம் சேர்ந்ததாயிருக்கும். ஸந்நிபாதாரோசகம் பலவிதமான நோவுகளையும் உண்டு பண்ணும். மற்ற ஆகந்துகாரோசகங்களை மனதில் கலவரம், மயக்கம், திமிர்ப்பு இக்குறிகளைக் கொண்டு அறியவும். 4.

## 15. சர்தி நிதாநம்.

சர்திகள் ஐந்து விதம் :—கோளாறடைந்த மூன்று தோஷங்களால் தனித்தனியே மூன்று சர்திகளும், ஸந்நிபாததோஷத்தினால் ஒன்றும், அருவருப்பான விஷயங்களைப் பார்ப்பது அல்லது நினைப்பது முதலியவற்றால் மற்றொன்றும் ஆக ஐந்துவித சர்திகள் உண்டாவதாய் அறிக. இதன் கீழ் அவற்றின் இலக்ஷணங்கள் கூறப்படுகின்றன. 1.

சர்திநிதாந ஸம்ப்ராப்திகள் :—அதிக திரவமானவை, அதிகஸ்நிக்தமானவை, மனதுக்குப் பிடிக்காதவை, அதிக உப்புள்ளவை, அளவில் அதிகமானவை, அகாலத்தில் உபயோகிக்கப்படுபவை, அஸாத்மியமானவை ஆகிய இவ்விதமான உணவுகளாலும், சிரமத்தினாலும், பயத்தினாலும், அங்ஙனமே, உள்ளக்கொதிப்பாலும், அஜீர்ணத்தினாலும், கிருமிகள் வயிற்றிற் சேர்ந்துண்டாகும் தோஷத்தினாலும், ஸ்த்ரீக்கு கர்ப்பம் உண்டாவதாலும், அதிக துரிதமாகப் புஜிப்பதாலும், பீபத்ஸமான வேறு காரணங்களாலும் தோஷமானது வலிவாகக் கிளறி வேகமாய் மேல் நோக்கிக் கொண்டு வரப்பட்டு வாய் மூலமாய் வாந்தியாய் விடுகிறது ; வேகங்களால் வாயை ஆச்சாதநம் (நிரம்ப) செய்து அவயவங்களை ஒடுக்கி அர்த்தித்து (பீடித்து) வேகம் உண்டாவதிலிருந்து இதற்குச் "சர்தி"[1] என்கிற பெயர்வந்தது. 2-4.

சர்தியின் பூர்வ ரூபம் :—இருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளுதல், தேக்கெறிவு தடையுறுதல், வாயில் உப்பாகவும் பசைபற்றதாகவும் உமிழ்நீரூறுதல், அன்னபானங்களில் அதிக வெறுப்புண்டாதல் ஆகிய இவை வமநம் உண்டாகப் போவதைக் குறிப்பிடும் பூர்வரூபமாகும். 5.

வாதஜ சர்தி :—வாதஸம்பந்தமான சர்தியில் இருதயத்திலும், விலாப்பக்கங்களிலும் நோவு, வாயில் வறட்சி, சிரஸ்ஸிலும் நாபியிலும் வேதனை, இருமல், குரல் கம்மிப்போதல், குடைத்தல், இத்தொந்தரவுகளோடு, பிரபலமான தேக்கெறிவுபோன்ற சப்தமுமுண்டாக சிறிது நேரத்திற் கொருமுறை வாந்தி செய்வான். மேலும் வாந்தியானது நுரைத்தும், சிறிது கறுப்பாகவும், தடிப்பில்லாததாகவும், கஷாய ரஸமுள்ளதாகவும், அளவில் வெகு சொற்பமாகவும் இருக்கும். இதில் மஹத்தான வேகத்தினால் மிகப் பீடிக்கப்பட, வெகுசிரமப்பட்டு சொற்ப அளவான வஸ்துவை வாந்தி செய்வான். இந்தச் சர்தி மிகத் துன்பமளிக்கக்கூடியது. 6.

1. சர்தி—வாந்தி. (வாந்தியென்பது ஒரு வியாதியின் குறியாக விருந்தபோதிலும் ஜ்வரம் முதலியதைப் போலவே இதுவும் ஒரு சுதந்திர வியாதியாகவே இங்கே கருதப்படுகிறது.)

பித்தஜ சர்தி:—பித்த ஸம்பந்தமான சர்தியில் மூர்ச்சை, நாவறட்சி, வாய் சுஷ்கித்தல், சிரஸ்-தவடைகள்-கண்கள் இவற்றில் அழற்சி, கண் இருளடைதல், தலைச் சுற்றல், இவற்றால் துன்பப்பட்டுக் கொண்டு, மஞ்சள் நிறமாகவும், அதிக சூடாகவும், அதிக பசுமையாகவும், கைப்பான சுவையுடையதாகவும், கடுஞ் சிவப்பாகவும், அதிக அழற்சியோடுங் கூட வாந்தியுண்டாகும். 7.

கபஜ சர்தி:—சோம்பல், வாய் இனிப்பாதல், கபம் ஊறுதல், எப்பொழுதுமே நன்கு புஜித்தது போன்ற த்ருப்தி, நித்திரை, வாய் அரோசகமடைதல், உடம்பு பாரமாதல் இவற்றால் வருந்தியவனாய், ஸ்நிக்த்தமாகவும், கனமாகவும், இனிப்பாகவும், வெண்மையாகவும், மயிர்ச்சிலிர்க்கையோடும் அதிக வேதனையில்லாமல் வாந்தியெடுப்பது கபச்சர்தியாகும். 8.

ஸந்நிபாதஜ சர்தி:—மூன்று தோஷங்களும் பிரகோபித்துண்டாகும் சர்தியில் பின்வருமாறு குறிகள் வெகுபலமாகக் காணும்; வயிற்று வலி, உணவு ஜீர்ணமாகாமை, அரோசகம், வயிற்றில் அழற்சி, நாவறட்சி, ச்வாஸம், அதிக மயக்கம்; மேலும் வாந்தி இடைவிடாமலு முண்டாகும்; வாந்தியில் வரும் தோஷமானது இலவண ரஸமுடையதாகவும், அம்லமாகவும், கறுப்பாகவும், அதிக கனமாகவும், உஷ்ணமாகவும், இரத்தங் கலந்ததாகவும் இருக்கும். அன்றியும் தோஷம் மேல்நோக்கி வெளியாகக்கூடிய நிலைமையில் வாயுவானது மலம்,வியர்வை, மூத்திரம், இரஸம் இவற்றிற்கு ஆதாரமான ஸ்ரோதோமார்க்கங்களை அடைத்துக்கொண்டு, வயிற்றில் மிகுதியாகச் சேர்ந்து போய் மல-மூத்திரங்களுக்குச் சமானமான நாற்றமும் நிறமுமுள்ள தோஷத்தைக் குடலிலிருந்து இடைவிடாமல் வெளிக்கிளப்பி எப்பொழுது தள்ளுகின்றதோ, நாவறட்சியும் ச்வாஸமும், விக்கலும் எப்பொழுது தொடர்ந்துண்டாகின்றனவோ, கெட்டுப்போன மலாதிகளையும் அதிக வேகத்துடன் எப்பொழுது வமநம் செய்கிறானோ அப்பொழுது அப்பிணியாளி சீக்கிரத்தில் உயிர் துறப்பான். 9—11.

ஆகந்துக சர்தி:—அருவருப்பான விஷயங்களைப் பார்ப்பது அல்லது நினைப்பது முதலியவற்றாலுண்டாவதும், தௌஹ்ருதம் என்கிற கர்ப்ப கால விருப்பத்தாலுண்டாவதும், ஆமதோஷத்தினாலானதும், அஸாத்மியமான வஸ்துக்களையுபயோகிப்பதாலுண்டாவதும், கிருமிகளால் ஸம்பவிப்பதுமான எந்தெந்த சர்தியுண்டோ அஃதனைத்தையும் ஐந்தாவது சர்தியாகக் கருதவேண்டும். இவற்றுள் கிருமிகளாலுண்டாகும் சர்தி வாதாதி தோஷங்களுடைய கோளாறை அநுபந்தமாகப் பெறுகின்றது; இதில் வாதாதி தோஷஸம்பந்தத்தினாலான குறிகள் முதலில் வாதாதி சர்திகளுக்குக் கூறப்பட்ட விதங்களேயாம். 12.

கிருமிஜச்சர்தியின் விசேஷக்குறிகள்:—கிருமிகள் கோஷ்டத்தில் சேருவதால் உண்டாகும் வாந்தியில் வயிற்றில் நோவும், இருதயத்தில் பலமான படபடப்பும் விசேஷமா யுண்டாகும்; கிருமிஸம்பந்தமான ஹ்ருதயரோகத்தின் குறிகளுக்குச் சமானமான லக்ஷணங்களும் [1] காணும். 13.

சர்தியில் அஸாத்ய லக்ஷணம்:—உடம்பு க்ஷீணித்திருப்பவனுக்குண்டாகும் வாந்தியும்,

1 பீபத்ஸஜச்சர்தி (அருவருப்பான விஷயங்களைப் பார்ப்பது) முதலிய அனைத்துக்கும் வாதாதி தோஷஸம்பந்தம் சிலரால் கூறப்படுகிறது. ஆனால் கிருமிஜச்சர்தியைத்தவிர, ஆகந்துகச் சர்திகளில் மற்ற எதற்கும் சிகித்ஸைக்கு முகாந்தரமாயமையக்கூடிய தோஷ ஸம்பந்தம் எவராலும் கூறப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே இங்கு கிருமிஜ சர்திக்கு மாத்திரம் பிரத்தியேகமாக வாதாதி தோஷங்களின் ஸம்பந்தம் உண்டென்று குறிப்பிடப்படுகிறது என்றறிக. பிறகு 29-வது பிரகரணத்தில் (ஹ்ருத்ரோகாத்தியாயத்தில்) கூறப்படும் மார்பில் வேதனை முதலிய குறிகளும் உண்டாகும் எனப்பொருள்.

அமிதமாயுண்டாகும் வாந்தியும், உபத்ரவங்களோடு கூடிய வாந்தியும், இரத்தம் சீழ் இவற்றுடன் கூடிய வாந்தியும், சந்திரிகையென்னும் பல நிறங்கொண்ட வட்டங்களுள்ள தோஷத்துடன்[1] வெளியாகும் வாந்தியும் அஸாத்யமெனக் கூறவேண்டும். மற்ற ஸாத்யமான குறிகளுள்ளதும், உபத்திரவங்களில்லாததுமான [2] சர்திக்கு சிகித்ஸை செய்யவும். 14.

## 16. த்ருஷ்ணை நிதானம். *

த்ருஷ்ணை ஸம்ப்ராப்தி:— பயத்தினாலாவது சிரமத்தினாலாவது, பலம் க்ஷீணிப்பதாலாவது, பித்தம் விருத்தியடைவதற்கான காரணங்களாலாவது சயாவஸ்த்தையடைந்த பித்தமும் வாதமும் பிறகு பிரகோபித்து, தாலுவென்கிற தவடைகளிலுள்ள [3] ஸ்ரோதஸ்ஸுகளைப்பற்றியதாய் மனிதருக்கு தாஹத்தையுண்டுபண்ணும்; மேலும் கோளாறடைந்த உணவென்ன, ஆமதோஷமென்ன [4] கபமென்ன இவற்றாலும், உதகவஹமான ஸ்ரோதஸ்ஸுகளென்கிற நீர்க்கால்கள் தூஷிக்கப்படுவதனாலும் மனிதனுக்கு த்ருஷ்ணை யென்னும் நாவறட்சியுண்டாகிறது. 1, $1\frac{1}{2}$.

த்ருஷ்ணையின் ஸங்க்யா ஸம்ப்ராப்தி:—அவ்விதமுண்டாகும் த்ருஷ்ணை வாதபித்த கபங்களால் தனித்தனியே மூன்றும், காயமேற்படுவதால் ஒன்றும், க்ஷயத்தினால் ஒன்றும், ஆமதோஷத்தினால் ஒன்றும், அன்னவிகாரத்தினால் ஒன்றும் ஆக எழுவகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றிற்குள்ள இலக்ஷணமும் இதனடியிற் கிரமமாக விவரிக்கப்படும். $2\frac{1}{2}$.

வாதத்ருஷ்ணை:-வாததோஷத்தினாலுண்டாகும் த்ருஷ்ணையில் முகம் வாடி, தீனத்தன்மையடையும்; கன்னங்களிலும் சிரஸ்ஸிலும் குடைத்தலுண்டாகும்; இரஸவஹாதி ஸ்ரோதஸ்ஸுகள் அடைபட்டுவரும்; வாய் விரஸமாகப் போகும்; குளிர்ந்த ஜலமுபயோகிக்கப்படுமானால் இவ்விபாதிவிருத்தியடையும் [5]. $3\frac{1}{2}$.

பித்த த்ருஷ்ணை:— பித்ததோஷ ஸம்பந்தமான த்ருஷ்ணையில் மூர்ச்சை, அன்னத்வேஷம், வாய்ப் பிதற்றல், தேஹதாபம், கண்கள் சென்னிறமாதல், இடைவிடாத நாவறட்சி, குளிர்ச்சியில் அதிக விருப்பம், வாயில் கைப்புண்டாதல், எக்கமுறுதல் ஆகிய இக்குறிகள் காணும். $4\frac{1}{2}$.

கபத்ருஷ்ணை:— கபதோஷத்தினால் ஜாடராக்னி முதலிய உட்புறச்சூடு சூழ்ந்து மறைக்

1. மேதஸ்முதலிய திணங்களும் இரத்தாணுமுதலியதும் கலந்திருப்பதால் மயிற்றோகையின் சாயைபோன்ற வட்டங்கள் வாந்தியில் வரும் தோஷத்திற் காண்பது ஸஹஜம்.

2. "காஸம், ச்வாஸம், ஜ்வரம், விக்கல், நாவறட்சி, மனம் ஏக்கமுறுதல், இருதய ரோகம், தமகச்வாஸம் இவை சர்தியின் உபத்திரவங்களாம்." இவ்வுபத்திரவங்கள் தோன்றினால், அந்த சர்தி அஸாத்யமாகும்.

* த்ருஷ்ணை:—நாவறட்சி.

3. இங்கே தாலுபாகம் என்று உபலக்ஷணமாகக் கூறப்பட்டது; ஆனால் க்லோமா முதலிய இதர அவயவங்களின் ஸ்ரோதஸ்ஸுகளும் கோளாறடைவதாகக் கருதவேண்டும். "இரஸவஹமான குழாய்களையும், ஜிஹ்வாமூலம் என்கிற நாக்கின் அடிப்புறத்து ஸ்ரோதஸ்ஸுகளையும், தொண்டையிலுள்ள ஸ்ரோதஸ்ஸுகளையும், தவடையிலடங்கிய ஸ்ரோதஸ்ஸுகளையும், க்லோமாவையும் சோஷணம் செய்து மிகப் பிரபலமான அவ்விரண்டு தோஷங்களும் த்ருஷ்ணையை யுண்டுபண்ணுகின்றன" என்று சரகத்திலும் கூறப்படுகிறது.

4. தூஷிக்கும் தன்மையினாலும், கோளாறடைந்த தோஷங்களின் ஸம்பந்தத்தினாலும் ஆமதோஷமும் அன்னமுங்கூட இங்கே த்ருஷ்ணைக்குக் காரணமான தோஷங்களாகக் கருதப்படுவதாய் அறிக.

5. வாததோஷம் சீதளத்தினால் அதிகமாய் விருத்தியடைவது இயல்பாகையால் சீதளத்தினால் இதற்கு அநுபசயம் கூறப்பட்டது. வாதஜத்ருஷ்ணையில் நித்திரையின்மை, தலைச்சுற்றல், தொண்டையும் தவடைகளும் உலர்தல் என்று சரகர் கூறுகிற வேறு விகாரங்களும் உண்டாகும்.

கப்பட, அதனால்தேஹச்சூடும் ஆவரணம்செய்யப்படுவதால், அப்பொழுது கபத்தினால் த்ருஷ்ணையுண்டாகிறது. இதில், நித்திரையினால் தேஹம் பாரமாயிருப்பதாகத் தோற்றுதல், வாய் இனிப்பாதல் ஆகிய குறிகள்உண்டாகும்; இந்த த்ருஷ்ணையினால் வருந்துபவன் மிகவும் க்ஷீணிப்பான்.[1] 5½.

க்ஷதஜத்ருஷ்ணை.— ஏதாவது ஆயுதாதிகள் தாக்கி விரணமுண்டாக, அதிலிருந்து இரத்தம் அபரிமிதமாய் வெளிவந்து நோவும் அதிகரிக்குமானால் அப்பொழுது த்ருஷ்ணையுண்டாகும். இது அடி தாக்கிய விரணத்தினாலுண்டாவதால் க்ஷதஜத்ருஷ்ணை யெனப்படுகிறது. 6.

க்ஷயத்ருஷ்ணை:— இரஸதாது க்ஷயித்து வருங்கால் க்ஷய த்ருஷ்ணை யென்கிற இந்த வறட்சியுண்டாகிறது. இதனால் தாக்கப்பட்டவன இராக்காலங்களில் தண்ணீரை மிகுதியாகக் குடிக்கிறான்; எவ்வளவு குடித்தும் திருப்தியுண்டாவதில்லை [2]. இந்தத்ருஷ்ணைஸந்நிபாத ஸம்பந்தமானதென்று சிலர் கூறுகிறார்கள். இரஸக்ஷயத்திற்குக் கூறப்படும் இலக்ஷணங்களெல்லாம்[3] இதற்குண்டாகு மென்பதை வைத்தியர் கவனிக்கவேண்டும். 7, 7½.

ஆமதோஷஜத்ருஷ்ணை:— ஆமதோஷத்தினாலுண்டாகும் த்ருஷ்ணையில் மூன்று தோஷங்களின் குறிகளும் காணப்படும்; மேலும் மார்பில் வலி, கோழை அல்லது உமிழ்நீரை அதிகமாகத் துப்புதல், தேஹமிளைத்தல் இக்கோளாறுகளையும் இவ்வியாதியுண்டுபண்ணும். 8.

அன்னஜ த்ருஷ்ணை:— அதிக ஸ்நிக்தமாகவும், அதிக அம்லமாகவும், அதிக உப்புள்ளதாகவும், அதிக குருவாகவுமுள்ள உணவு சீக்கிரம் நாவறட்சியைத் தரும். 8½.

ஔபஸர்கிகத்ருஷ்ணை.— [4]உபத்திரவத்தினாலுண்டாகும் த்ருஷ்ணையில் ரோகிக்குகுரல் தீனமாக க்ஷீணிக்கும்; மிகவும் சோர்வுண்டாகும்; அதிக தீனததன்மை யேற்படும்; வாயும் தொண்டையும் தவடைகளும் உலர்ந்துபோகும்; அவ்வித த்ருஷ்ணையானது சரீரத்தைச் சோஷிப்பித்துவிடும்; இது கஷ்டஸாத்யமான வியாதி. இதில் ஜ்வரம், மூர்ச்சை, க்ஷயம், காஸம், ச்வாஸம் முதலியவை உபத்திரவக்குறிகளாகும்.[5] 9, 10.

த்ருஷ்ணையில்அஸாத்ய நிலைமைகள்:—எல்லாவித த்ருஷ்ணைகளுமே எப்பொழுது மிக்க அதிகரித்து விடுகின்றனவோ அப்பொழுது அவை சிகித்ஸைக்கு வசப்படாதவை யென்றுணருக. மேலும் ஏறகனவே வேறுவித ரோகங்களால் இளைத்துப் போனவருக்குண்டானாலும், சர்தியினால் வருந்துபவருக்குண்டானாலும், கடுமையான உபத்திரவங்களோடு கூடியவையானாலும் அவ்வித த்ருஷ்ணைகளும் மரண முண்டுபண்ணத்தகுந்தவையாம். 11.

1. கபம் பெரும்பாலும்திரவரூபமான தோஷமாகையால் அது விருத்தியடைவதால்நாவறட்சியுண்டாவது யுக்தமல்லவென்கிற கேள்வியுண்டாகிறது. ஸம்ப்ராப்தியில்கூட பித்தமும் வாதமும் பிரகோபிப்பதாலேயே த்ருஷ்ணையுண்டாவதாகக் கூறப்படுகிறது. இக்காரணத்தினாலேயே சரகத்திலும் கபஜ த்ருஷ்ணை கூறப்படவில்லை. ஆனால் கபம் சுதந்திரமாக த்ருஷ்ணையுண்டாக்குவதில்லை. ஆனால் தேகச்சூடு முதலியதை ஆவரணம் செய்து அப்பால் புடபாகரீதியில் உள்ளேயே வேக்காட்டையுண்டுபண்ணும் ஒருவித வெப்பமானது இந்த நாவறட்சியையும் கிளப்புவதாகக் கருதப்படுகிறது.

2. "எல்லாவித த்ருஷ்ணையிலும் எவ்வளவுதண்ணீர் குடித்தாலும் த்ருப்தியுண்டாவதில்லை. யாதொருவன் அடிக்கடியும் அமிதமாகத் தண்ணீர் அருந்தியும் திருப்தியடைவதில்லையோ, மீண்டும் மீண்டுமே இடைவிடாமல்தண்ணீரைவிரும்புகிறானோஅவன் த்ருஷ்ணாரோகமுள்ளவன் என்றறிக" என்று ஸுச்ருதர். இந்த வியாதியில் வறட்சி அனைத்திலும் மேலானதென்பது இதனால் குறிக்கப்படுவதாய் அறிக.

3. இரஸக்ஷயத்தில் இருதயத்தில் வேதனை, நடுக்கம் உடல் ஸாரமற்றதாகத் தோற்றுதல், நாவறட்சி இவை இலக்ஷணங்கள்.

4 ஔபஸர்கிக த்ருஷ்ணை—உபஸர்கம் என்றால் உபத்திரவம்; உபஸர்கஸம்பதமானது ஔபஸர்கிகம். உபத்திரவங்களால் ஸம்பவிக்கும் த்ருஷ்ணை யெனப்பொருள்.

5. த்ருடபலன் என்பார், ஐந்து வித த்ருஷ்ணாரோகங்களையே விவரிக்கிறார்; அவை வாதத்ருஷ்ணை, பித்தத்ருஷ்ணை, க்ஷயத்ருஷ்ணை, ஆமத்ருஷ்ணை, ஔபஸர்கிகத்ருஷ்ணை என்பனவாம். இவற்றுள், த–,வகரன் கூறியுள்ள கப த்ருஷ்ணை ஆமத்ருஷ்ணையிலு க்ஷதஜ அன்னஜத்ருஷ்ணைகள் வாதத்ருஷ்ணையிலும் சேர்ந்துவிடுவதால் த்ருடபலனது கொள்கை, ஸுச்ருதர் கூறும் மத்யஜத்ருஷ்ணை வாத பித்தஸம்பந்தமானவையாகையால், இங்கு அவ்வித த்ருஷ்ணை தனியாக வீவரிக்கப்படவில்லை.

## 17. மூர்ச்சாதி நிதானம்.

### மூர்ச்சை. [1]

மூர்ச்சையின் நிதான-ஸம்ப்ராப்திகள்:— மிகவும் இளைத்துள்ளவன், தோஷம் மிதமிஞ்சி விகாரமடைந்திருப்பவன், விருத்தமான ஆஹாரங்களைப் புஜிப்பவன், மல மூத்திராதி வேகங்களை அடக்கிக்கொண்டிருப்பவன், அடி முதலியதால் தாக்குண்டவன், ஸத்வகுண மிழந்தவன் ஆகிய இவர்களுக்கு இந்த்ரியங்களின் உணர்ச்சிகளுக்கு ஆதாரமான வெளிப்புற ஸ்ரோதஸ்ஸுகளென்ன [2] உட்புற ஸ்ரோதஸ்ஸுகளென்ன [3] இவற்றில் தோஷங்கள் உக்கிரமாக எப்பொழுதுப் பிரவேசிக்கின்றனவோ அப்பொழுது அவர்கள் மூர்ச்சையடைகிறார்கள். இங்ஙனம் ஸம்ஞ்ஞாவஹ நாடிகள் என்கிற உணர்ச்சி நரம்புகள் வாதாதிதோஷங்களால் மறைக்கப்பட்டுப் போகும் போது, இன்ப துன்பங்களை அறியமுடியாதவாறு அந்தக்ஷணமே தமஸ் என்கிற இருள் வந்து மூடிக் கொள்கிறது. அந்த அவஸ்த்தையை மூர்ச்சையென்றும், மோஹம் என்றும் சொல்லுவார்கள். 1-3.

மூர்ச்சையின் ஸங்கயாஸம்ப்ராப்தி:—அந்த மூர்ச்சை வாத பித்த கபங்களால் தனித் தனியே ஒவ்வொரு விதமும், இரத்தத்தினால் (சோணிதம்)ஒன்றும், மத்யபானத்தினால் ஒன்றும், விஷத்தினால் ஒன்றும் ஆக ஆறு விதமாகக் கூறப்படுகிறது. இந்த ஆறுவிதமான மூர்ச்சைகளிலும் பித்த தோஷமே அனைத்துக்கும் மேலாக நிற்கின்றது. 4,5.

மூர்ச்சையின் பூர்வரூபம்:— இருதயத்தில் வேதனை, அதிக கொட்டாவி, சோர்வடைதல், ஞாபகசக்தி குறைந்து வருகை ஆகிய இவை எல்லா மூர்ச்சைகளுக்குமே பூர்வரூபங்களாம். அவற்றின் குறிகள் வியக்தமாயுண்டாகையில் வாதாதியான அந்தந்த தோஷஸம்பந்தத்தையும் அவற்றிற்கு அறிந்து கொள்ளலாம். 6.

வாத மூர்ச்சை:—ஆகாயம் நீல நிறமாகவோ, கருநிறமாகவோ, சிறிது செந்நிறமாகவோ தோற்ற, அங்ஙனமே அறிவிழந்து பிணியாளி மயக்கமுறுவான்; சீக்கிரத்தில் தெளிவையுமடைவான்; உடல் நடுக்கமும், உடம்பெல்லாம் துவைக்கப்பட்டது போன்ற வலியும், இருதய வேதனையும் காணும்; தேஹம் இளைத்துப்போவதோடு கருஞ்சிவப்பான நிறத்தையும் பெறும்; இவையெல்லாம் வாததோஷத்தினாலான மூர்ச்சையின் குறிகளாம். 7,8.

பித்த மூர்ச்சை:—பித்தத்தினா லுண்டாகும் மூர்ச்சையில் தன் முன்னிலையில் ஆகாயம் சிவப்பாகவோ பசுமையாகவோ பொன்னிறமாகவோ தோற்ற அங்ஙனமே கண்கள் இருளடைய பிணியாளி மயக்கமுறுகிறான்; பிறகு உடலெல்லாம் வியர்க்க மீண்டும் உணர்ச்சியைப் பெறுகிறான்; மேலும் நாவறட்சியும் தேஹதாபமும் உண்டாகும்; கண்கள் சிவப்பாகவோ, பொன்னிறமாகவோ, இளஞ்சிவப்பாகவோ கலக்கங்கொள்ளும்;[4] மலம் உடைந்து பேதியாகும்; தேஹமும் பசுமையாயிருக்கும். 9, 10.

கப மூர்ச்சை :—சிலேஷ்மத்தினா லுண்டாகும் மூர்ச்சையில் முதலில் ஆகாயமண்டலம் மேகத்தினால் முற்றிலும் சூழப்பட்டது போலவும், கன இருள் கவிந்திருப்பது போலவும் தோன்ற அங்ஙனமே கண் இருளடைந்து பிணியாளி மயக்கமுறுவான்; பிறகு வெகு நேரம் சென்று அந்நிலையிலிருந்து தெளிவுண்டாகும்; ஜலத்தில் நனைத்தெடுத்த சர்மத்தினால் போர்க்கப்பட்டவைபோல அங்கங்களெல்லாம் தடித்து பாரமாயிருப்பதாகத் தோற்

1. மூர்ச்சை—மயக்கம் அல்லது வெறி.

2. இதனால் பாஹ்யேந்த்ரியங்கள் என்கிற குதம், உபஸ்த்தம், ஹஸ்த பாதங்கள், வாக் என்கிற கர்மேந்திரியங்கள் குறிக்கப்படுகின்றன.

3. இதனால் ஆப்யந்தர ஸ்ரோதஸ்ஸுக்கள் என்னும் செவி, நேத்திரம், நாக்கு, சர்மம், நாசி, மனது என்கிற ஆறு ஞானேந்திரியங்கள் குறிக்கப்படுகின்றன.

4. 'நாவறட்சியும்' என்பது முதல் 'கலக்கங் கொள்ளும்' என்பதீறாகவுள்ள விஷயம் "ஸபிபாஸஸ் ஸஸந்தாபோ ரக்த்தபீதாருணேக்ஷண" என்கிற மூல சலோகம் பிரக்ஷிப்தம் என்று கருதப்படுகிறது. மேலும் "ரக்தபீதாருணேக்ஷண:" என்பதற்குப் பதிலாக "ரக்தபீதாகுலேக்ஷண:" என்று வேறு பாடம் வியாக்யதாவால் கூறப்படுகிறது. அப்பொழுது "கண்கள் இரத்தநிறமாகவும் பொன்னிறமாகவும் விரண்டவையாகவும் இருக்கும்" என்பது அதன் பொருள்.

றும்; இதில் வாயில் உமிழ்நீர் அதிகமாய் ஊறும்; இருதயத்துடிப்பும் பலமாயிருக்கும். 11,12.

ஸந்நிபாத மூர்ச்சை [1]: மூன்று தோஷங்களும் ஒருமிக்கப் பிரகோபித்துண்டாகும் மூர்ச்சையில் முன் ஒவ்வொரு தோஷத்திற்கும் கூறியுள்ள இலக்ஷணங்கள் அனைத்தும் சேர்ந்துண்டாகும; அது அபஸ்மாரம் போல ஸம்பவித்து,[2] வெகு ஜடிதியில் மனிதனைக் கீழே தள்ளி விடும்; ஆனால் வாயில் நுரை தப்புவது முதலிய அபஸ்மாரத்திற்குள்ள கோரமான சேஷ்டைகள் இதில் உண்டாகமாட்டா. 13.

இரக்த மூர்ச்சையின் ஸம்ப்ராப்தியும் காரணமும்:—மண் அல்லது ப்ருதிவீ பூதமும், நீர் அல்லது அப் பூதமும் தமோகுணமயமானவை;[3] இரத்தத்தின் வாஸனையோ அவ்விரண்டு பூதங்களின் ஸம்பந்தத்தையும் பெற்றிருக்கிறது; ஆகையினாலேயே இரத்தத்தின் நாற்றத்தை முகர்வதால் பூமியில் [4] மனிதர் மூர்ச்சையடைகிறார்கள். இரத்தத்தைக் கண்டு [5] மூர்ச்சையடைவதானது, அந்த திரவியத்தின் இற்பகைத்தன்மையென்று சிலர் கூறுகிறார்கள். 14, 14½.

விஷ மத்ய மூர்ச்சைகளின் ஸம்ப்ராப்தியும் காரணமும்:—இதர பதார்த்தங்களிலுள்ள லக்வாதி குணங்களே[6] விஷத்திலும் மதுவிலும் வெகு கடுமையாகச் சேர்ந்திருக்கின்றன; ஆகையினாலேயே விஷ மத்யங்களால் பிறகு கூறப்படுமாறு மூர்ச்சை உண்டாகின்றது. 15½.

இரக்த மூர்ச்சையின் இலக்ஷணம்:—இரத்த வாஸனையாலான மூர்ச்சையில் கண்களும், மற்றும் பெரும்பான்மையான அவயவங்களும் செயலற்று ஸ்தம்பித்து நிற்கும்; ச்வாஸம் விடுவதே விளங்கத் தெரியாது. 16.

மத்ய மூர்ச்சையின் இலக்ஷணம்:— மதுவையருந்தியதாலுண்டாகும் மூர்ச்சையில் வாய்ப் பிதற்றிக்கொண்டு பிணியாளி படுத்துக்கொள்கிறான்; [7] அப்பொழுது உணர்ச்சியிழந்து அல்லது பிரமித்துப்போன மனதுடையவனாயிருப்பான்; அவயவங்களைத் தரையில் அடித்துக்

1. மூர்ச்சை ஆறு விதம் என்று கூறப்பட்டது. ஸந்நிபாத மூர்ச்சை அதில் சேர்க்கப்படவில்லை. ஸந்நிபாதமும் சேர்ந்தால் ஏழு விதமாகிறது. இது முன்னுக்குப் பின் விரோதமாகின்றதே என்றால்—சரகரது கொள்கையின்படி தோஷங்களால் தனித்தனியாகவும் ஸந்நிபாத ரூபமாகவும் மூர்ச்சை நான்கு விதம், ஸுச்ருதத்திலோ இரத்தாதிகளாலும் தனித்தனியே விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸங்கிரஹக் கிரந்தத்தில் முதலில் ஸுச்ருதருடைய கொள்கைப்படி ஆறுவித மூர்ச்சைகளும், பிறகு விவரிக்கும்போது சரகரது கொள்கைப்படி ஸந்நிபாத மூர்ச்சையும் கூறப்பட்டதென்றறிக.

2. பல் கட்டிப்போதல் அல்லது பற்களைக் கடித்தல், வக்கிரமாகப் பார்த்தல், வலித்தல் முதலியவை அபஸ்மார ஸம்பந்தமான குறிகள்.

3. "தமோ பஹுலா ப்ருதிவீ ஸத்வதமோ பஹுலா ஆப:" என்று ஸுச்ருதர்.

4. பூமி (ப்ருதிவீ) தமோகுணப் பிரதானமாகையால், அதிலுண்டாகும் மனிதரும் தமோகுணமயமானவர்; ஆகவே தமோகுணப்பிரதானமான இரத்தகந்தத்தினால் தமோரூபமான மூர்ச்சையை யடைகிறார்கள் எனக் கருத்து.

5. இரத்தவாஸனையினால் மூர்ச்சையடைவதுபோலவே, இரத்தத்தைக் காண்பதாலும் மூர்ச்சையடைகிறார்கள் எனப் பொருள். "யச் ச த்ருஷ்ட்வாபி முஹ்யதி" என்கிற பாடம் ஒன்றுண்டு; அதற்கு "இரத்தத்தைப் பார்த்தால்கூட மூர்ச்சையடைகிறான்" எனப் பொருள். "இரத்தத்தைப் பார்ப்பதாலும், இரத்த வாஸனையை முகர்வதாலும் அவயவங்களும், நேத்திரமும் ஸ்தம்பித்து, மூச்சுவிடுவதும் மறைந்து மூர்ச்சை யடைகிறான்" என்று போஜன் கூறுகிறார்.

6. லகு, ரூக்ஷம், ஆசுகாரி, விசதம், வ்யவாயி, தீக்ஷணம், விகாஸி, ஸூக்ஷ்மம், உஷ்ணம், அநிர்தேச்ய ரஸம் என்பவை விஷத்திற்குள்ள பத்து குணங்கள்.

7. "ஸ்வபந் ப்ராந்தமாநஸ:" என்று மூலத்தில் வேறொரு பாடமுண்டு. அதற்குப் பிணியாளி சப்தித்துக் கொண்டு, மனம் தடுமாற்ற மடைந்திருப்பான் எனப் பொருள்.

கொள்வான்; பானம் செய்த மத்யம் ஜீர்ணித்துப் போகும் வரையில் இக் குறிகள் தொடரும். 17.

விஷ மூர்ச்சையின் இலக்ஷணம்:—பொது வாக விஷங்களால் உண்டாகும் மூர்ச்சையில் அவயவங்களில் நடுக்கல், நித்திரை, நாவறட்சி கண்கள் தெரியாமல் இருளடைதல் இக்குறிகள் காணும்; மேலும் வெவ்வேறு விஷத்திற்கு மேன்மேலுமுள்ள கடுமையான குணத்தையும், அந்தந்த விஷத்திற்கும் கூறப்படுகிற குணங்களின் பேதங்களைக் கொண்டு அறிக.[1] 18.

மூர்ச்சாதிகளின் மூலதத்துவங்கள்:—(1) மூர்ச்சையானது பித்தமும் தமோகுணமும் பெரும்பான்மையும் கலந்துண்டாகும் ஓர் அவஸ்தை. (2) ப்ரமம் என்கிற தலைச்சுற்றல் இரஜோகுணமும் வாத-பித்த தோஷங்களும் சேர்ந்துண்டாகும் நிலைமையாம். (3) தந்த்ரா என்கிற சோம்பலோ தமோகுணமும், வாத-கபங்களும் ஒருமிக்கச் சேர்ந்துண்டாவது. (4) நித்ரை யென்னும் தூக்கம் கபதோஷமும் தமோகுணமும் கூடியுண்டாவது. 19.

ப்ரம லக்ஷணம்:—(சக்கிரம் சுற்றுவது போல மனிதன் தனது தலை சுற்றுவதாய் உணருவான்; அந்த நிலைமையில் அவனது தேஹம் அடிக்கடியும் பூமியில் விழும்; இதை ப்ரம ரோகம் என்று அறிக. இது வாத-பித்த தோஷங்களும், இரஜோகுணமும் ஒருமிக்கச் சேர்ந்துண்டாகும் நிலைமையாம்.)

தந்த்ரா லக்ஷணம்:—இந்த்ரியங்களுக்கு லக்ஷ்யமாயுள்ள விஷயங்களில் பிரவ்ருத்தியின்மை, தேஹம் பாரமாயிருப்பதாகத் தோற்றல், கொட்டாவி பதிகமாயுண்டாதல், நித்ரையுறுபவனுக்குள்ளது போன்ற ஓர் உணர்ச்சி ஆகிய இக் குறிகள் தந்த்ரை யென்னும் சோம்பலின் இலக்ஷணங்களாம்.[2] 20.

ஸந்நியாஸ லக்ஷணம்:—மனிதருக்கு வெறியாவது மூர்ச்சையாவது உண்டானால், அவை தோஷங்கள் தங்களுடைய வேகங்களைக் காட்டியடங்கிய பின்பு தாமே உபசாந்தியடைகின்றன; ஸந்நியாஸ ரோகமோ, ஔஷதப் பிரயோகங்களின்றி அடங்குவதில்லை. இதில் தோஷங்கள் வெகு கடுமையான வலுமையுடன் பிரகோபித்து, வாக்கென்ன [3] தேஹமென்ன மனஸ்ஸென்ன இவற்றின் செயல்களைக் கவர்ந்து ஒடுக்கி, அந்தப் பிராணியை துர்பலமாக்கி, மர்மஸ்தானங்களிற் பிரவேசித்து அவனுக்கு மயக்கமுண்டுபண்ணுகின்றன. அம் மனிதன் ஸந்நியாஸமென்கிற இவ்வியாதியினால் பீடிக்கப்பட்டு, கட்டையைப்போலவும் உயிரிழந்த சவத்தைப் போலவும் ஆய்விடுகிறான். உடனே நல்ல பலன் தரக்கூடிய சிகித்ஸையைச் [4] செய்தாலே யொழிய அவன் சீக்கிரம் உயிர் துறப்பான். 21-23.

---

1. பிறகு விஷநிதானத்திற் கூறப்போகிற மூல விஷம், பத்திர விஷம், க்ஷீர விஷம் முதலிய பேதங்கள் இதனால் குறிப்பிடப்படுகின்றன.

2. இங்கே ப்ரமத்திற்கும், நித்திரைக்கும் (அவை வெகுப் பிரஸித்தமானவையாகையால்) இலக்ஷணம் பிரத்தியேகமாகக் கூறப்படவில்லை. (ஆனால் ப்ரமத்திற்கு மாத்திரம் கூறியுள்ள லக்ஷணம் பிரக்ஷிப்த ச்லோகஸம்பந்தமானது.) "எப்பொழுது இந்த்ரியங்கள் மிகவும் சோர்ந்துபோய், மனதும் அயர்ந்துபோய், அதற்கு லக்ஷ்யமான விஷயங்களில் பிரவ்ருத்திக்க முடியாமல் ஓய்வடைகின்றனவோ அப்பொழுதுள்ள நிலைமை ஸ்வப்நம் அல்லது நித்திரை யெனப்படும்' என்று சரகர் நித்திரையின் லக்ஷணத்தைக் கூறியிருக்கின்றார். நித்திரையில் இந்த்ரியங்களும் மனதும் ஒருமிக்கச் சோர்ந்து மந்தப்படுகின்றன; தந்த்ரையிலோ' வென்றால் இந்த்ரியங்கள் மாத்திரமே சோர்ந்து மந்தப்படுகின்றன. இதுதான் நித்திரைக்கும் தந்த்ரைக்குமுள்ள பேதம். சக்கரத்தில் நிறுத்தி சுழற்றப்படுவேது போன்ற விகாரம் ப்ரமம் எனப்படுகிறது.

3. மூர்ச்சாதிகளில் பிரகோபிப்பதைவிட அதிக பலமாக தோஷங்கள் இதில் பிரகோபிக்கின்றன வென்றறிக.

4. "ஸூசீவ்யதநம் (ஊசியால் ஔஷதம் குத்திச் சர்மத்தினுள் செலுத்தல்), அஞ்ஜநமிடல் முதலியவை உடனே பலன் தரக் கூடிய சிகித்ஸைகள் என்று" விஜயரக்ஷிதன்.

## 18. பாநாத்யயாதி நிதாநம்.*

மதாத்யத்தின் பொது நிதாநம்:—(மத்யத்தின் பொது குணங்கள்:) விஷத்திற்கு என்ன குணங்கள் கூறப்படுகின்றனவோ அவை மத்யத்திலும் அடங்கியிருக்கின்றன; ஆகவே மதுவை முறைதவருக அருந்துவதால் கடுமையான மதாத்யயம் என்னும் வெறியுண்டாகின்றது. ஆனால் மத்யமானது, அதன் சுபாவத்தைக் கொண்டு அன்னத்திற்குச் சமானமானதென்றே கருதப்படுகிறது;[1] முறைதவருக உபயோகிக்கப்பட்டால் அது ரோகமுண்டு பண்ணும்; தகுந்த முறைப்படி யுபயோகிக்கப்பட்டால் அதுவே அமுதம் போன்றதாம். அதெங்ஙனமெனில்:—பிராணிகளுக்கு அன்னமே உயிராயிருக்கிறது; ஆனால் அதுவே முறை தவருக உட்கொள்ளப்பட்டால் பிராணனுக்கு அபாயம் விளைவிக்கிறது. அங்ஙனமே விஷமானது ஸாதாரணமாய் உயிரைப் போக்கிவிடுகிறது; அதுவே தகுந்த முறைப்படி பிரயோகிக்கப்படுமானல் இரஸாயநமாகிறது. முறைப்படி, அளவறிந்து, தகுந்த காலத்தில்,[2] அனுகூலமான உணவுகளோடு, அவரவரது தேஹபலத்திற்கேற்றவாறு, வெகு மனக்களிப்புடன் யாதொருவன் மதுவைப் பானம் செய்கிருனே, அவனுக்கு அது அமுதம் போல குணம் செய்யும். அதை ஸ்நிக்த்தமான[3] அன்னத்தோடும், மாம்ஸங்களோடும், இதர பக்ஷ்யங்களோடும் உட்கொண்டால்[4] ஆயுள் விருத்தியடையும்; தேஹபலமும் புஷ்டியுடன் மேன்மையுறும். இங்ஙனம் மத்யம் முறைப்படி யுட்கொள்ளப்பட்டால், இரம்யமான வஸ்துக்களில் மனம் அதிக இன்பமுறும்; மனதும் களிப்படையும்; சரீர தேஜஸ்ஸும் அதிகப்படும்; மேலான சரீர வீர்யமும் உண்டாகும் 1—6.

### நான்குவித மதங்கள்.[5]

முதல் மதம்:—மதுபானத்திலுண்டாகும் மதத்தின் முதல் நிலைமையானது புத்திக்தும், ஞாபகசக்திக்கும் அனுகூலமானதாகவும், இன்பந்தருவதாகவும், இதர பானங்கள் அன்னமுண்ணுதல் நித்ரையுறுதல் சிற்றின்பப்பற்று இவற்றில் நல்ல விருப்பமுண்டு பண்ணுவதாகவும், வாத்தியத்திலும் பாடுவதிலும் உத்ஸாஹத்தைக் கொடுப்பதோடு குரலை மேன்மையுறச் செய்வதாகவும் இருக்கும். ஆகவே முதல் மதம் வெகு இரம்யமானதெனக் கூறப்படுகிறது. 7.

இரண்டவது மதம்:—மத்யமமதம் என்னும் இரண்டாவது வெறியினல் மதங்கொண்டவனுக்கு புத்தியும் ஞாபகசக்தியும் பேச்சும் நடக்கையும் தெளிவாக அல்லது ஒழுங்காக இருக்கமாட்டா; அவன் தனது விளையாட்டி

---

* மதுபாநம் அமிதமாகச் செய்வதாலுண்டாகும் தீங்கு பாநாத்யயம். மதாத்யயம் எனறும் அதற்கே பெயர். பாநாத்யயாதி யென்பதால் பரமதம், பாநாஜீர்ணம், பாநவிப்ரமம் என்கிற கோளாறுகளும் இங்கு விவரிக்கப்படும் என்று கருத்து.

1. அன்னம் போல தேஹபோஷணக்கு அனுகூலமானதென்று கருத்து.

2. க்ரீஷ்ம காலத்தில் சீதமும் மதுரமுமான மாத்வீகம் முதலிய மதுவும், சீதகாலத்தில் கௌடிக பைஷ்டிகாதி உஷ்ண தீக்ஷ்ணமான மதுக்களும் உபயோகமானவையென்று அபிப்பிராயம். அவ்விதமே வாத விகாரத்தில் ஸ்நிக்த்தகுணமுள்ள மதுவும், கப விகாரத்தில் ரூக்ஷாதிகுணமுள்ள மதுவும் உபயோகிக்கத் தகுந்தவை.

3. இங்கே ஸ்நிக்த்தம் என்பது உபலக்ஷணம்; ஆனல் மத்யத்திற்கு எதிரிடையான இதர குணங்களோடும் கூடிய அன்னுதிகள் உபயோகிக்கப்படவேண்டுமென்பது இதன் கொள்கை. மத்யத்தின் ஸாதாரண குணங்களாவன:— "மதுவானது அம்லம், தீக்ஷ்ணம், ஸூக்ஷ்மம், விசதம், ரூக்ஷம், ஆசுகாரி, வ்யவாயி, விகாஷி என்கிற பொதுவான குணங்களையுடையது" என்று ஸுச்ருதர். "மைரேயம், மதிரை, சீது, மது இந்த நான்கு விதமான மதுக்களில் ஒவ்வொன்றிலும் அறு சுவைகளும் அடங்கியிருக்கின்றன. ஆனல் முக்கியமான ரஸம் அம்லந்தான்" என்று போஜன் சொல்லுகிற விதமாய் மத்யங்களில் முக்கியமாய் அடங்கியுள்ளது அம்லரஸமே. "மத்யமே அம்லரஸமுள்ள வஸ்துக்கள் அனைத்திலும் மேலானது" (ஸர்வேஷாம் அம்லஜாதீநாம் மத்யம் மூர்த்நி வ்யவஸ்திதம்) என்று மற்ெருரு கிரந்தம்.

4 அன்னங்களோடும், பக்ஷ்யங்களோடும், மாம்ஸங்களோடும் உபயோகிக்கலாம் என்பதால், லேஹ்யம் முதலியதோடு அலலது வேறுவித திரவ பதார்த்தங்களோடு மதுவை உட்கொள்வது முறையல்லவென்பது கருத்தாம்.

5 மதம் என்பது மதுபானத்திலுண்டாகும் வெறி; இது ஸாதாரணமாய், பிரதமமதம், மத்யமமதம், அந்தியமதம் என்று மூன்று விதமாகத்தான் வழங்கப்படும் ஆனல் மத்யமமதத்திற்கும் அந்திமமதத்திற்கும் இடையில் ஸம்பவிக்கும் நிலைமை மூன்ருவது மதமாகக் கருதப்படுகிறது. ஆகவே மதம் நான்கு விதம் எனப்படுகிறது. இதுவே மதாத்யயம் எனப்படும். வாதாதி ஸம்பந்தத்தினல் 7-வித மதாத்யயம் ஆகும்.

றுலும் உருவத் தோற்றத்தினுலும் பித்தனுக்கு ஒப்பிடக்கூடியவனுகவும், அடங்காப்பிராணியாகவும் இருப்பான்; அவனுக்கு ஆலஸ்யமும் நித்திரையும் அடிக்கடியும் அதிகரிக்கும். 8.

மூன்றுவது மதம்:—மூன்றுவது வெறியில் [1] அம்மனிதன் தகாத வழிகளிலெல்லாம் செல்லத் துணிவான்; பெரியோர்களையும் மதிக்கமாட்டான்; புஜிக்கத் தகாதனவற்றையும் தின்பான்; ஞாபகமிழந்து போவான். மேலும் புத்திஸ்வாதீனமிழந்து மனதிலுள்ள இரஹஸ்யமான விஷயங்களையும் மொழிந்திடுவான். 9.

நான்காவது மதம்.—நான்காவது மதத்தில் மனிதன் முற்றிலும் அறிவற்றவனுய், ஒடிந்த மரம்போலச் சாய்ந்து செயலற்றிருப்பான்; செய்வன செய்யாதனவற்றை யுணரவியலாதவனுய் [2] சவத்தினும் கேடுண்ட நிலைமையைப் பெற்று வீழ்ந்திருப்பான். மூடனுக இல்லாமல் புத்திஸ்வ தீனமும் விவேகமுமுடைய எம்மனிதன்தான் கொடிய விலங்குகள் நிரம்பிய அடவியைப்போன்றதும் மற்றோர் உன்மாதம் (பித்து) போலுள்ளதுமான அத்தகைய மதத்தை அடைய விரும்புவான் [3]? 10, 11.

மதாத்யயாதி தீமைகளுக்குக் காரணமான மதுபான முறைகள்:—(1) வேறு உணவுகளைப் புஜிக்காமலே தினந்தோறும் மத்ய மொன்றையே தனித்துப் பருகி வருவதானது அம்மனிதனுக்கு வெகு கஷ்டஸாத்யமான கோளாறுகளை யுண்டுபண்ணும்; சரீரத்திற்கும் அதனுல் சீக்கிரத்தில் அழிவு நேரிடும். (2) வெகு கோபமாயிருக்கையிலும், (3) பயந்திருக்கையிலும், (4) நாவறட்சி மேலிட்டிருக்கையிலும், (5) துயரத்தினுல் மனம் கிலேசமடைந்திருக்கையிலும், (6) பசித்திருக்கையிலும், (7) வியாயாமம் என்னும் சிலம்பப்பயிற்சி-சுமையெடுத்துச் செல்லுதல்-வெகு தூரம் வழி நடத்தல் ஆகிய இக்கடுங் காரியங்களால் அயர்ந்திருக்கையிலும், (8) வேகங்களை அடக்கிக் கொண்டிருக்கையிலும், (9) மிதமிஞ்சிய தண்ணீரைப் பருகியிருக்கையிலும், (10) அஜீர்ண போஜனங்களைப் புஜித்திருக்கையிலும், (11) துர்ப்பலமான நிலைமையிலும், (12) உஷ்ணத்தினுல் தவிக்கப்பட்டுள்ள நிலைமையிலும் மத்யத்தைப் பானம்செய்தால் அது பாநாத்யமென்ன, பரமதமென்ன, பாநாஜீர்ணமென்ன, கடுமையான பாநவிப்ரமமென்ன ஆகிய இத்தகைய பலவிதமான கோளாறுகளை யுண்டுபண்ணும். அவற்றின் இலக்ஷணங்கள் இதனடியிற் கூறப்படுகின்றன. 12—15.

வாத மதாத்யயம்—விக்கல், ச்வாஸம், தலை நடுக்கம், பக்கச்சூலை, நித்திரையின்மை இவற்றுலும், மிகுதியாகப் பிதற்றுவதாலும் மதாத்

1. சரகத்தில் இரண்டாவது மூன்றுவது மதங்களுக்கு இடையில் வேறொரு வகையான மதம் கூறப்படுகிறது:—“மத்யமமான மதத்தைத் தாண்டி அந்திமம் அல்லது உத்தமமதத்தைப் பெறுவதற்கு முன்பு இராஜஸ தாமஸகுணமுள்ள மனிதர் இவ்விதமான தவறுதலான வேலையைத்தான் செய்வரென்று சொல்லமுடியாது; அதாவது எல்லாப்பிழையையும்செய்வர். ஓர் உன்மாதம் (பித்து) போன்ற அத்தகைய மதத்தை எவர்தான் அடைய விரும்புவர்?” இவ்விஷயம் இங்கே ஏன் குறிப்பிடப்படவில்லை யென்கிற கேள்வியுண்டாகிறது. இரண்டாவது மதத்தின் முடிவில் மூன்றுவது மதத்தின் ஆரம்ப நிலைமையே வெகுவிகாரமானது; அப்படியிருக்க மூன்றுவது மதம் விளங்கத்தோன்றிவிட்டால் அவ்விகாரம் வெகு கடுமையாயிருக்குமல்லவா? ஆசையினுல் இடையில் மற்றொரு மதம் உண்மையில் பிரத்தியேகமாகக் கிடையாது. ஆகிலும் இது விஷயமான சில விவரணம் பின்னுல் உடனே சிறிது கூறப்படுகிறது.

2. ‘செய்வன செய்யாதனவற்றை யுணரும் பகுத்தறிவு இருந்தும்’’ என்று வேறொரு பாடமுண்டு.

3. சரக வாக்படாதிகளால் நான்காவது மதம் கூறப்படவில்லை. நான்காவது மதம் ஸுச்ருதரால் கூறப்படுகிறது. ஸுச்ருதருடைய கொள்கை இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் சரகர் இரண்டாவது மூன்றுவது மதங்களுக்கு இடையில் கூறியுள்ள ஒருவித நிலைமையே இங்கு மூன்றுவது மதமாகவும் மொழியப்படுவதாய் அறிக.

யயமானது பெரும்பாலும் வாதத்தினல் உண்டானதாய்[1] அறிக. 16.

பித்தமதாத்யயம்:—நாவறட்சி, தேஹதாபம், ஜ்வரம், அதிக வியர்வை, மயக்கம், அதிஸாரம், தலைச்சுற்றல் இவற்றைக் கொண்டும், பிணியாளியின் சரீரம் மஞ்சள் நிறமாயிருப்பதைக் கொண்டும் அவனுக்குண்டாயுள்ள மதாத்யயம் பெரிதும் பித்தத்தினுலேற்பட்டதாய் அறிக. 17.

கப மதாத்யயம்.—வாந்தி, அரோசகம், இருதயம் மிதமிஞ்சித் துடித்தல், சோம்பல், தேஹம் திமிர்த்துப் போதல், பாரமாதல் இவற்றைக்கொண்டும், சரீரம் மிகக் குளிர்ந்து போயிருப்பதைக் கொண்டும் அப்பிணியாளிக்கு உண்டாயிருக்கும் மதம் பெரும்பாலும் கபத்தினுலுண்டானதென்றறிக. $17\frac{1}{2}$.

ஸந்நிபாத மதாத்யயம்.—ஒவ்வொரு தோஷத்துக்கும் தனித்தனியே கூறப்பட்ட எல்லா லக்ஷணங்களும் எந்த மதாத்யயத்திற் சேர்ந்து காண்கின்றனவோ அதை ஸந்நிபாதமதாத்யயம் என்றறிக. 18.

பரமதம்:—நாசி முதலியதில் அதிக கபம் உண்டாய் பெருகுவது, தேஹம் குருவாகப் போதல், வாயில் அரோசகம் ஏற்படுதல், மலமூத்திரங்கள் கட்டிப் போதல், சோம்பல் அதிகரித்தல், சிரஸ்ஸிலும் பூட்டுகளிலும் பிளக்கப்படுவதுபோன்றவலி ஆக இக்குறிகள் 'பரமதம்' என்கிற கடுமையான வெறியில் உண்டாகின்றனவென்று இவ்விஷயத்தில் நிபுணரான சாஸ்திரஞ்ஞர் கூறுகிறுர்கள். 19.

பாநாஜீர்ணம்:—பாநம் செய்த மத்யம் ஜீர்ணமாகாமற் போனல் அப்பொழுது கடுமையான வயிற்றுப்பொருமல், வாந்தி, தொண்டை மார்பு இவற்றில் அழற்சி ஆகிய இலக்ஷணங்கள் உண்டாகும். $19\frac{1}{2}$.

பாநவிப்ரமம்:—இருதயத்திலும் தேஹத்திலும் குத்தல் போன்ற வேதனை, கபம் அதிகமாய் ஊறுதல், தொண்டையில் புகைவது போன்ற வேக்காடு, மூர்ச்சை, வாந்தி, ஜ்வரம், தலைவலி, தேஹமெங்கும் அதிக அழற்சி, ஸுரை யென்னும் மதுவிலும் மாப்பண்டங்களாலான இதர உணவுகளிலும் வெறுப்பு ஆக இக்குறிகள் யாவும் உண்டானல் அக்கோளாறு 'பாநவிப்ரமம்' என்று கூறப்படுகிறது.[2] $20\frac{1}{2}$.

பாநஹதம்:—மதுபாநத்தினுல் முற்றிலும் தேஹமழியும் நிலைமை நேரிட்டால் அது பாநஹதம் எனப் படுகிறது; அப்பொழுது மேலுதடு நீண்டுத் தொங்கும்; உடல் மிகவும் குளிர்ந்து விடும்; தேஹத்தின் உட்புறத்தில் அமிதமான அழற்சியேற்படும்; வாய் எண்ணெய் பூசப்பட்டதுபோல் தோன்றும்; இந்த நிலைமை யேற்பட்டால் அது அஸாத்யமென்றறிக. மேலும் இவனுடைய பற்களும் உதடுகளும் நாக்கும் கறுத்துப் போயிருக்கும்; அல்லது நீல நிறமாகவாவது ஆகும்; கண்கள் பசுமையாகவோ இரத்தவர்ணமாகவோ மாறும்;

1 "எல்லா மதாத்யயமும் மூன்று தோஷங்களுடைய ஒருமித்தக் கோளாறுல் உண்டாகின்றது" என்று சரகர் கூறுவதால், வாததோஷம் மற்ற இரண்டையும் விட அதிகமாகப் பிரகோபித்துண்டாகும் மதாத்யயத்தில் வாததோஷக்குறிகள் மற்றவைகளை விட ஒருவாறு விளங்கத்தோன்றும் எனக் கருதி, "பெரும்பாலும்" எனக் குறிப் பிடப்பட்டது. இங்ஙனமே பித்தமதாத்யயம், கபமதாத்யயம் இவற்றிலும் அந்தந்த தோஷத்திற்குள்ள விசேஷக் குறிகள் தோன்றுவதாக மேலே கூறப்படுகின்றது.

2. பரமதம், பாநாஜீர்ணம், பாநவிப்ரமம் முதலிய மதுபான விகாரங்கள் சரக ஸம்ஹிதையில் கூறப்படவில்லை. இவையெல்லாம் பொதுவில் ஸந்நிபாத மதாத்ய விகாரங்கள் எனக் கருதி சரகர் பிரத்தியேகமாக இவற்றைக் குறிப்பிடவில்லை. ஸுச்ருதருடைய கொள்கையை அனுஸரித்து இவை இங்கு தனித் தனியே விவரிக்கப்பட்டிருக்கின்றன.

விக்கலும், ஜ்வரமும், வாந்தியும், உடல் நடுக்கமும்,பக்கவலியும், இருமலும், தலைச்சுற்றலும்[1] பாநஹத மென்னும் கோளாறில் தோன்றும்.[2] 21, 22.

---

## 19 .தாஹ நிதாநம். *

மத்யஜ தாஹம்:—முற்கூறிய மதுபானத்தினுலுண்டான வெப்பமானது பித்தத்தோடும் இரத்தத்தோடும் கலந்து விருத்தியாய் சர்மத்தை யடைந்து கொடிய ஸந்தாபத்தை யுண்டுபண்ணுகிறது. 1.

இரக்தஜ தாஹம்:—தேஹமெங்கும் வியாபித்துள்ளதும், அளவில் அமிதமாய் விருத்தியானதுமான இரத்தம் அப்பிணியாளியை மிகவும் எரிக்கின்றது; அப்பொழுது அவன் அக்னியினுல் தபிக்கப்படுவதுபோல வருந்துவான்; நாவறட்சி விசேஷமாய் அவனுக்கு உண்டாகும்; உடலெல்லாம் பொதுவாகவும் நேத்திரங்கள் முக்கியமாகவும் சென்னிறங் கொள்ளும்; பொதுவாக தேஹத்திலும், முக்கியமாய் முகத்திலும் லோஹத்தின் நாற்றமுண்டாகும்.[3] 2.

பித்தஜ தாஹம்:—பித்ததோஷம் அதிகரித்த தாஹ ரோகத்தில் தேஹத்தில் நெருப்புத் தழலை இறைப்பது போன்ற அழற்சி யுண்டாகும்;பித்த ஜ்வரத்திற்குச் சமானமான மற்றக் குறிகளும் காணும். 3.

த்ருஷ்ணஜ தாஹம்:— த்ருஷ்ணை யென்கிற நாவறட்சியை அதிகமாய் அடக்குவதால் நீர் மயமான தாது க்ஷீணிக்க, தேஹத்தில் வெப்பம் மிக்க மேலெழுந்து விருத்தியடைகிறது; அவ்வுஷ்ண வேகமானது, பகுத்தறிவிற்குன்றிய அம்மனிதனின் தேஹத்தை உள்ளும் புறமும் கடுமையாக எரித்து விடும். 4.

க்ஷதஜதாஹம் [4]:—சஸ்திரம் முதலியதால் உடலின் உட்புறம் தாக்கப்பட, அதனுல் கோஷ்டம்[5] மிக்க இரத்தத்தினுல் நிரம்பிவிட, அக்காரணத்தினுல் தாங்கவியலாத தாபம் உண்டாகும்; அதில் தொண்டையும், உட்புற தவடைகளும்,உதடுகளும் உலர்ந்துவிடும்; நாக்கை இழுத்துக் கொண்டு அப்பிணியாளி நடுக்கமுறுவான். 5.

---

1. விக்கல் முதலியவை பாநாத்யயத்தின் உபத்திரவங்கள் என்றும், ஆகவே இவை கஷ்டஸாத்யக்குறிகளேயன்றி அஸாத்யக்குறிகள் அல்லவென்றும் சிலரது கொள்கை.

2. சரகத்தில் த்வம்ஸகம், விக்ஷேபகம் என்கிற வேறு இரண்டு மதுபானக் கோளாறுகள் கூறப்பட்டிருக்கின்றன. "மதுபானவழக்கத்தை இடையில் சில நாள் விட்டிருந்து,திடீரென எவன் அதை அமிதமாயுட்கொள்கிறுனே அவனுக்கு த்வம்ஸகம், விக்ஷேபகம் என்கிற கோளாறுகள் உண்டாகின்றன. த்வம்ஸகம்:- கபம் அதிகமாகச் சுறத்தல்,தொண்டையும் வாயும் சுஷ்கித்தல், எந்த சப்தத்தையும் ஸஹிக்கமுடியாமை, அதிக சோம்பல், அதிக நித்திரை. விக்ஷேபகம்:— மாரடைப்பு, தொண்டையடைப்பு, மயக்கம், வாந்தி, உடலெல்லாம் நோவு, ஜ்வரம், நாவறட்சி, இருமல், தலைவலி."

* தாஹம் என்றுல் அழற்சி, மத்ய பாநாதிகளால் பிரகோபித்த பித்தம் முக்கியமாய் இக் கோளாறை யுண்டு பண்ணுகிறது. இது பெரும்பாலும் ஜ்வரம் போன்ற ரோகம்.

3. இரத்தத்தில் முக்கியமாய் லோஹம் (அயம்) என்னும் தாதுப் பொருள் விசேஷமாகச் சேர்ந்திருப்பதால், இவ்வித நாற்றம் இக் கோளாறில் காண்கிறது.

4. க்ஷதஜதாஹம்—விரணத்தினுலுண்டாகும் தாப ரோகம். சஸ்திரமோ, வேறுவிதமான ஏதாவது சல்யமோ தேஹத்திற் பாய்ந்து இரத்தம் உட்புற அவயவத்திற் சேருவதால் இக்கோளாறு காண்கிறது. முற்கூறிய 'இரத்தஜதாஹம்',தோஷங்கள், இரத்தம் இவற்றின் பொதுக் கோளாறுல் ஏற்படுகிறது; இதில் காயம் பலமாகத் தாக்குவதால் தாஹம் உண்டாகிறது. என்பவையே இவற்றிற்குள்ள பேதம்.

5. கோஷ்டம் 42-ம் பக்கம் பார்க்க.

தாதுக்ஷயஜ தாஹம்:—தேஹ தாதுக்கள்[1] க்ஷீணிப்பதால் உடம்பெங்கும் ஒருவித அழற்சியுண்டாகிறது; அதனால் மூர்ச்சையும், நாவறட்சியும் கண்டு பிணியாளி வருந்துவான்; அவனது குரல் தீனமாகும்; எவ்வேலையையும் செய்யத் திறமையிழந்தவனுவான்; தேஹமெல்லாம் வேதனையுண்டாய் மிக்க ஸங்கடப்படுவான்[2] 6.

மர்மாபிகாதஜதாஹம்:—மர்மஸ்த்தாநங்கள்[3] தாக்கப்படுவதால் ஏழாவதாக ஓர் தாஹ ரோகம் உண்டாகிறது; அது அஸாத்யமான வியாதியாம். $6\frac{1}{4}$.

தாஹரோகத்தில் அஸாத்யமான பொதுக்குறி: தாஹரோகத்தில் தேஹத்தின் மேற்புறம் வெகு சீதளமாயிருந்தால், அது எந்த தாஹ ரோகமாயினும் அஸாத்யமாகும். 7.

## 20. உந்மாத நிதாநம். *

உந்மாதம்:— பிரகோபமடைந்த தோஷங்கள் மேல் நோக்கிச் சென்று[4] மனிதனுக்கு வெறியை யுண்டு பண்ணுகின்றன; ஆகவே இது உந்மாதம் எனப்படுகிறது. இது மனதைப் பற்றியுண்டாகும் வியாதியாம் 1.

ஸங்க்யா ஸம்ப்ராப்தி:—மிகப் பிரகோபமடைந்த வாத-பித்த-கபங்களால் தனித் தனியே ஒவ்வொரு உந்மாதமும், ஸந்நிபாத தோஷத்தினுல் ஒருவித உந்மாதமும், மனத் துயரத்தினுல் ஐந்தாவது உந்மாதமும், விஷப் பற்றுதலால் ஆருவதாக ஒரு உந்மாதமும் உண்டாகின்றன. 2. $2\frac{1}{2}$.

மதம்:—அந்த உந்மாத ரோகம் முதிர்ந்து விருத்தியாகாமல் மிருதுவான நிலைமையில் இருக்கையில், அதற்கு மதம் (வெறி) என்கிற பெயர் வழங்கப்படும் 3.

உந்மாதத்தின் நிதாநம்:—விருத்த போஜநங்கள், கெட்டுப் போய் அசுத்தமாயுள்ள உணவுகள், தேவதைகள் - குருமார்கள் - அந்தணர் இவர்களால் சபிக்கப்படுதல், அபரிமிதமான பயம் ஸந்தோஷம் இவை முதலியதால் மனம் தாக்கப்படுதல், தகாதவிதமாக வெவ்வேறு அவயவங்களைக் கொண்டு கடுமையான காரியங்களைச் செய்தல் ஆகிய இவை உந்மாதத்தின் பொதுக் காரணங்களாம் 4.

உந்மாதத்தின் ஸம்ப்ராப்தி:—மனோதைரியம் குன்றியவனுக்கு அக்காரணங்களால், கோபமடைந்துள்ள தோஷங்கள் புத்திக்கு ஸ்த்தாநமாயுள்ள இருதயத்தைவிகாரப்படுத்தி, [5]மனோவஹ ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற உணர்ச்சி நரம்புகளையும் அத்தோஷங்கள் ஆச்ரயித்து மனிதனுடைய மனதை உடனே மிகவும் மயக்கிவிடுகின்றன 5.

உந்மாதத்தின் ஸாமாந்யலக்ஷணம்:—புத்தி மாறுட்டம், மனது சஞ்சலப்படுதல், திரள்மிரளாகக் கண்களை விழித்துப் பார்த்தல், தைரியமின்மை, முன்னுக்குப் பின் ஸம்பந்தமில்லாத வார்த்தைகளைச் சொல்லுதல், இருதயம் சூன்யமாதல் ஆக இவை உந்மாத ரோகத்தின் பொதுக் குறிகளாம். 6.

1. தேஹதாதுக்கள்—இரஸ ரக்தாதி ஏழு தாதுக்கள்.

2. 'மிக்க ஸங்கடப்படுவான்' என்பதற்குப் பதிலாக 'இறந்து விடுவான்' என்றும் பொருள் கூறப்படுகிறது. ஆனல் "வீதேத்" என்கிற ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு வருந்துவான் அல்லது ஸங்கடப்படுவான் என்பதுதான் சரியான அர்த்தமாகும்.

3. மர்மஸ்த்தாநங்கள்—சிரஸ் (அதிபம்), இருதயம் வஸ்தி முதலியவை.

* உந்மாதம்-பித்துப் பிடித்தல் அல்லது பித்து.

4. உணர்ச்சி நரம்புகளின் மூலமாய் மூளை முதலியவற்றிற்குச் சென்று எனப் பொருள்

5. சில தமநிகளின் மூலமாய் தோஷங்கள் முதலில் இருதயத்தை தூஷிப்பிக்கின்றன; அது தூஷிக்கப்படவே, இருதயத்தின் செயலால் போஷணையைப்பெறும் மஸ்திஷ்கமும் (மூளை) செயலில் விகாரமடைகிறது. ஆகையால் உபலக்ஷணமாக இருதயம் புத்திஸ்த்தாநம் என்று கூறப்பட்டது.

வாதோந்மாதம்:-ரூக்ஷமாகவும், ஆறிக்குளிர்ந்ததாகவும், அளவிற் சொற்பமாகவுமுள்ள அன்னத்தை யுபயோகித்தல், அதேவிதமான விரேசநௌஷதத்தையுட்கொள்ளல், தாதுக்கள் க்ஷீணித்தல், உபவாஸமிருத்தல் ஆகிய இக்காரணங்களால் வாததோஷம் மிகவும் பிரகோபித்து, சிந்தை முதலியதால் ஏற்கனவே விகாரப்பட்டுள்ள மனதை இன்னும் அதிகமாகக் கெடுத்து, அப்பால் புத்தியையும், ஸ்ம்ருதி யென்கிற ஞாபகச் சக்தியையும் சீக்கிரம் கோளாறடையச் செய்கின்றன. இதன் இலக்ஷணம் :— தகுந்த காரண மில்லாமலிருக்கையிலேயே நகைத்தல், புன்சிரிப்புறுதல், நர்த்தநம் செய்தல், பாடுதல், வாயை அசைத்தல், அவயவங்களை விகாரமான வகைகளில் அசைத்துக் கொள்ளல், அழுகை, தேஹம் கடினமாதல், இளைத்தல், சிவந்த நிறமடைதல் ஆகிய இவை வாதஸம்பந்தமான உந்மாதத்தின் குறிகளாம். இந்த விகாரங்கள், உணவு ஜீர்ணமானவுடனே பலப்படுவது வழக்கம்7, 8.

பித்தோன் மாதம்:—ஜீர்ணிக்கக் கூடாதவையும், காரமானவையும், அதிக புளிப்பானவையும், விதாஹி யென்னும் குணமுள்ளவையும், அதிக சூடானவையுமான உணவுகளால் ஏற்கெனவே சயாவஸ்த்தையிலிருந்த பித்தமானது பின்னும் பிரகோப நிலைமையைப் பெற்று, தனது தேஹநிலைமையை யுணராமல் தோன்றியவாறு நடக்கும் மனிதனுடைய மனதிற் சென்று, முன்போலவே[1] ஜடிதியில் அதிக கடுமையான உந்மாத ரோகத்தை யுண்டு பண்ணும். இலக்ஷணம்:—பொறுமையின்மை, பரபரப்பு, வஸ்திரங்களை விலக்கிப் போடுதல், விரட்டுதல், அதிகமாய் ஓடுதல், தேஹம் அதிக சூடாதல், அதிக கோபங் கொள்ளல், அதிக குளிர்ச்சியிலும் குளிர்ந்த நிழலிலும் குளிர்ந்த உணவிலும் சீதளமான தண்ணீரிலும் விருப்பம், பசுமை நிறங்கொள்ளல், எதுவும் பசுமையாகத் தோற்றல் ஆக இக்குறிகள் பித்தஸம்பந்தமான உந்மாதத்தின் குறிகளாம். 9, 10,

கபோந்மாதம்:—தேஹவுழைப்பு ஒழிந்தவனாய் மிதமிஞ்சி யுணவுகளைத் தின்பதனால் இருதய மர்மத்தில் உஷ்ணத்துடன் கபம் மிக வலுவாகப் பிரகோபமடைந்து[2], புத்தியையும் ஞாபகசக்தியையும் அழித்து, மனதையும் மழுங்கச் செய்து பலவிதமான விகாரங்களையும் உண்டுபண்ணும்; இதில் பேச்சும் மற்றச் செயலும் மந்தப்படும்; அரோசகம், ஸ்த்ரீகளிடமும் தனித்து ஏகாந்தமாயிருப்பதிலும் விருப்பம், அதிக நித்திரை, வாந்தி, வாயில் உமிழ் நீரூறுதல், நகங்களும், சர்மம் முதலியவைகளும் வெண்ணிறமாதல் ஆகிய இக்குறிகள் காணும். போஜநம்செய்தவுடனே வியாதி பலப்படும் 11, 12.

ஸந்நிபா தோந்மாதம்:—ஸந்நிபாத தோஷங்களால் யாதொரு உந்மாதரோகம் உண்டாகிறதோ அது மிகவும் கடுமையானது. உந்மாதத்திற்கான எல்லா ஹேதுக்களாலும் கோளாறடைந்த மூன்று தோஷங்களால் அது காண்கிறது; உந்மாதங்கள் அனைத்துக்கும் உள்ள லக்ஷணங்கள் அனைத்தும் இதில் தோன்றும். இதில் தோஷப் பிரத்யநீகமான சிகித்ஸை உதவாது; ஆகவே இவ்வியாதி அவ்வளவு அஸாதாரணமானது.[3] 13.

சோகாதிஜோந்மாதம்:—கள்ளர், இராஜாதிகாரிகள், பகைவர், மற்றும் அவர் போன்றவர் ஆகியவர்கள் விரட்டுவதாலும், பொருளையோ பந்துக்களையோ இழப்பதாலும், மனதுக்கினிய மனைவியோடு கூட வேண்டுமென்கிற அவா

1. சிந்தை முதலியதால் ஏற்கெனவே விகாரமடைந்த மனதைச் கெடுத்தல் என்கிற விஷயம் முன்போலவே என்பதால் குறிக்கப்படுகிறது.

2, உந்மாதத்தில் பொதுவாகவே பித்தம் பிரபலமாயிருக்குமாகையால், கபஸம்பந்தமான உந்மாதத்திலும் பித்த தோஷப்பற்றுதல் உண்டென்று கூறப்படுகிறது(உஷ்ணம் என்பதற்குப் பித்தம் என்று விஜயரக்ஷிதன் பொருள் கூறுகிறார்.) உஷ்ணம் என்பதால் அதிக சக்தி கூறப்படுகிறது; ஆகவே வெகு பலமான கபம் எனக் கருத்து என்று வேறு சிலர்.

3. மற்ற ஸந்நிபாதவியாதிகளைப் போலன்றி இது ஒரு விசேஷஸந்நிபாத வியாதி. ஆகவே தோஷங்களுக்கு எதிரிடையான சிகித்ஸைகள் பயன் படாவெனப்படுகிறது.

மிதமிஞ்சி யுண்டாவதாலும் மனது வெகு கடுமையாகத் தாக்கப்படுங்கால் அப்பொழுது மிகவும் பலமான மனக்கோளாறு உண்டாகும். இந்த ரோகி தன் மனதிலுள்ள இரஹஸ்யமான விஷயங்களையும் தன்னைபறியாமலே பலவாறு கூறுவான்; மேலும் அறிவின்றி பாடுவான், சிரிப்பான், புலம்புவான். 14,14½.

விஷஜோந்மாதம்:--ஏதாவது விஷம் தேஹத்திற் பற்றியதால் உண்டாகும் உந்மாதத்தில் பிணியாளியின் கண்கள் மிகச் சென்னிறமாகும்; தேஹ பலம், காந்தி, இந்த்ரியங்கள் இவை சீரழியும்; மிகவும் தீனத்தன்மையடைவான்; முகம் கறுக்கும்; அறிவிழந்து போவான். 15

உந்மாதத்தில் அஸாத்ய நிலைமை:—வியாதிக்ரஸ்தன் எப்பொழுதும் தலைகவிழ்ந்த வண்ணமாகவேயோ, அல்லது தலையை நிமிர்த்தவனாகவோ நிலைத்திருப்பதும், தேஹத்தில் சதையையும் பலத்தையும் மிக்க இழந்து விடுவதும், முற்றிலும் நித்திரையின்றி யெப்பொழுதும் கண்விழித்த வண்ணம் இருப்பதும் ஸந்தேஹமின்றி உந்மாதத்தினால் இறந்துவிடுவான் என்பதை யறிவிக்கின்றன. 16.

பூதோந்மாதத்தின் பொதுக்குறிகள்:—பேசுவதும், பராக்ரமம் கூறுவதும், வீர்யமும்,மற்றச் செயல்களும் மனித சுபாவத்தை மீறியதாயிருத்தல், தத்துவஞ்ஞானம், சிற்பஞ்ஞானம் இவை முதலியவற்றால் விசேஷமாய் விளங்குதல் ,பித்துப் பிடிக்கும் காலம் நிய்மமின்றியிருப்பதும் ஆக இக்குறிகள் கண்டால், அதை பிறகு கூறப்படும் பூதங்கள் என்னும் கிரஹங்களுடைய ஆவேசத்தால் உண்டான உந்மாதமாகக் கூறுக. 17.

தேவோந்மாதம்:—மனக்களிப்பு, நிர்மலமாயிருத்தல், மிக்க மேன்மையுற்ற தேவார்ஹமான புஷ்பங்களுக் கொப்பான மனமுடையவனாயிருத்தல், சோம்பலின்மை, உண்மையும் சீர்திருந்தியவையுமான வார்த்தைகளைச் சொல்லுதல், மேலான சரீரகாந்தியைப் பெற்றிருத்தல், நேத்திரம் குறிப்பிட்ட லக்ஷ்யத்திலேயே நிலைத்திருத்தல், வரனளித்தல், அந்தணரிடம் ஆதரவு அதிகரித்தல் ஆகிய இக்குறிகளுள்ள மனிதன் தேவக்கிரஹத்தின் ஆவேசத்தைப் பெற்ற உந்மாத ரோகியாவான். 18.

அஸுரோந்மாதம்:—தேவர்களின் பகைவரான அஸுரர்களுடைய ஆவேசத்தைப்பெற்றவன் அதிக வியர்வையுடைய வனாயிருப்பான்;அந்தணர்களையும் குருமார்களையும் தைவங்களையும் நிந்திப்பான்; வக்கிரமாக பயங்கரமாகப் பார்ப்பான்; பயம் அறியான்; தகாத வழிகளில் திருஷ்டியுடையவனாயிருப்பான்; மிகுதியான அன்னபானங்களை யுட்கொண்டும் திருப்தியடையான்; துஷ்ட ஸ்வபாவமுடையவனாயிருப்பான். 19.

கந்தர்வோந்மாதம்:—கந்தர்வக்கிரஹத்தினால் பீடிக்கப்படும் மனிதன் மனத்தென்புடையவனாகவும், மணற்குன்றுகளிலும் வநாந்தரங்களிலும் சென்று பொழுது போக்குபவனாகவும், நெறிதவறாத நடத்தையுடையவனாகவும், ஸங்கீதம் ஸுகந்தங்கள் புஷ்பங்கள் இவற்றில் விருப்பமுள்ளவனாகவுமிருப்பான்; இவன் நர்த்தநம்செய்து கொண்டு சிறுத்த குரலுடன் இனிமையாகச் சிரிப்பான். 20.

யக்ஷோந்மாதம்:-யக்ஷக்கிரஹம் ஆவேசித்து அதனால் துன்புறுத்தப்படும் மனிதன் சிவந்த கண்களையுடையவனாய், அழகாயும் மெல்லியதாயும் சிவப்பாகவு முள்ள வஸ்திரமணிவதில் விருப்பமுள்ளவனாயிருப்பான்; கம்பீரமாகத் தோற்றுவான்; சுருசுருப்பாக நடப்பான்; மிக்க மிதமாகப் பேசுவான்; பொறுமையுள்ளவனாயிருப்பன்; தேஜிஷ்டனாகக் காணப்படுவான்; 'எவருக்கு நான் எதைக் கொடுக்கட்டும்?' எனப் பேசுவான். 21.

பித்ருக் கிரஹோந்மாதம்:—பித்ருக்கிரஹத்தினால் பற்றிக்கொள்ளப்பட்டவன், அத்தேவதையினிடம் பக்தி பாராட்டுபவவனாய், தர்ப்பம் முதலியதைப் பரப்பி அவற்றின் மீது

தங்களுக்குப் பிண்டங்கள் அளித்துத் தர்ப்பணஜலமும் விடுவான்; வஸ்திரத்தை அப்பிரதக்ஷிணமாகவும் தரிப்பான்; மாம்ஸத்தில் விருப்பங்கொள்வான்; எள்ளு, வெல்லம், பாயஸம் இவற்றையும் அபேக்ஷிப்பான். 22.

நாகோன்மாதம்:—யாதொருவன் ஸர்ப்பம் போல நிலத்தில் அப்போதைக்கப்போது உடலால் ஊர்ந்து செல்லுகிறானோ, அங்ஙனமே நாக்கினால் வாயின் இரு புறங்களையும் அடிக்கடி நனைவுகிறானோ, மிகச் சினங்கொள்கிறானோ, வெல்லம் தேன் பால் பாயஸம் இவற்றை விரும்புகிறானோ அப்பிணியாளியினிடம் நாகதேவதை ஆவேசம் செய்திருப்பதாய் அறிக. 23.

இராக்ஷஸோன்மாதம்:—இறைச்சி, இரத்தம், பலவகையான மது இனங்கள் இவற்றை யுட்கொள்ள விரும்புதல், முற்றிலும் வெட்கமற்றுப் போதல், அதிகதுஷ்டத்தன்மையடைதல், மிகவும் சூரனாயிருத்தல், கோபங்கொள்ளுதல், விசேஷதேஹவன்மையைப் பெறுதல், இராக்காலங்களில் வெளியில் ஸஞ்சரித்தல், பரிசுத்தாசாரத்தை வெறுத்தல் ஆகிய இந்த லக்ஷணங்களுள்ளவன் இராக்ஷஸக்கிரஹத்தினால்[1] பற்றப்பட்டவனாவான். 24.

பிசாசோன்மாதம்:—பிசாசம் ஆவேசித்துள்ள மனிதன் கைகளைத் தூக்கிக்கொண்டு ஓடுவான்; மெலிந்தும் ரூக்ஷமுமான தேஹமுடையவனாயிருப்பான்; சிறிது புலம்புவான்; துர்நாற்றமுடையவனாவான்; மிகவும் அசுத்தமாயிருப்பான்; எந்த உணவிலும் பேராவல் கொள்வான்; அமிதமாகப் புஜிப்பான்; மனிதஸஞ்சாரமற்ற வனாந்தரங்களிற் சென்று திரிவான். 25.

உன்மாதத்தில் அஸாத்யலக்ஷணங்கள்:—கண்கள் விரிந்து பருத்துப்போதல், துரிதமாய் நடந்து போதல், நுரையை நக்கி யுண்ணல், நித்திரையுறுதல், விழுதல், நடுக்குதல், பர்வதம் யானை விருக்ஷம் இவை முதலிய வற்றிலிருந்து விழுவதால் உன்மாதங் கொள்ளுதல் ஆக இக்குறிகளைப்பெற்ற உன்மாதரோகிகளுக்கு அக்கோளாறு தீருவதில்லை; அங்ஙனமே பதின்மூன்றாவது வயதில் ஸம்பவித்தால் அவ்வுன்மாதமும் அஸாத்யமாம்.[2] 26.

தேவாதிக்கிரஹங்கள் ஆவேசத்திற்குரிய காலங்கள்:—தேவக்கிரஹங்கள் பௌர்ணமியிலும், அஸுரக்கிரஹங்கள் ஸந்தியா காலங்களிலும், கந்தர்வக்கிரஹங்கள் அஷ்டமியிலும், யக்ஷக்கிரஹங்கள் அஷ்டமி பிரதமை இவற்றிலும், பித்ருக் கிரஹங்கள் அமாவாஸ்யையிலும், நாகங்கள் பஞ்சமியிலும், இரக்ஷோக்கிரஹங்கள் இரவிலும், பிசாசங்கள் சதுர்தசியிலும் மனிதனிடம் பெரும்பாலும் ஆவேசம் செய்கின்றன. கண்ணாடி முதலியவற்றில் சாயை போலவும், பிராணிகளிடம் சீதம் அல்லது உஷ்ணம் போலவும், ஸூரிய காந்தமணியில் ஸூரியகிரணம் போலவும், மனிதரது கர்ப்பாசயத்தில் ஆத்மாபோலவும், கிரஹங்கள் மனிதரது சரீரத்தில் நமது தோற்றத்திற்குப் புலப்படாமலே ஒருவாறு ஊடுருவிப் பிரவேசிக்கின்றன.[3] 27. 29.

1. இராக்ஷஸக்கிரஹம் என்பதால் பிரஹ்மரக்ஷஸ் முதலியவைகளும் குறிக்கப் படுகின்றன. "பிரஹ்மரக்ஷஸ்வின் ஆவேசத்தைப் பெற்றவன் தேவர்களையும் குருமார்களையும் அந்தணர்களையும் த்வேஷிப்பான்; வேதமென்ன வேதாங்கங்களென்ன இவற்றை யறிந்திருப்பான்; பரிசுத்தமாகவும் தன்னைத்தானே துன்பப்படுத்திக்கொள்பவனாகவும் இருப்பான்; அடிக்கடியும் சிரிப்பான்; இக்குறிகளைப் பெற்றவன் பிரஹ்மரக்ஷஸ்வினாலான உன்மாதரோகியாவான்." என்று விதேஹர் கூறுகிறார்.

2. "மர்மஸ்த்தானத்திலிருந்து இரத்தம் வெளிவருதல், கண்களிலிருந்து இரத்தம் கசிதல், நாசியிலிருந்து சிலேஷ்மம் முதலிய தோஷம் கசிந்து கொண்டிருத்தல், நாக்கு உலர்ந்து போதல், வாய் வயிறு முதலியது துர்க்கந்தமாதல், வாய்ப்பேச்சு அடைபடுதல், அதிக தூர்ப லத்தன்மை ஆகிய இவையும் அஸாத்யக்குறிகள்" என்று விதேஹர் வேறு உன்மாதத்தின் அஸாத்ய லக்ஷணங்களையும் கூறுகிறார்.

3. தேவர் முதலியவர்கள் இங்கு குறிக்கப்பட்டாலும் ஸாக்ஷாத்தான தேவர் முதலியவரல்லர்; தேவர் முதலிய திவ்ய சரீரிகள் பார்த்திவமான மனித தேஹங்களில் ஸாக்ஷாத்தாய் ஸம்பந்திப்பதில்லை; ஆகவே தேவாதிகளுக்குச் சிறிது ஸமானமான அவர்களது அநுசரர்கள் இதனால் கூறப்படுவதாகவே கருத்து. ஸுச்ருதர் மொழிவதாவது:—"அவர்கள் மனித சரீரத்தில் ஸம்பந்திக்க மாட்டார்; ஆகவே அவர்கள் மனிதரிடம் எங்கும் ஆவேசிப்பதில்லை; தேவாதிக்கிரஹங்கள் ஆவேசிப்பதாகக் கூறுபவர் பூதவித்யையில் பரிசயமில்லாதவர்" என்று. ஆகவே பூதவித்யையென்பதால் பூதங்கள் என்கிற சில ஸூக்ஷ்ம ஜீவன்கள் குறிக்கப்படுகின்றனவேயன்றி வேறுவித தேவதைகள் என்று உண்மையில் பொருளல்ல.

## 21. அபஸ்மார நிதாநம். *

அபஸ்மாரத்தின் நிதாந-ஸம்ப்ராப்திகள்:-(மனக் கவலை, துயரம் இவை முதலியவற்றால், மனோ நாடிகளைப் பற்றிய தோஷங்கள் பிரகோபம டைந்து, ஸ்ம்ருதியென்கிற நினைவைப் போக்கி, அபஸ்மாரரோகத்தை யுண்டுபண்ணுகின்றன.)

அபஸ்மாரத்தின் பொதுலக்ஷணம்:--தோஷங் கள் மிகப் பிரகோபமடைந்து ஞாபகசக்தியி ழந்த இப்பிணியாளிக்குக் கண்கள் இருளடை யும்; தேஹமெங்கும் இசிவுடன் பாபரப்புண் டாகும். இந்த வியாதி அபஸ்மாரம் எனப்படும். இந்த கோரமான வியாதி நான்கு விதம். 1.

அபஸ்மாரத்தின் பூர்வரூபம்:—இருதயத்துடி ப்பு, மனம் சூன்யமாதல், வியர்வை, மனம் கவலையுறுதல், மூர்ச்சையுண்டாதல், இந்திரி யங்கள் மங்கிப்போதல், நித்திரையின்மை ஆகிய இக்குறிகள் அபஸ்மாரம் உண்டாவ தற்கு முன்பு காணும். 2.

வாதாபஸ்மாரம்:—வாததோஷத்தினா லுண் டாகும் அபஸ்மாரத்தில் பிணியாளி உடல் நடுங்க, பற்களைக் கடிப்பான்; நுரை ததும்ப வாந்தி செய்வான்; பெருமூச்சு விடுவான்; குரூரமாகவும், சிவப்பாகவும், கறுப்பாகவு முள்ள உருவங்களைக் காண்பான்.[1] 3.

பித்தாபஸ்மாரம்:—பித்தத்தினா லுண்டாகும் அபஸ்மாரத்தில் பசுமை நிறமான நுரையைக் கக்குவான்; அவனது உடல், வாய், கண்கள் இவையும் மஞ்சள் நிறமாகும்; பார்க்கப்படுவ தெல்லாம் அவனுக்கு மஞ்சளாகவோ இரத் தம் போன்றதாகவோ தோன்றும்; உலகமெல் லாம் காவறட்சியினாலும், சூட்டாலும், அக்னி யினாலும் வியாபிக்கப்பட்டது போலவும் அவ னது காட்சியிற் புலப்படும். 4.

கபாபஸ்மாரம்:—கபதோஷத்தினா லுண்டா கும் அபஸ்மாரத்தில் வாயிலிருந்து வரும் நுரையும், தேஹமுழுமையும், முக்கியமாய் நேத்திரமும் வெண்மையாயிருக்கும். சரீரம் மிகக் குளிர்ச்சி பெற்று, குருவாகவும் ஆகும்; மயிர்கள் சிலிர்த்துக் கொள்ளும்; ஸகல உரு வங்களும் அவனுக்கு வெண்மையாகத் தோன் றும். இந்த அபஸ்மாரம் தெளிய வெகு நேரம் செல்லும்.[2] 5.

ஸந்நிபாதாபஸ்மாரமும் அஸாத்யாபஸ்மாரமும்:- வாத-பித்த-கபதோஷங்கள் ஒருமிக்கக் கோ ளாறடைந்துண்டாகும் அபஸ்மாரத்தில் முற் கூறிய மூன்றுவித அபஸ்மாரத்திற்குள்ள லக்ஷணங்கள் அனைத்தும் சேர்ந்துண்டாகும். அந்த அபஸ்மாரமும், மிக்க இளைத்துப்போன வனுக்குண்டாகும் அபஸ்மாரமும், வெகு நாட்பட்ட அபஸ்மாரமும் அஸாத்யங்களாம். வெகு அதிகமாய்த் துடிப்பை யுண்டுபண்ணு வதும், மிக பலஹீனமானவனுக்குண்டாவ தும், புருவநெறிப்பை யதிகமா யுண்டாக்குவ தும், நேத்திரங்களை வக்கிரமாகச் செய்வது மான அபஸ்மாரமும் மரணத்தை யுண்டுபண் ணும். 6, 7.

அபஸ்மாரம் கிளம்புவதற்கான காலநியமங் கள்:—அபஸ்மாரத்தை யுண்டுபண்ணக்கூடிய தோஷங்கள் சற்றேறக் குறைய ஒரு பக்ஷத் திற்கு ஒரு முறையோ, பன்னிரண்டு நாட்களு க்கு ஒரு முறையோ, ஒரு மாஸத்திற்கு ஒரு தடவையோ முறையே அதனதன் வேகத் தைக் காட்டுகின்றன. இஃதெங்ஙனமெனில் மழை எக்காலத்திற் பொழிந்த போதிலும், சில வித்துகள் பூமியில் சரத்ருது முதலிய சில குறிப்பிட்ட ஸமயத்திலேயே முளைத்துப் பயிராகின்றனவல்லவா? அங்ஙனமே வியா திகளின் உற்பத்தியுமாகும்.[3] 8, 9.

---

* அபஸ்மாரம்—இது கொருக்குவலி அல்லது காக்கை வலி யென்று வழங்கப்படும். [ஸ்ம்ருதி என்கிற நினை வற்றுப்போதல் எனப் பொருள் என்று ஸுச்ருதர் கூறுகிறார்.]

1. வாதாபஸ்மாரத்தில் எங்கும் கறுநிறம் தன்னைச் சூழ்ந்திருப்பதாகவும், பித்தாபஸ்மாரத்தில் எங்கும் மஞ்சள் நிறம் சூழ்ந்திருப்பது போலவும், கபாபஸ்மா ரத்தில் வெண்மை நிறம் சூழ்ந்திருப்பது போலவும் பிணியாளிக்குத் தோற்றும் என்று ஸுச்ருதர்.

2. இதனால் வாதாபஸ்மாரமும், பித்தாபஸ்மாரமும் சீக்கிரம் தெளிவடையும் எனக் கருத்து.

3. வேண்டிய ஸாம்க்ரிகள் எல்லாம் கூடியிருந்தும் வித்துகள் அததற்கு ஏற்ற பருவம் வந்தாலே யொழிய முளைத்துப் பயிராவது எங்ஙனம் அரிதோ அங்ஙனமே வியாதிகளும் நிதாநஸாமக்ரிகள் பூர்ணமாயிருந்தும் தகுந்த பருவம் வந்தாலேயன்றி மேற்கிளம்புவதில்லை யெனக் கருத்து.

## 22. வாதவியாதி நிதாநம். *

வாதரோக ஸாமாந்ய நிதாந ஸம்ப்ராப்திகள்:—ரூக்ஷமும், சீதமும், அளவில் சொற்பமும், குணத்தில் இலகுவுமான உணவை யுபயோகித்தல், அதிக புணர்ச்சி, அதிகமாய் கண்விழித்தல், விஷமமான உபசாரம், தோஷங்களையும் இரத்தத்தையும் மிதமின்றி வெளிப்படுத்தல், தாண்டுதல், நீஞ்சுதல், அதிகதூரம் வழிநடத்தல், அதிக வியாயாமம் செய்தல் ஆகிய இவை முதலிய செயல்கள், தாதுக்கள் மிக க்ஷீணமடைதல், மனக்கவலை, சோகம், இதரரோகங்களால் தேஹம் இளைத்தல், வேகங்களை அடக்குதல், ஆமதோஷம் சேருதல், அபிகாதம், அமித போஜநம், மர்மங்கள் தாக்கப்படுதல், யானை-ஒட்டகம்-குதிரை இவற்றின் மீது வெகு வேகமாகச் செல்லுதல், உயரத்திலிருந்து விழுதல் இக்காரணங்களால் தேஹத்தினுள் சூன்யமாயுள்ள ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற குழாய்களில் வெகு வலிவு பெற்ற வாததோஷம் பிரவேசித்து, அவற்றை நிரப்பிஸர்வாங்கங்களை அல்லது ஒவ்வோர் அவயவத்தைப் பற்றிய பற்பல வகையான கோளாறுகளை யுண்டுபண்ணுகிறது. 1—4.

வாதரோகங்களின் ஸாமாந்ய பூர்வரூபம் முதலியன:—இனி கூறப் போகிற வாதரோகங்களின் விளங்கத்தோன்றாத குறிகளே இவற்றின் பூர்வரூபமாகும். அவையே விளங்கத்தோன்றினால் இலக்ஷணங்களாம். இக்குறிகள் எப்பொழுது மறைகின்றனவோ அப்பொழுது வியாதி நிவ்ருத்தியாயிருப்பதாகவும், தேஹம் காரியங்களைச் செய்யவல்லதுபோல் ஸௌகர்யம் ஏற்பட்டதாகவும் தோன்றும். 5.

வாதரோகஸாமாந்யலக்ஷணங்கள்:—அவயவங்கள் சுருங்குதல், கணுக்கள் அசைக்கமுடியாமற்போதல், எலும்புகளும், அவற்றின் பூட்டுகளும் ஒடிதல் அல்லது விலகுதல், மயிர்கள் சிலிர்த்தல், பிதற்றுதல், கைகள்-ப்ருஷ்டபாகம்-சிரஸ் இவற்றில் பிடிப்புண்டாதல், நொண்டியாதல், முடமாதல், கூன்விழுதல், அவயவங்களில் உணர்ச்சியற்றுப் போதல், சிரஸ்-நாசி-நேத்திரம்-பிடரி-கழுத்து இவை குறுகுதல், பிளக்கப்படுவது போன்ற வேதனை, குத்தல், வலி, அடிக்கடியும் இசிவு, அதிக சோர்வு ஆகிய இவ்வகையான விகாரங்களை பிரகோபமடைந்த வாயு உண்டுபண்ணுகின்றது. 6-8½.

வாதம்வெவ்வேறு ரோகங்களை யுண்டுபண்ணுதல்:—வாததோஷம் தான் கோளாறடைவதற்கான காரண பேதங்களாலும், ஸ்த்தாநபேதங்களாலும் அடியில் வருமாறு[1] வெவ்வேறு விதமான வியாதிகளை யுண்டுபண்ணும். 9.

ஸ்த்தாநபேதங்களை யனுஸரித்துண்டாகும் வாதரோகங்கள்:—அவற்றுள் (1)கோஷ்டத்தை[2] ஆச்ரயித்துள்ள வாததோஷம் கோளாறடைந்தால் மல-மூத்திரங்கள் கட்டப்படும்; பீஜவாதம், இருதய ரோகம், குல்மம், அர்சஸ் என்கிற மூலம், பக்க சூலை இவைகளும் உண்டாகும். (2)ஸர்வாங்கங்களையும் ஆச்ரயித்த வாததோஷம் கோளாறடைந்தால் அவயவங்கள் துடித்தல், அவயவங்கள் ஒடிந்து விட்டது போன்ற வேதனை, கணுக்கள் பிளக்கப்படுவது போன்றிருத்தல், மற்றும் பலவேறு வேதனைகள் தேஹமெங்கும் ஏற்படுதல் ஆகிய

* வாததோஷக் கோளாறால் உண்டாகும் அஸாதாரண வியாதி "வாதரோகம்" எனப்படுகிறது, திருஷ்டாந்தமாய் "வாயுவானது கபபித்தங்களோடு கூடியோ, சுயமாகவேயோ ஆக்ஷேபகவாதம் என்கிற வியாதியை யுண்டுபண்ணும்" என்கிற விடத்தில் வாயு அஸாதாரணமாய் சுயமாகவே அல்லது இதர தோஷங்களை ஒழுங்கீனப்படுத்தி ஆக்ஷேபகவியாதியை யுண்டு பண்ணுகிறது எனக் கருத்து; இவ்வாதரோகங்கள் "ஸாமாந்யங்கள்" என்றும். "ஏகதோஷஜங்கள்" என்றும் சரகத்தில் இரண்டு விதமாகப் பிரிக்சப்பட்டிருக்கின்றன. ஜ்வராதிகள் ஸாமாந்ய வாதரோகங்கள்; இவை மூன்று தோஷங்களுள் எதனாலும் ஏற்படலாம். ஆக்ஷேபகாதிகள் வாதத்தினால் உண்டாகுபவை. பித்தகபங்கள் அநுபந்தங்களாயேற்பட்டாலும் கேவல பித்தத்தினாலாவது, கேவல கபத்தினாலாவது ஆக்ஷேபக க்ருதயவீ-விச்வாசீ முதலியவை ஸம்பவிக்கமாட்டா; இங்ஙனமே அம்லபித்தாதிகள் பித்தத்தினாலேயே உண்டாகும் விசேஷ வியாதிகள்; அவை வாதத்தினால் மாத்திரம் உண்டாகா. வாயு அதிக பலிஷ்டமான தோஷமாகையாலும், வெகு சீக்கிரத்தில் கோளாறுகளை யுண்டு பண்ணுவதாலும், எல்லாத்தோஷங்களுக்கும் மேலான சக்தியுடையதாலும், அதனாலுண்டாகும் வியாதிகள் மிகக் கடுமையானவையானதாலும் வாதவியாதிகள் பிரத்தியேகமாசக் கூறப்பட்டன.

1. காரணபேதம்—ஆவரணவாதாதிகளாகிற ஹேதுக்கள். ஸ்த்தாநபேதம்—ஆமாசய பக்வாசயாதிகள்.

2. கோஷ்டம் என்பது பொதுவாகக் குடலின் பெயர்.

இவ்விகாரங்கள் தோன்றும். (3) **குதந்தைப்**[1] **பற்றிய வாதம்** கோளாறடைந்திருக்கையில் மல-மூத்திரங்கள் கட்டிப் போதல், வயிற்றுநோய், வயிற்றுப் பொருமல், அச்மரீ யென்னும் மூத்திர மார்க்கத்திற் கல்லடைப்பு, நீர்த்தாரையில் மணல் மணலான பதார்த்தங்கள் வருதல், முழந்தாள், இடுப்பு, கால்கள், பிருஷ்டபாகம் இவற்றில் வலி, அவயவங்கள் க்ஷீணித்தல் ஆகிய குறிகள் உண்டாகும். (4) **ஆமாசயத்தை**[2] **ஆச்ரயித்த வாதம்** கோளாறடைந்திருக்கையில் விலாப்பக்கங்களிலும், வயிற்றிலும், இருதயத்திலும், நாசியிலும் நோவுண்டாகும்; நாவறட்சி, தேக்கெரிவு, விஷூசி, காஸம், தொண்டை வரண்டுபோதல், ச்வாஸம் ஆகிய இவை யுண்டாகும். (5) **பக்வாசயத்தைப் பற்றிய வாதம்** கோளாறடைந்திருக்கையில் குடலிரைத்தல், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், மல மூத்திரங்கள் வெகு கஷ்டப்பட்டு வெளியாதல், இடுப்புவலி, செவி முதலிய இந்த்ரியங்கள் சக்தியற்றுப்போதல் ஆகிய இவை லக்ஷணங்களாம். 10—14½.

**தாதுக்களைப் பற்றிய வாதரோகங்கள்:**—அவற்றுள் (1) **சர்மத்தைப்பற்றிய வாதம்** கோளாறடைந்தால் சர்மம் ரூக்ஷமாகவும், வெடிப்புள்ளதாகவும், பரிசவுணர்ச்சியிற் குன்றியதாகவும், மெல்லிதாகவும், கருநிறமாகவும் மாறி குத்தலையுண்டுபண்ணும்; மேலும் சிவந்துபோய் அகன்று விறிந்து போவது போலவும் துன்பத்தை யுண்டுபண்ணும்; கணுக்களில் நோவும் காணும்.[3] (2) **இரத்தத்தைப் பற்றிய வாதம்**[4] கோளாறடைந்தால் அழற்சியும் வலியும் கடுமையாகும்; தேஹம் கருநிறங்கொண்டு இளைக்கும்; அரோசகம் உண்டாகும்; உடம்பில் அரூம்ஷிகா என்கிற புண்கள் காணும்; புஜித்தவுடனே தேஹம் விறைக்கும். (3) **மாம்ஸம். மேதஸ் இவற்றைப் பற்றிய வாதம்** கோளாறடைந்திருக்கையில் தேஹம் குருவாகப்போய் தடியாலும் முஷ்டியாலும் அடிக்கப்பட்டது போல் மிகக் குத்தல் வலி யுண்டாகும்; அவ்வலி தாளாமல் அப்பிணியாளி சோர்ந்து தவிப்பான்.[5] (4) **மஜ்ஜாதாது-அஸ்த்தி இவற்றைப் பற்றிய வாதம்** கோளாறடைந்தால் எலும்புகளிலும் கணுக்களிலும் பிளக்கப்படுவது போன்ற வேதனை, மாம்ஸாதிகளின் ஸந்திகளிலும் வலி, தசை நார்களின் வலிமை க்ஷயித்தல், நித்திரையின்மை, இடைவிடாத வலி ஆகியவை குறிகளாம். (5) **சுக்ரத்தைப் பற்றிய வாதம்** விகாரமடைந்திருக்கையில் சுக்ரதாது வெகு எளிதில் வெளியாய்விடும், அல்லது முற்றிலும் வாராமலே கட்டப்பட்டும் போம்; அல்லது அதனாலுண்டாகும் கர்ப்பம் விகாரப்படும். (6) **ஸிரையைப் பற்றிய வாதம்** கோளாறடைந்தால் அவ்வவயவத்தில் குத்தலுண்டாகும்; ஸிரையென்னும் இரத்தநாளம் தடித்துக் குறுகி இரத்தம் நிரம்பியது போலக் காணும்; இக்கோளாறுடன் பாஹ்யாயாமம், அந்தராயாமம் அல்லது கல்வி, அல்லது கூன்விழுதல் ஆகிய விகாரங்களும் தோன்றும். (7) **ஸ்நாயுவைப் பற்றிய வாதம்** விகாரமடைந்திருக்கையில் ஸர்வாங்க வாதம் ஏகாங்க வாதம் என்கிற கோளாறுகள் உண்டா

---

1. குதம்—பக்வாசயத்துக்குக் கீழேயுள்ள மூன்று வலிகள் என்கிற மடிப்புகளோடு கூடிய குடலின் கடைசியான பாகம்.

2. ஆமாசயம்—இரைப்பை.

3. சர்மம் எழு தாதுக்களில் ஒன்றல்ல; ஆனால் அது உப தாதுக்களில் ஒன்றாகக் கருதப்படுவதால், இங்கே குறிக்கப்பட்டது. சிலர் த்வக் (சர்மம்) என்பதற்கு இரஸம் என்றும் பொருள் கூறுவதுண்டு. இதைப் பலர் அங்கீகரிப்பதில்லை.

4. இரத்தத்தைப்பற்றிய வாதத்தில், வாததோஷம் இரத்தத்தை ஆவரணம் செய்து வாத ஸம்பந்தமான விகாரங்களை யுண்டுபண்ணும்; ஆகவே வாதரக்த வியாதியினும் இது வேறுபட்டது; வாதரத்தம் என்கிற ரோகத்தில் வாதமும் இரத்தமும் ஒருமிக்கக் கோளாறடைகின்றன.

5. மாம்ஸம் மேதஸ் என்கிற இரண்டு தாதுக்களையும் பற்றிய வாதரோகத்தில் குறிகள் ஒரே சீராயிருக்கும் எனக் கருத்து. அஸ்த்தி-மஜ்ஜை இவற்றைப் பற்றிய வாதரோகங்களிலும் இவ்விதமேயாம்.

கும். (8) **ஸந்தியைப் பற்றிய வாதம்** கோளாறடைந்திருக்கையில் அந்த வியாதி ஸந்திகளை வேலையற்றவைகளாகச் செய்யும்; கடுமையான வலியும் உண்டாகும். 15—21.

**ஆவரண வாதங்கள்**[1] :—(1) **ப்ராணவாயு** பித்தத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருக்கையில் வாந்தி, அழற்சி இவையும், அதுவே கபத்தினால் ஆவரணம் செய்யப்பட்டால் பலஹீனம், ஜாடராக்னி மந்தப்படுதல், சோம்பல், அரோசகம் ஆகிய இவையும் இலக்ஷணங்களாம். (2) **உதாந வாயு** பித்தத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருக்கையில் உடலழற்சி, மூர்ச்சை, மயக்கம், உடல் வாட்டம் இவையும், அதுவே கபத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருக்கையில் வியர்வையின்மை, மயிர்ச்சிலிர்க்கை, அக்னிமாந்த்யம், தேஹம் குளிர்ந்திருத்தல் ஆகியவைகளும் இலக்ஷணங்களாம். (3) **ஸமாந வாயு** பித்தத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருந்தால் அதிகவியர்வை, அழற்சி, மூர்ச்சை இவையும், அதுவே கபத்தினால் ஆவரணம் செய்யப்படுமானால் மல மூத்திரங்கள் கட்டிப்போதல், உடற்சிலிர்த்தல் இவையும் குறிகளாம். (4) **அபாந வாயு** பித்தத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருக்கையில் உடலில் அழற்சியும், சூடும் கண்டு, மூத்திரமும் இரத்த நிறமாகும். அதுவே கபத்தினால் ஆவரணம் செய்யப்படுகையில் வயிற்றுக்குக் கீழவவயவங்கள் குருவாகவும், சீதளமாகவும் ஆகும். (5) **வ்யாந வாயு** பித்தத்தினால் ஆவரணம் செய்யப்பட்டிருக்கையில் தேஹ அழற்சியும், உடலிசிவு, உடல் வாட்டம் ஆகியவையும், அதுவே கபத்தினால் ஆவரணம் செய்யப்படுகையில் உடல் விறைத்தல், தண்டகம் என்கிற விறைப்புடன் கூடிய இசிவு, வீக்கம் ஆகிய இக்கோளாறுகளும் தோன்றும்.[2] 22—26.

**ஆக்ஷேபக வாதம்**:—(பொது விவரணம்):—வாயுவானது பிரகோபமடைந்து எப்பொழுது எல்லா தமனிகளிலும்[3] ஊடுருவிச் சென்று உடலிற் பரவுகின்றதோ. அப்பொழுது அவயவங்களை ஜடிதியாக அடிக்கடியும் வலித்து இழுக்கின்றது; இது அடிக்கடியும் தேஹத்திற் பரவி, அடிக்கொருமுறை அவயவங்களை வலித்திழுக்கும் சுபாவமுடையதாகையால் 'ஆக்ஷேபகம்' என்கிற பெயர் இதற்கு வந்தது. 27, 27½.

**அபதந்த்ரகம் அல்லது அபதாநகம்**:—வாயுவானது அதை விருத்திசெய்யக்கூடிய காரணங்களால்[4] பிரகோபமடைந்து, அதன் ஸ்தாநத்திலிருந்து மேல்நோக்கிச் சென்று, இருதயத்தையடைந்து அவ்வவயவத்தையும் சிரஸ்ஸிலும் சங்கங்கள் என்கிற கன்னங்களிலும் வேதனையுண்டுபண்ணி, அவயவங்களை வில்லைப்போல்

1. ஆவரண வாதம்—பித்தம் கபம் இத்தோஷங்களால் வாததோஷம் நாற்புறமும் சூழப்படும் கோளாறு. தேஹத்தில் ஆங்காங்கு இருந்து அதனதன் இயற்கைச் செயல்களைச் செய்ய முடியாமல் பிராணாதி வாயு முற்றிலும் மற்ற தோஷத்தினால் மறைக்கப்பட்டுப்போக, அப்பொழுது வாத ஸம்பந்தமான விகாரங்கள் அதிகமாகவும், ஆவரணம் செய்யும் பித்தம் அல்லது கபத்தின் விகாரம் ஒரு சிறிதும் சேர்ந்து ஆவரண வாத ஸம்பந்தமான வியாதிகளை யுண்டுபண்ணும்.

2. பஞ்ச வாயுக்கள்—ஒரே விதமான வாயு தேஹத்தில் ஒவ்வொரு ஸ்தானத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவதாகச் சிலாது கொள்கை,

3. தமனிகள்—சுத்தரத்தமோடும் குழாய்கள். வாதரோகப்பிரகரணமாகையால், நாடியென்கிற பொருளில் தமனி யென்கிற சொல் குறிக்கப்படும் வழக்கமாகையாலும் இங்கு தமனி யென்பதை நாடியெனக் கூறுவது பொருந்தும். ஆகிலும் இருதயத்தைப் பற்றிய தமனிகள் என்பதால், தமனிக்கு முக்கியமாயுள்ள சுத்த ரத்தக் குழாய்கள் என்று பொருள் கூறப்பட்டது. எல்லா தமனிகள், என்பதால் தேஹத்தில் மேற்புறமாகவும், கீழ்நோக்கியும், குறுக்காகவும் வியாபித்துள்ள தமனிகள் என்று பொருள்.

4. வாதத்தை விருத்தி செய்யக்கூடிய காரணங்கள் ரூக்ஷ-லகு-சீதாதிகுணமுள்ள பதார்த்தங்களை யுபயோகித்தல், தாண்டுவது ஓடுவது முதலிய சக்திக்கு மீறிய வேலைகளைச் செய்வது முதலியன.

வலித்து வளையச் செய்யும்; அடிக்கடி இசிவு உண்டாகும்; மூர்ச்சை காணும்; அவன் மூச்சு விடுவதற்கும் கஷ்டப்படுவான்; கண்கள் திறந்த நிலைமையில் அசைவற்றுப்போகும், அல்லது மூடிக்கொண்டிருக்கும் ; நினைவின்றி புறாவைப் போலே கூவுவான் ; இதில் கண் ஸ்தம்பித்துப் போய், ஞாபகமிழந்து தொண்டையினால் பிணியாளி தன்னையறியாமலே கூவுவான்; இருதயத்தைப்பற்றிய தோஷம் விடுபட்டால் அவன் ஒருவாறு சுகமடைகிறான் ; மீண்டும் முன்போலவே இருதயம் வாதத்தால் கவரப்பட்டு சற்றுக்கெல்லாம் மூர்ச்சையுண்டாகும். இது 'அபதந்த்ரகம்' எனப்படுகிறது. இதையே சிலர் 'தாருணம்' என்றும் 'அபதாநகம்' என்றும் கூறுவர்[1]. 28—31½.

**தண்டாபதாநகம்:**—வாததோஷம் கபத்துடன் கூடியதாய் அந்த தமனிகளையே விசேஷமாகப் பற்றியதாய் அவற்றை யடைந்திருந்தால், அதனால் தேஹம் ஓர் தடியைப்போல விறைத்துக்கொள்ளும் ; அது 'தண்டாபதாநகம்' எனப்படும்[2]. 32½.

**தநுஸ்தம்பம்:**—யாதொருவன் வாதத்தினால் வில்லைப்போல வளைக்கப்படுகிறானோ அவனது அந்த வியாதி 'தநுஸ்தம்பம்'[3] என்று வழங்கப்படும். இதில் விரல்கள், குதிகால், வயிறு, மார்பு, கழுத்து இவற்றைப்பற்றிய வாயுவானது மிகவும் விரைந்து வேகமாய் ஸ்நாயுஜாலங்களை[4] வலித்திழுக்கையில் கண்கள் அசைவற்றுப் போய், முகவாய்க்கட்டை திறக்கவும் மூடவும் முடியாததாய்விட, விலாப்பக்கங்கள் ஒடிந்துவிட்டனபோலாய்விடும் ; விசேஷமாகக் கோழை கோழையாக வாந்தியுண்டாகும்; ஆகவே தேஹத்தின் முன்புற மெனப்படும் உட்புற மனைத்தும் வில்லுபோல வளையும் ; அப்பொழுது வெகு வலிமையுடன் பிரகோபித்த வாயு அப்யந்தராயாமம் [5] என்கிற வாத ரோகத்தை யுண்டுபண்ணும் ; அங்ஙனமே பின்புற மென்கிற வெளிப்புறத்து அவயவங்களின் தசைநார்ஜாலங்களைப்பற்றிய கடுமையான வாயு பாஹ்யாயாமம் [6] என்கிறவாத ரோகத்தை யுண்டுபண்ணும். இதில் மார்பு, இடுப்பு, துடைகள் ஆகிய அவயவங்கள் முறிவடையும் ; ஆகவே இதை அஸாத்ய வியாதி யென்பார்கள். 33—36½.

**அபிகாதஜ வாதம்:**—[7] வாயுவானது சுயமாகவே அல்லது கப-பித்தங்களுடைய சேர்க்கையைப் பெற்று கடுமையான மற்றொரு ஆக்ஷேபக வாதத்தை யுண்டுபண்ணும் ; இந்த நான்காவது ஆக்ஷேபகவாதம் அபிகாதத்தினால் உண்டாகின்றது. 37½.

அபதாநகத்தில்[8] அஸாத்யமானவை :—கர்ப்ப பாதத்தினால் உண்டாவது, இரத்தம் அமிதமாய் வெளிப்படுவதால் காண்பது, அபிகாதத்தினால் ஸம்பவிப்பது ஆகிய இந்த அபதாநகங்கள் என்னும் ஆக்ஷேபக வாதரோகங்கள் அஸாத்யமானவை. 38½.

---

1. ஆக்ஷேபக வாயுவானது தண்டாபதாநகம், அப்யந்தராயாமம், பஹிராயாமம், அபிகாதஜம் என்று நான்கு வகைப்படும். அடுத்தாற்போல இவற்றின் விவரம் கூறப்படும்.

2. கைகள், கால்கள், சிரஸ், ப்ருஷ்டம், இடை இவ்வவயவங்களை வாதம் தடியைப்போல விறைக்கச் செய்வதால் தண்டாபதாநகம் என்று இதற்குப் பெயர்.

3. தநுஸ்தம்பம்—தநுர்வாதம் என்றும் கூறப்படும். அந்தராயாம-பஹிராயாமங்களுக்கு தநுஸ்தம்பம் என்பது பொதுவான பெயர். இவ்விரண்டிலும் தேஹம் தனுஸ்ஸைப்போலே வளைவது பொதுக் குறி.

4. ஸ்நாயுஜாலம்—மாம்ஸ பேசிகளென்கிற தசை நார்களின் முனைகளிலுள்ள வெண்மையான உரத்த நார்கள். ஸ்நாயுஜாலம் என்பது உபலக்ஷணம், இதனால் மாம்ஸபேசிகள் என்கிற தசைநார்களும் முக்கியமாகக் குறிக்கப்படுகின்றன.

5. அப்யந்தராயாமம்—வயிறு, மார்பு இந்தப் பக்கம் முன்புறமாக இசிவு கண்டு வளையும் ஆக்ஷேபக வாயு. (அப்யந்தராயாமம் என்றால் உட்புறமாக இசிக்கப்படுவது எனப் பொருள்.)

6. பாஹ்யாயாமம்—முதுகின் பக்கம் இசிவு கண்டு வளையும் கடுமையான ஆக்ஷேபகவாதம், பாஹ்யாயாமம் என்றால் வெளிப்புறமாக இசிக்கப்படுவது எனப்பொருள்.)

7. அபிகாதஜம்—அடி முதலியது தாக்குவதால் அல்லது கர்ப்பம் திடீரென வெளிப்படுவதால் அல்லது வேறு அவ்வித காரணங்களால் உண்டாகும் ஆக்ஷேபகம்.

8. அபதாநகம் அபதந்த்ரகம், ஆக்ஷேபகம் இவை ஒரே வியாதியைக் குறிப்பிடும் பர்யாய சப்தங்கள்.

பக்ஷ வாதம்:—வாத தோஷமானது சரீரத்தின் ஒரு பாரிசத்தை[1] நெடுகவும் பற்றி ஸிரைகள், ஸ்நாயுக்கள்[2] இவற்றைச் சுஷ்கமாக்கி ஸந்திகளென்னும் பூட்டுகளைத் தளர்த்தி[3] ஒரு பாரிசத்தை முற்றிலும் ஸ்வாதீனமற்றதாகச் செய்யும்; அப்பிணியாளியின் அப்பாரிசம் முழுமையும் செயலற்றதாகவும் உணர்ச்சியற்றதாகவும் ஆய்விடும். இதைச் சிலர் ஏகாங்க ரோகம்[4] என்றும், சிலர் பக்ஷவதம்[5] என்றும் வழங்குவர். 39—40½.

ஸர்வாங்க வாதம்:—அதே விதமாய் வாத தோஷம் ஸர்வ அவயவங்களையும் பற்றியதாய் அக்குறிகளை யுண்டுபண்ணினால் அது 'ஸர்வாங்கவாதம்' எனப்படுகிறது. 41.

வாதரோகங்களில் வேறு தோஷங்களின் ஸம்பந்தங்களாலான குறிகள்:—(1) வாததோஷமானது பித்தத்துடன் கூடியதாய் வியாதியை யுண்டுபண்ணினால் தேஹ அழற்சி, மூர்ச்சை, நாவறட்சி இக்குறிகள் தோன்றும். (2) அதுவே கபத்துடன் கூடிய வியாதியை உண்டாக்கினால் சைத்யம், வீக்கம், குருத்துவம் ஆகியவை இலக்ஷணங்களாம். 42.

பக்ஷவாதத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள்:- (1) கேவலம் வாத தோஷத்தினால் ஸம்பவித்த பக்ஷவாதம் மிகவும் கஷ்டஸாத்யமாம். (2) ஏதேனும் வேறொரு தோஷத்துடன்[6] சேர்ந்த பக்ஷவாதம் எளிதில் சிகித்ஸிக்கக்கூடியதாகும். (3) தாதுக்கள் க்ஷீணிப்பதாலுண்டாகும் பக்ஷவாதம் அஸாத்யமாகும். 43.

அர்த்தித வாதம்:—தொடர்ச்சியாக வெகு உரத்துப் பேசுவது, கடினமான வஸ்துக்களை மிகுதியாகக் கடிப்பது, மிதமின்றி சிரிப்பது, அதிகமாகக் கொட்டாவி விடுவது, அதிக பாரங்களைச் சுமப்பது. மேடு பள்ளங்களில் ஒழுங்கீனமாகப் படுப்பது இவற்றில் ஏதேனும் சில காரணத்தால் சிரஸ், நாசி, உதடு, முகவாய்க்கட்டை, நெற்றி, நேத்திரம் இவற்றின் ஸந்திகளைப்பற்றிய வாதம் முகத்தை இசித்து வலிக்கும்; அதனால் அவ்வாயு 'அர்த்திதம்' என்கிற ரோகத்தை யுண்டாக்குகிறது. அதில் வாயிற் பாதிபாகம் வக்ரித்துக்கொள்ளும்; கழுத்தும் ஒருவாறு சாய்ந்து திரும்பி நிற்கும்; தலை யாடிப் போகும்; வாய் பேச முடியாமல் ஆய்விடும்; நேத்திரம் முதலிய அவயவங்களும் வக்ரமாகும்; அவ்விதம் வக்ரித்துள்ள பாகமாய் கழுத்து, முகவாய்க்கட்டை, பற்கள் இவற்றில் வேதனையுண்டாம். (இதற்குப் பூர்வ ரூபமாக மயிர்ச்சிலிர்க்கை, நடுக்கம், கண் குழம்புதல், ஊர்த்வச்வாஸம், சர்மத்தில் உணர்ச்சியற்றுப் போதல், குடைத்தல், மந்யா வென்கிற கழுத்துநரம்பிலும் முகவாய்க் கட்டையிலும் வலி. ஆகிய இக்குறிகள் தோன்றும்.) வியாதி தத்துவமறிந்தவர் இந்த ரோகத்தை 'அர்த்திதம்' என்பர். 44—46½.

அர்த்திதத்தில் அஸாத்திய லக்ஷணம்:—இவ்வியாதியில் மிகவும் க்ஷீணித்திருப்பவனுக்கும், கண்கள் அசைவற்று நிலைத்திருப்பவனுக்கும், வாய்ப்பிடிப்புண்டாய் குழகுழத்துப் பேசுபவனுக்கும், நடுக்க முண்டானவனுக்கும், மூன்று

1. ஒரு பாரிசம் என்றால் தேஹத்தின் வலது பாகமோ அல்லது இடது பாகமோ நெடுகவும் எனப்பொருள்.

2. ஸிரைகள்—அசுத்தரத்தக் குழாய்கள்; இதனால் எல்லாவித இரத்தக் குழாய்களும் கிரஹிக்கப் படுவதாகவே சிலரது கருத்து. ஸ்நாயு வென்பதால் வாத வியாதிக்கு ஆச்ரயமான நாடிகள் என்கிற நரம்புகளும் குறிக்கப் படுவதாகக் கருதவேண்டும்.

3. 'ஒருவகை சிலேஷ்மகலை நிரம்பிய ஸ்நாயு ஜாலத்தினால் கவியப்பெற்ற ஸந்திபந்தங்கள் தளர்ச்சியுறுகின்றன' என இதற்கு கதாதரன் பொருள் கூறுகிறார்.

4. ஒருபக்கம் நெடுகச் சக்தி யிழந்ததாகச்செய்வதால் இதை 'ஏகாங்க ரோகம்' அல்லது 'ஏகாங்க வாதம்' என்பார்கள்.

5. பக்ஷவதம்—இதையே பக்ஷவாதம் அல்லது 'பார்ச்வ வாயு' என்பார்கள்.

6. வேறொரு தோஷம் என்பதால் பித்தம் கபம் இவ்விரண்டிலொன்று இங்கே குறிக்கப்படுகிறது.

வருஷமாக நிலைத்து வருந்துபவனுக்கும் ரோகம் அஸாத்யமாகும்.[1] ஆக்ஷேபகம் முதலிய ஸகல வாதரோகங்களிலும் வாதத்தினலுண்டான கோளாறுகளின் வேகம் நிவ்ருத்தியானதும் சுகமுண்டாகும [2]. 47, 48.

ஹநுக்ரஹம்:—நாக்கை பலமாக அடிக்கடியும் இழுத்து வழிப்பதாலும், சுஷ்கமான பதார்த்தங்களை அதிகமாய் மெல்லுவதாலும், அபிகாதத்தினலும் [3] முகவாய்க்கட்டையின் மூல பாகத்தைச் சேர்ந்த வாதம் பிரகோபமடைந்து, இரண்டு பாரிசத்து ஹநுமூலங்களென்கிற மோவாய்க்கட்டையின் அள்ளுகளையும் நழுவச் செய்து, வாயைத் திறந்த வண்ணமாகவே அல்லது மூடிய வண்ணமாகவே அசைவற்றதாகச் செய்யும். அது 'ஹனுக்ரஹம்' [4] எனப்படுகிறது. அதனல் மெல்லுவதும் பேசுவதும் மிகத் தடைபடும். 49, 50.

மந்யாஸ்தம்பம் :—ஹநுக்ரஹத்திற்குக் காரணமான அதே வாதமானது [5] பகலில் தூங்குவது, மேடுபள்ளங்களிற் படுத்துறங்குவது, தேஹத்தைத் திறந்துகொண்டு திறந்த வெளியிற் படுத்திருப்பது, நெடுநேரம் மேல் நோக்கிப் பார்ப்பது இக்காரணங்களாலுண்டான கபதோஷத்தினல் ஆவரணம் செய்யப்பட்டு 'மந்யாஸ்தம்பம்' என்கிற வாதரோகத்தை[6] யுண்டுபண்ணுகிறது. 51.

ஜிஹ்வாஸ்தம்பம் :—பேசுவது முதலிய வாக்கின் வேலையை நிறைவேற்றுவதற்கான நரம்புகளை ஆச்ரயித்த வாயுவானது விகாரமடைந்து நாக்கை ஸ்தம்பிக்கச் செய்கிறது. அதனல் உணவுண்பதிலும், பானங்களைப் பருகுவதிலும், பேசுவதிலும் மனிதன் திறமையற்றவனவான். இது 'ஜிஹ்வாஸ்தம்பம்' எனப் படுகிறது. 52.

ஸிராக்ரஹம்:—வாயுவானது இரத்தத்தைப்பற்றியதாய் சிரஸ்ஸுக்குக் கீழே கழுத்தை ஆச்ரயித்துள்ள ஸிரைகள் என்கிற இரத்தக் குழாய்களை ருக்ஷமாகவும், வலியுள்ளவையாகவும், கறுப்பாகவும் செய்யும்; அது 'ஸிராக்ரஹம்'[7] என்று கூறப்படும். அது அஸாத்ய வியாதியாகும். 53.

க்ருத்ரஸீ வாதம்:—ஸ்தம்பித்தல், வலி, குத்தல் ஆகிய கோளாறுகள் முதலில் கழுத்தின் கீழ்ப்புறத்திலும், அப்பால் இடுப்பிலும், ப்ருஷ்ட பாகங்களிலும், துடையிலும், முழங்காலிலும், அதற்குக்கீழிலுள்ள காலிலும் கிரமமாகப் பற்றிப் பரவுவதோடு அவ்வவயவங்களோடு அடிக்கடியும் துடிக்கும். இது கேவலம் வாதத்தால் உண்டான க்ருத்ரஸீ

---

1. முகத்தின் ஒரு பாரிசம் வக்கிரமாகப் போவதைப் போலவே தேஹத்தின் ஒரு பாரிசம் முடியவும் வக்கிரமானல் அதுவும் அர்திதம் என்று சிலரது கொள்கை. ஆனல் ஸுச்ருதர் தேஹம் முடியவும் ஒரு பாரிசம் அசைவற்றுப் போவதை அர்த்தாங்க வாதம் என்றும், முகம் கோணலாவதை அர்திதம் என்றும் கூறுகிறர். வாய் முற்றிலும் பேச முடியாமற்போவதும் அஸ்பஷ்டமாகப் பேசுவதும் தனித்தனியே, அஸாத்யக் குறியென்றும் கூறுவர்.

2. பாரத்தைச் சுமப்பவன் தன் சுமையை இறக்கியவுடனே சுகம் பெறுவதாக உணர்வது போலவே, இதிலும் வாதவேகம் தணிந்ததும் பிணியாளி சுகமடைந்ததாக உணர்வான்; என்றல் இயற்கைத் தன்மையைப் பெறுவான்.

3. அபிகாதம்—அடிபடுவது முதலியதாலான தாக்குதல்.

4. ஹநு—என்றல் மோவாய்க்கட்டை; க்ரஹம்—என்றல் பிடிப்பு.

5. ஹநுமூலம் என்கிற மோவாய்க்கட்டையின் அள்ளுகளைப்பற்றிய நரம்பும், மந்யா என்கிற கழுத்தின் பின்புறத்து அடியை அசைக்கச் செய்யும் நரம்பும் ஒரு மூல நரம்பின் முக்கியமான கிளைகளென்றும், அதனலேயே அவற்றைப்பற்றிய வாதமும் ஒன்றென்றும் இதனல் அறியப்படுகிறது.

6. மந்யாஸ்தம்பம்—கழுத்துப் பிடிப்பு.

7. சிரோக்ரஹம் என்றும் சிலர் இதைக் கூறுவர். சிரஸ்ஸுக்கு ஆதாரமான இரத்தநாளங்கள் கோளாறடைவதால் வேதனை யதிகரித்து, கழுத்துப் பிடிப்புண்டாகு மாகையால், இது சிரோக்ரஹம் என்றும் வழங்கப்படும்.

எனப்படுகிறது. (2) வாதமும் கபமும் ஒரு மிக்கப் பிரகோபமடைந்துண்டாகும் க்ருத்ரஸீரோகத்தில் சோம்பலும், தேஹகுருத்துவமும் அரோசகமும் காணும்.[1] $54$, $54\frac{1}{2}$.

**விச்வசீ:**—புயத்தின் பின்புறமிருந்து கரத்தின் மேற்புறத்தை நோக்கிப் பரவியுள்ள மாம்ஸ கண்டரங்களைக் கோளாறடையச் செய்யும் வாதரோகம் விச்வசி[2] எனப்படுகிறது. இது புயங்களை எச்செயலையும் செய்ய முடியாததாய் ஆக்கி விடுகின்றது. $55\frac{1}{2}$.

**க்ரோஷ்டுக சீர்ஷம்:**—வாதம் இரத்தம் இவ்விரண்டின் கோளாறால் முழங்காலில் வீக்கம் காணும்; கடுமையான நோவுண்டாகும்; நரியின் தலையைப் போன்றதாய் அவ்வீக்கம் பருமனாகத் தோன்றும்;[3] ஆகவே இந்த வியாதியை க்ரோஷ்டுக சிர்ஷம் என்றறிக. $56\frac{1}{2}$.

**கஞ்ஜம், பங்கு:**—இடுப்பைப் பற்றிய வாதமானது துடையின் கண்டரையை[4] வலித்திழுக்கையில் கால் நொண்டியாகும்; அந்த வியாதி 'கஞ்ஜம்' எனப்படும். இரண்டு துடைகளும் அவ்விதம் ஸ்வாதீனமற்று நொண்டியானால் அது 'பங்கு' எனப்படுகிறது. $57\frac{1}{2}$.

**கலாயகஞ்ஜம்:**--காலிலுள்ள பூட்டுகள் நெகிழ்வடைவதால் யாதொருவன் எழுந்து நடக்கத் துவக்கும்போது காலில் நடுக்க முறுகிறானோ, கஞ்ஜன் என்கிற நொண்டியைப் போலவும் நடக்கின்றானோ அவனுக்குண்டான வியாதி 'கலாயகஞ்ஜம்' எனப்படுகிறது $58\frac{1}{2}$.

**வாதகண்டகம்:**—ஒழுங்கீனமாகப் பாதங்களை வைத்து நடப்பதால் அல்லது மேடுபள்ளமான பிரதேசங்களில் ஸஞ்சரிப்பதால் குதிகாலில் பிரகோபமடைந்து அல்லது சிரமம் அதிகரிப்பதால் குதிகாலில் சேர்ந்து கோளாறடைந்த வாயுவானது அவ்விடத்தில் நோவையுண்டு பண்ணும்; அந் நோவை 'வாதகண்டகம்'[5] என்பார்கள். $59\frac{1}{2}$.

**பாததாஹம்:**— வாத தோஷமானது பித்தத் தோடும் இரத்தத் தோடும் கலந்து அவற்றைக் கோளாறடையச் செய்து பாதங்களில் அழற்சியை யுண்டுபண்ணும்; இவ்விகாரம் அதிகமாய் நடப்பவனுக்கு விசேஷமாகக் காணும்[6]. இது 'பாததாஹம்' எனப்படும். $60\frac{1}{2}$

1. இதனால் க்ருத்ரஸீவாதம் இரண்டு விதம் எனத் தெரிந்து கொள்ளவும். ஒன்று கேவலவாத தோஷத்தினாலான க்ருத்ரஸீ, மற்றொன்று வாதகப க்ருத்ரஸீ.

2. விச்வசீ – இதை விச்வாசீ என்றும் வழங்குவர். காலை முடக்கிப்போடுவதில் க்ருத்ரஸீயும், கையை முடக்கிப்போடுவதில் விச்வசீயும் ஒரே மாதிரியாயிருப்பதால் சிலரால் இவ்விரண்டும் கல்வீ என்கிற பொதுப்பெயரால் அழைக்கப்படும். 'க்ருத்ரஸீயும், விச்வாசியும் கல்வி யெனப்படும்; இரண்டும் கடுமையான நோவுண்டுபண்ணுகின்றன' என்று கயாதாஸன். சரகர் 'வாதம், முழங்காலுக்குக் கீழ்பாகம், துடை, கணுக்கை அல்லது புஜமூலம் இவற்றை முடமாகச் செய்கிறது; அது கல்வீ யெனப்படுகிறது' என்று விச்வசியைத் தவிர்த்துப் பிரத்தியோகமாய் கல்வி யென்னும் வியாதியை விவரிக்கிறார். கல்வி யென்பதை ஸுச்ருதர் குறிப்பிடவேயில்லை. பாண்டுரோகத்திற்குக் காமாலையும், அஷ்டீலாவுக்குப் பிரத்யஷ்டீலாவும், அச்மரீக்கு சர்க்கரையும் இலக்ஷணஸம்பந்தத்தால் விவஹாரத்துக்கு ஒற்றுமை வருவதுபோல் க்ருத்ரஸீ விச்வசிகளுக்கு கல்வீ யென்கிற நாமாந்தரம் உண்டென்று கூறுவர் சிலர்.

3. வாதரக்தம் என்கிற வியாதியாலும் 'க்ரோஷ்டுகசீர்ஷம்' என்கிற வியாதி காண்பதுண்டென்று கயா தாஸன் கூறுகிறான். வாதம் இரத்தம் இவ்விரண்டாலும் உண்டவதாக ஜெஜ்ஜடன். வாதரத்த வியாதியில்லாமல், க்ரோஷ்டுக சீர்ஷம் சுதந்திரமாகவும் உண்டாவதுண்டு. நரியின் தலையைப் போன்று வீக்கங் காணுவதால் இப்பெயர் வந்தது. தமிழில் **நரித்தலை** வாயு என்று இதற்குச் சரியான மொழிபெயர்ப்புப் பெயர் வழங்கப்படுவதுண்டு.

4. கண்டரை யென்றால் ஸ்நாயுக்களில் பெரிதாயிருப்பது; அது 'மஹாஸ்நாயு' என்றும் கூறப்படும்.

5. வாதகண்டகத்திற்கு குடிகாவாதம் என்றும் சிலர் வேறு பெயர் வழங்குவர்.

6. இதனால் நடையில்லாமல் உட்கார்ந்து அல்லது படுத்திருந்தால் இத்தொந்தரவிராதென்று கூறப்பட்டதாயறிக.

**பாதஹர்ஷம்:**—பாதங்கள் எவனுக்குச் சிலிர்த்து, கூச்சங்கொண்டு திமிர்த்துப் போகின்றனவோ, உணர்ச்சியிற் குன்றியவையாகவும் ஆகின்றனவோ அவனுக்குண்டாயுள்ள கோளாறு பாதஹர்ஷம் என்றறிக [1]. அது கபம் வாதம் இவற்றின் பிரகோபத்தாற் காண்கிறது. 61½.

**அம்ஸ சோஷம்:**—தோளின் பிரதேசத்தைப் பற்றிய வாதமானது தோளின் உட்புறபந்தனத்தைச் [2] சுஷ்கமாக்கி, 'அம்ஸசோஷம் என்கிற வாதரோகத்தை யுண்டுபண்ணுகிறது. 62.

**அபபாஹுகம்:**—அம்ஸம் அல்லது தோள் என்கிற அதே அவயவத்தைப்பற்றிய வாயு அவ்விடத்திய நரம்புகளைச் சுருக்கி 'அபபாஹுகம்' [3] என்கிற வாதரோகத்தை யுண்டுபண்ணும். 62½.

**மூகன் மின்மினன் முதலியவர்:**—வாயுவானது கபத்துடன் கூடியதாய் 'சப்தவாஹிகள்' என்கிற சொற்களை யுச்சரிப்பிக்கும் நரம்புகளைச் சூழ்ந்துகொண்டு மனிதனை 'மூகன்' [4], 'மின்மினன், [5] 'கத்கதன்' [6] என்கிற கோளாறுகளைப் பெற்றவனாகச் செய்கிறது. 63½.

**தூநீ:**—மலாசயம் மூத்திராசயம் இவற்றில் முதலில் ஆரம்பித்து கிரமமாக யாதொரு வேதனையானது கீழ்நோக்கிச் செல்லுகின்றதோ, எது குதத்தையும் லிங்கம் அல்லது உபஸ்த்தத்தையும் பிளப்பது போன்ற நோவையும் உண்டுபண்ணுகின்றதோ அந்த வியாதி 'தூநீ' எனக் கூறப்படும் 64½.

**பிரதிதூநீ:**—முற்கூறிய தூநியிற் காண்பதற்கு எதிரிடையாக யாதொரு வேதனை குதத்திலும் உபஸ்த்தம் அல்லது லிங்கத்திலும் ஆரம்பித்து அவ்வேகம் பக்குவாசயத்தை நோக்கி மேற்பக்கமாகக் கிரமமாய் ஓடுகிறதோ அது 'பிரதிதூநீ[7]' என்று கூறப்படுகிறது. 65½.

**ஆத்மாநம்:**—வயிற்றில்[8] மிகக் கடுமையான வலியும் சப்தமும் ஏற்பட்டு[9] மிகவும் பொருமலுண்டானால், அதை 'ஆத்மாநம்' என்றறிக அது அபாந வாதத்தை அடிக்கடி யடக்குவதாலுண்டான கடுமையான வாதவியாதியாம். 66½.

**பிரத்யாத்மாநம்:**—அதே நோய், விலாப்பக்கங்கள் இருதயம் இவற்றில் வேதனையை யுண்டுபண்ணுமல் ஆமாசயம் என்கிற இரைப்பையில் கபத்தினால் கலக்கிக் கோளாறடைவிக்கப் பெற்ற வாதஸம்பந்தத்தைப் பெற்றுண்டானால் அதை பிரத்யாத்மாநம் என்று அறிக. 67½.

**வாதாஷ்டீலா:**—நாபிக்குக் கீழே அஷ்டீலையென்னும் சில்லைப்போலே[10] மேற்புறமாகக் கிளம்பி திரண்டும், கனமாகவும், மற்றப் புறங்களிற் செறிந்து முண்டாகும் ஒரு கிரந்தி உருவமான வீக்கம் வாதாஷ்டீலை

---

1. பாதஹர்ஷம் என்பது 'கால் மரத்துப்போதல்' என்று ஸாதாரணமாய் வழங்கப்படும். இந்தக்கோளாறு நீடித்திருப்பதில்லை.

2. தோளிலுள்ள ஸந்திகளைக் கட்டுவதற்குபயோகமான சிலேஷ்மகலை.

3. அபபாஹுகம்—கைஸ்வாதீன மிழந்துபோதல். இதையும் வாத-கபங்களால் உண்டாவதாகச் சிலர் கூறுவர். வேறு சிலர் அம்ஸ சோஷத்துக்கும் அப்பாஹுகத்துக்குமுள்ள லக்ஷணங்களை ஒன்று கூட்டிக் கூறி, இரண்டும் ஒரே வியாதியென்றும் விவஹரிப்பார்கள். இந்த வியாதிக்கு அடுத்து ஸுச்ருதத்தில் 'பாதிர்யம்' என்கிற செவிட்டுத்தனம் விவரிக்கப்படுகிறது; அது வாததோஷப்ராபல்யத்தால் உண்டாகிறதென்கிற காரணத்தினால் அவர் அவ்விதம் இதே பிரகரணத்தில் பாதிர்யத்தை விவரித்திருக்கிறார். ஆனால் மாதவகரன் பிரத்தியேகமான பிரகரணத்திலேயே அந்த வியாதியை விவரிக்கிறார்.

4. மூகன்—ஊமை.

5. மின் மினன்—மூக்கால் முணுமுணுத்துப் பேசுபவன்.

6. கத்கதன்—சொற்கள் விளங்காவண்ணம் குழகுழத்து அல்லது தத்திப் பேசுபவன்.

7. தூநிக்கு எதிரிடையான குறிகளுள்ளதாகையால், பிரதி தூநீ' எனப்படுகிறது.

8. 'வயிறு' என்பதால் 'பக்குவாசயம்' குறிக்கப்படுகிறது.

9. 'குடகுடா' என்கிற சப்தம் எனப் பொருள்.

10. வடதேசத்தில் உருண்டை வடிவமான கூழாங்கல்லை 'அஷ்டீலா' என்பார்கள் என ஜெஜ்ஜடனும் கார்த்திகனும் கூறுகிறார்கள். கருமான்கள் உபயோகிக்கும் உருண்டு நீண்ட ஒருவித உலோகச் சம்மட்டியென்று கயாதாஸன்.

யென்றறிக. இது அசைவுள்ளதாகவோ அசை வற்றதாகவோ இருக்கலாம்; குதம் முதலிய வெளி மார்க்கத்தை இது மூடிவிடும். 68, 69.

**பிரத்யஷ்டீலா:**—முற்கூறிய வாதாஷ்டீலேயே வயிற்றிற் குறுக்குவாட்டிலுண்டாய் அபாந வாதம் மலம் மூத்திரம் இவற்றைத் தடுத்து நோவுடன் கூடியதா யுண்டானுல், அது 'பிரத்யஷ்டீலே' எனப்படும். 70.

**வஸ்தியைப்பற்றிய வாதம் :**—வஸ்தி யென்னும் மூத்திராசயத்தில் வாயுவானது கோளாறடையாமலிருக்கையில் மூத்திரம் நன்கு வெளியாகும்; அந்த வாயு அதற்கு மாருக கோளாறடைந்திருந்தால் பலவித மான விகாரங்கள் [1] அவ்வவயவத்தை ஆச்ர யித்துண்டாகும். 71.

**வேபது:**—ஸர்வ அவயவங்களேயும், முக்கிய மாய் சிரஸ்ஸையும் பற்றிய வாயு நடுக்க முண்டு பண்ணினுல், அது 'வேபது' என்று வழங்கப் படும். 71½.

**கல்லீ:**—பாதங்கள், கணுக்காலுக்கு மேற் பட்ட அவயவங்கள், துடைகள், கைகளின் மூல பாகங்கள் இவற்றை முடங்கச் செய்யும் வாதம் 'கல்வீ' எனக் கூறப்படுகிறது. 72.

[**ஊர்த்வ வாதம்:**—[2] வாதமானது கீழே குதம் முதலிய த்வாரங்களில் கபத்தினுல் அல் லது அபான வாயுவினுல் தகையப்பட்டுப்போக, அது மேல் நோக்கியதாய் அதிக தேக் கெரிவை யுண்டுபண்ணும்; இவ்வியாதி ஊர்த்வ வாதம் எனப்படுகிறது.]

வாதரோக ஸங்கிரஹம்:—வாததோஷத்தினு லுண்டாகும் மற்றக் கோளாறுகளேயும் அந் தந்த ஸ்தானத்திற்கு அனுரூபமாகக் காணும் இலக்ஷணங்களேக் கொண்டு அவற் றிற்கும் பெயர் முதலியதைக் குறிப்பிட்டு அறிக. [3] முற்கூறிய ஸகல வாதரோகங்களி லும் பித்தம் முதலியவற்ருேடு ஸம்பந்தங் களேயும் கவனிக்கவேண்டும். 73.

**வாதரோகங்களில் ஸாத்யாஸாத்யங்கள்:**—ஹநுஸ்தம்பம், அர்திதம், ஆக்ஷேபம், பக்ஷ வாதம், அபதாநகம் ஆகிய இவை சதுஷ் பாதங்களும் [4] பூர்ணமான பிணியாளிகளுக்கு பலமான சிகித்ஸைகளால் நீண்டகாலத்தில் நிவர்த்தியானுலும் ஆகும்; நிவாரணம் ஆகாம லும் போகும். 74.

வாதரோக உபத்திரவங்கள்:—வாதரோகத்தி னுல் வருந்துபவர்களில் உபத்திரவங்களேப் பெருமலிருப்பவர்களுக்குச் சிகித்ஸை செய் வது ஸௌகரியம். விஸர்ப்பம், தாஹம் என்கிற அழற்சி, வலி, ஸந்திபந்தங்களின் பிடிப்பு, மூர்ச்சை, அரோசகம், அக்னிமாந்த்யம் இவற்ருல் தேஹ மாம்ஸமும் உடல் வலிமை யும் க்ஷீணித்த பிணியாளியை பக்ஷவாதம் முதலிய வாதரோகங்கள் கொன்று விடுகின் றன. மேலும் வீங்கிப்போதல், சர்மம் உணர்ச்சியற்றுப்போதல், கால் கை முதலிய அவயவங்கள் செயலற்று வீழ்ந்துபோதல், நடுக்கம்பொருமல் இவற்ருல் பீடிக்கப்படுதல். நோவால் வருந்துதல் ஆகிய இவ்வுபத்திர

1. விகாரங்கள்—அச்மரீ, மூத்திரக்ருச்சிரம் முதலி யவை.

2. ஊர்த்வவாதம்—இந்த வியாதி விஷயம் இப்பிர கரணத்தில் மாதவநிதாநத்தின் பல பதிப்புகளிற் காணப்படவில்லே.

3. ஆமாசயாதிகளிலுண்டாகும் நோவை 'குக்ஷி சூலம்,' என்றும், விரல்களின் முனைகளிலுண்டாவதை 'நகபேதம்' என்றும் இவ்வாருகப் பகுந்துக் கூறலாம். சூலத்தினுல் குத்தப்படுவதுபோன்ற வலி, பிளக்கப் படுவது போன்ற வலி, குடைச்சல், விறுவிறுத்தல் முத லியவைகள் வாயுவின் கோபத்தாற்காணும் பலவித நோவுகளாம்.

4. சதுஷ்பாதங்கள்—தைரியமுள்ள பிணியாளி, ஸகல அறிவும் பெற்ற சுறுசுறுப்பான வைத்தியன், வியாதிக்குத்தகுந்த ஔஷதங்கள், திறமைசாலியான பரிசாரகர்கள் இந்நான்குக்கும் பொதுப்பெயர்.

வங்களோடு கூடிய பிணியாளியையும் வாதரோகம் மாய்த்துவிடும். 75, 76.

**வாதம் இயற்கை நிலைமையிலிருப்பதன் பிரயோஜனம்**:-எவனுக்கு வாயுவானது, சரீரத்தில் ஆங்காங்கு அதற்கு இயற்கையிலுள்ள கதியில் தடையேற்படாமல் சுபாவஸ்திதியிலும் அதற்குற்ற ஸ்தானத்திலும் இருந்து வருகிறதோ, அவன் வியாதியின்றி பூர்ணமான தீர்க்காயுளைப் பெற்று [1] சுகமாய் ஜீவித்திருப்பான். 77.

——:o:——

## 23. வாதரக்த நிதானம். *

**வாதரக்த நிதானம்**:—இலவணம், அம்லம், கார்ப்பு, க்ஷாரம் இவற்றையும், ஸ்நிக்த்தம், உஷ்ணம் இக்குணங்களையும், எளிதில் ஜீர்ணமாகக் கூடாத தன்மையையும் பெற்ற உணவுகளாலும், பழகிக் கசிவுகளைப் பெற்ற அல்லது உலர்ந்துபோன தாமரைக்கிழங்குகளை அல்லது அவ்விதமான ஆநூப மாம்ஸங்களையும், [2] பிண்ணாக்கு முள்ளங்கி இவற்றையும் உண்பதாலும், கொள், உளுந்து, நிஷ்பாவக்கீரை இறைச்சி, கரும்பு இவற்றாலும், தயிர், ஆரநாளமென்கிற அன்னம் ஊறிய நீர், காடி, சுக்தமென்கிற மது, மோர், கள், மத்யவகைகள் ஆகியவற்றாலும், விருத்தாசநம், அத்யசநம், கோபம், பகலில் தூங்குவது, இரவிற் கண் விழிப்பது ஆகிய இவைகளாலும் வாதமும் இரத்தமும் பிரகோபமடைகின்றன ; மித்யாஹாரவிஹாரங்களைப் [3] பெற்ற ஸுகுமாரதேஹிகளுக்கும், ஸ்தூலதேஹிகளுக்கும், சுகபுருஷர்களுக்கும் முற்கூறிய காரணங்களால் பெரும்பாலும் வாதரக்தம் பிரகோபிப்பது வழக்கம். 1—3.

**வாதரக்தத்தின் ஸம்ப்ராப்தி**:—யானை, குதிரை, ஒட்டை இவைகளில் விசேஷமாகச் சவாரி செய்பவருக்கும், விதாஹி [4] யென்னும் குணமுள்ள உணவையுண்பவருக்கும் குடலில் எவ்வுணவும் அவ்விதக்த்தமென்னும் தோஷத்தைப் பெறுவதால், அத்தோஷம் ஜடிதியில் தேஹத்திலுள்ள ஸகல இரத்தத்தையும் காந்தலடையச் செய்கிறது. அங்ஙனம் கோளாறடைந்துள்ள இரத்தமானது சவாரி முதலியது செய்து தளர்ந்துள்ள பாதங்களின் ஸ்ரோதஸ்ஸுகளில் சேர்ந்துவிடுகிறது [5] ; அதே ஸமயத்திற் கோளாறடைந்துள்ள வாயுவோடு அந்த இரக்தம் சேர்ந்து வியாதியுண்

1. பூர்ணமான தீர்க்காயுள்--"மனிதருக்கும் யானைகளுக்கும் நூற்றிருபத்தைந்து வருஷங்கள் பூர்ணுயுளாகும்" என்று வாராஹமிஹிரன் சொல்லிய பிரமாணப்படி பூர்ணமான தீர்க்காயுளை மனிதன் பெறுவான் எனக் கருத்து.

* வாதரக்தம் என்பது குஷ்டத்தினும் கடுமையான ஒரு வியாதி. (குஷ்டமென்று வ்யவஹாரத்திலுள்ள வியாதிக்கே 'வாதரக்தம்' என்பது சரியான பெயரென்று கூறுவாருமுளர். அப்பொழுது குஷ்டம் 'ஸாதாரண சர்மவியாதிகளைச் சேர்ந்ததென்று அவர்களது கருத்து.) ஸுச்ருதத்தில் வாதரோகாத்யாயத்திலேயே வாதரக்தமும் கூறப்படுகிறது. பொதுவான மற்ற வாதரோகங்களினும் நிதாநத்திலும், தோஷ தூஷ்யங்களிலும், ஸம்ப்ராப்தியிலும், சிகித்ஸை முதலிய மற்ற அம்சத்திலும் வாதரக்தம் வேறுபட்டது என்கிற விசேஷத்தைக் கொண்டு மாதவகரன் வாதரோகத்திற்குப் பிறகு, பிரத்தியேகமாக வாதரக்தத்தை இங்கே ஓர் அத்தியாயத்தில் விவரிக்க நேர்ந்தது. சரகரும் இவ்விதமே வாதரக்தத்தை வாதரோகத்திற்குப் பிறகு பிரத்தியேகமாய் கூறியிருக்கிறார். 'வாதம் இரத்தத்தைப்பற்றி யிருக்கையில் கடுமையான வலி அழற்சி முதலியவை யுண்டாம்' என்று வாதரோகத்திற் கூறியுள்ள வியாதியினும் வாதரக்தம் என்கிற இவ்வியாதியில் விசேஷம் என்னவென்றால், அங்கே வாதம் ஒன்றே முதலிற் கோளாறடைந்து அப்பால் இரத்தத்தைச் சிறிது விகாரமடையச் செய்கிறது. வாதரக்தத்தில் வாதம் இரக்தம் இரண்டும் ஆரம்பத்திலேயே கோளாறடைகின்றன என்பதே பரஸ்பரமுள்ள பேதமாம். வாதரக்தமே வாத சோணிதம் என்றும் கூறப்படும்.

2. ஆநூபமாம்ஸம்—நீர்ப்பாங்கான பிரதேசம் ஆநூபம் ; அவ்விடத்திலுண்டான மிருகாதிகளின் மாம்ஸம் ஆநூபமாம்ஸம்.

3. மித்தியாஹார விஹாரங்கள்—7-வது பக்கம் பார்க்க.

4. விதாஹி—இதைப்பற்றி 27-ம் பக்கம் பார்க்க.

5. ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற இரத்தக்குழல்கள் தளர்வதற்கும், திரவரூபமான இரத்ததாது கீழ் நோக்கிச் செல்லுவதற்கும் யானைமுதலியதில் சவாரி செய்தல் காரணமாகிறது.

டாகிறது. இவ்விரண்டினுடைய கோளாறில் முக்கியமாய் வாதத்தின் பலத்தினால் உண்டாகும் வியாதி 'வாதரக்தம்' என்று வழங்கப் படுகிறது. 4.

**வாதரக்தத்தின் பூர்வரூபம்:**—வாதரக்தம் உண்டாவதற்கு முன்பு தேஹத்தில் வியர்வை மிகுதியாயுண்டாகும்; அல்லது வியர்வையே இல்லாமலு மிருக்கும்; சரீரம் கருநிறங் கொள்ளும்; பரிசவுணர்ச்சி குறைந்துவரும்; முள் முதலியது குத்தினாலும் சிறிது அடிதாக்கினாலும் வலி மிகக் கடுமையாயிருக்கும்; கணுக்கள் தளர்ச்சியடையும்; சோம்பல் அதிகரிக்கும்; உடல் ஒருவாறு இளைக்கும்; ஆங்காங்கு பிடகைகள் என்கிற கட்டிகள் உண்டாகும்; முழங்கால் கால் துடை இடுப்பு தோள் கரங்கள் பாதங்கள் மற்றும் சரீரத்திலுள்ள பூட்டுகள் இவற்றில் குடைத்தலும், துடிப்பும், பிளக்கப்படுவது போன்ற நோவும், கனத்துப்போனது போன்ற உணர்ச்சியும், பரிசவுணர்ச்சியின்மையும் ஆக இவைகளுண்டாகும்; அரிப்பு அதிகரிக்கும்; அந்தந்தப் பூட்டுகளில் அடிக்கடியும் நோவுண்டாய் மறையும்; தேஹ நிறம் மாறும்; வட்டம் வட்டமான தடிப்புகள் சரீரத்திற் காணும். ஆக இவை வாதரக்தத்தின் பூர்வரூபக்குறிகளாம். 5—7.

**வாதாதிகமான வாதரக்தம்:**—வாத தோஷம் மிக்க அதிகரித்த வாதரக்தவியாதியில் குத்தல், துடிப்பு, பிளக்கப்படுவதுபோன்ற வேதனை இவை யுண்டாம்; மேலும் வீக்கமானது ரூக்ஷமாகவும், கறு நிறமாக அல்லது வெண் கறுப்பாகவும் தோன்றும்; அவ்வீக்கம் அடிக்கடி விருத்தி யடைவதும் குறைவதுமாயிருக்கும்[1]. தமனிகளும், விரல்களும், கணுக்களும் குறுகும்; அவயவங்களில் பிடிப்புண்டாகும்; அதிக வலியும் காணும்; சீதளமான வஸ்துக்களில் வெறுப்பும், அவ்வித வஸ்துவால் வியாதிக்கு அநுபசயமும்[2] தோன்றும்; அவயவங்கள் ஸ்தம்பித்து, நடுக்கங்கொண்டு, பரிசவுணர்ச்சி யற்றவைகளாகும். 8, 9.

**இரத்தாதிகமான வாதரக்தம்:**--இரத்தம் மிகவும் கோளாறடைந்து அதிகரித்த வாதரக்தத்தில்[3] வீக்கம் பலமாயிருக்கும்; அதிக வேதனையுண்டாம்; குத்தலும் சிமசிமா வென்கிற அரிப்பும் காணும்; வீக்கம் சிவந்திருக்கும்; தினவும், துர்நீர்க்கசிவும் உண்டாகும்; ஸ்நிக்த்தமும் ரூக்ஷமுமான சிகித்ஸையினால் குணமுண்டாகாது. 10.

**பித்தாதிகமான வாதரக்தம்:**—பித்தம் மிகப் பிரகோபமடைந்த வாதரக்தத்தில் அழற்சி, புத்தி மிகவும் மாறுபட்டமடைதல், வியர்வை, மூர்ச்சை, வெறி, நாவறட்சி, பரிசித்தலைத் தாங்கமுடியாமை, வலி, சிவப்பு, கருமையான வீக்கம், அவயவங்கள் சமைக்கப்பட்டதுபோல பழுத்துப்போதல், வீக்கத்தில் அதிக உஷ்ணம் ஆகிய இக்குறிகள் காணும். 11.

**கபாதிகமான வாதரக்தம்:**—கபம் விசேஷமாகப் பிரகோபித்த வாதரக்தத்தில் அவயங்கள் வீக்கங்கொண்டு ஸ்திமிதமாகவும், குருவாகவும், உணர்ச்சியற்றவையாகவும், ஸ்நிக்த்தமாகவும் சீதளமாகவும் ஆகும்; தினவும், சொற்பநோவு மிருக்கும். த்வந்த்வதோஷங்கள் ஸந்நிபாதம் இவற்றாலுண்டாகும் வாதரக்தங்களில் அந்தந்த தோஷங்களின் கலப்பான இலக்ஷணங்களைக் கொண்டு பேதங்களைத் தெரிந்துகொள்க. 12.

1. வாதரக்தலக்ஷணங்கள் அனைத்துமே அதிசமாவதும் குறைவதுமாயிருக்குமென்று சிலரது அபிப்பிராயம்.

2. அநுபசயம்—வியாதி நிவாரணமாகாமை.

3. வாதரக்தத்திற்கு தேஹத்திலுள்ள இரத்தத்தில் எந்த பாகம் முதலில் விகாரமடைகிறதோ அதைத் தவிர மற்ற இரத்தமும் இதில் பிரகோபமடையுமென்று கருத்து.

**வாதரக்தத்தின் விசேஷலக்ஷணம்** :—வாதரக்ததோஷமானது ஒரு ஸமயம் கால்களின் முனையைப்பற்றியும், சில ஸமயம் கைகளின் முனையைப்பற்றியும் ஆரம்பித்து,[1] பெருச்சாளிவிஷத்தைப்போல்[2] கிரமமாகப் பிரகோபித்து உடலெங்கும் வியாபிக்கும்.[3] 13.

**வாதரக்தத்தில் அஸாத்யாதி நிலைமை** :—முழங்கால் வரையில் வெடித்திருப்பது அல்லது பிளந்திருப்பது, துர்நீர்களின் கசிவுடன் கூடியிருப்பது, பிராணுதாரமான மாம்ஸம் க்ஷீணிப்பது முதலிய உபத்திரவங்களோடு கூடிய கடுமையான வாதரக்தம் அஸாத்யமாகும். ஒரு வருஷமாக நிலைத்திருக்கும் வாதரக்தம் யாப்யமாம்[4]. 14, 14½.

**வாதரக்தத்தில் உபத்திரவங்கள்** :—நித்திரையின்மை, அரோசகம், ச்வாஸம், சரீரத்திலுள்ள மாம்ஸதாதுக்கள் அழுகிப் பதன்கெடுதல், சிரஸ்ஸின் பிடிப்பு, மூர்ச்சை, அதிக வெறி, வலி, நாவறட்சி, ஜ்வரம், புத்திமாருட்டம், நடுக்கல், விக்கல், முடமாகப் போதல், விஸர்ப்பமென்னும் அக்கியைப் போன்ற விரணம், உடல் அழன்றுபோதல், தலைச்சுற்றல், உடல் வாட்டம், விரல்கள் வக்கிரமாதல், கொப்புளங்கள் உண்டாதல், எரித்தல், மர்மஸ்தானங்களின் பிடிப்பு, அர்புதம் இவை உபத்திரவங்களாம். இவ்வுபத்திரவக் குறிகளோடு கூடிய அல்லது புத்திமாருட்டம் ஒன்றை மாத்திரம் பெற்ற வாதரக்தரோகம் அஸாத்யமாம். 15—17.

**வாதரக்தத்தில் ஸாத்தியா ஸாத்தியங்கள்** :—உபத்திரவங்களை முற்றிலும் பெறாத வாதரக்தம் யாப்யம்; உபத்திரவங்களே காணாத வாதரக்தம் சிகித்ஸையினால் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியதாம். அதிலும் ஒரு தோஷத்தினாலுண்டானதும், சொற்ப நாட்களிலுண்டானதுமான வியாதி ஸுலபஸாத்யம்; இரண்டு தோஷங்கள் சேர்ந்துண்டாகியது யாப்யம்; மூன்று தோஷங்களாலுண்டானதும், உபத்திரவங்களோடு கூடியதுமான வாதரக்தம் அஸாத்யமாகும். 18.

:o:

## 24. ஊருஸ்தம்ப நிதாநம்.*

ஊருஸ்தம்பத்தின் நிதாந ஸம்ப்ராப்திகள்:—சீதமாகவும் உஷ்ணமாகவும், சுஷ்கமாகவும் திரவமாகவும், குருவாகவும் ஸ்நிக்த்தமாகவும், ஜீர்ணிக்கக்கூடியவையாகவும் ஜீர்ணிக்கமுடியாதனவாகவுமுள்ள[5] வஸ்துக்களைப் பலவாறு கலந்துண்பதாலும், அங்ஙனமே ஆயாஸம் அதிகமாய்

1. பாதங்களிலாவது கரங்களிலாவது வாதரக்த விகாரம் ஆரம்பிக்க, அதற்குச் சிகித்ஸை செய்யாமலிருந்தால் அது தேஹமெங்கும் பரவும் எனக் கருத்து.

2. கிரமக்கிரமமாகப் பரவும் விஷத்தில் பெருச்சாளி விஷத்திற் கொப்பானது எனக் கருத்து.

3. ஆழமான தாதுக்களைப்பற்றிப் பரவும் வாதரக்தம் 'கம்பீர வாதரக்தம்' என்றறிக. தேஹத்தின் மேற்புறத்து தாதுக்களைப்பற்றியது 'உத்தானவாதரக்தம்' என்றும் சரகர் கூறுகிறார். ஆனால் ஸுச்ருதர் குஷ்டத்தைப் போலவே முதலில் உத்தானமாக ஆரம்பித்து, வியாதி முதிர்ந்தபிறகு கம்பீர வாதரக்தமாக மாறுகிறது என்கிறார்.

4. யாப்யம்—வியாதியால் ஜடிதி மரணம் நேரிடாமல் சில காலம் வியாதியால் வருந்திகொண்டே காலம் தள்ளுதல்.

* ஊருஸ்தம்பம்:— தொடைகள் கடினமயாகத் திமிர்த்துப்போய், வீக்கம் முதலியதை யுண்டுபண்ணும் ஒருவித வியாதி.

5. சீதம் உஷ்ணம் என்பவை முதலியவைகளைக் குறிப்பிடுவெதிலிருந்து, ஒன்றோடொன்று நேர் எதிரிடையான குணமுள்ள மற்ற வஸ்துக்களின் உபயோகத்தாலும் இந்த வியாதியுண்டாகும் எனக் கருதலாம். ஜீர்ணமாகக் கூடியவையும் எளிதில் ஜீர்ணமாகக் கூடாதவையுமான வஸ்துக்களைக் கலந்துபயோகிப்பதால் இவ்வியாதி யுண்டாகும் என்று த்ருடபலன் என்பவரும் கூறுகிறார். வியாதிக்குக் காரணங்களாகக் கூறப்பட்டவைகளுள் சில வாதத்தையும், வேறு சில பித்தத்தையும், மற்றும் சில கபத்தையும் பிரகோபிக்கச் செய்யுமென்றறிக. இங்கே ஸம்ப்ராப்தியில் வாததோஷம் பிரதானமாகக் குறிக்கப்படுகிறது. ஸுச்ருதரும் வாக்படரும் இந்த வ்யாதியை ஆகவே வாதரோகப் பிரகரணத்தில் சேர்த்துக் கூறியிருக்கிறார்கள். 'கபயானது மேதஸ்ஸுடன் கூடி, வாதபித்தங்களையும் கோளாறடையச்செய்து துடைகளிற் பரவி ஊருஸ்தம்பத்தை யுண்டாக்குகிறது' என்று சரகர் சிலேஷ்மத்துக்கு பிராதான்யம் கூறுகிறார். வாதம் வியாதியை ஆரம்பிப்பதாகக் கருதி ஸுச்ருதரும், கபதோஷத்துக்கே இதில் முதலில சிகித்ஸை அவசியமென்பதைக் கருதி சரகரும் அங்ஙனம் கூறியதாகத் தெரிய வருகிறது.

அலைந்துதிரிதல், அதிகதூக்கம் அதிகமாகக் கண் விழித்தல் இவைகளாலும் ஆமதோஷத்தைப் பெற்று மிகவும் அதிகரித்த பித்தத்தை சிலேஷ்மமும் மேதஸ் என்கிற தாதுவும் வாயுவும் சேர்ந்து இன்னும் அதிகமாகக் கோளாறடையச் செய்து துடைகளிற் போய்ச் சேர்ந்தால், அத் துடையெலும்புகளின் உட்புறங்களில் அத்தோஷங்கள் நிரம்பிவிட, அங்கு நிலைத்துப்போன கபத்தினாலும் துடைகள் அசைக்க முடியாமல் திமிர்த்துப் போய், குளிர்ந்து உணர்ச்சியற்றவையாகவும் ஆகும். 1—3.

**ஊருஸ்தம்பத்தின் ரூபம்**:—முற்கூறியபடி திமிர்த்து உணர்ச்சியற்றுப்போன துடைகள் மிகவும் கனத்துப் பிறரது அவயவங்கள் எனக் கூடிய விதமாய் அவ்வளவு ஸ்வாதீனமற்றவைபாகவும், மிகக் கடுமையான நோவுள்ளவையாகவும் ஆய்விடும்; அப்பிணியாளிக்கு மனம் கவலையுறும்; உடம்பெல்லாம் நோவுண்டாகும்; திமிர்த்தும் போகும்; சோம்பல், வாந்தி, அரோசகம், ஜ்வரம் இவைகளும் காணும்; முழங்காலுக்குக் கீழுள்ள பாகம் இளைத்தும், எடுத்து அடி வைப்பதற்கு முடியாததாகவும், உணர்ச்சி யற்றதாகவும், ஆகும். இதை 'ஊருஸ்தம்பம்' என்பார்கள். வேறு சிலர் **ஆட்யவாதம்** எனக் கூறுவர். 4, 5.

**ஊருஸ்தம்பத்தின் பூர்வ ரூபம்**:—அதிக நித்திரை, மிகுதியான மனக்கவலை, திமிர்ப்பு, ஜ்வரம், மயிர்ச்சிலிர்க்கை, அரோசகம், வாந்தி, கால் துடைகள் இளைத்தல், ஆகிய இவை ஊருஸ்தம்பம் உண்டாவதற்கு முன் காணும் குறிகளாம். 6.

**ஊருஸ்தம்பத்தில் இலக்ஷணாதிகளின் விசேஷம்**:-முற்கூறிய விதம் பூர்வ ரூபாதிகள் உண்டாகையில், இதை வாதரோகமென்று பிரமித்து ஸ்நேஹம் முதலியதால் சிகித்ஸிக்க சிலர் முயன்று விடுவர். [1] அவ்விதம் செய்வதால் பாதங்கள் இளைத்து, உணர்ச்சியற்று, கால்களையெடுத்து நடப்பதற்கும் வெகு சிரமமாய் விடும். முழங்கால்களுக்குக் கீழ்பாகம், துடைகள் இவை மிகவும் சோர்ந்துவிடும்; அடிக்கடி அதிக அழற்சியும் வேதனையு முண்டாகும்; பாதத்தைக் கீழே வைத்தால் மிகவும் நோவுண்டாகும்; குளிர்ச்சியான பரிசமும் உணரப்படாமற்போகும்; நிற்பதற்கும் நடப்பதற்கும், காலை அசைப்பதற்கும் திறமையற்றவனாவான்; அழுத்தினால் வலியைத் தாங்கவியலாதவனாவான்; துடைகளும் பாதங்களும் முறிவடைந்தவையெனத் தோன்றுமாறு ஸ்வாதீனமற்று, பிறரது உதவியின்றி அசைப்பதற்கும் இயலாதவையாக ஆகும் ? 7—9.

**ஊருஸ்தம்பத்தில் அஸாத்திய நிலைமை**:—பிணியாளி எப்பொழுது அழற்சி, வலி, குத்தல் ஆகிய இக்குறிகளால் பீடிக்கப்படுகிறானோ, நடுக்கமும் பெறுகிறானோ அப்பொழுது அவன் அவ்வியாதியால் கொல்லப்படுவான்; இக்குறிகளில்லாமல் வேறு விதமான நிலைமையில், வியாதியுண்டாய் வெகுநாட்களாகாமலிருந்தால் அதைச் சிகித்ஸை செய்யலாம். 10,

1. உணர்ச்சியற்றுப் போதல், தசைநார் முதலியது சுருங்குதல், நடுக்கம் முதலிய வாதரோகத்திற்குச் சமானமான குறிகள் தோன்றுவதால் (விசேஷ கபவிகாரத்தால் காணும்) ஊருஸ்தம்பத்தை வாதரோகமென்று பிரமிப்பதிஇயல்பு. வாதரோகமென்று பிரமித்து அறியாமையால் வாதஹரமான ஸ்நேஹாதி சிகித்ஸைகள் செய்யப்படுமானால் உபசயத்திற்குப் பதிலாக அநுபசயம் தோன்றும். (உபசயம் அநுபசயங்களைப்பற்றி. 3-வது, 18-வது பக்கம் பார்க்க.) இதில் வாதரோகசிகித்ஸை செய்து அதனால் உபசயம் (வியாதிஉபசயமடைதல்) இல்லாமல் அனுபசயம் (வியாதி நிவாரணமடையாமை அல்லது அதிகரித்தல்) நேரிடுவதைக் கொண்டு இதை ஊருஸ்தம்பமென்று நிர்த்தாரணஞ் செய்து கொள்ளலாம். "ஸந்தேஹாஸ்பதமான லக்ஷணங்களைப் பெற்ற வியாதியை உபசயம் அல்லது அனுபசயத் ால் பரிக்ஷித்து நிர்த்சாரணம் செய்க" என்பது இதற்குப் பிரமாணம்.

2. ஊருஸதம்பம் என்கிற இவ்வியாதி முக்கியமாக சிலேஷ்மாதிக்யத்தால் உண்டாகிறதென்றாலும், ஸந்நிபாதக் கோளாறால் காண்கிறது. இது ஒரே விதமானது. சரகர் வியாதிகளின் ஸங்க்யைகளைக் கூறுமிடத்து "ஏக ஏவோருஸ்தம்ப:—" ஊருஸ்தம்பம் ஒரே விதம் என்கிறார்.

## 25. ஆமவாத நிதாநம்

**ஆமவாதத்தின் நிதாநமும் ஸம்ப்ராப்தியும்:—** விருத்தமான உணவுகளை [1] யுபயோகிப்பது, அவ்விதமான செயல்களைச் செய்வது, ஜாடராக்னி மந்தமாகப் போவது, வேலையின்றி சும்மாயிருப்பது, ஸ்நிக்த்தமான உணவைப் புஜித்துவிட்டு வியாயாமம் செய்வது இவற்றால் அம்மனிதனுக்குக் கோளாறடைந்த வாயுவால் ஆமதோஷம் அதிகமாகத் தூண்டப் பெற்று கபஸ்த்தாநத்தை நோக்கி யோடுகிறது. அவ்வாதத்தின் சேர்க்கையால் அவ்வாமதோஷம் மிகவும் தக்த்தபாகத்தைப் பெற்று, தமனிகளிற் போய் சேருகின்றது. ஆமமாகப்போன அந்த அன்னரஸமானது [2] வாத-பித்த-கபங்களால் மீண்டும் தூஷிக்கப்பட்டு ஸ்ரோதோமார்க்கங்களை அதிக கசிவுப் பொருட்களுடன் கூடியதாகச் செய்கிறது. அந்த ஆமரஸம் அப்பால் பலவித நிறங்களைப் பெற்று, அதிக பிசுபிசுப்பையுமடைந்து, எளிதில் இருதயத்துக்கு அதிக குருத்தன்மையையும் துர்பலத்தையும் உண்டுபண்ணுகிறது. ஆமமெனப்படுகிற இத்தோஷம் வெகு கடுமையானது; பல வியாதிகளுக்கும் ஆதாரமானது. இதில் முக்கியமாய் வாதமும் கபமும் ஒருமிக்கப் பிரகோபித்து, இடுப்பிலும் இதரஸந்திகளிலும் பிரவேசித்து அப்பிரதேசங்களை ஸ்தம்பிக்கச் செய்கின்றன; அல்லது ஸகல அவயவங்களையும் ஸ்தம்பிக்கச் செய்வதுண்டு; அந்த வியாதி ‘ஆமவாதம்’ எனக் கூறப்படுகிறது. 1—5.

**ஆமவாதத்தின் ஸாமாந்ய லக்ஷணம்:—** உடலெங்கும் வலி, அரோசகம், நாவறட்சி, சோம்பல், குருத்வம், ஜ்வரம், உணவு ஜீர்ணமாகாமை, அவயவங்கள் வீக்கங்கொள்ளல் ஆக இவை ஆமவாதத்தின் பொதுக் குறிகளாம். அவ்வாமதோஷம் எப்பொழுது கைகள், பாதங்கள், சிரஸ், குதிகால், இடுப்பு, முழங்கால், துடை, இதர கணுக்கள் இவற்றில் பிரகோபித்துப் பாவுகிறதோ அப்பொழுது அது மற்ற எல்லா ரோகங்களினும் வெகு கஷ்ட ஸாத்தியமாய்விடுகிறது. இதில் ஆமதோஷம் எவ்விடத்திற் பற்றுகிறதோ அவ்விடத்தில் வலியும் வீக்கமும் உண்டாகும்; அந்த பாகத்தில் தேள்கள் கொட்டியதுபோல அவ்வளவு கடுமையான வேதனை யுண்டாம். 6—8

**ஆம வாதத்தில் உபத்திரவங்கள்:—** அந்த ஆமதோஷமானது ஜாடராக்னியை மந்தப்படுத்தும்; உமிழ்நீரையும், அரோசகத்தையும், குருத்தன்மையையும் அதிகமாயுண்டுபண்ணும்; உத்ஸாஹத்தைப் போக்கும்; எவ்வஸ்துவினிடமும் வெறுப்பைத் தரும்; உடலில் தாபத்தை விருத்தி செய்யும்; மூத்திரத்தை அதிகப்படுத்தும்; வயிற்றில் கடினத் தன்மை

1. விருத்தமான உணவு—ஒன்றோடொன்று சேர்க்கை முதலியதால் விஷத்தன்மையைப் பெறும் உணவுப் பொருட்கள். பாலும் அம்லமும் ஒருமிக்கக் கலந்துட்கொள்ளப்படுமானால் அவ்விரண்டும் விஷத்தன்மையைப் பெறும். அஜீர்ணமாயிருக்கையில் வியாயாமம் செய்தல், நீந்தல், புணர்ச்சி முதலியவை விரோதமான செயல்களாம்.

2. அன்னரஸம் என்பதால் ஆமதோஷமே கிரஹிக்கப்படுகிறது. இரத்தாதிரூபமாகப் பக்குவமடைய வேண்டிய அன்னரஸம் பக்குவமாகாமற் போனால் அதுவே ‘‘ஆமதோஷம்’’ எனப்படுகிறது. ‘‘ஜாடராக்னியின் தௌர்பல்யத்தால் ஆமாசயத்தில் அன்னரஸம் பக்குவமடையாமற் போக, அது ஆமதோஷமாக மாறுகிறது’’ என்று கூறப்படுகிறது. ‘‘பக்குவமாகாததும், ஸ்தூலத்திரவமான அம்சங்கள் ஒன்றோடொன்று சேராததாகவும், துர்நாற்ற முள்ளதாகவும், அதிக பிசுபிசுப்புள்ளதாகவும், ஸகல அவயங்களின் போஷணையையும் குறைத்துப் பேரடுவதாயுமுள்ளபாதொரு நோவுமுண்டோ அது ஆமம்’’ என்று வேறு சிலர் கொள்கை. குடலில் ஆஹாரரஸமானது ஜாடராக்னியின் பலக்குறைவால் இறுதியிற் பக்குவமடையாமல், (இரத்தத்திற் சேராமல்) மிகுந்திருக்கின்றதோ, அது ஆமதோஷம் எனப்படுகிறது’’ என்று வேறு சிலாது கோள்கை. ‘‘ஏற்றவாறு பக்குவமாகாத அன்ன ரஸத்தைச் சிலர் ஆமம் என்பார்கள். சிலர் தேஹததிற் சேர்ந்துபோன மலத்தை ஆமம் என்பார்கள்; தோஷங்கள் கோளாறடைகையில் அதன் முதல் நிலைமையே ஆமம்’’ என்று சிலர் கூறுவர்.

யையும், வலியையும் உண்டாக்கும்; நித்திரையைப் போக்கும்; நாவறட்சி, வாந்தி, தலைச் சுற்றல், மூர்ச்சை, இருதயத்திற் பிடிப்பு, மலபந்தம், தேஹத்தில் திமிர்ப்பு, மூடவிரைத்தல், வயிற்றுப் பொருமல், மற்றும் பல கடுமையான உபத்திரவங்கள் [1] இவற்றை யுண்டுபண்ணும். 9, 10.

**ஆமவாதத்தில் வாதாதிகளின் விசேஷஸம்பந்தத்தாலுண்டாகும் பேதங்கள்:**—இந்த வியாதியில் (1) பித்தம் அதிகமாக ஸம்பந்தித்திருந்தால் அழற்சியோடு செந்நிறம் காணும். (2) வாதம் மிகுதியாகச் சேர்ந்திருந்தால் வலி அதிகமுண்டாகும். (3)கபம் மிகக் கோளாறடைந்திருந்தால் வீக்கம் முதலியது ஸ்திமிதப்பட்டு, குருவாகவும் தினவுடன் கூடியதாகவும் இருக்கும். 11.

**ஆமவாதத்தில் ஸாத்யாஸாத்ய நிலைமைகள்:**—ஒரு தோஷத்தினால் உண்டான ஆமவாதம் எளிதில் சிகித்ஸிக்கக் கூடியது. இரண்டு தோஷங்களின் கோளாறால் ஸம்பவிப்பது யாப்யமாம். ஸந்நிபாதத்தினாலுண்டாய் தேஹமெங்கும் வீக்கத்துடன் பரவும் ஆமவாத வியாதி கஷ்டஸாத்யமானது. 12.

—:o:—

## 26. சூல-பரிணாமசூல-அன்னத்ரவசூல நிதானம்.*

**சூலை எட்டு விதம்:**—வாத பித்த கபங்களால் தனித்தனியே ஒவ்வொருவித சூலமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், ஆம தோஷத்தினால் ஒன்றும், த்வந்த்வ தோஷங்களால் [2] மூன்றும் ஆக எட்டுவித சூலநோய்கள் பொதுவாயுண்டு. இவ்வனைத்திலும் பெரும்பாலும் வாத தோஷத்திற்கே பிராபல்யம் அதிகம். 1.

**வாதசூலை:**—அதிக வியாயாமம் செய்தல், சவாரி செய்தல், அதிக புணர்ச்சி, நித்திரையின்றி கண் விழித்தல், குளிர்ந்த ஜலத்தை அதிகமாகப் பருகுதல், காராமணி, பயறு, துவரை, வரகு இவற்றைப் புஜிப்பது, அதிக ரூக்ஷமான உணவுகளையும் அதிக அளவான போஜனங்களையும்உண்பது, துவர்ப்பும் கைப்புமான பதார்த்தங்கள், அதிகமாக முளைத்த தானியங்கள் இவற்றாலான அன்னத்தைத் தின்பது, விருத்தமான வஸ்துக்களை புஜிப்பது, உலர்ந்த மாம்ஸம் உலர்ந்த சாகங்கள் இவற்றை யுட்கொள்வது, மலம், சுக்ரம், மூத்திரம், அபான வாயு இவற்றின் வேகங்களை அடக்குவது, துன்பமுறுவது, பட்டினியிருப்பது, அதிகமாய் சிரிப்பது, மிதமிஞ்சி பேசுவது, இக்காரணங்களால் வாயு மிகவும் விருத்தியடைந்து இருதயம், விலாப் பக்கங்கள், ப்ருஷ்டபாகம், இடுப்பு, வஸ்தி யென்கிற மூத்ராசயம் இவற்றின் பக்கங்களில் சூலமென்கிற நோவையுண்டுபண்ணும் [3]. உணவு ஜீர்ணமான பிறகும், மாலை நேரத்திலும், மாரிகாலத்திலும், குளிர்ச்சியான பதார்த்தங்களை யுபயோகிக்கையிலும், குளிர் காலத்திலும் இவ்வலி மிகவும் பலமாகும். அபானவாதம் கட்டுப்படுதல், மலச்சிக்கல், குத்தல், பிளக்கப்படுவது போன்ற வேதனை இவற்றுடன் இந்த நோய் அடிக்கடி விருத்தியாவதும் குறைவதுமாயிருக்கும். ஸ்வேத சிகித்ஸை, அப்யஞ்ஜநம், மர்தநம் முதலியவற்றாலும், ஸ்நிக்த்தமும், உஷ்ணமுமான உணவுகளாலும் இதற்கு ஒருவாறு உபசமமுண்டாகும். 1—5.

1. அவயவங்கள் சுருங்கிப் போதல், மொண்டியாகவும் முடமாகவுமாதல் முதலிய வேறு கோளாறுகள் 'மற்றும் பல கடுமையான உபத்திரங்கள்' என்பதால் குறிக்கப்படுகின்றன.

*சூலம்—வயிற்று வலி. சூலம் என்னும் ஆயுதத்தால் குத்தப்படுவதுபோல் இவ்வேதனை யுண்டாவதால் இதற்கு இப்பெயர் வந்தது.

2. த்வந்த்வ தோஷங்கள்—வாத பித்தங்கள், வாத கபங்கள், பித்த கபங்கள் ஆகிய இரட்டை தோஷங்கள்.

3. வாதத்தை விருத்திசெய்யக்கூடிய எதுவும் வாத சூலத்தை யுண்டாக்கலாமாயினும், வியாயாமம் முதலியவை வாதத்தை விருத்தி செய்யக்கூடியவையாயிருப்பதோடு சூலத்தையும் உண்டு பண்ணுகின்றன என்று இதனால் அறிக.

பித்தசூலை:—க்ஷாரம் என்னும் காரம், [1] அதிக தீக்ஷ்ணம், அத்யுஷ்ணம், [2] விதாஹி [3] இக் குணங்களைப்பெற்ற பதார்த்தங்கள், தைலம், சோளம், பிண்ணாக்கு, கொள்ளாலாகிய கஞ்சி, கார்ப்பும் புளிப்பு முள்ள வஸ்துக்கள், ஸௌவீரமென்கிற காடி, மதுஸம்பந்தமான இதர வஸ்துக்கள் இவற்றையுட்கொள்வதாலும், கோபம், அக்னிஸமீபத்திலிருத்தல், சோர்வடைதல், வெயிலில் இருத்தல், சிற்றின்பத்தில் அதிகமாகப் பிரவ்ருத்தித்தல், விதக்த்தமான உணவுகளை யுண்பது ஆகிய இவற்றால் பித்தம் ஜடிதியாகப் பிரகோபமடைந்து சூலையை யுண்டு பண்ணுகிறது. இதில் நாவறட்சி, மூர்ச்சை, அழற்சி, நாபியில் அதிக வேதனை, அதிக வியர்வை, தலைச்சுற்றல், வேக்காடு இக்குறிகள் காணும்; பகலிலும், நள்ளிரவிலும், உஷ்ணகாலத்திலும், சாத்ருதுவிலும் இந்த வியாதி பலப்படும். குளிர்காலத்திலும், குளிர்ச்சியான வஸ்துக்களாலும், மிகவுமினிப்பான குளிர்ந்த உணவுகளாலும் சமனமடைகிறது. 6—8.

கபசூலை :—ஆநுபமாம்ஸம், நீரிலுண்டான சாகங்கள் அல்லது மாம்ஸம், மோர், மற்றும் பாலின் திரிபாகிய தயிர் முதலியவை, இதர மாம்ஸங்கள், கரும்பு, மாப்பண்டம், க்ருஸரை யென்னும் கஞ்சி, [4] எள், முறுக்கு இவற்றை யுபயோகிப்பதாலும், கபத்தை விருத்தி செய்யும் வேறுகாரணங்களாலும் சிலேஷ்மதோஷம் பிரகோபித்து சூலையை யுண்டுபண்ணுகின்றது. இதில் இருதயத் துடிப்பு, இருமல், அக்னிமாந்தயம், அரோசகம், உமிழ் நீர் அதிகமாயூறுதல், இரைப்பை சுறுசுறுப்பற்று ஸ்திமிதமாதல், குடலும் சிரஸ்ஸும் பாரமாதல் ஆகிய இவை குறிகளாம். போஜனம் செய்ததும் எப்பொழுதும் நோவதிகரிக்கும்; அங்ஙனமே சூரியோதய வேளையிலும், குளிர்ந்த காலங்களிலும், வஸந்தருதுவிலும் இவ்வியாதி பலப்படும். 9, 10.

ஸந்நிபாத சூலை :—மூன்று தோஷங்களாலு முண்டாகும் சூலையில் முன் வாதாதி சூலைகளுக்குக் கூறப்பட்டுள்ள லக்ஷணங்கள் யாவும் சேர்ந்துண்டாகும். அவ்விதம் எல்லாத் தோஷங்களாலும் உண்டாகும் சூலை வெகு கடுமையானது; அது கொடிய விஷம் வஜ்ரபாதம் இவற்றிற் கொப்பானது; விஷயமறிந்த வைத்தியர் இவ்வியாதியை அஸாத்ய மென்பார்கள். 11.

ஆமசூலை :—வயிற்றில் இரைத்தல், இருதயத்தில் வேதனை, வாந்தி, வயிறு முதலியது மிகவும் பாரமாயிருத்தல், வயிறு ஸ்திமிதமாதல், பொருமல், கோழை அதிகமாக வாயிலிருந்து ஊறுதல், ஆகிய இக்குறிகளும், கபசூலைக்குக் கூறிய மற்ற இலக்ஷணங்களும் கண்டால் அதை 'ஆமசூலை' [5] என்பார்கள். 12.

த்வந்த்வ தோஷங்களாலான சூலைகள்:—(1) வஸ்தி யென்கிற மூத்ராசயத்திலும், இருதயம் விலாப்பக்கங்கள் ப்ருஷ்டபாகம் இப்பக்கங்களிலும் வலியுண்டானால், அது கப வாதங்களாலுண்டானதென்றும், (2) குக்ஷியிலும், இருதயம் நாபி இவற்றிற்கு மத்தியிலும் வலியுண்டானால் அது கப பித்தங்களாலுண்டான தென்றும், (3) விசேஷ தாபத்தையும் ஜ்வரத்தையு முண்டுபண்ணும்

1. க்ஷாரம்—யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம் முதலியது.

2. தீக்ஷ்ணோஷ்ணங்கள்—மிளகு கடுகு முதலியவை.

3. விதாஹி—மூங்கிற் குருத்து முதலியது. வேறு விதமாகவும் விதாஹித்வம் உண்டாவதுண்டு: "அன்னம் செல்லுகிற ஸ்ரோதஸ்ஸில் (குடல்) அல்லது, அக்னிபாசயத்துக்கு அருகில் பித்தம் ஓடாமல் தங்கி நிற்குமானால் விதாஹமென்கிற அழற்சி காணும். அல்லது வேறு ஏதாவது காந்தலையுண்டுபண்ணும் வஸ்து அவ்விடங்களில் தங்கினாலும் அங்கு செல்லுகிற உணவு தக்த்தபாகமாகிறது" என்று ஸுச்ருதர்.

4. க்ருஸரா—எள், அரிசி, உளுந்து இவற்றாலான கஞ்சி.

5. ஆம சூலை—வயிற்றில் ஆம தோஷம் சேர்ந்துண்டாகும் வலி.

கடுமையான சூலை வாத பித்தங்களாலுண்டானதென்றும் அறிக.[1] 13, $13\frac{1}{2}$.

**சூலையில் ஸாத்யாஸாத்யங்கள்** :—(1) ஒரு தோஷத்தினால் உண்டாகும் சூலை எளிதில் நிவ்ருத்திக்கக்கூடியது. (2) இரண்டு தோஷங்களின் சேர்க்கையினால் உண்டாகும் த்வந்த்வஜ சூலைகள் கஷ்டஸாத்யமானவை. (3) மூன்று தோஷங்களாலுமுண்டாவதும், அநேக உபத்திரவங்களோடு கூடியதும்[2] அஸாத்யமாகும். $14\frac{1}{2}$.

**பரிணாமசூலை** —வாயுவானது தனக்குற்ற காரணங்களால் பிரகோபமடைந்து, அதற்கு அருகிலுள்ள பித்த கபங்களையும் கவர்ந்து ஆவாணம் செய்துபலமான நோவையுண்டுபண்ணும். இவ்வலி புஜித்த உணவு ஜீர்ணமாகும்போது தோன்றுகிறது. உணவின் பரிணாம ஸமயத்திலுண்டாவதால் இது 'பரிணாமசூலை' எனப்படுகிறது.[3] இதன் இலக்ஷணங்களும் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றன:—(1) **வாதிக பரிணாமசூலை** :—வயிற்றுப்பொருமல், வயிற்றில் இரைத்தல், மல மூத்திரங்கள் கட்டிப்போதல், அமைதியின்மை, நடுக்கம் இக்குறிகளும், ஸ்நிக்த்தமும் உஷ்ணமுமான சிகித்ஸையினால் வலி நிவ்ருத்தியாவது போல் தோற்றுவதும் வாததோஷத்தின் பலத்தினாலுண்டான பரிணாமசூலை யென்றறிக. (2) **பைத்திக பரிணாம சூலை**:-நாவறட்சி, தேஹ அழற்சி, அமைதியின்மை, அதிகவியர்வை, கடு அம்லம் லவணம் இவற்றால் வலி அதிகரித்தல், குளிர்ச்சியான வஸ்துக்களால் வேதனை பெரும்பாலும் நிவ்ருத்தியாவதாகத் தோற்றுதல் ஆகிய இக்குறிகளைக்கொண்டு பித்தத்தினால் பரிணாமசூலையுண்டாயிருப்பதா யறிக. (3) **ச்லேஷ்மிக பரிணாமசூலை**:—வாந்தி, இருதயவேதனை, மூர்ச்சை, சொற்ப வலி, ஆனால் இவ்வலி நீடித்திருத்தல், காரம் இவற்றின் உபயோகத்தால் வலி ஒருவாறு தணிவடைதல் ஆகிய இக்குறிகளைக் கொண்டு கபஸம்பந்தமான பரிணாம சூலையை அறிக. (4) இவற்றுள் இரண்டிரண்டு தோஷங்களுடைய குறிகளின் சேர்க்கைகளிருந்தால் அவற்றை த்வந்த்வ தோஷங்களாலான பரிணாம சூலைகளாகவும், (5) மூன்று தோஷங்களுடைய இலக்ஷணங்களும் சேர்ந்திருந்தால் அதை ஸந்நிபாத பரிணாம சூலை யென்றுமறிக. இவற்றில் ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமான பரிணாம சூலையும், தேஹபலம், சதைகள், ஜாடராக்னி இவை க்ஷீணித்தவனுக்குள்ள பரிணாம சூலையும் சிகித்ஸைக்கு வசப்படாதன. 15—$20\frac{1}{2}$.

1. "வஸ்தியென்னும் மூத்திராசயத்தைப் பற்றிய வலி வாத சூலை யென்றும், நாபியிலுண்டாவது பித்த சூலை யென்றும், இருதயம் விலாப்பக்கம் குக்ஷி இவற்றைப் பற்றியது கப சூலையென்றும், எல்லாக்குறிகளும் கண்டால் ஸந்நிபாத சூலை யென்றும் அறிக" என்று சரகர் கூறிய தோஷ லக்ஷணங்கள் இங்கே த்வந்த்வ சூலைகளில் கலந்து கூறப்படுகின்றன.

2. "வயிற்றிரைத்தல், நாவறட்சி, மூர்ச்சை, பொருமல், குருத்வம், அரோசகம், காஸம், ச்வாஸம், விச்சல் இவை சூலையின் உபத்திரவங்கள்" எனக் கூறப்படுகிறது.

3. பரிணாமசூலை பொதுவாக ஸந்நிபாதத்தினால் உண்டாவதாகவே சாஸ்திரஞ்ஞர் கூறுவர். ஆகிலும் உணவு பக்குவமாகிற ஸமயத்திலேயே இவ்வலியுண்டாவதால் (அது பித்த காலமாகையால்) இவ்வியாதியில் பித்தத்திற்கு பிராபல்யம் கூறப்படுவதுண்டு. வேறோர் ஆசிரியர் பரிணாம சூலையைப் பின் வருமாறு விவரிக்கிறார்:— "கபம் அதன் ஸ்த்தானத்திலிருந்து நழுவி பித்தத்துடன் கூடி விருத்தியடைந்து, வாயுவோடும் கலந்து கொண்டு உணவு ஜீர்ணமாகும்பொழுது சூலையை யுண்டுபண்ணுகிறது. குக்ஷி, வயிற்றின் பக்கங்கள், நாபி, வஸ்தி, மார்பின் மத்தியபாகம், ப்ருஷ்ட பாகத்தின் அடிப்புறம் இவற்றுள் எதிலாகிலும் அல்லது எல்லா விடங்களிலேனும் அவ்வலியுண்டாகும்: போஜனம் செய்தவுடனேயும், அல்லது புஜித்தவுணவு வாந்தியானதும், அல்லது நன்கு ஜீர்ணமாய்விட்ட பிறகும் வேதனை தணிந்து விடும். காரரிசி, சம்பா அரிசி இவற்றாலான அன்னத்தைப் புஜிப்பதால் வலி அதிகரிக்கும். உணவு ஜீர்ணமாய் வருகிற ஸமயத்திலுண்டாகும் இக்கடுமையான வியாதி இரஸதாதுவோடுகிற ஸ்ரோதஸ்ஸுகளின் கோளாறைக் காரணமாயுடையதென்பார்கள். இதையே சிலர் அன்னத்ரவசூலை யென்பார்கள். வேறு சிலர் ஜீர்ண தோஷத்தினால் உண்டாகும் வியாதி யென்பார்கள். மற்றும் சிலர் இதை பக்தி சூலை யென்றும் கூறுவர். வேறு சிலர் உட்கொண்ட உணவு குடலிற் காந்துவதால் இவ்வியாதி யுண்டாவதாகவும் கூறுகிறார்கள்.

அன்னத்ரவசூலை:—உணவு ஜீர்ணமான பிறகோ, ஜீர்ணமாகும் ஸமயத்திலோ, அல்லது ஜீர்ணமாகாமலிருக்கையிலேயோ யாதொரு சூலை யுண்டாகிறதோ, பத்தியமான உபசாரத்தினாலும் அபத்தியமான உபசாரத்தினாலும், புஜிப்பதாலும், புஜிக்காமலிருப்பதாலும் யாதொரு சூலை நியதமாகத் தணிவடைவதில்லையோ அது 'அன்னத்ரவ சூலை' எனப்படுகிறது.[1] 21, 22. (அன்னத்ரவம் என்கிற சூலையில் பெரும்பாலும் எப்பொழுதுமே அமைதியுண்டாவதில்லை; பழைய பித்தம் வாந்தியானவுடனே சூலை சிக்கிரம் தணிந்து விடுவதுண்டு.)

—:o:—

## 27. உதாவர்த்தாநாஹ நிதாநம். *

உதாவர்த்தத்தின் நிதாநம்:—அபான வாதம், மலம், மூத்திரம், கொட்டாவி, கண்ணீர், தும்மல், தேக்கெரிவு, வாந்தி, சுக்ர தாது, பசி, நாவறட்சி, பெருமூச்சு, நித்திரை இவற்றை அடக்குவதால் உதாவர்த்தம் என்னும் நோய் உண்டாகிறது. 1.

அபானவாதஜோதாவர்த்தம்:—அபான வாதத்தை அடக்குவதால் மூத்திரம், மலம், அபான வாயு இவை வெளிவாாமல் தடையுறும்; வயிறு விம்மிக் கொள்ளும்; உடல்சோர்வடையும்; வயிற்று நோவுண்டாகும்; வயிற்றில் வாதஸம்பந்தமான வேறு பிணிகளும் காணும். 2.

மலஜோதாவர்த்தம்:—மலம் வெளியாக வேண்டியதை அடக்குவதால் வயிற்றில் இரைத்தல், வயிற்றுவலி, குதத்தில் கடுப்பு, குடலில் மலம் மேன்மேலும் சேர்ந்துபோதல், ஊர்த்வச்வாஸம் ஆகிய இக்கோளாறுகள் தோன்றும்; அல்லது வாயிலிருந்து மலமும் ஒருஸமயம் வெளியாவதுண்டு. 3.

மூத்ரஜோதாவர்த்தம்:—வெளிவர வேண்டிய மூத்திரத்தை அடக்குவதால் வஸ்தியென்னும் மூத்திரப் பையிலும் லிங்கத்திலும் குத்தலுண்டாகும்; நீர்ச்சுருக்கும், தலைவலியும் காணும்; மூத்திர நாளம் முதலியதில் பந்தனம் செய்யப்பட்டதுபோன்ற வேதனை யுண்டாகும்; வங்க்ஷணங்கள் என்கிற தொடையிடுக்குகளில் வீக்கம் தோன்றும். 4.

ஜ்ரும்பா ஜோதாவர்த்தம்:—ஜ்ரும்பா என்கிற கொட்டாவியை அடக்குவதால் கழுத்தின் பார்ச்வங்களிலுள்ள மந்யா வென்னும் நரம்புகளிலும் தொண்டையிலும் பிடிப்புண்டாகும்; தலைநோய் காணும்; இதர வாத ஸம்பந்தமான கோளாறுகளும் தோன்றும். மேலும் நேத்திரங்கள், நாசி, முகம், செவி இவற்றைப்பற்றிய பல கடுமையான வியாதிகளும் உண்டாகும். 5.

அச்ருஜோதாவர்த்தம்[2]:—ஆனந்தத்தினாலாகிலும் துயரத்தாலாகிலும் உண்டாகிற கண்ணீரை வெளிவிடாமல் அடக்குவதால் சிரஸ்஛ில் பாரமும், நேத்திர ரோகங்களும், பீனஸமும் கடுமையா யுண்டாகும். 6.

1. அன்னத்ரவசூலை ஸந்நிபாததோஷத்தினால் உண்டாவதாகக் கருதப்படுகிறது.

* சரீரத்திலிருந்து இயற்கையில் வெளியாகவேண்டிய மல மூத்திராதிகள் வெளிவருதற்கான இயற்கைப் பிரயத்தனமும் நித்திரை முதலியதும் வேகம் எனப்படும். அவ்வேகத்தை அடக்குவது வேகதாரணம் எனப்படுகிறது. வேகதாரணத்தினால் வாதம் பிரகோபமடைய அது குடல் முதலிய அவயவங்களின் கீழ்நோக்கிய இயற்கைச் சலனத்தை மேல் நோக்கி அசையத் தூண்டும். அவ்விதம் இயற்கைக்கு மாறான கோளாறடைந்த கதி விசேஷம் உதாவர்த்தம் எனப்படுகிறது. 'உண்டான வேகத்தைத் தடுப்பதால் ஆவரணமடைந்த வாதத்தின் பிரகோபத்தாலான விகாரம் உதாவர்த்தம்' என்று கூறுவோருமுளர். "எல்லா உதாவர்த்தங்களிலும் வாததோஷம் தனது ஸ்த்தானத்தை யடைவதற்கான சிகித்ஸைகளை முறைப்படி நிறைவேற்றவும்" என்று ஸுச்ருதர் கூறுவதால், உதாவர்த்தம் பெரும்பாலும் வாததோஷத்தின் பலத்தினால் காண்பதாகக் கூற வேண்டும்.

2. அச்ருஜோதாவர்த்தம்:—கண்ணீரை அடக்குவதாலுண்டாகும் உதாவர்த்தம்.

க்ஷவது ஜோதாவர்த்தம்:—க்ஷவது வென்கிற தும்மலை அடக்குவதால் மந்யாவென்கிற கழுத்தின் பாரிச நரம்புகளில் பிடிப்பும், தலைவலியும், அர்திதவாதமும், ஒற்றைத்தலைநோயும், இந்திரியங்களுக்கு பலக்குறைவும் உண்டாகும். 7.

உத்காரஜோதாவர்த்தம்:—உத்காரமென்கிற தேக்கெரிவை அடக்குவதால் தொண்டையும் வாயும் தோஷங்களால் நிரம்பியிருப்பது போன்ற உணர்ச்சியும், வயிற்றில் அதிக குத்தலும், இரைத்தலும் காணும்; மூச்சுவிடுவதற்கும் இயலாமற் கஷ்டம் நேரிடும்; வாதத்தினுலான இதர கடுமையான விகாரங்களும் தோன்றும். 8.

வமநஜோதாவர்த்தம்:-வமநமென்கிற வாந்தியுண்டாகையில் அவ்வேகத்தை அடக்குவதால் தேஹத்தில் அரிப்பு, கோடமென்கிற சர்மவியாதி, அரோசகம், வியங்கமென்கிற வங்கு, சோகை, பாண்டு, ஜ்வரம், குஷ்டம், விஸர்ப்பம், இருதய வேதனை ஆகிய இவ்வியாதிகள் ஸம்பவிக்கும். 9.

சுக்ரஜோதாவர்த்தம்:—சுக்ரதாதுவின் வேகத்தை அடக்குவதால் மூத்ராசயத்திலும், குதம் பீஜங்கள் இவற்றிலும் வீக்கமும் நோவுமுண்டாகும்; மூத்திரம் வெளிவருவதும் தடையுறும்; சுக்ரதாது மணல்களைப்போல மாறி சுக்ராச்மரீ யென்கிற வியாதியும், சுக்ரதாதுவின் ஒழுக்கும், அவ்விதமான வேறு பல கோளாறுகளும் உண்டாகும். 10.

க்ஷுத்ஜோதாவர்த்தம்:—க்ஷுத் என்கிற பசியை அடக்குவதால் சோம்பல், உடலெங்கும் வலி, அரோசகம், சோர்வு, கண்பார்வை குறைதல் ஆகிய விகாரங்கள் தோன்றும். $10\frac{1}{2}$.

த்ருஷ்ணுஜோதாவர்த்தம்:—த்ருஷ்ணை யென்கிற நாவறட்சியை அடக்குவதால் தொண்டையும் வாயும் வற்றிப்போதல், செவி மந்தப்படுதல், இருதயத்தில் வேதனை ஆகிய கோளாறுகள் உண்டாகும். 11.

உச்சுவாஸஜோதாவர்த்தம்:—மிகவும் சிரமப்பட்டவன் மேலெழுந்து வரும் ச்வாஸத்தை அடக்குவதால் இருதய நோய், மூர்ச்சை இவையோ அல்லது குல்மமோ உண்டாகும். $11\frac{1}{2}$.

நித்ராஜோதாவர்த்தம்:—நித்திரையைத் தடுப்பதால் கொட்டாவி, உடல் வலி, கண்களிலும் சிரஸ்ஸிலும் அமித பாரம் இவையோ அல்லது சோம்பலோ உண்டாகும். 12.

வாதஜோதாவர்த்தம்[1]:—கோஷ்டமென்கிற குடலை யூடுருவியுள்ள வாயுவானது ரூக்ஷமும், துவர்ப்பு-கார்ப்பு-கைப்பு ஆகிய சுவையுள்ளவையுமான உணவுகளால் பிரகோபமடைந்து உடனே உதாவர்த்தத்தை யுண்டுபண்ணுகிறது. அப்பால் அவ்வாதமானது அபான வாயு-மூத்திரம்-மலம்-இரத்தம்-சிலேஷ்மதாது-மேதஸ் ஆகிய இவற்றிற்கு ஆதாரமான ஸ்ரோதஸ்ஸுகளென்கிற குழல்களை இயற்கைக்கு எதிரிடையான பக்கமாகச் சலிப்பித்து உதாவர்த்தத்தை யுண்டுபண்ணுகிறது;[2] மலத்தையும் மிகுதியாக வெளிப்படுத்தும் அதனுல் இருதயம், வஸ்தி யென்னும் மூத்ராசயம் இவற்றில் சூலையுண்டாய் பிணியாளி வருந்துவான்; இருதய வேதனையினுலும்

1. இதற்குமுன் கூறப்பட்ட உதாவர்த்தங்கள் அபானவாதாதி வேகங்களை வலிய அடக்குவதால் ஸம்பவிப்பவை. இந்த வாதஜோதாவர்த்தம் ரூக்ஷ கஷாயாதிகளால் பிரகோபமடைந்த வாததோஷத்தினுல் உண்டாகின்றது. இதுதான் முதலிற் கூறிய 13-வகையான உதாவர்த்தங்களுக்கும் இவ் வாதஜோதாவர்த்தத்திற்குமுள்ள முக்கியமான பேதம்.

2. தேஹத்தில் இரத்தம் முதலியது பரவுவதற்கு பயோகமான ஸ்ரோதஸ்ஸுகள் (குழாய்கள்) அநேகமுண்டு; அவை இயற்கையாகவே இரத்தாதிகளைச் செலுத்துவதற்காக ஒருவாறு சலித்துக்கொண்டிருக்கும். அவற்றிற்கு எந்த முகமாகச் சலனம் இயற்கையோ அதற்கு எதிர்முகமாகச் சலனம் ஏற்படுவது உதாவர்த்தமாதும்.

துன்புறுவான். அவனுக்கு அபான வாதம், மூத்திரம், மலம் இவை வெளியாவது வெகு கடினமாகும். ச்வாஸம், காஸம், ப்ரதிச்யாய மென்கிற நாஸாரோகம், உடலமுற்சி, மூர்ச்சை, நாவறட்சி, ஜ்வரம், வாந்தி, விக்கல், தலைநோய், மனக்கவலை, காதுகளில் சப்தம் இவையும், வாததோஷக்கோளாறுலான வேறு பல விகாரங்களும் உண்டாகும்.[1] 13——16.

ஆநாஹம்[2]:—ஆமதோஷமோ, மலமோ இயற்கைக்கு மாறாக மேல் நோக்கிய அபான வாதத்தினால் கட்டப்பட்டு, கிரமமாக மேன் மேலும் குடலிற் சேர்ந்துபோய் தகுந்தவாறு வெளிவராமற் போவதுண்டு. இக்கோளாறை ஆநாஹம்' என்பார்கள். 17.

ஆமாசயத்தைப்பற்றிய ஆநாஹம்:—அவ்வாநாஹம் ஆமாசயத்தைப்பற்றி யுண்டாகையில் நாவறட்சி, பிரதிச்யாயம், சிரஸ்ஸில் அழற்சி, ஆமாசயமென்கிற இரைப்பையில் சூலை, கீழ் வயிற்றில் பாரம், இருதயம் ஸ்தம்பித்திருப்பது போன்ற உணர்ச்சி, தேக்கெரிவு தடைபட்டுப்போதல் ஆகிய விகாரங்கள் தோன்றும். 18.

பக்வாசயத்தைப்பற்றிய ஆநாஹம்:—ஆநாஹம் பக்வாசய மென்கிற உணவு ஜீர்ணமாகிற சிறு குடலைப்பற்றி யுண்டானால் இடுப்பிலும் ப்ருஷ்டபாகத்திலும் பிடித்தல், மல மூத்திரங்கள் கட்டிப்போதல், சூலை, மூர்ச்சை, மலம் கக்குதல், வீக்கம் ஆகிய விகாரங்களும், அலஸகத்திற்குக் கூறியுள்ள மற்ற லக்ஷணங்களும் காணும். 19.

——:o:——

## 28. குல்ம நிதாநம்.

குல்மத்தின் நிதாநம்:—வாதம் முதலிய தோஷங்கள் ஒழுங்கீனமான ஆஹார விஹாரங்களால் மிகவும் கோளாறடைந்து கோஷ்டத்திற்குள்[3] கிரந்தி ரூபமான[4] ஐந்துவித குல்மங்களை யுண்டுபண்ணும். அது கோஷ்டத்தினுள் இரண்டு விலாப்பக்கங்கள், இருதயம், நாபி, வஸ்தி இவ்வைந்து ஸ்தாநங்களை ஆச்ரயித்துண்டாகும். 1, 1½.

குல்மக்கிரந்தியின் ஸாமாந்ய உருவம்:—மார்பு நாபி[5] இவற்றிற்கு இடையில் அசைந்துழலுந் தன்மையதாகவோ, அசைவற்றதாகவோ, திரண்ட உருண்டை வடிவமா யுண்டாகும் ஒருவித கிரந்தி 'குல்மம்' எனப்படுகிறது. அது சில ஸமயம் விருத்தியடைவதாகவும், சில ஸமயம்

1. "நாவறட்சியால் வருந்துபவன், அதிக் சோர்வடைந்தவன், க்ஷீணித்தவன், சூலைகளால் வருந்துபவன், மலத்தைக் கக்குபவன் ஆகிய இவ்வித லக்ஷணங்களுள்ள உதாவர்த்த ரோகிக்கு சிகித்ஸை பயன்படாது" என்று ஸுச்ருதர் கூறும் விஷயத்தையும் இங்கே சிலர் படிக்கிறார்கள்.

2. உதாவர்த்தத்திலுண்டாவது போலவே 'ஆநாஹம்' என்கிற வியாதியிலும் வாதம் விகுணமாகப்போய் (இயற்கைக்கு எதிரிடையான சலனத்தைப் பெறுவது) கோளாறுகளை யுண்டுபண்ணுவதால் இதே பிரகரணத்தில் ஆநாஹமும் கூறப்பட்டதாயறிக.

3. கோஷ்டம் என்பது குடல்; ஆமாசய-பக்வாசயாதிகளில் எனப் பொருள்.

4. கிரந்திரூபமான என்றால் உருண்ட குழவியைப் போன்றது எனக் கருத்து.

5. இங்கே 'நாபி' யென்பதால் நாபிக்குச் சமீபமான 'வஸ்தி' யென்னும் அவயவம் குறிக்கப்படுவதாக விஜயரக்ஷிதன் கூறுகிறார். நாபிக்குக் கீழுள்ள வஸ்தியும் குல்மத்திற்கு ஸ்தானமாகையால் அவ்விதம் வியாக்யானம் செய்யப்படுகிறது. 'ஹ்ருத்வஸ்த்யோரந்தரே' என்றே பாடமுண்டென்றும் சிலர் கூறுவர்.

உருவத்திற் குறைவடைவதாகவும்[1] காணப்படும். 2.

ஐந்துவித குல்மங்கள் :—அந்த குல்மத்தில் பிரகோபமடைந்த வாத-பித்த-கபங்களால் தனித்தனியாக மூன்றும், [2] மூன்று தோஷங்களின் சேர்க்கையினாலான ஸந்நிபாதத்தினால் ஒன்றும் ஆக நான்கு வகை குல்மங்கள் புருஷர்களுக்கு உண்டாகும். இரத்த தோஷத்தினாலுண்டாகும் குல்மம் மற்றொன்றுண்டு; அது ஸ்த்ரீகளுக்குண்டாவது வழக்கம். [3] 3.

குல்மத்தின் பூர்வரூபம் :—அதிக தேக்கெரிவு, மலபந்தம், எப்பொழுதும் வயிறு நிரம்பியிருப்பதுபோன்ற உணர்ச்சி, குடலிரைத்தல், வயிற்றுப் பொருமல், ஜீர்ண சக்தி குறைதல் ஆகிய இவை குல்மம் உண்டாகப் போவதற்கான முற்குறிகளாகும். 4.

குல்ம முண்டாயிருப்பதின் ஸாமாந்ய லக்ஷணம்:—அரோசகம், மல மூத்திரங்கள் வெகு கஷ்டப்பட்டு வெளியாதல், அபாந வாயு தடையுறுதல், குடலிரைத்தல், வயிற்றுப் பொருமல், ஊர்த்வச்வாஸம் அல்லது மேல் மூச்சு வாங்குதல் ஆகிய இவை ஸர்வ குல்மங்களிலும் பொதுவான இலக்ஷணங்களாம்[4]. 5.

வாதகுல்மம்:-அளவில் விஷமமாகவும் குணத்தில் அதிக ரூக்ஷமாகவுமுள்ள அன்னபானங்கள், விஷமமாக வேலைகளை அல்லது வியாயாமங்களைச் செய்தல், வேகங்களை அடக்குதல், மனத்துயரம், அபிகாதம், அதிகமாக மலம் க்ஷீணித்தல், உணவின்மை ஆக இவை வாத குல்மத்திற்குக் காரணங்களாம். இந்த குல்மம் உண்டாகிற விடமும், இதன் உருவமும், இதனாலுண்டாகக்கூடிய வலியும் பலவாறு வித்தியாஸப்படும்;[5] அபாந வாதமும், மலமும் கட்-

1. 'குல்மம் ஒவ்வொரு ஸமயம் விருத்தியாவதும் மற்றொரு ஸமயம் அளவிற் குறைவதும் பொதுவாகக் கூறப்பட்டதாயினும், முக்கியமாக இந்தக் குறி வாத குல்மத்திலேயே காண்பதாயறிக. ஏனெனில் 'வாதகுல்மத்திலேயே இக்குறிகள் காண்கின்றன' என்றார் ஜெஜ்ஜடன். 'குல்மரோகங்கள் அனைத்துமே பொதுவாக வாததோஷப் பிரதானமானவையாகையால், இது எல்லா குல்மங்களிலுமே பொதுவாகக் காணக்கூடிய குறி' என்பது கதாதரனது கொள்கை. 'சயாபசயவாந்' என்பதற்குப் பதிலாக 'சயோபசயவாந்' என்று ஒரு பாடமுண்டு. அப்பொழுது தோஷங்களின் சயத்தினால் (விருத்தியால்) கிரந்தி ரூபமான குல்மமும் கிரமமாக விருத்தியடையும் எனப் பொருள். 'குல்மம் என்று கொடிமுதலியவை ஒன்றோடொன்று சிக்கிக்கொண்டுள்ள புதருக்கு உலகத்திற் சாதாரணமாய் பெயர் வழங்கப்படும். அதுபோலவே 'தோஷங்களின் பிரகோபத்தால் சிக்குண்ட தாதுக்களின் அல்லது தோஷங்களின் திரண்ட உருவம் 'குல்மம்' என்று வைத்திய சாஸ்திரத்தில் வழங்கப்படுகிறது' என்று வாப்ய சந்திரன் கூறுகிறார்.

2. த்வந்த்வ தோஷங்களால் வேறு மூன்று குல்மங்கள் உண்டாவதாகவும் சிலரது கொள்கை. சரகர் குறிப்பாக 'ஐந்து குல்மங்கள்' என்று கூறிவிட்டு, அப்பால் 'முறைப்படி சிகித்ஸைகளை நிறைவேற்றுவதற்கு அனுகூலமாயிருப்பதை யுத்தேசித்து த்வந்த்வ தோஷங்களால் உண்டாகும் வேறு மூன்றுவித குல்மங்களையும் வைத்தியன் பகுத்துணர வேண்டும்' என்கிறார்.

3. 'ஆர்த்தவ மென்கிற இரத்த ஸம்பந்தமான அக்குல்மம் ஸ்த்ரீகளுக்கே உண்டாகும்' என்று இதே பிரகரணத்திற் கூறப்படுகிறது. இரத்த குல்மம் எனப்படுவது ஸாதாரண தாது ரூபமான இரத்தத்தைச் சேர்ந்ததல்ல வென்பதும், 'ஆர்த்தவம்' என்கிற மாதவிடாயில் வரும் சூதக தோஷ ஸம்பந்தமான தென்பதும் கவனிக்கத்தகுந்த விஷயமாகும். தாது ரூபமான இரத்தத்தைப்பற்றிய குல்மம் ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் பொதுவாயுண்டாகலாம். "ஆர்த்தவமென்கிற இரத்தத்தைப்பற்றிய குல்மம் ஸ்த்ரீகளுக்குண்டாகிறது; ஸாதாரண இரத்த தாது ஸம்பந்தமான குல்மம் ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் பொதுவாகக் காணும்" என்று க்ஷாரபாணி கூறுகிறார்.

4. ஜ்வரத்தில் வாதாதி இதரதோஷங்களின் ஸம்பந்தத்தினால் வெவ்வேறு வகைகள் இருந்தபோதிலும் பொதுவாக ஜ்வரங்கள் அனைத்திலும் பித்ததோஷத்திற்கு பிராபல்ய மிருப்பதுபோலே, இங்கே குல்மரோகத்திலும் பித்தகபாதிகளாலும் வெவ்வேறு குல்மங்கள் காண்பதுண்டாகிலும், வாததோஷமே அனைத்திலும் பிரதான காரணமா யிருக்கின்றது. "பிரகோபித்த வாத தோஷத்தையே முக்கிய காரணமாயுடையது குல்மம்" என்று ஸுச்ருதர்.

5. குல்மமுண்டாகும் ஸ்தாநத்தில் பேதம்:—ஒரு ஸமயம் நாபிக்கு ஸமீபம், ஒரு ஸமயம் விலாப்பக்கங்கள், ஒரு ஸமயம் வஸ்தி இவைகளில் காணும். உருவத்தில் பேதம்:—ஒரு ஸமயம் குல்மம் பெரிதாகவும், ஒரு ஸமயம் சிறியதாகவும், ஒரு ஸமயம் நீளமாகவும், ஒரு ஸமயம் குறுகியும் காணப்படுதல். வலியில் பேதம்:-ஒரு ஸமயம் கடுமையாயிருத்தல், ஒரு ஸமயம் மிருதுவாயிருத்தல் ஒரு ஸமயம் குத்தல் குடைத்தல் தோன்றுதல் முதலியன.

டிக்கொள்ளும்; தொண்டை, வாய் இவை சோஷித்துப்போம்; தேஹநிறம் முதலியது ஒருவாறு கறுவலாய் அல்லது செங்கறுப்பாகும்; குளிர் ஜ்வரம் காணும்; இருதயம், வயிறு, விலாப்பக்கங்கள், தோல்கள், சிரஸ் இவற்றில் வலியுண்டாகும். இவ்வியாதி உண்ட உணவு ஜீரணமானபிறகு மிகவும் அதிகரிக்கும்; போஜனம் செய்து வயிறு நிரம்பியிருக்கையில் வியாதியின் தூர்க்குணங்கள் தணிவடையும். இவ்வித லக்ஷணங்களைப் பெற்றது வாதத்தினுலுண்டான குல்மமாகும். இதில் ரூக்ஷமும், துவர்ப்பு கைப்பு காரம் ஆகிய இச்சுவைகளும் உபசயங்களாகமாட்டா[1]. 6—8.

பித்த குல்மம்:—கடுரஸம், அம்ல ரஸம், தீக்ஷ்ண குணம், உஷ்ண வீர்யம், விதாஹி, ரூக்ஷம் இக் குணங்களையுடைய வஸ்துக்களென்ன, கோபமென்ன, அதிக மதுவையருந்துவதென்ன, வெயிலிலும் நெருப்புக்கு அருகிலும் இருந்து வருவதென்ன, ஆமதோஷ ஸம்பந்தமான கோளாறுகளென்ன, இரத்தம் கோளாறடைவதென்ன இவை யாவும் பித்த ஸம்பந்தமான குல்மத்திற்குக் காரணமாம். ஜ்வரம், நாவறட்சி, முகம் உடல் இவை சென்னிறமடைதல், உணவு ஜீர்ணமாகையில் வயிற்றில் கடுமையான வலி, விசேஷமாக வியர்வையுண்டாதல், வயிற்றில் அழற்சி, விரணத்தைப்போல் குல்மத்தில் பரிசிக்க முடியாத வலி ஆகிய இவை பித்த குல்மத்தின் லக்ஷணங்களாம். 9, 10.

கப குல்மம்:—சீதளமாகவும், குருவாகவும், ஸ்நிக்த்தமாகவுமுள்ள பதார்த்தங்களை யுபயோகித்தல், வேலையின்றி அசைவற்றிருத்தல், வயிறு நிரம்ப புஜித்தல், பகலில் நித்திரையுறுதல் ஆகிய இவை கப ஸம்பந்தமான குல்மத்திற்குக் காரணங்களாம். உடல் திமிர்த்துப்போதல், குளிர் ஜ்வரம் உண்டாதல், சரீரம் புஷ்டியடையாமற்போதல், இருதயம் மந்தமாதல், இருமல், அரோசகம், சரீரம் குருவாகப் போதல், உடல் குளிர்ந்துபோதல், உடம்பில் சொற்ப வலி, குல்மம் கடினமாகவும் மிகப் பருத்தும் காணுதல் ஆகியவை கப குல்மத்தின் லக்ஷணங்களாகும். 11, 12.

த்வந்த்வதோஷஜ குல்மங்கள்:—இரண்டிரண்டு தோஷங்களுக்குரிய காரணங்களையும், லக்ஷணங்களையும் அந்தந்த தோஷத்திற்குள்ள பலாபலங்களையும் கண்டறிந்து த்வந்த்வதோஷங்களாலான குல்மங்களைப் பகுத்து நிர்த்தாரணம் செய்க. தோஷங்களின் ஸம்பந்தத்திற்கேற்ற வாறு சிகித்ஸைகளை நிர்ணயிக்கவேண்டியிருப்பதால், இரண்டிரண்டு தோஷங்களின் சேர்க்கைகளாலாகியவேறு மூன்று த்வந்த்வதோஷஜ குல்மங்களின் ஸ்வரூபங்களும் இங்ஙனம் பகுத்தறியப்பட வேண்டியிருக்கின்றன.[2] 13.

ஸந்நிபாத குல்மம்:—ஸந்நிபாத ஸம்பந்தமான குல்மத்தில் மூன்று தோஷங்களும் ஒருமிக்கக் கோளாறடைகின்றன. இந்த குல்மம் கடுமையான வலியுண்டுபண்ணுவதாகவும், கல்லைப்போல்கெட்டியாகவும்,பருத்துத்திரண்டதாகவும், சீக்கிரத்தில் விதாஹியென்கிற ரந்தலைக் குடலில் எளிதிலுண்டுபண்ணுவதாகவும், வெகு கடுமையானதாகவும், மனோவலிமை தேஹ வலிமை ஜாடராக்னியின் சக்தி ஆகியவற்றைப் பறிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. மூன்று

1. உபசயங்களாகமாட்டா என்றால்—அவை அநுபசயங்களாகும் எனப்பொருள்; என்றால் அவற்றால் வியாதி நிவாரணமாகாமல் விருத்தியாகும் எனக் கருத்து.

2. வாத குல்மாதிகளுக்குரிய தனித்தனி ஹேதுக்களும் இலக்ஷணங்களும் இரண்டிரண்டு தோஷங்கள் சேர்ந்துண்டாகும் த்வந்த்வ குல்மங்களிலும் காணப்படுமெனக் கருத்து. வாத பித்த குல்மம், வாத கப குல்மம், பித்த கப குல்மம் என்பவை த்வந்த்வ தோஷங்களாலான மூன்று குல்மங்களாகும்.

தோஷங்களாலுண்டாகும் இக்குல்மம் அஸாத்யமான வியாதியாம்.[1] 14.

இரக்த குல்மம்:—பிரஸவித்தவுடனே அபத்தியமான உணவுகளைப் புஜிப்பவள், ருது காலத்தில்[2] அங்ஙனமே தகாத போஜனங்களை யுண்பவள்,[3] அகாலத்தில் பிரஸவிப்பவள் ஆகிய இவர்களுடைய கர்ப்பத்திலுள்ள இரத்தத்தை வாயுவானது ஆக்ரமித்து வலியுடனும் அழற்சியுடனும் கூடிய குல்மத்தை யுண்டுபண்ணுகிறது. இதில் பித்த குல்மத்திற்கு ஸமமான இலக்ஷணங்கள் காணப்படும். மேலும் இதற்குள்ள விசேஷமென்னவென்றால், கர்ப்பாசயத்திலுற்பத்தியான இந்த குல்மம்கைகால்முதலிய அவயவங்களின் தோற்றத்தைப்பெறுமல் பிண்டரூபமாகவே இருந்துகொண்டு வயிற்றில் வலியுண்டுபண்ணிக்கொண்டு கர்ப்பத்தைப் போலவே துடிக்கும்; அப்பொழுது கர்ப்பத்திற்கு ஸமானமான இதர குறிகளும் தோன்றும்.[4] "இது இரக்த குல்மம்" எனப்படுகிறது; இவ்வியாதி ஸ்த்ரீகளுக்கேயுண்டாகும்.[5] பத்து மாஸங்கள் சென்ற பின்பு இவ்வியாதிக்கு சிகித்ஸை செய்யலாம்.[6] 15, 16.

குல்மத்தில் அஸாத்ய லக்ஷணங்கள்:—குல்மமானது கிரமமாக விருத்தியடைந்து, குடலில் விஸ்தாரமான இடத்தில் வியாபித்து, வேரூன்றியதாய், ஸிரைகளால் நாற்புறமும் சூழப்பட்டு நன்கு கட்டுண்டதாய், எப்பொழுது ஆமையைப்போல கிளம்புகிறதோ, விசேஷ பலக்குறைவு, அரோசகம், இருதயத்தின்வேலை மிக மந்தப்படுதல், இருமல், வாந்தி, அமைதியின்மை, ஜ்வரம், நாவறட்சி, சோம்பல், பிரதிச்யாயமென்கிற நாசியைப்பற்றிய வியாதி

1 ஸந்நிபாத தோஷ ஸம்பந்தமான குல்மம் அஸாத்யமென்று இங்கே கூறப்படுகிறது. "ஸந்நிபாதோத்திதே குல்மே த்ரிதோஷக்னோ விதிர் ஹித:"—(ஸந்நிபாததோஷங்களா லுண்டாகும் குல்மத்தில் மூன்று தோஷங்களையும் கண்டிக்கக் கூடிய சிகித்ஸை இதமானது) என்று ஸுச்ருதர் கூறுகிருர். ஆகவே ஸந்நிபாத குல்மம் சிகித்ஸையினல் நிவ்ருத்திக்கக்கூடியதென்று தெரிகிறதால், இங்கே அஸாத்யமென்று கூறியிருப்பது எங்ஙனம் பொருந்தும்? என்றால் சொற்ப காலத்திலுண்டான ஸந்நிபாத குல்மம் த்ரிதோஷஹரமான சிகித்ஸையினால் நிவ்ருத்திக்கக் கூடியதென்றும், நாட்பட்ட ஸந்நிபாத குல்மம் அஸாத்யமாகு மென்றும் இதற்கு ஸமாதானம் கூறப்படுகிறது.

2. ருதுகாலம்:—மாதவிடாயுண்டாகும் ஸமயம்.

3. அபத்தியமான உணவு என்பது உபலக்ஷணம்; "ருதுகாலத்தில் ஆஹாரமின்மையினாலும், பயத்தினாலும், ரூக்ஷமான பதார்த்தங்களை யுபயோகிப்பதாலும், மல மூத்திராதி வேகங்களை அடக்குவதாலும், ஸ்தம்பன லேகந குணங்களுள்ள திரவ்யங்களை யுபயோகிப்பதாலும் யோனி தோஷத்தாலும் ஸ்த்ரீக்கு இரக்த குல்மமுண்டாகிறது" என்கிற சரகர் வசனப்படி, அபத்தியமான உணவுமாத்திரமேயல்லாமல் அஹிதமான ஆசார விவஹாராதிகளும் இரக்த குல்மத்திற்குக் காரணமாவதாய் அறிக.

4. ஆர்த்தவமென்கிற தீட்டு வெளிப்படாமை, வாயில் உமிழ்நீர் அதிகரித்தல், முலைக்காம்பு கறுநிறமாதல், மசக்கையென்கிற தோஹதம் தோன்றல் முதலியவை கர்ப்பத்திற்கு ஸமானமான இரத்த குல்ம லக்ஷணங்களாம்.

5. ஸ்த்ரீகளுக்கே யுண்டாகும் என்பதால் புருஷருக்காவது, இளங்குமரிகளுக்காவது, கிழவிகளுக்காவது இவ்வியாதியுண்டாகா தென்று குறிப்பிடப்படுவதாய் அறிக.

6. பத்து மாஸங்கள் சென்றால் கர்ப்பமா, குல்மமா வென்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடும்; கர்ப்பமானால் பத்தாவது மாஸம் பிரஸவமாய்விடும் என்று தெரிந்துகொண்டு விடலாமாகையால், பத்து மாஸங்கள் சென்ற பின்பு சிகித்ஸை செய்யலாமெனப்படுகிறது. ஆனால் சிலர் "கைகால் முதலிய அவயவத்தோற்றமின்றி வலியுடன் பிண்டரூபமாகவே சலிக்கும்' என்பதிலிருந்தே அது கர்ப்பமல்ல, குல்மமே யென்று தெரிந்து கொள்ளக்கூடுமாகையால், ஸந்தேஹ நிவர்த்தி செய்து கொள்வதற்காகப் பத்து மாஸங்கள் செல்ல வேண்டுமென்று கூறப்படவில்லையென்றும், ஆனால் இரத்த குல்மம் பக்குவமடைவதற்கே பத்து மாஸங்கள் அவசியமென்றும், அதன் பிறகு சிகித்ஸை செய்வதால் அவ்வியாதி எளிதில் நிவர்த்திக்கப்படுமென்றும் கருதவேண்டும் என்கிறார்கள். ஆகையினாலே "ரக்தகுல்மே புராணத்வம் ஸுகஸாத்யஸ்ய லக்ஷணம்' (இரக்தகுல்மம் நாட்பட்டதானல் எளிதில் நிவாரணம் செய்யப்படும்) என்று சாஸ்திரஞ்ஞர் கூறுபவர். "பத்து மாஸங்களுக்கு முன்பு இரக்த குல்மத்தை உடைக்க முயன்றால், கருப்பையே சிதைந்து விடுமாகையால், பதினோராவது மாஸத்தில் அது நன்கு பரிபக்குவமாயிருக்கையில் சிகித்ஸை செய்வது உசிதம்" என்று ஜெஜ்ஜடரும் கூறுகிறார்.

இவற்றாலும் தொடரப்படுகிறதோ அப்பொழுது அந்த குல்மம் அஸாத்யமென்று அறிக.[1] 17, 18.

குல்மத்தில் உபத்திரவங்கள் :—ஜ்வரம், ச்வாஸம், வாந்தி, அதிஸாரம் இவற்றால் பீடிக்கப்படும் குல்மரோகிக்கு மார்பிலும், நாபியிலும், கைகால்களிலும்வீக்கமுண்டாய் அப்பிணியாளி மிகவும் கர்ஷிததுப் போவான். மேலும் ச்வாஸம், வயுற்று வலி, நாவறட்சி, அன்னத்வேஷம், கிரந்தி யுருவமான அக் குல்மம் திடீரென்று கறைந்து மறைந்துவிடுதல், அதிக பலக் குறைவு ஆகிய இவை குல்மரோகிக்கு மரணத்தை யுண்டுபண்ணும் குறிகளாம். 19, 20.

—:o:—

## 29. ஹ்ருத் ரோக நிதாநம். *

ஹ்ருத்ரோகத்தின் காரணம்:—அதிக உஷ்ணமும அதிக குருகுணமு முள்ள உணவுகளைப் புஜித்தல், துவர்ப்பும் கைப்புமான பதார்த்தங்களை யுபயோகித்தல், அதிக சிரமமுண்டாகுமாறு வேலை செய்தல், அபிகாதம், உரத்துப் படித்தல், பலமாகப் பிரஸங்கம் செய்தல், விசேஷ மனக்கவலை கொள்ளுதல், வேகங்களை யடக்குதல் ஆகிய இக் காரணங்களால் இருதய ரோகம் உண்டாகிறது. அது ஐந்து விதம். 1.

ஹ்ருத்ரோகத்தின் ஸம்ப்ராப்தி :—வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து, இரஸ தாதுவைத் தூஷிப்பித்து,அவைஇருதயத்தையடைந்துஇருதயத்தில் வேதனையை யுண்டுபண்ணுகின்றன. இவ்விதம்இருதயத்தைப்பற்றி யுண்டாகும் வியாதியை "ஹ்ருத்ரோகம்" என்பார். 2.

வாத ஹ்ருத் ரோகம் :—வாத தோஷத்தினாலுண்டாகும் ஹ்ருத்ரோகத்தில் இருதயம் இசிவுண்டது போலவும், குத்தப்படுவது போலவும், கடையப்படுவது போலவும், பிளக்கப்படுவது போலவும், கிழிக்கப்படுவது போலவும் இவ்வாறு பலவிதமான துன்பங்களைப் பெறும். 3.

பித்த ஹ்ருத்ரோகம் :—பித்தத்தினாலுண்டாகிற ஹ்ருத்ரோகத்தில் நாவறட்சி, தேஹத்தில் சூடு அதிகரித்தல், இருதயத்தில் அழற்சி, வாயில் சிம சிமா வென்கிற உணர்ச்சி, இருதயம் சோர்வுறுதல், தொண்டை புகைதல், மூர்ச்சை, வியர்வை யதிகரித்தல் முதலிய குறிகள் காணும். 4.

கப ஹ்ருத்ரோகம்:—கபதோஷத்தினால் நேரிடும் ஹ்ருத்ரோகத்தில் தேஹம் குருத்வமடைதல், வாயில் கபம் ஸ்ரவித்தல், அரோசகம், இருதயத்தில் விறைப்பு தோன்றுதல், ஜாடராக்னி மந்தப்படுத்தல், வாய் இனிப்பாக ஆதல் ஆகிய குறிகள் காணும். 5.

ஸந்நிபாத ஹ்ருத்ரோகம் :—மூன்று தோஷங்களும் ஒருமிக்கப் பிரகோபித்துக் காணுகிற ஹ்ருத்ரோகத்தில் தனித்தனி தோஷத்தினாலுண்டாகிற ஒவ்வொரு ஹ்ருத்ரோகத்தினுடைய இலக்ஷணங்களும் ஒருமிக்கச் சேர்ந்

1. உற்பத்திபாகும் இடங்கள், உருவம் இவை முதலியவற்றால் குல்மமும் அந்தர்வித்ரதியும் ஒரே வியாதியைப் போல் தோன்றுகின்றனவே என்று சிலர் ஸந்தேஹிக்கின்றனர். அதற்கு ஸமாதாநம் பின்வருமாறு ஸுச்ருத வாக்கியத்தினால் கூறப்படுகிறது:—"குல்மம் முதலில் எந்த பாகத்தையும் ஸ்திரமாகப் பற்றி யுண்டாவதில்லை; வித்ரதியோ ஏதேனுமொரு பாகத்தை ஸ்திரமாக ஆச்ரயித்துற்பத்தியாகிறது; மேலும் குல்மம் தோஷங்களை ஆச்ரயித்தும், வித்ரதி இரத்தமாம்ஸங்களை ஆச்ரயித்தும் நிற்கின்றன; ஆகவே வித்ரதி பக்குவமடையும் தன்மையுடையது; குல்மமோ அவ்வாறு பக்குவமாவதில்லை." என்றவாறு ஸுச்ருதர் கூறுகிறார்.

*ஹ்ருத்ரோகம்—இருதயமென்கிற அவயவத்தைப் பற்றிய வியாதி.

துண்டாகும்; குத்தலும் வலியும் மிகக் கடுமையா யிருக்கும்.[1] $5\frac{1}{2}$.

க்ருமி ஹ்ருத்ரோகம்:—க்ருமிகளால் ஹ்ருத்ரோகம் உண்டாகையில் உடலெங்கும் அரிப்பும், வாயில் உமிழ்நீர் அதிகமாயூறுதலும், கபத்தைத் துப்புவதும், இருதயத்தில் குத்தல் வலியும், இருதய சலனம் மந்தப்படுவதும், கண் இருளடைவதும், அரோசகமும், கண்கள் ஒருவாறு கறுப்பாக ஆவதும், வீக்கமும் காணும். 6.

ஹ்ருத்ரோகத்தின் உபத்திரவங்கள்:—சரீரம் சோர்வுறுதல், இளைத்தல், தலைச் சுற்றல், தாதுக்கள் க்ஷீணித்தல், ஆகிய இவை க்ருமி ஸம்பந்தமான ஹ்ருத்ரோகத்தில் உபத்திரவங்களாக உண்டாவதாய் அறிக. மேலும் கப ஸம்பந்தமான இருமிரோகத்தில் எவை உபத்திரவங்களாகக் கூறப்படுகின்றனவோ, அவையும் இதில் உபத்திரவங்களா யுண்டாகும். 7.

——:o:——

## 30. மூத்ர க்ருச்சிர நிதாநம்.*

மூத்ரக்ருச்சிரத்தின் காரணம்:—வியாயாமம், தீக்ஷ்ணமான ஔஷதம், ரூக்ஷமான பதார்த்தங்களை யுபயோகித்தல், மதுவை அதிகமாய் அருந்துதல், தினந்தோறும் விரைவாக நடப்பது, குதிரை முதலியதின்மீது சவாரி செய்தல், ஆநூப மாம்ஸத்தை யுண்ணுதல், அமித போஜனம் செய்தல், அஜீர்ணம் இவற்றால் மனிதருக்கு எண்வகையான மூத்ரக்ருச்சிரங்கள் உண்டாகின்றன.[2] 1.

மூத்ரக்ருச்சிர ஸம்ப்ராப்தி:—ஒவ்வொரு தோஷமும் தனித்தனியாவது, அனைத்தும் ஒருமிக்கவாவது வஸ்தி யென்னும் மூத்திரப் பையில் அதததற்குற்ற காரணங்களால் பிரகோபமடைந்து, எப்பொழுது மூத்திர மார்க்கத்தைப் பீடிக்கின்றனவோ, அப்பொழுது, வெகு ஸங்கடத்துடன் பிணியாளி மூத்திரத்தை வெளியிடுகிறான். 2.

வாதமூத்ரக்ருச்சிரம்:—வாததோஷக் கோளாறால் உண்டாகும் மூத்ரக்ருச்சிரத்தில், மூத்திரம் வெளியாகையில் துடையிடுக்குகள், வஸ்தி யென்னும் மூத்திரப்பை, லிங்கம் இவற்றில் கடுமையான வலியும் காணும்; மூத்திரம் அடிக்கடி சொற்பம் சொற்பமாக வெளியாகும். $2\frac{1}{2}$.

1. ஸந்நிபாத தோஷத்தினாலுண்டாகும் ஹ்ருதய ரோகத்திற்குத் தகுந்தவாறு சிகித்ஸை செய்யாவிடில், அதில் கிரந்திபுண்டாய், அதன்பிறகு கிருமிகளும் உற்பத்தியாகும் எனப்படுகிறது. "மூன்று தோஷங்களாலான ஹ்ருத்ரோகத்தில் அவிவேகத்தினால் யாதொருவன் எள், பால், வெல்லம் முதலியவற்றைபுட்கொள்ளுகிறானோ அவனுக்கு இருதய மர்மத்தின் ஒரு பாரிசத்தில் கிரந்தி யுண்டாகிறது; சவர் நீர் முதலியதும் வாயிலுண்டாகிறது; அதன்பிறகு கிருமிகளும் உண்டாகின்றன" என்று சரகர். ஸந்நிபாத ஸம்பந்தமான ஹ்ருத்ரோகம் இல்லை யென்றும், ஸந்நிபாத ஹ்ருத்ரோகத்திற்கு இங்கு குறிக்கப்படுகிற லக்ஷணங்களும் கிருமிஹ்ருத்ரோகத்தைச் சேர்ந்தவையேயென்றும் சிலர். ஆனால் சரகர், ஹாரீதர் முதலியவர்கள ஸந்நிபாத ஹ்ருத்ரோகத்தைப் பிரத்தியேகமாகக் கூறியிருக்கிறார்கள்.

*மூத்ரக்ருச்சிரம்—மூத்திரம் வலியோடும் சிறுகச் சிறுகவும் கஷ்டமாய் வெளியாகும் வியாதி. இதை "நீர்ச்சுருக்கு" என்பார்கள். ஆனால் இது நீர்ச்சுருக்கினும் கடுமையான வியாதி.

2. தனித்தனி தோஷத்தினால் மூன்று, ஸந்நிபாதத்தினால் ஒன்று, சல்யத்தினால் ஒன்று, மலத்தினால் ஒன்று சுக்ரத்தினால் ஒன்று, அச்மரியினால் ஒன்று ஆக மூத்,க்ருச்சிரம் எட்டு விதம். ஆனால் சர்க்கரையினால் ஓர் மூத்ரக்ருச்சிரம் உண்டாவதாக ஸுச்ருதர் கூறுகிறார். அப்பொழுது ஒன்பதுவிதமாகிறது. ஆகிலும் "அச்மரியும், சர்க்கரையும் ஒரே காரணத்தாலுண்டாகும் ஒரு மாதிரியான வியாதி." "அச்மரீ என்னும் மூத்திரக் கற்களே வாயுவினால் உடைக்கப்பட்டு மணலுருவங் கொண்டவைகளாய், சர்க்கரை யென்னும் பெயருடன் மூத்திரமார்க்கத்திலிருந்து வெளிவருகின்றன" என்று த்ருடபலன். ஆகையால் இங்கே எண்வகை மூத்ர க்ருச்சிரம் என்று கூறப்பட்டதாய் அறிக.

பித்தஜ மூத்ரக்ருச்சிரம் :—பித்த தோஷத்தினலான மூத்ரக்ருச்சிரத்தில் மூத்திரம் சென்னிறமாகவும், வலியையும் அழற்சியையும் உண்டுபண்ணிக் கொண்டும், வெகு கஷ்டத்துடன் அடிக்கடியும் வெளியாகும். 3

கபஜ மூத்ரக்ருச்சிரம் :—கப தோஷத்தினலான மூத்ரக்ருச்சிரத்தில் வஸ்தியும் ஆண்குறியும் வீங்கி பாரமுள்ளவையாகும்; மூத்திரம் மிகப் பிசுபிசுப்பாயிருக்கும். 3½.

ஸந்நிபாதஜ மூத்ரக்ருச்சிரம் :—மூன்று தோஷங்களும் கோளாறடைந்து ஸம்பவிக்கும் மூத்ரக்ருச்சிரத்தில் முன் தனித்தனி தோஷத்திற்கும் கூறிய ஸகல லக்ஷணங்களும் சேர்ந்துண்டாகும். இது கஷ்டஸாத்ய வியாதி. 4.

க்ஷதஜ மூத்ரக்ருச்சிரம் :—[1] மூத்திரம் இறங்குகிற நாளங்கள் முள் முதலியவற்றால் குத்தப்பட்டாலும் ஆயுதாதிகளால் தாக்கப்பட்டாலும் கடுமையான மூத்ரக்ருச்சிரம் உண்டாய், வாதஜமூத்ர க்ருச்சிரத்துக்குச் சமானமான குறிகள் தோன்றும். 5, 5½.

புரீஷஜ மூத்ரக்ருச்சிரம்:—இதில் மலம் உற்றவாறு வெளிவராமல் மலாசயத்தில் மிகவும் அடை பட்டுப்போய், அதனல் அதில் வாதம் கோளாறடைந்து, வஸ்தியில் உப்புஸத்தையும் வாதஸம்பந்தமான வலியையும் உண்டாக்கி, மூத்திரத்தையும் தடுத்து வஸ்தியில் மேன்மேலும் அதைச் சேர்த்துவிடுகிறது. 6½.

அச்மரீஜமூத்ரக்ருச்சிரம்:—அச்மரீயென்னும் பருக்கைக் கற்கள் போன்ற வஸ்துக்கள் மூத்திர மார்க்கத்திற் சேருவதால் "அச்மரீ மூத்ரக்ருச்சிரம்" உண்டாகிறது. 7.

சுக்ரஜ மூத்ரக்ருச்சிரம் :—தோஷங்களால் விகாரமடைந்த சுக்ரதாது மூத்திர மார்க்கத்திற் சென்று மூத்திரத்துடன் கலந்து வலியுண்டு பண்ணிக்கொண்டு வெளியாகும்; அப்பொழுது முக்கியமாய் வஸ்தியென்னும் மூத்திரப்பையிலும், ஆண்குறியிலும் வலியுண்டாகும். 8.

அச்மரீ-சர்க்கரைகளுக்குள்ள ஸம்பந்தமும் பேதமும் :[2]—அச்மரீ, சர்க்கரா என்கிற இரண்டுக்கும் காரணமும் இலக்ஷணமும் ஸமானமாயினும் அவற்றிற்குள் பேதமுண்டு. அச்மரியானது பித்தத்தினல் சமைக்கப்பட்டும் வாயுவினல் சோஷிப்பிக்கப்பட்டும் போகவே, கபத்தினல் அச்மரியின் பரமாணு ரூபமான அம்சங்களுக்கு அமைந்திருந்த சேர்க்கை விடுபட்டுப்போக, பிறகு அச்மரியே பலவாறு சிறிய பொடிகளாகச் சிதறுண்டு வெளியாகின்றது. அப்பொடிகள் "சர்க்கரை" யெனப்படுகின்றன.[3] இந்த வியாதியில் இருதயத்தில் வேதனை, உடல் நடுக்கம், வயிற்றில் வலி, அக்னிமாந்தியம், மூர்ச்சை இவற்ருேடு கடுமையான மூத்ரக்ருச்சிரமும் உண்டாகும். அப்பொடிகள் மூத்திரவேகத்தினல் வெளிப்பட்ட பிறகு, மீண்டும் அச்சர்க்கரை அல்லது அச்மரியின் பருக்கை மூத்திரநாளத்தின் முகத்தில் வந்து சேருகிறவரையில் வேதனையின்றி அமைதியுண்டாயிருக்கும். 9—12.

## 31. மூத்ராகாத நிதானம்.*

மூத்ராகாதத்தின் ஸங்க்யாஸம்ப்ராப்தி முதலியது :—மூத்திரத்தின் வேகத்தை அடக்குவது முதலியவற்றால் பிரகோபமடைந்த தோஷங்களால் 'வாதகுண்டலிகா' என்பது

1. க்ஷதம் என்றால் காயம் அல்லது தாக்குதல். அடி முதலியது படுவதாலுண்டாகும் நீர்க்கடுப்பு வியாதி க்ஷதஜ மூத்ரக்ருச்சிரம் எனப்படுகிறது.

2. மூத்ரக்ருச்சிரத்திற்கு அச்மரீ - சர்க்கரைகளும் காரணமென்றபடியால், இங்கு அவ்விரண்டின் விஷயமும் சுருக்கமாகக் கூறப்பட வேண்டியதாயிற்று. ஆகிலும் இவை பிரத்தியேகமாக அடுத்தப் பிரகாணத்தில் விவரித்துக் கூறப்படுகின்றன.

3. மூத்திரம் உற்பத்தியாய் வஸ்திக்கு வருகையில், அச்மரீயென்று ஒருவித பருக்காங்கல் போன்ற வஸ்து உண்டாய் மூத்திர மார்க்கத்தில் தடையையும், அமிதமான வேதனையையும் உண்டுபண்ணுவதுண்டு. "அச்ம" என்றால் கல்; கல்லைப்போன்றிருப்பதால் அவ்வஸ்து "அச்மரி" யெனப்படுகிறது. சில ஸூக்ஷ்மமான கன வஸ்துக்கள் ஒன்றாகத் திரண்டு இவ்விதம் அச்மரீயாக ஆகின்றன. ஒன்றாகத் திரளும்போது, அவற்றை ஒன்றோடொன்று சேர்ப்பதற்கு கபதோஷம் ஒருவித சாந்துபோல் இடையில் உதவுகிறது. அந்த கபதோஷம் வாத பித்தங்களின் பிராபல்யத்தினல் இறுக்கப்பட்டும் சோஷிப்பிக்கப் பட்டும்போனல், அச்மரியில் சேர்ந்திருந்த கனவஸ்துக்கள் பிளவுபட்டு சிறிய மணற்கற்களைப்போலச் சிதறிவிடுகின்றன. ஆகவே பெரியதாயிருந்தால் அச்மரீ; அவையே சிதறி சிறியவையாயிருந்தால் சர்க்கரை யெனக் கூறப்படுகிறது.

* மூத்ராகாதம்—மூத்திரம் அடைபடும் வியாதி. மூத்ரக்ருச்சிரத்தில் நீர்க்கடுப்பும் வலியும் அதிகம், மூத்திரம்

முதலாகிய பதின்மூன்று விதமான மூத்ராகாதரோகங்கள் [1] உண்டாகின்றன. 1.

வாதகுண்டலிகா :——மூத்திரவேகத்தைத் தடை செய்ததாலோ ரூக்ஷத்தன்மையினாலோ வஸ்தியில் பிரகோபித்த வாயுவானது, அவ்வவயவத்தினுள் வேதனையை யுண்டுபண்ணிக்கொண்டு, மூத்திரத்திலும் ஊடுருவிப்பாய்ந்து சுழன்றுச் சுழன்று ஓட மூத்திரம் சிறுகச்சிறுகவாவது, வலியுண்டுபண்ணிக்கொண்டாவது வெளியாகும். இது "வாத குண்டலிகா" என்றகடுமையான வியாதி; 2, 3.

அஷ்டீலா[2]:—வாத தரோஷம் வஸ்தியையும், குதத்தையும் அடைத்துப் பொருமச்செய்து, "அஷ்டீலா" என்னும் கிரந்திபோன்ற வியாதியை யுண்டுபண்ணுகிறது. அவ்வஷ்டீலை அசைந்து கொண்டும், மேலுக்குப் புடைத்துக் கொண்டும், கடும் வலியை யுண்டுபண்ணிக்கொண்டுமிருக்கும்; மூத்திர மலமார்க்கங்கள் இதனுல் அடைபடும். 4.

வாதவஸ்தி :—அவிவேகத்தினுல் மூத்திரம் வெளியாக வேண்டுவதை அடக்கிக்கொண்டு வருபவனுடைய மூத்திரவஸ்தியிலுள்ள வாயு அவ்வஸ்தியின் முகத்தை அடைத்துப்போடுகிறது. அதனுல் மூத்திரம் தடையுண்டு வஸ்தியில் மேன்மேலும் சேர்ந்துவிடும்; வஸ்தியிலும் குக்ஷியிலும் வலியுண்டாகும். அது "வாத வஸ்தி" யென்னும் வியாதி யென்றறிக; இது மிகவும் கஷ்ட ஸாத்தியமானது. 5, 6.

மூத்ராதீதம்:—மூத்திரத்தை நெடுநேரம் அடக்கிக் கொண்டிருப்பவனுக்கு மூத்திரம் தாராளமாய் பிறகு வெளிவருவதில்லை; அல்லது அதை வெளியிட முயற்சிக்கையில் மூத்திரம் மிக்க மெதுவாகவாவது வெளியாகும். அந்த வியாதி "மூத்ராதீதம்" எனப்படுகிறது. 7.

மூத்ரஜடரம்: –மூத்திரவேகம் அடக்கப்பட்டுப்போகையில், அது உதாவர்த்தத்திற்குக்[3] காரணமாய், அபானவாதம் பிரகோபமடைந்து உதரத்தை நிரப்பிவிடும்; அவ்வாயு நாபிக்குக் கீழே விசேஷ பொருமலையும் கடும் வலியையும் உண்டுபண்ணி வஸ்தியின் அடித்வாரம் அடைபடும். இவ்வியாதியை "மூத்ர ஜடரம்" என்றறிக. 8, 9.

மூத்ரோத்ஸங்கம்:—மூத்திரம் வெளிவருகையில், வஸ்தியிலாவது, வஸ்திக்குக் கீழே லிங்கத்வாரத்திலாவது, லிங்கமுனையிலாவது தடைபட்டுப்போனுல் அல்லது இரத்தம் கலந்து சொற்பம் சொற்பமாக வலியுடனே வலியில்லாமலோ வெளியானுல் அது கோளாறடைந்த வாயுவினுலான "மூத்ரோத்ஸங்கம்" என்கிற வியாதியெனப் படுகிறது. 10, 11.

மூத்ரக்ஷயம் :—எவனுக்கு தேஹம் ரூக்ஷமாகவும், சோர்வுற்று வாடியதாகவும் இருக்கின்றதோ அவனுடைய வஸ்தியிலுள்ள பித்தமும் வாயுவும் மூத்திரத்தை க்ஷீணிக்கச் செய்யும்; இதில் வலியும் அழற்சியும் உண்டாகும். இதற்கு "மூத்ர க்ஷயம்" என்று பெயர். 12.

மூத்ரக்கிரந்தி[4] :—மூத்திர வஸ்தியின் வாய்ப்புறத்தில் அச்மரிக்குச் சமானமான நோவை யுண்டுபண்ணிக்கொண்டு ஒருவித கிரந்தி திடீரென்றுண்டாகும். சிறிதும் கடினமும் உருண்டைவடிவமுமான அது "மூத்ரக்கிரந்தி" யெனப்படுகிறது. 13.

மூத்ரசுக்ரம் :—மூத்திர வேகத்தை அடக்கிக்கொண்டு ஸ்திரீயுடன் புணர்ச்சி செய்தவனுக்கு சுக்ரதாது அதன் ஸ்தானத்திலிருந்து ஊறிக் கிளம்பி நழுவிய பிறகு மூத்திர விஸர்க்கம் செய்கையில் அதற்கு முன்பாவது பின்பாவது சுக்ரம் வெளியாகிறது; அது சாம்பர் கலந்த தண்ணீரைப் போன்றிருக்கும். இது "மூத்ர சுக்ரம்" எனக் கூறப்படுகிறது 14, 14½.

உஷ்ணவாதம்:—அதிக வியாயாமம், வழி நடத்தல், வெயில் இவற்றுல் பித்தம் வாயுவுடன் கூடி வஸ்தியை யடைந்து, அப்பால் வஸ்தி, ஆண்குறி, குதம் இவற்றில் அழற்சியை யுண்டு

---

தடைபடுவது குறைவு; மூத்ராகாதத்தில் மூத்திரம் தடையுறுவது மிகவதிகம் என்பதே மூத்ரக்ருச்சிரத்திற்கும் மூத்ராகாதத்திற்குமுள்ள பேதம்.

1. முதலியவற்றுல் என்பதால் மல வேகத்தைத் தடுத்தல், சுக்ர வேகத்தைத் தடுத்தல், ரூக்ஷபோஜனம் முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

2. அஷ்டீலை யென்னும் சிலைபோன்றது எனப்பொருள். வாதரோகப் பிரகாரணத்திலும் அஷ்டீலா என்ற வியாதி கூறப்பட்டுளது. ஆனல் அது வேறு.

3. உதாவர்த்தம்.—இதைப்பற்றி இதற்குமுன் 27 வது பிரகாரணத்தைப் பார்க்க.

4. மூத்ரக்கிரந்தி ரத்தக்கிரந்தியே யெனப்படும். அச்மரிக்கும் இதற்குமுள்ள பேதம் என்னவென்றுல்—பித்தம் முதலியது கோளாறடைந்து அச்மரீ காண்கிறது; மூத்ரக்கிரந்தியில் இரத்தம் மாத்திரம் விகாரமடைகிறது. "வாத கபங்களால் இரத்தம் விகாரமடைந்து வஸ்தி முகத்தில் கடுமையான கிரந்தியை யுண்டுபண்ணுகின்றது; அந்தக் கிரந்தியால் வஸ்திமுகம் மூடப்படவே மூத்திரம் வெளியாவது சிரமம். அச்மரிக்குச் சமானமான வலியும் தோன்றும். இதை "ரத்தக்கிரந்தி" என்பார்கள் என்று வேறொரு கிரந்தத்திற் கூறப்படுகிறது.

பண்ண, மூத்திரம் மஞ்சள் நிறமாகவோ, இரத்தம் கலந்ததாகவோ சொற்பம் சொற்பமாய் கஷ்டத்துடன் அடிக்கடியும் வெளியாகும்; அதை "உஷ்ணவாதம்" என்பர். 15—16½.

மூத்ர ஸாதம்:—வஸ்தியில் பித்தமாவது, கபமாவது, இரண்டுமாவது வாயுவினால் திரட்டப்பட்டால் மூத்திரம் வெகு கஷ்டமாக வெளிவருவதோடு, பசுமையாகவும், வெண்மையாகவும், சிவப்பாகவும், கனமாகவும், அழற்சியுண்டு பண்ணுவதாகவும், கோரோசனை-சங்குப்பொடி இவற்றிற்குச் சமான நிறமுள்ளதாகவும் இருக்கும்; அல்லது சிறிதும் பசையற்று ஸகல நிறங்களும் கலந்ததாகவும் இருப்பதுண்டு. அதை "மூத்ரஸாதம்"எனக்கூறுவர். 17—18½.

விட்விகாதம்:--ரூக்ஷமாகவும் துர்ப்பலமாகவுமுள்ளவருக்கு வாதத்தினால் மலம் மேல் நோக்கித் தள்ளப்பட்டு, மூத்ரநாடியை நோக்கிப் பிரவேசித்தால் அம்மனிதன் வெகு கஷ்டத்துடன் மூத்திரத்தை வெளியிடுவான்; அம்மூத்திரம் மலத்தின் நாற்றமுடையதா யிருக்கும். 19, 20.

வஸ்தி குண்டலம்:—அதிவேகமாய் வழி நடத்தல், வெகு வேகமாய் தாண்டுதல், ஆயாஸம், அபிகாதம், பலமாக அழுத்துதல் இக்காரணங்களால் வஸ்தியானது தன் ஸ்தானத்திலிருந்து பிரண்டு மேல்முகமாகத் திரும்பியதாய் பருத்துப்போய் கர்ப்பம்போல் நிற்கும். வலி, துடிப்பு, அழற்சி இவைகளால் பீடிக்கப்பட்டு மூத்திரம் ஒவ்வொரு பிந்துவாக வெளியாகும். ஆனால் அந்த பாகத்தை அழுத்தினால் முறுக்கிப் பிழிவதுபோன்ற வலியுண்டாய், தாரையாக மூத்திரம் வெளியாகும். அவ்வியாதியை "வஸ்தி குண்டலம்" என்பார்கள். இது தீக்ஷ்ணமான சஸ்திரம் போலவும் விஷம் போலவும் கடுந்துன்பம் விளைவிக்கும். பெரும்பாலும் இதில் வாததோஷம் பிரபலமாயிருக்கும்; இது ஸாதாரணமாய் நிவ்ருத்தியாகாது. இதே வியாதி பித்தத்துடன் கூடியதாயிருந்தால் அழற்சியும், வலியும் தோன்றி மூத்திரமும் கலங்கி நிறம் மாறும். அது கபதோஷத்துடன் கூடியதானால் குருத்வம், வீக்கம் இவைகளோடு மூத்திரம் ஸ்நிக்த்தமாகவும் கனமாகவும் வெளுப்பாகவும் மாறி வஸ்தியின் முகம் அடைபடும். பித்தத்தினாலும் அவ்வியாதி தூண்டப்படுகையில் அஸாத்யமென்றறிக. மூத்திரத்வாரம் முறுக்கப்படாமலிருந்தால் வியாதிசிகித்ஸைக்கு வசப்படும்; முறுக்கிக்கொண்டால் அஸாத்யமாகும். வஸ்தியானது குண்டலாகாரமாக முறுக்கிக் கொண்டால் நாவறட்சியும், மூர்ச்சையும், மேல் ச்வாஸமும் அதிகமாயுண்டாகும். 21—25.

---

## 32. அச்மரீ நிதானம்*.

அச்மரீஸம்ப்ராப்தி:—வாத-பித்த-கபங்களால் தனித்தனியே ஒவ்வோர் அச்மரியும், சுக்ர தோஷத்தினால் ஓர் அச்மரியும் உண்டாகும்; எல்லா அச்மரீரோகங்களும் பெரும்பாலும் கபத்தை ஆதாரமாகக் கொண்டு உண்டாவதோடு[1], பிராணனை ஹரிப்பதில் யமனுக்கொப்பானவையாம். வாயுவானது மூத்திரவஸ்தியில் சுக்ரதாதுவோடு மூத்திரத்தையும் பித்தத்தையும் அல்லது கபத்தையும் சோஷிப்பிப்பதால், கிரமமாகப் பசுவின் வயிற்றில் கோரோசனையைப்போல அச்மரீ யென்னும் கடின வஸ்து உண்டாகின்றது[2]. 1, 2.

அச்மரீ பூர்வரூபம்:—எல்லா அச்மரிகளும் பெரும்பாலும் ஒரே தோஷத்தைப்பற்றியவையாயிருப்பதில்லை. மூத்திரவஸ்தியில் பொருமல், அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் அதிகவலி, மூத்திரம் ஆட்டு மூத்திரத்தைப் போன்ற நாற்றமடைதல், நீர்ச்சுருக்கு, ஜ்வரம் இவை இதன் பூர்வரூபக்குறிகளாம். 3, 3½.

---

* மூத்திர மார்க்கத்தில் ஒருவகையான பருக்காங்கல் போன்ற பதார்த்தம் உண்டாய் அம்மார்க்கத்தில் அடைப்பு முதலியதை யுண்டாக்கும் நோய்.

1. சிலேஷ்மதோஷம் ஒவ்வோர் அச்மரியிலும் ஸமவாயி காரணமாகுமென்பது கருத்து.

2. பசுவின் பித்தப் பையில் அதன் பித்த ஸம்பந்தமான ஸத்துவங்கள் சேர்ந்து இறுகி கோரோசனையாகப் பரிணமமடைவதுபோலவே, மூத்திர மார்க்கத்தில் மூத்திர ஸம்பந்தமான ஸத்துவங்கள் சில தோஷப் பிரகோபாதிகளால் இறுகி அச்மரியாகப் பக்குவமடைகின்றன எனக் கூறப்படுகிறது.

அச்மரீயின் ஸாமான்ய லக்ஷணம்:—அச்மரியினால் மூத்திர மார்க்கம் அடைக்கப்படுகையில் நாபி, ஸேவநீ [1] வஸ்திசிரஸ் என்கிற மூத்திரப்பையின் சிகர பாகம் இவற்றில் வலியுண்டாகும்; மூத்திரமும் சிதறிச் சிதறி வெளிப்படும். அச்மரி விலகிப்போனால் சுகமாகவும் கோமேதகக் கல்போன்ற நிறத்துடன் நிர்மலமாகவும் மூத்திரம் வெளியாகும்; அவ்வச்மரியைப் பிசைந்து நசுக்கினால் மூத்திர மார்க்கத்தினுள் விரணமுண்டாய் இரத்தங் கலந்த மூத்திரம் வெளிப்படும்; அப்பொழுது அதிக நோவுண்டாகும். இவை அச்மரியின் பொதுக்குறிகளாம். 4—$5\frac{1}{2}$.

வாதாச்மரீ:—அவற்றுள் வாததோஷத்தாலான அச்மரியில் ரோகி துன்புற்று பற்களைக் கடிப்பான்; துடிப்பான்; அடிக்கடி லிங்கத்தையும் நாபியையும் பிடித்துக்கொண்டு கூவுவான்; மலத்துடன் அபானவாயுவும் அடிக்கடி வெளியாகும்; மூத்திரம் அடிக்கடி துளித்துளியாக வெளிப்படும்; இதில் அச்மரியானது கருஞ்சிவப்பாகவும், முள்போன்ற நுனிகள் நிரம்பியதாகவும் காணப்படும். 6-$7\frac{1}{2}$.

பித்தாச்மரீ:—பித்தத்தினாலுண்டாகும் அச்மரியில் வஸ்தியானது மிகவும் சூடுண்டு சமைக்கப்படுவதுபோல் அழற்சி கொள்ளும்; இதில் அச்மரியானது சிவப்பு, மஞ்சள், கறுப்பு இந்நிறங்களைப் பெற்று, சேராங் கோட்டைக்குச் சமானமான ரூபமுள்ளதாகக் காணப்படும். $8\frac{1}{2}$.

கபாச்மரீ:—கப தோஷக் கோளாறால் உண்டாகும் அச்மரியில் வஸ்தியானது குளிர்ச்சியடைந்தும், குருவாகவும் இருக்கும்; அவ்விடத்தில் கடுமையாகக் குத்தலுண்டாகும். இதில் அச்மரீ பெரிதாகவும், வழவழப்பாகவும், தேன் நிறமாய் அல்லது வெண்மையாகவும் இருக்கும். $9\frac{1}{2}$.

அச்மரியும் பாலர்களும்:—முற்கூறிய மூன்று அச்மரிகளும் பெரும்பாலும் பாலர்களுக்கு உண்டாகின்றன: இவ்வியாதிக்கு ஆதாரமான வஸ்தி முதலிய அவயவங்களும், அச்மரியின் உருவளவும் குழந்தைகளுக்குச் சிறியவையாயிருப்பதால் அதைக் கிரஹிப்பதும் வெளிப்படுத்துவதும் எளிது. $10\frac{1}{2}$.

சுக்ராச்மரீ:—சுக்ரதாதுவை அடக்குவதால் பெரியவர்களுக்கு "சுக்ராச்மரீ" யென்கிற வியாதி யுண்டாகிறது. சுக்ரதாது அஃதுண்டாகும் ஸ்தானத்திலிருந்து விழுந்ததும் வெளிவிடப்படாமற் போக, வாயுவானது அதை பீஜத்திற்கும் லிங்கத்துக்கும் இடையில் தடுத்துப் போட்டு சுஷ்கமாகச் செய்கிறது. அது "சுக்ராச்மரீ" எனப்படுகிறது. இதில் வஸ்தியில் வலி, நீர்ச்சுருக்கு, பீஜத்தில் வீக்கம் இவையுண்டாகும். பீஜத்திற்கும் லிங்கத்திற்கும் இடையில் அச்மரியை அழுத்தினால் சுக்ரம் வருகிறதுபோல் தோன்றி மறைந்துவிடும். 11—$13\frac{1}{2}$.

சர்க்கரா:—வாயுவினால் அச்மரியே அணுவணுவாகச் சிதறடிக்கப்பட்டு சர்க்கரை யென்பதாக மாறுகிறது. அச்சர்க்கரைகள் மூத்திர மார்க்கத்தில் கீழ்நோக்கி மூத்திரத்துடன் எளிதில் வெளியாகும்; அவைமேல் நோக்கி எதிரிடையாயிருக்கையில், அம்மார்க்கம் அடைபட்டு பின் வரும் உபத்திரவங்களை யுண்டுபண்ணும். 14, 15.

அச்மரீ சர்க்கரைகளின் உபத்திரவங்கள்:—பலக்குறைவு, சோர்வு, இளைத்தல், வயிற்றுவலி, அரோசகம், உடல் வெளிறிப்போதல், உஷ்ணவாதம், நாவறட்சி, இருதயவேதனை, வாந்தி இவை சர்க்கரையினால் உண்டாகும் உபத்திரவங்களாம். 16.

அச்மரியில் அஸாத்ய லக்ஷணம்:—நாபி ஆண்குறி இவை வீக்கங்கொள்ளுதல், மூத்திரம் அடைபட்டுப்போதல், வலியினால் மிகவும் துன்பப்படுதல் ஆகிய இவை அச்மரியின் அஸாத்ய லக்ஷணங்களாம். சர்க்கரை மேன்மேலும் சிறியவையாகப் போய் "ஸிகதா" [2] என்பதாக மாறினால் அதுவும் அஸாத்யக் குறியாம். 17.

1. ஸேவநீ—லிங்கத்தின் கீழ்ப் பாகத்தில் நெடுகவும் தையல் போன்றுள்ள ரேகாரூபமான குறி.

2. ஸிகதா—அச்மரீ யென்பது கற்களைப்போன்ற உருவமுள்ளதாய் மூத்திர மார்க்கத்தில் உண்டாவது. பொடிப்பொடியாயுள்ள அச்மரியே சர்க்கரை யெனப்படுகிறது. சர்க்கரையே நுண்ணிய பொடிகளாயிருந்தால் "ஸிகதா" என்று வழங்கப்படுகிறது.